
# எழுநா

பெப்ரவரி 2024

இதழ்
19



## பதிப்பாசிரியர்
கணேசானந்தன் சசீவன்

## பொறுப்பாசிரியர்கள்
மாயழகு பவித்ரா
ஸ்ரனிஸ்லஸ் கபில்தேவ்
பரமசிவம் பவதாரணி

## குரல் வடிவம்
பாலரூபன் கிருஷிகா
பவித்ரா இரமணீகரசர்மா
சோபிகா கிருஷ்ணமூர்த்தி

## வளவாளர்கள்
இ. பத்மநாப ஐயர் – உசாத்துணை சேவை
கனகலிங்கம் சுகுமார் – உசாத்துணை சேவை
கதிர் சயந்தன் – நூல் தயாரிப்பு
தங்கராஜா பிரபாகரன் – கட்டுரை திருத்தம்
பாலசுப்ரமணியம் சிவகுமார் – காணொலி எண்ணக்கரு
தில்லைநாதன் கோபிநாத் – நூல் வரிசை
மகேந்திரன் திருவரங்கன் – மொழிபெயர்ப்பு

## துறை சார் ஆலோசகர் குழு
கந்தையா ரமணிதரன் – நீரியலும் சூழற்பொறியியலும்
குமாரவடிவேல் குருபரன் – சட்டமும் சட்டமுறைமையும்
பரமு புஷ்பரட்ணம் – வரலாறும் தொல்லியலும்
இ. மயூரநாதன் – கட்டடக்கலையும் வடிவமைப்பும்
தர்சன் அம்பலவாணர் – மதமும் இறையியலும்
சபா ஜெயராசா – கல்வியியலும் கற்கையும்
சேரன் உருத்திரமூர்த்தி – சமூகவியலும் மானிடவியலும்
ஸ்ரீவரதராஜன் பிரசாந்தன் – மொழியும் இலக்கியமும்
நடராஜா சிறீஸ்கந்தராஜா – சூழலும் உயிர்ப்பல்வகைமையும்
மரியோ அருள்தாஸ் – மெய்யியலும் அரசியலும்

## பங்களிப்பாளர்கள்
கணேசலிங்கம் குகரூபன்
கருணானந்தன் சஞ்யே


## விநியோகத் தொடர்புகளுக்கு
நடராஜா முரளிதரன் – கனடா



# இதழ் 19

# எழுநா


முந்தைய இதழ்




FOLLOW

எழுநா

https://ezhunaonline.com/
https://youtube.com/user/Ezhuna
https://www.facebook.com/Ezhunax/
https://twitter.com/Ezhuna
https://www.instagram.com/ezhunaa/
https://www.tiktok.com/@ezhuna
https://open.spotify.com/show/4Xn
https://tinyurl.com/ykj8ru3f
https://tinyurl.com/3zfkzxme
https://tinyurl.com/2p83m8zj
https://pca.st/swr6zomk
https://radiopublic.com/6rX3L4
https://tinyurl.com/bdeky92h
https://anchor.fm/ezhuna
https://www.clubhouse.com/club/ezhuna
https://www.magzter.com/publishers/


**தொடர்பு முகவரி :**

**எழுநா**

63, சேர். பொன். இராமநாதன் வீதி
கலட்டி சந்தி, திருநெல்வேலி.

**மின்னஞ்சல்:**
contact@ezhunaonline.com
ezhunamedia@gmail.com

# உள்ளே...


04
ஈழத்தில் தொன்ம வழிபாட்டு மரபுகள்
- முனைவர் ஜெ. அரங்கராஜ்

09
அனுராதபுரத்தின் எல்லாளன் சமாதி
- ஆங்கில மூலம் : ஜேம்ஸ் தேவதாசன் இரத்தினம்
தமிழில் : கந்தையா சண்முகலிங்கம்

14
அரபுக்கள், சோனகர், முஸ்லிம்கள்: இலங்கை முஸ்லிம் இனத்துவ அடையாளத்தின் பரிணாமம் – பகுதி 3
- ஆங்கில மூலம் : டெனிஸ் மெக்கில்ரே
தமிழில் : ஜிஃப்ரி ஹாசன்

17
யாழ்ப்பாணக் கட்டளையகத்தைக் காட்டும் நிலப்படங்கள் – பகுதி 2
- இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன்

23
ஜேம்ஸ் மனர் எழுதிய எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்க அவர்களின் அரசியல் வாழ்க்கை வரலாறு நூல் – பகுதி 1,2
ஆங்கில மூலம் : றெஜி சிறிவர்த்தன
தமிழில் : கந்தையா சண்முகலிங்கம்

38
யாழ்ப்பாணத்தில் உருவான சில ஆரம்பகால நூலகங்கள் – பகுதி 8
- நடராஜா செல்வராஜா

42
பசுமை என்ற எண்ணக்கரு : நல்லுணர்வா? கொடுங்கனவா?
- மீநிலங்கோ தெய்வேந்திரன்

50
இந்தியாவின் சமஷ்டி மாதிரி – பகுதி 1,2
- ஆங்கில மூலம் : ரேக்கா சாக்சன
தமிழில் : கந்தையா சண்முகலிங்கம்

61
இந்து மதத்தின் உச்ச வடிவம்
- நடேசன் இரவீந்திரன்

67
கீழைக்கரையில் நாகரும் அனுரை அரசரும்
- விவேகானந்தராஜா துலாஞ்சனன்

71
இந்தியக் குடியரசின் அரசியல் யாப்பு – பகுதி 1,2
- ஆங்கில மூலம்: ஜோர்ஜ் மத்தியு
தமிழில் : கந்தையா சண்முகலிங்கம்

82
இருநூறு வருடகால மலையகச் சமூகமும் இலக்கியமும் : ஒரு காலக்கணக்கெடுப்பு – பகுதி 1,2,3
- சு. தவச்செல்வன்

107
'அப்ரிமெஸ் ரெக்' மென்பொருள் நிறுவனம் : ஒரு படுக்கையறையிலிருந்து ஏழாயிரம் சதுர அடிகள் வரை
- ஆங்கில மூலம் : ஜெகன் அருளையா
தமிழில் : த. சிவதாசன்

112
செபீரோ (Xebiro): யாழ்ப்பாணத்தில் உருவாகும் ஐரோப்பியத் தொழில்நுட்பம்
- ஆங்கில மூலம் : ஜெகன் அருளையா
தமிழில் : த. சிவதாசன்

118
மீளுருவாக்கப்பட்ட ஆரியகுளமும் ஆரியச்சக்கரவர்த்திகளும்
- பரமு புஷ்பரட்ணம்

122
இந்துக்களின் பஞ்சாங்கமும், தமிழர்களின் வானிலையும் காலநிலையும்
- நாகமுத்து பிரதீபராஜா

131
இதய ஆரோக்கியத்தை மேம்படுத்தும் அன்னாசிப் பழம்
- பால. சிவகடாட்சம்

135
கடும்புப் பால் என்னும் திரவ நிலைத் தங்கம்
- சிவபாத சுந்தரலிங்கம் கிருபானந்தகுமரன்

139
திம்பு பேச்சுவார்த்தையின் விளைவுகள்
- இரா. சடகோபன்

142
தலைநிமிர்ந்த சமூகம்
- இரா. சடகோபன்

ஈழநாடானது தமிழகத்திலிருந்து கடலால் பிரிக்கப்பட்ட நாடாக அமைகின்ற போதும், பண்டைக்காலந்தொட்டே தமிழர்களின் மரபுத் தொடர்ச்சியான பண்பாட்டுக் கூறுபாடுகளை உடைய மண்டலமாக காணப்பட்டு வருகிறது. தொல்காப்பியம் சுட்டும் பல இலக்கண விதிகள் இன்று தமிழகத்தில் வழக்கில் இல்லாத போதும் ஈழத்தில் அவை வழங்கப்பட்டு வருகின்றன. பண்பாட்டு வாழ்வியல்களின் அடிப்படையிலும் பண்டைத் தமிழரின் மரபுகள் பலவற்றை ஈழத்தில் காணவியலும். இந்நிலையின் தொடர்ச்சியாகவே பண்டைத் தமிழரின் சமயப் பண்பாட்டு மரபுகளையும் கருதலாம். அந்த வகையில், வடக்கே பருத்தித்துறைமுதல் தெற்கே தேவேந்திரமுனைவரை உள்ள தமிழ் மக்களிடமும், சிங்கள மக்களிடமும் காணப்படும் வழிபாட்டு முறைகளில் பண்டைத் தமிழ் நூல்களில் காணப்படும் வழிபாட்டு மரபுகளை ஆய்வுப் பரப்பாகக் கொண்டு பண்டைத் தமிழ் இலக்கியங்களிலும், இலக்கணங்களிலும் காணப்படும் வழிபாட்டு மரபுகளில் இலங்கையில் இன்றளவும் வழங்கி வருகின்ற மரபுத் தொடர்ச்சியினை ஆராய்வதே 'இலங்கையில் பண்டைத் தமிழரின் வழிபாட்டு மரபுகள்' எனும் இத் தொடரின் நோக்கமாகும். இத் தொடர், இலங்கையில் பண்டைத் தமிழரின் வழிபாட்டு மரபுகள் இன்றளவும் தொடர்கின்றன என்னும் கருதுகோளினை அடையும்.



முனைவர் ஜெ. அரங்கராஜ்

# ஈழத்தில் தொன்ம வழிபாட்டு மரபுகள்

இலங்கையும் தெற்காசியாவும் ஒருங்கிணைத்த பண்பாட்டு மண்டலமாகப் பெருங் கற்காலத்திற்கு முன்பிருந்தே விளங்கிவரும் நிலப்பரப்பாகும். இந்நிலப்பரப்பு மொழியாலும் நாகரிகத்தாலும் சமயங்களாலும் மெய்யியற் சிந்தனைகளாலும் ஒன்றனுக்கொன்று தொடர்பும் இணைப்பும் ஒத்தத்தன்மையும் கொண்டனவாக அமைகின்றன. மொழிநிலையில் தொல்காப்பியத்திற்கு முற்பட்டும் பிற்பட்டும் அதன் விதிகளுக்கு உட்பட்டனவாகவே ஈழமும் தமிழகமும் அமைகின்றன. சிங்கள மொழியின் உருவாக்கத்திலும் அதன் வளர்ச்சியிலும் தமிழின் பங்களிப்பு என்பது மிகப்பெரியது. அதனையொத்த தன்மையினையே சமயப்பண்பாட்டு நிலையிலும் காணவியலும். மெய்யியல் கோட்பாடுகளின் தோற்றமும் பரவலும் தமிழகத்திலும் ஈழத்திலும் ஒத்த தன்மையுடையனகவே அமைந்திருந்தன. எல்லாவற்றினுக்கும் மேலாக அரசியற் கட்டமைவுகளுக்கு அப்பாற்பட்டுச் சான்றோர்களாலும் மக்களாலும் தமிழ்நாடுகளுள் ஒன்றாகவே ஈழமும் கருதப்பட்டது. இதனைச் சி.வை. தாமோதரம்பிள்ளை பதிப்பித்த தொல்காப்பியச் சேனாவரையர் உரை நூலின் வெளியீட்டு விளம்பரத்தாலும் உ.வே. சாமிநாதையரின் முன்னுரை குறிப்புகளாலும் அறியலாம். இவ்வொப்புமைகளின் அடிப்படையிலேயே பண்டைய தமிழரின் மெய்யியல் மரபுகளையும் தொன்மை வழிபாட்டுக் கூறுபாடுகளையும் ஆராய வேண்டியதாகின்றது.

தொன்மை வழிபாட்டு மரபுகள் மெய்யியலினை அடிப்படையாகக் கொண்ட சடங்கியலின் வாயிலாக இன்றளவும் தொடர்வன. அவ்வகையில் ஈழத்துச் சடங்குகளில் தமிழ்நாடுகளுடனான பொதுத்தன்மைகளும் சிறப்புத் தன்மைகளும் நிறைந்து காணப்படுகின்றன. தமிழ்நாடுகள்

முனைவர் ஜெ. அரங்கராஜ் யாழ்ப்பாணம் நீர்வேலியைச் சேர்ந்தவர். இவர் பழந்தமிழ் இலக்கியத் துறையில் ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார். மேலும் தமிழ் இலக்கியம், இலக்கணம், வரலாறு, சமயம் முதலான துறைகளில் தமது ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார். சிங்கப்பூர்த் தமிழ்ப் பாடநூற்கள் குறித்தும் பண்டைத் தமிழர்களின் அயலகத் தொடர்புகள் குறித்தும் பல ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார். 'செம்மொழித் தமிழ் இலக்கண, இலக்கிய மேற்கோள் அடைவு' என்னும் இவரது நூல் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளது. இன்றைய நிலையில் ஈழம், தமிழகம் என இரண்டு தலங்களிலும் ஆய்வு மேற்கொண்டுள்ள ஆய்வாளராக இவர் திகழ்கின்றார்.

சிலவற்றில் மருவிய வழிபாட்டு மரபுகள் இன்றளவும் ஈழத்தில் தொடர்வதினைக் காணலாம். ஒரு மொழிவழங்கும் பரந்துபட்ட நிலப்பரப்பில் ஒரு பண்பாட்டுக் கூறானது ஒரு பகுதியில் அருகிய நிலையிலும் பிறிதொரு பகுதியில் செறிந்தும் காணப்படுதல் என்பது இயல்பாகும். அவ்வகையிலேயே தமிழகத்தில் வழக்கில் இல்லாத ஈழத்தில் வழக்கிலுள்ள வழிபாட்டு மரபுகளைக் குறிப்பிடலாம். ஈழத்தில் வழங்கும் வழிபாட்டு மரபுகளை பின்வருவனவாக வகைமை செய்து கொள்ளலாம்.

1. ஈழத்தில் மாத்திரமே வழங்கும் தொன்ம வழிபாட்டு மரபுகள்
2. தமிழகத்திலும் ஈழத்திலும் வழங்கும் தொன்ம வழிபாட்டு மரபுகள்
3. தமிழகத்தில் வழங்காத ஈழத்திலும் அயற்புலங்களிலும் வழங்கக்கூடிய வழிபாட்டு மரபுகள்
4. இலங்கையில் சிங்களவரிடமும் தமிழரிடமும் வழங்கும் ஒத்த வழிபாட்டு மரபுகள்

இவ் வகைமைகள் ஒப்பீட்டு நிலையில் ஈழத்து வழிபாட்டு மரபின் தொன்மையினையும் தனித்தன்மையினையும் அறிதலுக்குத் துணை செய்வனவாக அமையும்.

இதில் பல உள்ளகத் தன்மைகளையும் நாம் ஆராய வேண்டியதாகின்றது. ஒரே வழிபாட்டு மரபில் ஒருமொழி வழங்கும் மக்களிடையே வைதீக மயமாக்கலின் தாக்கத்தால் ஒரு பகுதியின் தொல்மரபுகள் சிதைக்கப்பட்ட நிலையினையும் ஒரு பகுதியில் சிதையாத அம்மரபின் இன்றளவுமான தொடர்ச்சியினையும் ஈழத்து வழிபாட்டு மரபில் காணலாம். இவ்வழிபாட்டு மரபில் காணக்கூடிய மெய்யியல் அமைப்பினைக் குறித்தான ஆய்வுகள் இன்றியமையானவாகும். அதனை,

- வழிபாட்டு மரபிலுள்ள மெய்யியல் கட்டமைப்பினை அறிதலின் வழி அதனது தொன்மக் கூறுகளை அறிதல்.
- மெய்யியற் கூறுபாடுகள் சடங்கின் வழி தம்மைத் தகவமைத்துக் கொண்ட வரலாற்றினை அறிதல்.

என்பனவாக வகுக்கலாம்.

இம்மெய்யியல் அமைப்பினை நன்கு ஆராயும் போது அதனைப் பல்வேறு வகைமைகளாக மேலும் கைக்கொள்ளலாம்.

1. மெய்யியல் நிலையிலிருந்து உருவாகும் பெருஞ் சமயநிலை
2. சமயநிலையினை அடையாமல் மெய்யியற் கோட்பாடாகவே சடங்கியலின் வழி உள்நிற்றல் நிலை
3. அருகிய சமயநிலையிலிருந்து அயற்சமயங்களால் உள்வாங்கப்பட்ட மெய்யியற் கோட்பாடுகள்
4. மெய்யியற் கோட்பாட்டில் ஏற்பட்ட இணைப்புகளும் திரிபுகளும் அதன் அடிப்படைக் கோட்பாட்டு நிலையிலிருந்து தனித்து நிற்கின்ற நிலை

மெய்யியற் கோட்பாடுகளின் அமைப்பியலானது ஈழத்தின் வழிபாட்டு மரபில் பரந்து காணப்படும் வரலாற்று போக்குகளின் துணையுடனேயே வெளிப்படுவதினையும் காணலாம்.

இலங்கையிற் தமிழ்மக்களாலும் சிங்கள மக்களாலும் பின்பற்றப்படும் வழிபாட்டுப் பொதுமைகள் அதன் வரலாற்று மெய்யியற் கட்டமைப்பின் போக்கில் ஆராய்தல் என்பது இன்றியமையாதது.

அவ்வகையில் ஈழத்தில் வழங்கும் தொன்மவழிபாட்டு மரபினைத் தொடர்ச்சியானதாகவும் தொடர்ச்சி திரிந்தனவாகவும் கொண்டு பார்க்க வேண்டியத்தாகின்றது. இவ்வாய்விலே கைக்கொள்ளும் வழிபாட்டு மரபுகளாக;

- ஆசீவக வழிபாட்டு மரபு
- கண்ணகி வழிபாட்டு மரபு
- பூதராயர் வழிபாட்டு மரபு
- எழுமங்கையர் வழிபாட்டு மரபு
- நாகவழிபாட்டு மரபு
- தென்புலத்தார் வழிபாட்டுமரபு
- பெரியதம்பிரான் வழிபாட்டு மரபு
- நாச்சிமார் வழிபாட்டு மரபு
- முருகவழிபாட்டு மரபு

ஆகியன அமைகின்றன.

## ஆசீவக வழிபாட்டு மரபு

இலங்கையில் பௌத்தம் வருவதற்கு முன்பிருந்தே விளங்கிய தொன்மரபாக ஆசீவக மரபினைக் கொள்ளலாம். மகாவம்சம் குறிப்பிடும் பண்டுகாபயன் பண்டுவாசுதேவன் முதலான மன்னர்கள் ஆசீவக சமயத்தினைச் சார்ந்தோர் என்பதற்கான பலசான்றுகள் காணப்படுகின்றன. இன்றைய நிலையிலும் தமிழ் மக்களின் வழிபாட்டு மரபிலும் சிங்கள மக்களின் வழிபாட்டு மரபிலும் பல ஆசீவக தொன்மக்கூறுகள் தென்படுவதைக் காணலாம்.

## கண்ணகி வழிபாட்டு மரபு

தமிழ்ப் பண்பாட்டு மண்டலம் எங்கும் வழங்கிவரும் வழிபாட்டு மரபுகளில் ஒன்றாக ஈராயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்டு விளங்குவது கண்ணகி வழிபாடாகும். சிலப்பதிகாரம் இயற்றப்படுதலுக்கு முன்பே கண்ணகி வழிபாடானது தமிழுலகெங்கும் நடைபெற்றமைக்குச் சிலப்பதிகாரத்திலும் அதற்கு முற்பட்டதான சங்க இலக்கியங்களிலும் சான்றுகள் உண்டு. சிலப்பதிகாரத்தில் 'கொங்கச் செல்வி குடமலையாட்டி தென்தமிழ்ப்பாவை உலகிற்கெல்லாம் ஒருமாமணியாய் வந்த திருமாமணி ' என வேட்டுவ வரியில் குறிப்பிடப்படும் கண்ணகியைக் குறித்த அடிகள், சிலப்பதிகார காலத்திற்கு முன்பே கொங்குப் பகுதியிலும் குடமலைநாடான மேற்குத் தொடரிலும் தென்கிழக்குப் பகுதியான ஈழத்திலும் கண்ணகி வழிபாடு பெருவழக்கில் வழங்கி வந்தமையினைக் குறிப்பதாகவே அமைகின்றது. கண்ணகி என்ற பெயர் வழக்கும் சிலப்பதிகார காலத்திற்கு முற்பட்டது என்பதினைச் சங்க இலக்கியத்தில் காணப்படும் கடையேழு வள்ளல்களில் ஒருவனான வழங்கும் பேகன் மனைவி கண்ணகி என்ற வழக்கின் வழியறியலாம். தமிழ்க் குடி அல்லாதோரும் கண்ணகி வழிபாட்டினைப் பின்பற்றுவோராயினர். சந்திரா என்பதான வழக்கில், துருவ நாட்டிலும் பத்தினிதெய்வம் என்பதான வழிபாட்டு மரபாகச் சிங்கள மக்களாலும் கண்ணகி வழிபாடானது சிறந்து விளங்குகின்றமையினைக் காணலாம். கண்ணகி வழிபாட்டினை இரண்டு நிலைகளில் வகைமை செய்துகொள்ளலாம்.

1. பண்டைக்காலத்தில் கண்ணகி வழிபாடு பரவலாக்கம் பெற்றிருந்தமையும் அதன் தொடர்ச்சியும்
2. கண்ணகி வழிபாட்டின் மருவு நிலைகள்



**வற்றாப்பளை கண்ணி அம்மன்**

Image source - facebook.com/vattappalaikannaki

சங்ககாலத்திற்கு முற்பட்டுவந்த கண்ணகி வழிபாடானது சிலப்பதிகார காலத்தில் மீண்டும் புத்துணர்ச்சியும் பரவலாக்கமும் பெற்றெழுந்ததெனலாம். இதனைச் சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்கு விழாவும் சாந்தியும் எடுத்த செய்தியைக் கூறும் பதிகத்தாலும் வஞ்சிக்காண்டத்து வரந்தரு கதையாலும் அறியலாம். அவ்வாறான பண்டைய வழிபாட்டு மரபின் தொடர்ச்சியினை இன்றளவும் தமிழகத்திலும் கேரளத்திலும் ஈழத்திலும் காணலாம். இம் மூவிடங்களில் கண்ணகி வழிபாடானது, பெருவழக்கில் இன்றளவும் முழுமையாக வழங்கும் பகுதியாக ஈழத்திலும், புராண கலப்பிற்கு உட்பட்ட நிலையில் அதன் தொன்மத் தொடர்ச்சியுடன் வழங்கும் பகுதியாக கேரளத்திலும், மருவிய நிலையில் தொன்மங்களைக் கொண்டனவாகக் கொங்குநாட்டிலும் காணப்படுகின்றது.

## பூதராயர் வழிபாட்டு மரபு

பண்டைய தனித்த வழிபாட்டு மரபுகள் பல கால வெள்ளத்தில் பெருஞ்சமயங்களின் உருவாக்கத்தில்

புனைவுகள் பலவற்றினுக்கு உட்படுத்தப்பட்டுப் பெருஞ்சமயங்களுக்குள் ஒடுங்கிவிடுதலினைக் காணலாம். பெருஞ்சமயங்களுக்குள் ஒடுங்கிய நிலையிலும் அவற்றின் தனித்த மெய்யியல் அமைப்பானது அவற்றினைப் பிரித்து இனங்காணுதலுக்குப் பேருதவியாக அமையும்.

அவ்வகையில் பெருஞ்சமயக் கட்டமைப்பில் சைவசமயத்தில் ஒரு பகுதியாகவும் சிவ வடிவங்களில் ஒன்றாகவும் காணப்படும் பூதராயர் வழிபாடு திரிபடைந்துள்ளமையினை ஈழத்தில் காணலாம். பூதராயர் கோயில்கள் சிவபூதராயர் கோவில்களாகப் பெயர் மாற்றப்பட்டுள்ளமையினையும் காணலாம். ஆனால் சிவ வடிவங்கள் அறுபத்து நான்கில் எதனுள்ளும் பூதராயர் வடிவம் என்பது அடங்கவில்லை என்பதும் எண்ணத்தக்கதாம். ஈழத்தில் காணப்படும் பூதராயர் வழிபாட்டினுக்கும் துருவநாட்டில் காணப்படும் பூதராயர் வழிபாட்டிற்கும் பெரிதும் ஒப்புமை உள்ளமையினைக் காணலாம். பொருள்முதல்வாதக் கருத்தியலைக் கொண்டெழுந்த பூதவாதம் போன்ற மெய்யியற் சிந்தனை மரபின் வழிவந்த பூதராயர் வழிபாட்டு மரபுகள் கருத்து முதல்வாதச் சமயங்களில் உள்வாங்கப்பட்ட நிகழ்வினை அதன் மெய்யியல் தனித்தன்மைகளின் வழியும் வரலாற்றியல் போக்குகளின் வழியும் ஆராய்தல் என்பது இன்றியமையாததாகின்றது.

## எழுமங்கையர் வழிபாட்டு மரபு

உலகம் முழுமைக்குமான வழிபாட்டு மரபுகளில் கன்னித் தெய்வங்களின் வழிபாடுகளானது மிகவும் பழமை வாய்ந்தனவாகும். அவ்வகையில் மிகப்பழமையான வழிபாட்டு மரபாக அமைவது எழுமங்கை வழிபாட்டு மரபாகும். தமிழ் நாடுகள் ஒவ்வொன்றிலும் மாறுபட்ட பெயர்களில் இவ் வழிபாடானது வழங்கப்படுகின்றது. கொங்குப் பகுதியில் கன்னிமார் வழிபாடு என்றும் பெருங்கோவில்களில் சப்தமாதர்கள் என்றும் வழங்கப்படும் இவ்வழிபாடானது ஈழத்தில் எழுமங்கையர் வழிபாடென்றும் நாச்சிமார் வழிபாடென்றும் வழங்கப்படுகின்றமையினைக் காணலாம். இவ் வழிபாட்டு மரபில் இடம்பெறும் ஏழு தெய்வங்களில் உடல் உழைப்பு சார்ந்தவை வரந்தரு தெய்வங்களே. வரிசையான படிநிலையில் அமைந்த இவ்விறை மரபில் இறுதியாக அமைவது பிடாரியாகும். சிலப்பதிகாரத்தில் இவ் வெழுமங்கையர் வழிபாடுகள் குறித்த செய்திகள் காணப்படுகின்றமையினைக் காணலாம்.

## நாகவழிபாட்டு மரபு

பண்டைத்தமிழரின் பழமையான வழிபாட்டு மரபுகளில் சிறப்பான நிலையில் இன்றளவும் தொடர்வனவாக உள்ள மரபு நாகவழிபாட்டு மரபாகும். தமிழ்நாடுகளை நாக நாடென்றும் தமிழர்களை நாகர்கள் என்றும் அழைக்கின்ற மரபு பண்டைக்காலம் தொட்டு இருந்து வருகின்றது எனலாம். இன்றளவும் தெலுங்கு மக்கள் தமிழர்களை அரவர் (நாகர்) என்றே அழைக்கின்றமையினைக் காணலாம். சிங்கள மக்களும் பாலி, சிங்கள நூல்களும் யாழ்ப்பாண குடாநாட்டினை நாக நாடென்றே குறிப்பிடக் காணலாம். புத்தரின் இலங்கை வருகையின்போது இங்கு நாகர்கள் வாழ்ந்தமை குறித்தான செய்திகளே காணப்படுகின்றன. மேற்கண்டவாறாகவே பிற வழிபாட்டு மரபுகளும் இவ்வாய்வினில் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனலாம். இப் பண்டைய நாகவழிபாட்டின் எச்சத்தினைப் பல்வேறு நிலைகளில் இன்றவும் ஈழத்திற் காணலாம். கத்திரி வெய்யிலினைக் குறிக்கும் காண்டாவனம் எனும் சொல் வழக்கும் நாகதீபம், நாகதீவு, நாகர்கோயில் என்பதான தலப்பெயர் வழக்குகளும் மக்கற் பெயர் வழக்குகளும் இதற்குச் சான்றுகளாகும்.

## தென்புலத்தார் வழிபாடு

தம்குடியில் 1800 பீடுடன் வாழ்ந்து அருஞ்செயல்கள் பலபுரிந்து மறைந்த முன்னோர்களைத் தென்புலத்தார் என வழங்கி வழிபடுதல் என்பது பண்டைத் தமிழ் மரபாகும். இதனைப் புறநானூற்றின் ‘தென்புல வாழ்நர்க் கருங்கடனிறுக்கும் பொன்போற் புதல்வர்’ என்ற பாடலடிகளின் வழியும் ‘தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு ஐம்புலத்தாறு ஓம்பல் தலை’ என்ற திருக்குறளின் வழியும் அறியலாம். பீடுடன் வாழ்ந்து செயலாற்றிய மறவருக்குக் கல்நட்டு தெய்வமாக வழிபட்டமைக்குப் புறப்பாடல் சான்றாகின்றது. வடக்கிலிருந்து உயிர் துறந்த கோப்பெருஞ் சோழனுக்கும் அவனது புலவோருக்கும் கல்நட்டு வழிபட்டமையைப் புறநானூறறின் 170 ஆம் புறப்பாடல் குறிப்பிடுகின்றன. பெண்களுக்கும் கல்நட்டு வழிபாடு மேற்கொள்ளப்பட்டமையினை சிலப்பதிகாரத்தின் வஞ்சிக்காண்டத்தின் வழியறியலாம். இப் பண்டைய மரபின் தொடர்ச்சியை இன்றளவும் ஈழத்தில் காணலாம். முன்னோர் வழிபாட்டுக்குரிய தலங்கள் பல இன்றும் காணப்படுகின்றன. இவற்றில் பல வைதீகமாக்கப்பட்ட நிலையிலும் அதன்



மண்டூர் முருகன் ஆலயம்

Image source - thinakaran.lk

பண்டைய தொன்மங்களை உடையனவாகவே விளங்குகின்றன.

## நாச்சிமார் வழிபாடு

பெண்களைத் தெய்வமாக வழிபாடும் வழிபாட்டு மரபில் நாச்சிமார் வழிபாட்டு மரபும் ஒன்றாகும். பெண்களை தெய்வமாக வழிபடும் வழிபாட்டு மரபு சிலப்பதிகாரக் காலத்திற்கு முற்பட்டதாகும். இதனை வீரபத்தினி வழிபாட்டு மரபாகவும், பீடுடைப் பெண்களைத் தென்புலத்தார் வழிபாடாகக் கொண்டு அருள்தரும் தெய்வமாகவும் வழிபடும் மரபானது இன்றளவும் ஈழமெங்கும் காணப்படுவதாகின்றது. ஈழமெங்கும் வழங்கும் தாய்தெய்வ வழிபாட்டு மரபுகள் குறித்து ஆராய்வதினை இப் பகுதியாகக் கொள்ளலாம்.

## முருகவழிபாட்டு மரபு

பண்டைத்தமிழரின் தொன்மையான வழிபாட்டு மரபுகளில் ஒன்றாக முருகவழிபாட்டினைக் குறிப்பிடலாம். தொல்காப்பியத்தில் 'சேயோன் மேய மைவரை உலகமும்' எனக் குறிப்பிடப்படுதலின் வழியும் திருமுருகாற்றுப்படையில் 'கொற்றவை சிறுவ' எனக் குறிப்பிடப்பட்டுள்ளமையாலும் குறிஞ்சிநிலத்தில் கொற்றவை வழிபாட்டின் தொடர்ச்சியாக முருக வழிபாடு எழுந்ததெனலாம். குறுந்தொகையில் முருகனுக்கு மரியறுத்துப் படையல் செய்த செய்தி காணப்படுகின்றது. ஈழநாடு முழுவதும் காணப்படும் முருகவழிபாடானது பல்வேறுபட்ட தன்மைகளை உடையதாக உள்ளமையினைக் காணலாம். வைதீக நிலையினுக்கு உட்படுத்தப்பட்ட முருகவழிபாட்டு முறைகள், தமிழ்த் தரப்பினை அடியொட்டிய முருகவழிபாடு, வேல்வணக்கத்திற்குரிய முருகவழிபாடு, வடமொழி மந்திரங்கள் சொல்லிவழிபடும் மரபு, எவ்வகை உருவமும் அற்ற திரையினை வழிபடும் மரபு, தமிழ் மந்திரங்களால் வழிபடும் மரபு, மந்திரங்கள் எதுவுமற்று வாய்கட்டி வழிபடும் மரபு என்பனவாக முருகவழிபாடுகள் அமைவதினைக் காணலாம்.

கோயில்களின் நிலையிலும் இம் மரபின் பல்வகை வகைமைகளைக் காணவியலும். அவ்வாறான முருகவழிபாட்டு மரபினை ஆராய்வதாக இப் பகுதி அமையும்.

பெரியதம்பிரான் வழிபாடு, அண்ணன்மார் வழிபாடு என்பதான வழிபாட்டு மரபுகள் தமிழ் குழுக்களிடையே நாட்டார் வழிபாட்டு மரபுகளாக இன்றளவும் தொடர்கின்றன. இவ்வாறான மரபுகள் குறித்தும் இந்தத் தொடரில் விளக்கப்படவுள்ளன.

தெற்காசியாவின் மிகப்பழமையான மெய்யியல் மரபுகளில் ஒன்றான, தமிழர்களின் சிந்தனைச் செல்வாக்கு மிகுந்த ஆசீவகமரபு குறித்தும் அவ் ஆசிவக மரபினுக்கும் இலங்கைக்குமான தொடர்புகள் குறித்தும் அடுத்த தொடரில் விரிவாக ஆராயலாம்.

(தொடரும். )

'இலங்கையில் பௌத்தம்' என்னும் இந்தத்தொடர் பௌத்தம் பற்றி மானிடவியலாளர்களாலும் சமூகவியலாளர்களாலும், அரசியல் விஞ்ஞானிகளாலும் எழுதப்பட்ட ஆய்வுகள் பற்றி அறிமுகம் செய்வதாக அமைகின்றது. குறிப்பாக 19 ஆம், 20 ஆம் நூற்றாண்டுகளில் இலங்கையின் பௌத்த சமய சீர்திருத்தவாதம், சமூகம், பண்பாடு, அரசியல், இன உறவுகளில் ஏற்பட்ட மாற்றங்களில் அரசியல் பௌத்தத்தின் வகிபாகம் என்பன பற்றி ஆய்வாளர்களின் கருத்துக்கள் விரிவாக இந்தத் தொடரில் நோக்கப்படும். கணநாத் ஒபயசேகர, ஸ்டான்லி ஜே. தம்பையா, எச். எல். செனவிரத்தின, கித்சிறிமலல் கொட, சரத் அமுனுகம, ஜயதேவ உயன்கொட, குமாரி ஜயவர்த்தன, லெஸ்லி குணவர்த்தன ஆகிய இலங்கையின் சமூக விஞ்ஞானிகளின் நூல்களும் ஆய்வுக் கட்டுரைகளும் , ஹவ்வார்ட் நிஜின்ஸ், உர்மிலா பட்னிஸ், றிச்சார்ட் கொம்பிரிட்ஜ், யொனதன் ஸ்பென்சர் முதலிய இலங்கையரல்லாத ஆய்வாளர்களின் ஆய்வுகள் சிலவும் இந்தக் கட்டுரைத்தொடரில் விமர்சன நோக்கில் வாசகர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவுள்ளது.

*ஆங்கில மூலம் : ஜேம்ஸ் தேவதாசன் இரத்தினம்*

கந்தையா சண்முகலிங்கம்



பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த 'இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்' என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது.


'நவீன அரசியல் சிந்தனை', 'கருத்தியல் எனும் பனிமூட்டம்', 'இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்' ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.

# அனுராதபுரத்தின் எல்லாளன் சமாதி

நீதி தவறாது ஆட்சி நடத்திய எல்லாளன் என்ற தமிழ் அரசனைப் பற்றி ஏறக்குறைய 1500 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட 'தீபவம்சம்' என்னும் பாளி நூல் "ஆசை, குரோதம், அச்சம், தற்பெருமை ஆகிய மாயைகள் சூழ்ந்த வழிகளில் தன் மனதைச் செலுத்தாமல் அறவழி நின்று செங்கோல் ஓச்சினான்" என்று புகழ்ந்துரைக்கிறது. அம் மன்னனைப் போரில் வென்ற துட்டகைமுனு, மன்னன் எல்லாளன் வீழ்த்தப்பட்ட இடத்தில் ஒரு நினைவுச் சின்னத்தை அமைத்து, மக்கள் அதனை வழிபாடு செய்வதற்கு வழிசெய்தான். 2200 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் சிங்கள பௌத்தர்களால் போற்றப்பட்ட எல்லாளன், 75 ஆண்டுகளுக்கு முன்னர், இலங்கையின் தொல்லியல் ஆணையாளராக இருந்த செனரத் பரணவிதான அவர்கள் எடுத்த



முடிவின் விளைவாக, போற்றுதலுக்கு தகுதியற்ற ஒருவனாக ஆக்கப்பட்டான். இச் சர்ச்சைக்குரிய விடயம் குறித்து வரலாற்றாசிரியரும் தொல்லியல் அறிஞருமான ஜேம்ஸ். ரி. இரத்தினம் ஆய்வுக்கட்டுரை ஒன்றை 1981 ஆம் ஆண்டில் எழுதினார். இக் கட்டுரை 'The tomb of Elara at Anuradhapura' என்ற சிறுநூலாக அவ்வாண்டு பிரசுரிக்கப்பட்டது. 31 பக்கங்களைக் கொண்ட அந்நூலின் முதல் எட்டுப் பக்கங்களில் (பக் 18) அவர் கூறியிருப்பவற்றை இங்கே தமிழில் மொழிபெயர்ப்பாக வழங்குகின்றோம்.



ஜேம்ஸ் தேவதாசன் இரத்தினம்

Image source - wikipedia.org

மகாவம்சம் என்ற புராண காவியத்தின் கதாநாயகனான துட்டகைமுனுவிற்கும் எல்லாளனுக்கும் நடந்த போர் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், கி.மு 161 இல் நடைபெற்றதாகக் கொள்ளப்படுகிறது. இப்போர் பற்றி மகாவம்சம் விபரித்துள்ளது. வீரனான எல்லாளன் வயதில் முதியவன், துட்டகைமுனு அவனைவிடப் பலமடங்கு வயதில் இளையவன். அவர்கள் இருவரும் போர்க்களத்தில் நேருக்கு நேர் மோதினர். இறுதியில் எல்லாளன் களத்தில் வீழ்ந்து உயிர் துறந்தான். அவ்வீரத் தலைவனுக்கு உரிய மரியாதையை வழங்கி அவனின் மரணச் சடங்கை நிகழ்த்தும்படி துட்டகைமுனு கட்டளையிட்டான்.

எல்லாள மன்னன் இலங்கையில் நாற்பது ஆண்டுகள் ஆட்சி செய்தான். அவனது ஆட்சியில் 'நண்பனுக்கும் எதிரிக்கும் சமத்துவமான நீதி வழங்கப்பட்டது' என மகாவம்சம் புகழ்ந்துரைக்கிறது. தீபவம்சமும் எல்லாளனைப் புகழ்ந்துரைக்கிறது. "ஆசை, குரோதம், அச்சம், தற்பெருமை ஆகிய மாயைகள் சூழ்ந்த வழிகளில் தன் மனதைச் செலுத்தாமல், அறவழி நின்று செங்கோல் ஓச்சினான் எல்லாளன். அவனது ஈடு இணையற்ற நல்லாட்சியில் வான்மழை கூட இரவுநேரம் பொழிந்து, பகல் நேரம் முழுவதும் ஓய்வு கொடுத்தது. இயற்கை கூட அம்மன்னனுக்குத் துணை செய்தது" என அந்நூலும் கூறுகின்றது. எல்லாள மன்னன் அறவழி நின்றவன். அவன் பொய்யான சமய நம்பிக்கைகளை உடையவனாய் இருந்தபோதும் தீமையின் வழியில் சென்று தனக்குப் பாவத்தைத் தேடிக்கொண்டவன் அல்லன். அதனால் அவனுக்கு வியத்தகு ஆற்றல்கள் கிடைத்தன என்று மகாவம்சம் அவன் பெருமை பற்றிக் கூறுகின்றது. துட்டகைமுனு எல்லாளனின் மரணத்தால் மனம் கலங்கினான். குற்ற உணர்வும், மனச்சாட்சியும் அவனைத் துன்புறுத்தின. அவன் போர்க்களத்தில் இருந்து நேரே தன் மதிப்புக்குரிய எதிரியின் மரணச்சடங்கிற்குச் சென்றான். எல்லாளன் வீழ்த்தப்பட்ட இடத்தின் அருகே அவனது மரணச்சடங்கு நடைபெற்றது. அங்கே துட்டகைமுனு ஒரு நினைவுச் சின்னத்தையும் எழுப்பி மக்கள் அதனை வழிபாடு செய்யவும் வழி செய்தான். 'இன்றும் கூட லங்காதீபத்தின் இளவரசர்கள் இவ்விடத்தை அண்மித்ததும் வாத்திய இசையை நிறுத்தச்செய்து வழிபாடு செய்தே செல்வதுண்டு' என்றும் மகாவம்சம் கூறுகிறது.

மேற்குறித்த கூற்றிலே 'இன்றும்கூட' என்ற தொடர் கவனத்திற்குரியது. ஒரு தமிழ் அரசனுக்கு ஏறக்குறைய 700 ஆண்டுகள் கடந்த பின்னரும் மக்களால் கொடுக்கப்பட்டு வந்த தனி மரியாதையை அவர் இவ்வாறு பதிவு செய்கிறார்.

மகாவம்சம் கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் எழுந்த நூலாகக் கொள்ளப்படுகிறது. கி.மு. 161 இல் நடைபெற்ற துட்டகைமுனு - எல்லாளன் போர் பற்றி மக்களிடம் வழங்கிய பழமரபுக் கதைகளையே மகாவம்ச ஆசிரியர் எடுத்துக் கூறினார். துட்டகைமுனு எல்லாளன் போர் நடைபெற்று 700 ஆண்டுகளுக்கு மேல் கழிந்தபின்னும் எல்லாளன் நினைவு போற்றப்பட்டதையும், எல்லாளன் சமாதிக்கு மரியாதையும் வணக்கமும் செலுத்தப்பட்டதையும் காணலாம்.

### ஆயிரம் ஆண்டுகள் கடந்த பின்

வம்சத்பகசினி என்னும் நூல் மகாவம்சத்தின் விளக்கவுரை போன்று அமைந்த நூலாகும். இதனைப் பதிப்பித்தவரான ஜி.பி. மலலசேகர என்ற அறிஞர், இந்நூல் கி.பி. 8 ஆம் அல்லது 9 ஆம் நூற்றாண்டில் தோன்றிய நூல் எனக் கூறியுள்ளார். வில்கம் கைகர் என்ற அறிஞர் இந்நூல் கி.பி 11 ஆம் நூற்றாண்டுக்கும். 13 ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் எழுந்த நூல் எனக் கூறினார். எவ்விதம் இருப்பினும் வம்சத்பகசினி எல்லாளன் மறைந்து ஆயிரம் ஆண்டுகள் கடந்த பின் தோன்றிய நூல் என்பதைக் கவனித்தல் வேண்டும். இந்நூலில் துட்டகைமுனு - எல்லாளன் போர் நடைபெற்ற இடம் 'புரதக்கினத்வரகமி' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விடம் 'எல்லாரப்பட்டி மகரவிற்கு' கிழக்கிலும், அனுராதபுரத்தின் தெற்குப் பகுதியில் உள்ள குயவர் குடியிருப்புக்கு மேற்கிலும் உள்ளது எனவும் இந்நூலில் கூறப்பட்டுள்ளது. வம்சத்பகசினி ஆசிரியர் இச்செய்திகளைக் கூறும் முறையில் அவ்விடம் யாவருக்கும் தெரிந்த ஓர் இடம் என்பதும், அவரது தலைமுறையினருக்கு மிகவும் பரிச்சயமான ஓர் இடம் என்பதும் தெரிகிறது. வம்சத்பகசினி ஆசிரியர் குறிப்பிடும்

‘எல்லாரப்பட்டி மகர’ என்பதன் பொருள் யாது? எல்லாளன் உருவம் வைக்கப்பட்டுள்ள மனை (*Elara Image House*) என்பதே இதன் பொருளாகும். துட்டகைமுனுவின் கட்டளைப்படி அமைக்கப்பட்டதும், மகாவம்சத்தினால் உறுதிப்படுத்தப்பட்டதுமான எல்லாளனின் நினைவிடம் பற்றியே வம்சத்பகசினி ஆசிரியர் கூறுகிறார். “இலங்கையின் இளவரசர்கள் அவ்விடத்தை அண்மித்ததும் இசைக் கருவிகள் ஒலிக்கப்படுவதை நிறுத்தி அமைதி பேணினர்” எனவும், “அந்நினைவிடத்தினைச் சுற்றி வலம் வந்து மலர்களைத் தூவியும், நறுமணத் தூபம் இட்டும் வழிபட்டனர்” எனவும் வம்சத்பகசினி ஆசிரியர் கூறுகிறார். ஆயிரம் ஆண்டுகள் கழிந்த பின்னரும் எல்லாளன் சமாதியில் வழிபாடு இயற்றப்பட்டதை, தமது அனுபவப் பதிவாகவே வம்சத்பகசினி ஆசிரியர் கூறியுள்ளார்.

### 14 ஆம் நூற்றாண்டு சத்தர்மலங்காரய என்ற நூல்

கி.பி 14 ஆம் நூற்றாண்டில் தோன்றிய ‘சத்தர்மலங்காரய’ என்ற நூலிலும் எல்லாளன் நினைவிடம் பற்றிய வெளிப்படையான குறிப்பு ஒன்று உள்ளது. எல்லாளனின் உடலை எரித்த இடத்தில் தாது கோபம் (*Dagaba*) அமைக்க வழி செய்யப்பட்டது எனக் கூறப்படுவதோடு 6 ஆம் நூற்றாண்டில் நடைமுறையில் இருந்ததாக மகாவம்சம் கூறும் வழிபாட்டு முறைகள் 14 ஆம் நூற்றாண்டு வரை தொடர்ந்ததை ‘இக்காலம் வரையும்’ என்ற சொற்களால் சந்தர்மலங்காரய அழுத்திக் கூறுகிறது. இளவரசர்கள் இவ்விடத்தை அணுகும்போது பறையொலி முழங்குவதில்லை என்று இந்நூல் குறிப்பிடுகிறது. அனுராதபுரத்தின் மீது சோழர் படையெடுப்பு நிகழ்ந்த பின்பும் கூட எல்லாளன் தாது கோபம் அங்கு இருந்தது. யுத்தத்தின் அழிவுகள் கூட அதனை மங்கச்செய்யவில்லை.

### போத்துக்கேயர், டச்சுக்காரர் காலம்

போத்துக்கேயர், டச்சு ஆட்சிக் காலங்களின்போது அனுராதபுரத்தின் சில பகுதிகளைச் சுற்றிக் காடுகள் வளர்ந்தன. உதாரணமாக பொலன்னறுவ காடுகளால் சூழப்பட்டு எவராலும் அணுகமுடியாத பகுதியாக ஏறக்குறைய 500 ஆண்டுகாலம் இருந்துள்ளது. ஆயினும் அனுராதபுரம் பற்றிய நினைவுகள் மக்கள் மனதில் நிலைத்திருந்தன. கீர்த்தி ரீராஜசிங்கன் அங்கிருந்த நினைவுச் சின்னங்கள் சிலவற்றைப் புனரமைப்புச் செய்ய முயற்சித்தான்.

அனுராதபுரத்தில் எல்லாளன் சமாதி இருந்த இடம் வணக்கத்திற்கு உரியதொன்று என்ற விடயம் மக்கள் நினைவில் நிலைத்திருந்தது. அவ்விடத்தினைக் கடந்து செல்லும்போது, அரசர்கள் முதல் சாமானியர்கள் வரை யாவரும் மதிப்பும் மரியாதையும் செலுத்தாமல் செல்லக்கூடாது என்ற விதி பின்பற்றப்பட்டு வந்தது. இது வாய்மொழியாகவே அடுத்த தலை முறையினருக்கு மக்களால் சொல்லப்பட்டு வந்தது. போத்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்திலும் கூட எல்லாளன் சமாதியின் அமைவிடம் பற்றிய அடையாளம் காணுதலில் தவறு நிகழ்வதற்கு இடம் இருக்கவில்லை.

### எல்லாளன் சமாதிக்கு மரியாதை செய்த பிலிமத்தலாவ

19 ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் பிலிமத்தலாவ கண்டியில் இருந்து தப்பியோடும்போது அனுராதபுரத்தை அடைந்தான். பிலிமத்தலாவ எல்லாளன் சமாதியிருந்த இடத்தை அண்மித்தபோது, அதற்கு மரியாதை செலுத்தத் தவறவில்லை. பிலிமத்தலாவ அனுராதபுரம் ஊடாகத் தப்பி ஓடிய ஆண்டு 1818 ஆகும். அந்நிகழ்வில் இருந்து 22 ஆண்டுகள் கடந்த பின் 1840 இல் போர்பஸ் (*Forbes*) என்ற ஐரோப்பியர் ‘இலங்கையில் பதினொரு ஆண்டுகள்’ (*Eleven Years in Ceylon*) என்ற நூலை வெளியிட்டார். அந்நூலில் போர்பஸ் எல்லாளன் சமாதி பற்றிக் குறிப்பிடுகிறார்.

‘எல்லாளன் இறந்து 2000 ஆண்டுகள் கடந்துவிட்டன. அஞ்ஞானியாகிய ஒருவனின் சமாதி இன்று பௌத்த யாத்திரிகர்களால் புனித சின்னம் ஒன்றின் எச்சமாகக் கொள்ளப்படுகிறது’ என போர்பஸ் குறிப்பிட்டார். கண்டியின் மிகப் பழைய பிரபுக் குடும்பங்களில் ஒன்றைச் சேர்ந்தவனான பிலிமத்தலாவ, கண்டி அரசனுக்கு எதிரான கலகத்தைச் செய்வித்தான் என்றும் அவனது முயற்சி தோல்வியுறவே கண்டியை விட்டுத் தப்பியோடியபோது அனுராதபுரத்தைக் கடந்து சென்றான் என்றும் போர்பஸ் தன் நூலில் குறிப்பிட்டுள்ளார். ‘எல்லாளன் சமாதி இருக்கும் இடம் எது என்பதைச் சரியாக நிச்சயிக்க முடியாத நிலையில் பிலிமத்தலாவ இருந்தான். அவன் அப்போது மிகுந்த களைப்புற்றிருந்தான். தன் உடலை அசைக்கவே சக்தியற்றவனாக இருந்த பிலிமத்தலாவ தான் பயணித்த பல்லக்கில் இருந்து கீழே இறங்கினான். எல்லாளன் சமாதி உள்ள இடத்தைத் தான் தாண்டிச் சென்று விட்டேன் என்று நிச்சயமாகும் வரை அவன் கால்நடையாகவே நடந்து சென்றான்’ (போர்பஸ் கூற்றின் எளிமைப்படுத்திய மொழிபெயர்ப்பு).

### எமர்சன் ரெனன்ற் 1860 இல் செய்த பதிவு

எமர்சன் ரெனன்ற் ‘இலங்கை’ (*Ceylon*) என்ற நூலை 1858 இல் வெளியிட்டார்.

இதன் இரண்டாம் பதிப்பு 1860 இல் வெளியாயிற்று. இந்நூலின் தொகுதி 1 பகுதி 3 அத்தியாயம் 5 இல் 'சிங்கள வீரப்பண்பு - எல்லாளனும் துட்டகைமுனுவும்' என்ற தலைப்பில் உள்ள பகுதியில் ரெனன்ற் கூறியிருப்பது வருமாறு:

"தம்மிடையே முரண்பட்டு நின்ற அரசர்கள் இருவரிடையே நடைபெற்ற மோதல் இலங்கையின் வீரப்பண்பிற்கு உதாரணமான தனித்துவம்மிக்க கதையாகும். எல்லாளனின் வீரத்தை போற்றும் உணர்வோடு அவன் வீழ்ந்து இறந்த இடத்தில் அவனுக்கு மரியாதை செய்யும் நினைவுச் சின்னத்தை அவன் எதிராளி நிறுவினான்".

ரேர்ணர், எல்லாளன் நினைவுச் சின்னத்தின் வழிபாடுகள் பற்றிக் கூறியவை பின்வருமாறு:

"The ruins remain to the present day and the sinhalese still regard it with respect and veneration" (எல்லாளன்

**மகாவம்சம் என்ற புராண காவியத்தின் கதாநாயகனான துட்டகைமுனுவிற்கும் எல்லாளனுக்கும் நடந்த போர் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், கி.மு 161 இல் நடைபெற்றதாகக் கொள்ளப்படுகிறது. இப்போர் பற்றி மகாவம்சம் விபரித்துள்ளது.**

சமாதியின்) அழிபாடுகள் அங்கு இன்றும் கூடக் காணக்கூடியதாக உள்ளன. சிங்களவர்கள் அதனை மதிப்போடு வணக்கத்திற்குரியதாகப் போற்றி வருகின்றனர்.

### 'இலங்கையின் புதையுண்ட நகரங்கள்' நூல் 1885

எஸ்.எம். பரோஸ் (S.M. Burrows) என்பவர் 1884 ஆகஸ்ட் முதல் 1886 பெப்ரவரி வரை இலங்கையில் தொல்லியல் ஆய்வாளராகக் கடமையாற்றினார். பறோஸ் 1885 ஆம் ஆண்டில் இலங்கையின் புதையுண்ட நகரங்கள் (Buried Cities of Ceylon) என்ற நூலை வெளியிட்டார். அந்நூலில் அவர் பின்வருமாறு கூறியிருந்தார்.

தனது போர் வெற்றியினால் துட்டகைமுனு திருப்தியடைந்த போதும் அப்போரினால் சிந்தப்பட்ட இரத்தம் குறித்துக் கழிவிரக்கம் கொண்டான். தன் செயலுக்குப் பிராயச்சித்தம் தேடும் வகையில் தனது எஞ்சிய வாழ்நாளைக் கழிப்பதென அவன் முடிவு செய்தான். அவனது முதலாவது நடவடிக்கையாக எல்லாளனுக்குப் பொருத்தமான நினைவுச் சின்னத்தை நிறுவுவது அமைந்தது. அந்த நினைவுச் சின்னத்தைத் தாண்டிப் பயணிக்கும்போது இசை, ஒலி எழுப்பக்கூடாது என்றும், அரசர்கள் பல்லக்கில் இருந்து இறங்கி மரியாதை செய்ய வேண்டும் என்றும் (துட்டகைமுனு) ஆணையிட்டான். கண்டியில் இருந்து தப்பி ஓடிய போது பிலிமத்தலாவ, எல்லாளன் சமாதிக்கு மரியாதை செய்யும் வகையில் பல்லக்கில் இருந்து இறங்கி, நடந்துபோன நிகழ்வு பற்றியும் பரோஸ் நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

### எச்.சி.பி. பெல்

பரோஸின் பின்னர் தொல்லியல் ஆய்வாளராக நியமனம் பெற்றவர் எச்.சி.பி. பெல் (H.C.P. Bell) ஆவர். இவர் அவதானம் மிக்க ஆய்வாளர் எனப் புகழ்பெற்றவர். பெல், எல்லாளன் சமாதி இருந்த இடத்தில் அகழாய்வு வேலைகளைத் தொடக்கி வைத்தார். போதிய பணம் ஒதுக்கப்படாததால் அவரால் அகழாய்வு வேலைகளை நிறைவு செய்யமுடியவில்லை. 'எல்லாள சோகன' (எல்லாளன் சமாதி) என அழைக்கப்பட்ட எல்லாளனின் நினைவுத்தூபி பற்றி எச்.சி.பி. பெல் 1896, 1897, 1898, 1899, 1900 ஆகிய ஆண்டு அறிக்கைகளிலும் குறிப்பிட்டுள்ளார் (தொல்லியல் திணைக்கள ஆண்டு அறிக்கைகளில் பெல் 'எல்லாள சோகன' பற்றிக் கூறியிருப்பவற்றைத் தொகுத்து ஜேம்ஸ் ரி. இரத்தினம் அவர்கள் 1981 இல் வெளியிட்ட நூலில் பின்னிணைப்பாகத் (பக். 2830) தந்துள்ளார்). 1900 ஆம் ஆண்டளவிலும் எல்லாளன் சமாதி பற்றிய நினைவுகள் அழியாமல் தொடர்ந்தன. நூலாசிரியர்களும் இதனைத் தொடர்ச்சியாகப் பதிவுசெய்து வந்தனர்.

### எச்.டபிள்யூ. கேவ் - 1912

எச்.டபிள்யூ. கேவ் (H.W. Cave) 1912 இல் The Book of Ceylon (இலங்கை பற்றிய நூல்) என்ற நூலை வெளியிட்டார். இந்நூலின் 548 ஆம் பக்கத்தில் கேவ் அவர்கள் எல்லாளன் நினைவுச் சின்னம் பற்றிக் குறிப்பிட்டிருந்தார்.

"(போரின்) பின்னர் துட்டகைமுனு எல்லாளன் இறந்த இடத்திலே நினைவுத்தூபி ஒன்றை எழுப்பினான். அத்தோடு அத்தூபி மரியாதைக்கும் போற்றுதலுக்கும் உரிய இடம் எனவும் அறிவித்தான். அவனது இச்செயல் இருபது நூற்றாண்டுக்கும் மேலாகப் புகழ்ந்து

பாராட்டப்படும் மாண்புக்குரிய செயலாக அமைந்தது. அவ்விடத்தைக் கடந்து செல்வோர் அத்தூபிக்கு மரியாதை செலுத்திச் செல்லவேண்டும் எனவும் கட்டளையிட்டான். அவனது கட்டளை இன்றும்கூட மதிக்கப்பட்டு வருகிறது. நினைவுத்தூபி இருந்த இடம் மண் மேடாகக் காணப்படுகிறது."

## ஜி.பி. மலலசேகர 1928

கலாநிதி ஜி.பி. மலலசேகர என்னும் அறிஞர் The Pali. Literature of Ceylon (இலங்கையின் பாளி மொழி இலக்கியம்) என்ற நூலை 1928 ஆம் ஆண்டில் எழுதினார். அந்நூலில் அவர் இவ்விடயம் பற்றிக் கூறியிருப்பதை பின்வருமாறு கூறலாம்.

"(எல்லாளன்) ஒரு தலைசிறந்த வீரன். அவன் உயர் பண்புகளை உடையவன். நீதி தவறாது ஆட்சி செய்தவன். துட்டகைமுனுவின் கட்டளைப்படி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கை மக்கள் எல்லாளனுக்கு மரியாதை செலுத்தி வருகிறார்கள். இது இலங்கை மக்களுக்குப் பெருமை தரும் விடயமாகும்." (எளிமைப்படுத்திய தமிழ் மொழிபெயர்ப்பு).

## 1948 ஆம் ஆண்டில் கூறப்பட்ட புதிய கதை

கலாநிதி ஜி.பி. மலலசேகர 'இலங்கை மக்களுக்குப் பெருமைதரும் விடயம்' என்று குறிப்பிட்ட இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகப் போற்றப்பட்டு வந்த ஒரு வழமையை இல்லாது ஒழிக்க வேண்டும் என்ற முடிவை கலாநிதி செனரத் பரணவிதான மேற்கொண்டார். அவர் எல்லாளன் சமாதி இருந்த இடம் 'எல்லாளன் சோகன' என்று அழைக்கப்படும் இடம் அல்ல என்று கூறினார். எல்லாளன் சமாதி இருந்த இடத்தைப் பற்றி ஒரு ஊகத்தை 1948 ஆண்டு தமது அறிக்கையில் அவர் எழுதினார். அத்தோடு நில்லாது எல்லாளன் சமாதி என மக்களால் நம்பப்பட்டு வந்த இடத்தில் துட்டகைமுனுவின் சமாதி என்ற பெயர்ப் பலகையை நாட்டும்படி கட்டளையிட்டார். அவரது கட்டளைப்படி அப்பெயர்ப் பலகை அங்கு நாட்டப்பட்டது. 1981 ஆம் ஆண்டில் இது பற்றி எழுதிய ஜேம்ஸ். ரி. இரத்தினம் என்ற அறிஞர் "இப்போது யாரும் அவ்விடத்தில் தமது வாகனத்தை நிறுத்திக் கீழே இறங்கி மரியாதை செய்வது கிடையாது" எனக் குறிப்பிட்டார்.

## முடிவுரை

'அனுராதபுரத்தின் எல்லாளன் சமாதி' ('The Tomb of Elara at Anuradhapura) என்னும் ஆங்கில நூலை ஜேம்ஸ். ரி. இரத்தினம் 1981 ஆம் ஆண்டில் பிரசுரித்தார். 31 பக்கங்களைக் கொண்ட இந்நூலின் முதல் எட்டுப் பக்கங்களில் உள்ள தகவல்களை ஆதாரமாகக்கொண்டு அனுராதபுரத்தின் எல்லாளன் சமாதி பற்றிய கதையை மேலே எடுத்துக் கூறினோம். இந்நூலின் 831 பக்கங்களில் கலாநிதி செனரத் பரணவிதான அவர்களின் வாதங்களை, ஜேம்ஸ். ரி. இரத்தினம் மறுத்துரைக்கின்றார். ஜேம்ஸ். ரி. இரத்தினம் அவர்களின் நூலின் பிற்பகுதியில் கூறப்பட்ட இக் கருத்துக்கள் தனியாக நோக்கப்படவேண்டியன.

**மொழிபெயர்ப்பாளரின் பிற்குறிப்பு :** அழிபாடடைந்த நிலையில் இருந்த அனுராதபுரம் சுதந்திரத்தின் பின்னர், இலங்கை அரசினால் புனரமைக்கப்பட்டது. அந்த நகரம் இருகூறாகப் பிரிக்கப்பட்டது. பழைய நகரப் பகுதி புனித நகர் (Sacred City) என பிரகடனப்படுத்தப்பட்டது. அலுவலகங்கள், சந்தை, பஸ் தரிப்பிடம், கடைகள் என்பன கொண்ட உலகியல் சார் நகரம் (Secular City) புதிய நகரம் (New City) என்ற பெயரில் உருவானது. புவிவெளி (Territorial Space), புனிதம், புனிதம் அல்லாதது எனப் பிரிக்கப்பட்டது. இப் பின்னணியில் எல்லாள மன்னன் நினைவுச் சின்னம் அனுராதபுரத்திலிருந்து காணாமல் போனதில் வியப்பேதும் இல்லை. பல்சமய, பல்பண்பாட்டு வெளியாக இருந்துவந்த பழைய அனுராதபுரம், ஒற்றைச் சமய வெளியாகவும் (Mono Religious Space) ஒற்றைப் பண்பாட்டு வெளியாகவும் மாறியது.

## ஜேம்ஸ். ரி. இரத்தினம் (1905 - 1988)

யாழ்ப்பாண மாவட்டம், மானிப்பாய் கிராமத்தினைச் சேர்ந்த ஜே. எம். எஸ். இரத்தினத்தின் தந்தை பண்டத்தரிப்பைச் சேர்ந்தவர். தாயார் (டுவைட்) மானிப்பாயைச் சேர்ந்தவர். ஆரம்பக்கல்வியை மானிப்பாய் இந்துக்கல்லூரியில் கற்ற இரத்தினம் பின்னர், கொழும்பு புனித ஜோசப் கல்லூரி, புனித தோமையார் கல்லூரி ஆகியவற்றில் கற்றார். 1924 இல் இலங்கைப் பல்கலைக்கழக கல்லூரியில் சேர்ந்த இவர் அங்கு சில ஆண்டுகள் பயின்று பின் சட்டக் கல்லூரியில் சேர்ந்தார். இடதுசாரி அரசியல் ஆர்வத்தினால் படிப்பை இடையில் நிறுத்திய இவர் ஆசிரியராக சிலகாலம் பணியாற்றினார். வாழ்நாள் முழுவதையும் கல்வி, ஆராய்ச்சி, எழுத்து ஆகிய பணிகளில் செலவிட்டார். வரலாறு, தொல்லியல் ஆகிய துறைகளில் ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதினார். பத்திரிகைகளில் அரசியல் விமர்சனக் கட்டுரைகளைத் தொடர்ச்சியாக எழுதிவந்தார்.

ஆதாரம்

*The Tomb of Elara at Anuradhapura Dr. James. T. Ratnam, Jaffna Archaeological Society* (1981).

(தொடரும்.)

இலங்கை முஸ்லிம்கள் குறித்து பண்பாட்டு மானிடவியல் ரீதியான ஆய்வுகளை மானிடவியல் ஆய்வு மரபுகளைப் பின்பற்றி முறையான பரந்துபட்ட வகையில் மேற்கொண்டவர் பேராசிரியர் டெனிஸ் மெக்கில்ரே. அமெரிக்கரான டெனிஸ் மெக்கில்ரே கொலராடோ பல்கலைக்கழகத்தின் மானுடவியல் துறைப் பேராசிரியர். இலங்கைத் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் குறித்த பரந்துபட்ட மானிடவியல் ஆய்வுகளை மேற்கொண்ட மேற்கத்தேயப் பேராசிரியர்களுள் மிக முக்கியமானவர் மெக்கில்ரே. குறிப்பாக கிழக்கிலங்கைத் தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் பண்பாட்டு மானிடவியல் மரபுகள், தொன்மங்கள், பண்பாட்டுக் கூறுகள் குறித்த விரிந்த ஆய்வுகளை மேற்கொண்டு அதனை உலகப் பரப்புக்குக் கொண்டு சென்றவர் என்ற வகையில் இலங்கைத் தமிழர்களும், முஸ்லிம்களும் அவருக்குக் கடமைப்பட்டுள்ளனர். இலங்கை முஸ்லிம்களின் வரலாறு, பண்பாடு, மானிடவியல் மரபுகள், தொன்மங்கள் பற்றிய அவரது சமூகவியல் நோக்கிலான ஆய்வுகள் மற்றும் கள ஆய்வுகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் 'டெனிஸ் மெக்கில்ரே ஆய்வுகளில் தமிழரும் முஸ்லிம்களும் : பண்பாட்டு மானிடவியல் நோக்கு' எனும் தலைப்பில் வெவ்வேறு உப தலைப்புகளுடன் வெளிவரும்.

*ஆங்கில மூலம் : டெனிஸ் மெக்கில்ரே*

ஜிஃப்ரி ஹாசன்



# அரபுக்கள், சோனகர், முஸ்லிம்கள்: இலங்கை முஸ்லிம் இனத்துவ அடையாளத்தின் பரிணாமம்

**பகுதி 3**

மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனையைச் சேர்ந்த ஜிஃப்ரி ஹாசன் அவர்கள் சப்ரகமுவப் பல்கலைக்கழகத்தில் சமூகவியல் துறையில் பட்டம் பெற்றவர். மேலும் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வியியலிலும் பட்டப்பின் டிப்ளோமா பட்டம் பெற்ற இவர், தற்போது ஆங்கில ஆசிரியராகப் பணிபுரிகிறார்.

சிறுகதை, கவிதை, இலக்கிய விமர்சனம், பண்பாட்டு ஆய்வு, மொழிபெயர்ப்பு என விரிந்த தளத்தில் தீவிரமாக இயங்கி வருபவர். இவரது 'போர்க்குணம் கொண்ட ஆடுகள்', 'அகாலத்தில் கரைந்த நிழல்' ஆகிய இரண்டு சிறுகதைத் தொகுப்புகள் வெளிவந்துள்ளன. கட்டுரை, கவிதை, மொழிபெயர்ப்பு சார்ந்து இவரது நூல்கள் பல வெளிவந்துள்ளன.

இலங்கை முஸ்லிம் பண்பாடு, சமூகவியல், ஈழ இலக்கியம், சிங்கள இலக்கியம் முதலான கருபொருள்களில் ஆழமான கட்டுரைகளை எழுதியுள்ளார்.

இலங்கையில், மரைக்காயர் எனும் சொல் பெரும்பாலும் மரைக்கார் (மரிக்கார், மார்க்கார், முதலியன) என வழங்கப்படுகிறது. இது முன்னணி சோனகக் குடும்பப் பெயர்களிலும், பள்ளிவாயல் நம்பிக்கையாளர் சபையின் தலைவருக்கு (அதாவது உள்ளூர் சோனக சமூகத்தின் தலைவர்) வழக்கமாக வழங்கப்படும் பெயராகவும் விளங்குகிறது (அலி 1981*a*; மஹ்ரூஃப் 1986*a*; மெக்கில்ரே 1974).

தென் தமிழ்நாட்டின் மரக்காயர் நகரங்களுக்கும் இலங்கைச் சோனக குடியேற்றங்களுக்கும் இடையிலான வணிக, கலாச்சார மற்றும் புலப்பெயர்வு ரீதியான தொடர்புகள் பேருவளை, கல்பிட்டி, யாழ்ப்பாணம் மற்றும் முஸ்லிம்கள் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வரும் ஏனைய கரையோரப் பிரதேசங்களினதும் வரலாற்று மரபுகளில் காணக்கிடைக்கின்றன (அலி 1981*a*; காஸி செட்டி 1834: 254 *ff*; டென்ஹாம் 1912: 234). இத்தகைய தொடர்புகள் இன்றும் தொடரலாம்: 196-971 இல் அக்கரைப்பற்றில் (அம்பாறை மாவட்டம்) எனது ஆரம்பக் களப்பணியின் போது நான் தங்கி இருந்த சோனக நில உரிமையாளர் தனது இளமைக் காலத்தில் காயல்பட்டினத்தில் மரக்காய வணிகர் ஒருவரிடம் வேலை பழக பல வருடங்கள் கழித்ததாகக் குறிப்பிட்டார். 1983 இல் நான் தென்னிந்தியாவிற்குச் சென்றபோது தனிப்பட்ட முறையில் அந்தத் தகவலை உறுதிப்படுத்திக் கொண்டேன். நெடுங்கால இடப்பெயர்வும், கலப்புமணம் எனக்கருதப்படும் திருமணங்களும், தமிழகத்தைச் சேர்ந்த மரைக்காயருக்கும் (காயலர்களும்)

கேரளாவைச் சேர்ந்த மாப்பிளாக்களுக்கும், இலங்கையைச் சேர்ந்த மூர்களுக்கும் இடையில் இருந்ததற்கான ஆதாரங்கள் (இந்த மூன்று இனங்களும் அவர்களுக்குள் தமிழக உறவுமுறை வழியில் பெற்றோராகவும் மூத்த சகோதரர்களாகவும் பகிர்ந்து கொண்டது போன்று) தமிழகத்தைச் சேர்ந்த பிற முஸ்லிம் இனத்தினரிடமோ லெப்பைகளிடமோ காணப்படவில்லை (Mines 1972: 26-27).



இலங்கை மூர்கள்

Image source - roar.media

இலங்கையின் மேற்குக் கரையோரப்பகுதி சோனக சமூகத்தின் தீர்மானம் எடுக்கும் பாரம்பரிய நிறுவனமாக, மரைக்கார், மத்திச்சம் அல்லது நாட்டாண்மைக்காரர் (மஹ்ரூப்) என்ற பட்டம் பெற்ற பள்ளிவாயல் பிரதம நம்பிக்கையாளரின் தலைமையிலான கிராமிய சபை அல்லது ஊர்கூட்டம் (neighbourhood assembly) செயற்பட்டது. உள்ளூர் கூட்டங்களின் இத்தகைய அமைப்பு இடைக்கால கேரளாவின் சிறப்பியல்பு ஆகும். அங்கு அவை கிராமம் முதல் மாவட்டம் வரை, பரந்த பிராந்திய அலகுகள் வரையில் கூட, அரசியல் அதிகாரத்தை அதிகரிக்கும் படிநிலையை உருவாக்கியது (பத்மநாப மேனன் 1924: 250-69).

இன்றும் கூட, மேற்குக் கரையோரச் சோனகருடன் காலனித்துவத்திற்கு முந்தைய அரசியல் மரபை பகிர்ந்துகொண்டதாக நம்பப்படும் இலங்கையின் கிழக்குக் கரையோர தாய்வழித் தமிழர்களால் இந்த உள்ளூர் சபைகளின் வாய்மொழிப் பாரம்பரியம் இன்னும் நினைவு கூறப்படுகிறது. தமிழ்நாட்டின் மரக்காயர்கள், இலங்கையின் சோனகர்கள் ஆகிய இரு இனத்தவர்களிடையேயும், அதேபோன்று கிழக்குக் கடற்கரையில் உள்ள தாய்வழி இந்துத் தமிழர்கள் மத்தியிலும், யாழ்ப்பாணத்திலுள்ள மலபார் குடிகள் (Malabar inhabitants) மத்தியிலும் இந்தத் தாய்வழி மற்றும் கடல்சார் முஸ்லிம் குணாதிசயங்கள் பல வலிமையாக காணப்படுவதற்கு முந்தைய ‘கேரள இணைப்பு’ காரணமாக இருக்கலாம் (ராகவன் 1971:199-217).

எவ்வாறாயினும், இலங்கைச் சோனகர் வரலாற்று ரீதியாகவும் சமூகவியல் ரீதியாகவும் இந்தியாவில் உள்ள அவர்களது நெருங்கிய முஸ்லிம் அயலவர்களிலிருந்து வேறுபட்ட அம்சங்களையும் கொண்டிருக்கின்றனர். ஆனாலும் எழுத்தாவணங்களின் படி பார்க்கும் போது, ஒட்டுமொத்தமாக இலங்கை முஸ்லிம் சமூகம் அதன் தென்னிந்திய சகாக்களை விடவும் சமத்துவமும் ஒரு படித்தன்மையும் கொண்டது. செல்வம் மற்றும் வர்க்க அமைப்பில் உயர்நிலையிலுள்ள, உயர்தர இரத்தின வியாபாரிகளான இலட்சாதிபதிகளிலிருந்து நகர்ப்புற தொழில்முனைவோர், கிராமப்புற விவசாயிகள், சிறு அங்காடி வியாபாரிகள் (Mauroof 1972) வரை சமூக அடுக்கமைப்பு செங்குத்தாக இருந்து வந்தாலும், தென்னிந்தியாவில் உள்ள மாப்பிளாக்கள், மரக்காயர்கள், லெப்பைகளுக்கு இடையில் ஆவணப்படுத்தப்பட்ட, அகமணம், சாதி போன்ற பிரிவுகள் இருப்பதைப் போன்று இலங்கை முஸ்லிம்களிடம் காணப்படவில்லை. மேலும், ஃபேன்செலோ (1989) சுட்டிக்காட்டியுள்ளபடி, தென்னிந்தியாவின் மாப்பிளாக்கள், மரக்காயர்கள், டெக்கானி முஸ்லிம்கள் உள்ளூர் இந்து மன்னர்களுக்கு மூலோபாய இராணுவ தொழில்நுட்பங்களை (கடற்படை படைகள், குதிரைப்படைகள்) வழங்குபவர்களாக இருந்தனர் அல்லது ஆற்காடு நவாப்களின் ஆட்சியின் கீழ் உருது பேசும் அரசியல் உயர் குழாத்தின் ஒரு பகுதியாக இருந்தனர். இலங்கையின் வரலாற்றில் சோனகர்கள் ஒருபோதும்

**இலங்கை சோனகரின் புவியியல், சனத்தொகையின் தனித்துவமான அம்சங்களையும் ஒருவர் கருத்தில் கொள்ள வேண்டும். வடக்கு மலபார் மாவட்டங்களில், நகர்ப்புற கரையோர நகரங்களில் இருந்து, உள்ளூர் விவசாய நிலம் வரை பரவியுள்ள மாப்பிளாக்கள் ஒரு தனி முஸ்லிம் சனத்தொகையை உருவாக்குகின்றனர்.**



**கேரள முஸ்லிம் பெண்கள் (1870)**
Image source - www.oldindianphotos.in

*அத்தகைய மூலோபாய இராணுவ அல்லது அரசியல் பாத்திரத்தை வகிக்கவில்லை (அலி 1981 அ; தேவராஜா 1986). இதன் விளைவாக அவர்கள் ஓர் அரசுடன் அடையாளம் காணப்படவில்லை அல்லது இறையாண்மை பற்றிய அவர்களின் சொந்த அரசியல், இராணுவ சித்தாந்தத்தை விருத்தி செய்துகொள்ளவில்லை.*

*இலங்கை சோனகரின் புவியியல், சனத்தொகையின் தனித்துவமான அம்சங்களையும் ஒருவர் கருத்தில் கொள்ள வேண்டும். வடக்கு மலபார் மாவட்டங்களில், நகர்ப்புற கரையோர நகரங்களில் இருந்து, உள்ளூர் விவசாய நிலம் வரை பரவியுள்ள மாப்பிளாக்கள் ஒரு தனி முஸ்லிம் சனத்தொகையை உருவாக்குகின்றனர். அதேசமயம் தமிழ்நாட்டில் கரையோர நகர்ப்புற மரக்காயர் வர்த்தக உயர் குழாத்தினர், உள்நாட்டு லெப்பைகளிடம் இருந்து தங்களைப் பிரிக்கும் அகமணத் தடைகள் போன்றவற்றை உருவாக்கியுள்ளனர். இந்த தமிழ்நாட்டு முஸ்லிம் குழுக்கள் எதுவும் பெருந்தொகையினரான கிராமப்புற விவசாயிகளை தங்களுள் ஒரு பகுதியினராக இணைத்துக் கொள்ளவில்லை. மாறாக, இலங்கை முஸ்லிம்கள் மத்தியில், நகர்ப்புற முஸ்லிம் உயர் குழாத்தினர், கிராமப்புற முஸ்லிம் விவசாயக் குடிகள் என இரு சாராரும் உள்ளனர். ஆனால் அவர்கள் கண்டிய மலைகளால் பிரிக்கப்பட்டுள்ள தீவின் எதிரெதிர் பக்கங்களில் காணப்படுகின்றனர்.*

*வடக்கு, கிழக்கு கரையோரங்களில் உள்ள பெரும்பான்மை சோனக விவசாயிகள், நாட்டின் மேற்கு மற்றும் மத்திய பகுதிகளில் உள்ள வர்த்தகம், அரசியல் அதிகாரம் போன்றவற்றில் மேல்நிலையிலுள்ள முஸ்லிம் உயர் குழாத்தினரிடமிருந்து புவியியல் ரீதியாக மட்டுமன்றி சமூக, அரசியல்பண்பாட்டு ரீதியாகவும் வேறுபட்டுள்ளனர். முஸ்லிம்கள் மேல் மாகாணத்திலும், மலையகத்திலும் சில நன்கு அறியப்பட்ட பகுதிகளைத் தவிர (எடுத்துக்காட்டாக, பேருவல, அக்குரணை, புத்தளம்/கல்பிட்டி, மன்னார், கொழும்பு மற்றும் காலியின் சில சுற்றுப்புறங்கள்) சிறுபான்மையாகச் சிதறி வாழ்கின்றனர். இன்னொரு பக்கம் கிழக்கு கரையோரச் சோனகர் விவசாய நகரங்கள், கணிசமானளவிலும் செறிவாகவும் முஸ்லிம்கள் வாழும் பகுதிகளாக உள்ளன. அத்துடன் அவை விவசாயப் பின்புலத்துடனும், தனித்துவமான பிராந்தியத் துணைக் கலாச்சாரத்துடனும் ஒருங்கிணைக்கப்பட்டது; இப்பகுதி இலங்கை முஸ்லிம் சனத்தொகையில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பகுதியை பிரதிநிதித்துவப்படுத்துகிறது.*

*திருகோணமலைக்கு தெற்கே மூதூர், கிண்ணியா, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களின் சில முக்கிய நகரங்கள், விவசாயப் பகுதிகள் (எ.கா. ஏறாவூர், காத்தான்குடி, கல்முனை, சம்மாந்துறை, நிந்தவூர், அக்கரைப்பற்று, பொத்துவில்) போன்ற பிரதேசங்களில் சனத்தொகையில் பாதி முதல் முக்கால்வாசி வரை மூர் இனத்தவர்கள்தான். முழுத் தீவிலும் இந்த கிழக்குப் பிரதேசம் மட்டுமே முஸ்லிம்கள் ஆதிக்கம் செலுத்தும் தேர்தல் தொகுதியாக உள்ளது (குருகுலசூரிய. 1988).*

*(தொடரும்.)*

இலங்கையில், குடியேற்றவாத காலத்திலிருந்துதான் நிலப்படங்களும் வரைபடங்களும் நமக்குக் கிடைக்கின்றன. குறிப்பாக ஒல்லாந்தர் காலத்தைச் சேர்ந்தவை இலகுவாகக் கிடைக்கின்றன. எழுத்துமூல ஆவணங்கள், புழங்கு பொருட்கள், ஓவியங்கள், தொல்லியற் கண்டுபிடிப்புகள் ஆகியவற்றையும் இவற்றைப்போன்ற இன்னோரன்ன பழைய நிலப்படங்கள், வரைபடங்கள் வரலாற்றுத் தகவல்கள் என்பனவும் இங்கு பொதிந்துள்ளன. குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசத்தைச் சேர்ந்த நிலப்படங்களும் வரைபடங்களும் இவற்றுள் அடங்கும். எனினும், யாழ்ப்பாணப் பிரதேசத்தின் வரலாற்றுத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு இவற்றைப் பயன்படுத்துவது குறைவாகவே உள்ளது. வரலாற்றுத் தகவல்களை வழங்குவதில் குடியேற்றவாதக் கால நிலப்படங்களினதும் வரைபடங்களினதும் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதாகவும், யாழ்ப்பாணத்தின் வரலாற்றுத் தகவல்களை நிலப்படங்கள் வரைபடங்களிலிருந்து விளக்குவதாகவும், நிலப்படங்களினதும் வரைபடங்களினதும் தகவல் உள்ளடக்கங்கள் குறித்து ஆராய்வதாகவும் 'யாழ்ப்பாணப் பிரதேசத்தின் குடியேற்றவாதக் காலத்து வரலாற்றுத் தகவல் மூலங்களாக நிலப்படங்களும் வரைபடங்களும்' என்ற இத்தொடர் அமையவுள்ளது.



இரத்தினவேலுப்பிள்ளை
மயூரநாதன்

# யாழ்ப்பாணக் கட்டளையகத்தைக் காட்டும் நிலப்படங்கள்

**பகுதி 2**

சென்ற கட்டுரையில் 1598 ஆம் ஆண்டு யான் கிறிஸ்டியான்ஸ் தூர்சி வரைந்த நிலப்படத்தில் உள்ள சில தகவல்கள் குறித்தும், அவை வரலாற்று நிகழ்வுகளோடு கொண்டுள்ள தொடர்புகள் பற்றியும் விளக்கினோம். குறிப்பாக, மேற்படி நிலப்படம் காட்டும் நிர்வாகப் பிரிவு எல்லைகள், வீதிகள், கோட்டைகள் என்பவற்றைப் பற்றிய ஒரு விளக்கமாக அக்கட்டுரை அமைந்தது. அதே நிலப்படத்திலுள்ள ஆறுகள், ஊர்கள், மடங்கள் முதலிய பல்வேறு அம்சங்கள் தொடர்பிலான தகவல்களை இந்தக் கட்டுரையில் ஆராயலாம்.

## ஊர்கள்

இந்நிலப்படத்தில் இருநூற்றுக்கு மேற்பட்ட ஊர்களைப் பெயர்குறித்துக் காட்டியுள்ளனர். யாழ்ப்பாணக் குடாநாடு ஒல்லாந்தர் காலத்தில் 26 கோயிற்பற்றுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு கோயிற்பற்றிலும் ஒரு தேவாலயம் அமைந்திருந்தது. இத்தேவாலயங்கள் வண்ணார்பண்ணை, சுண்டிக்குழி, நல்லூர், உடுவில், மானிப்பாய், சங்கானை, வட்டுக்கோட்டை, பண்டத்தரிப்பு, மல்லாகம், தெல்லிப்பழை, மயிலிட்டி, அச்சுவேலி, புத்தூர், கோப்பாய், பருத்தித்துறை, உடுப்பிடி, கட்டைவேலி, நாவற்குழி, சாவகச்சேரி, கச்சாய், வரணி, எழுதுமட்டுவாள், முகமாலை, புலோப்பழை, தம்பமை, முள்ளிப்பற்று ஆகிய ஊர்களில் அமைந்திருந்தன.[1] இந்த 26 ஊர்களும் நிலப்படத்தில் குறிக்கப்பட்டுள்ளன. இவை தவிர அராலி, காங்கேசந்துறை, நந்தாவில், கப்பூது முதலிய சில ஊர்களையும் நிலப்படத்தில் குறித்துள்ளனர். இலங்கையில் பழைய நிலப்படங்கள்

இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன் அவர்கள் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் உருவாக்கச் சூழல் துறையில் விஞ்ஞான இளநிலைப் பட்டத்தையும் (B.Sc. (BE)) பின்னர் அதே பல்கலைக்கழகத்தில் கட்டடக்கலையில் விஞ்ஞான முதுநிலைப் பட்டத்தையும் (M. SC. (Arch)) பெற்றார். அத்துடன் இலங்கைக் கட்டடக்கலைஞர் சங்கம் (AIA (SL)), பிரித்தானியக் கட்டடக் கலைஞர்களின் அரச சங்கம் (RIBA) ஆகியவற்றில் பட்டயம் பெற்ற உறுப்பினராவார்.

தமிழ் விக்கிப்பீடியா தொடங்கிய காலத்திலிருந்து அதன் முதற் பயனராகப் பங்களிப்புச் செய்து வருகின்றார். தமிழ் விக்கிப்பீடியாவில் 4500இற்கும் மேற்பட்ட கட்டுரைகளைத் தொடங்கியுள்ளதுடன், மேலும் பல ஆயிரம் கட்டுரைகளின் விரிவாக்கத்திலும் பங்களிப்புச் செய்துள்ளார்.

தமிழ் விக்கிப்பீடியாவில் இவரது பங்களிப்புக்காக கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் 2015 ஆம் ஆண்டின் வாழ்நாள் சாதனையாளருக்கான இயல்விருது பெற்றுக்கொண்டார். தொடர்ந்து தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் ஆனந்தவிகடன் இதழ் வழங்கும் நம்பிக்கை விருதுகளில் 2016 ஆம் ஆண்டுக்கான சிறந்த 10 மனிதர்களுள் ஒருவராக தெரிவு செய்யப்பட்டு விருதை பெற்றுள்ளார்.

சிலவற்றில் குடாநாட்டின் கிழக்குக் கரையோரத்தில் உள்ள பல ஊர்கள் முக்கியத்துவம் கொடுத்துக் குறிக்கப்பட்டிருப்பது பற்றி இத்தொடரின் முன்னைய கட்டுரைகளில் குறிப்பிட்டிருந்தோம். இந்த நிலப்படத்திலும் கற்கோவளம், குடத்தனை, அம்பன், நாகர்கோயில், செம்பியன்பற்று, மருதங்கேணி முதலிய கிழக்குக் கரையோர ஊர்களைக் குறித்துக் காட்டியுள்ளனர்.

தீவுப்பகுதியில் மக்கள் வாழும் தீவுகளின் பெயர்களும் நிலப்படத்தில் உள்ளன. ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய பின்னர், அதன் ஆளுகைக்கு உட்பட்டிருந்த தீவுகளுக்குத் தங்கள் நாட்டிலுள்ள நகரங்களின் பெயர்களை இட்டது பற்றி முந்திய கட்டுரையொன்றில் குறிப்பிட்டோம். அவர்களின் பழைய நிலப்படங்களில் அப்புதிய பெயர்களைத் தனியாகவோ உள்ளூர்ப் பெயர்களுடன் சேர்த்தோ பயன்படுத்தியதையும் பார்த்தோம். அந்த நடைமுறைக்கு மாறாக, தமிழில் புழங்கிய வடிவத்துக்கு நெருக்கமாக, தீவுகளின் உள்ளூர்ப் பெயர்கள் மட்டுமே இந்நிலப்படத்தில் காணப்படுகின்றன. தீவுகளின் தமிழ்ப் பெயர்களும் நிலப்படத்தில் அவை எழுதப்பட்டுள்ள விதமும் பின்வருமாறு: நெடுந்தீவு (Nerrintive), புங்குடுதீவு (Pongeretive), நயினாதீவு (Naÿnative) அனலைதீவு (Anelletive), எழுவைதீவு (Velloewantive), காரைதீவு (Karretive), வேலணை (Welene), ஊர்காவற்றுறை (Kais), அல்லைப்பிட்டி (Alanpitty), மண்டைதீவு (Manda tive). இங்கே ஊர்காவற்றுறையின் பெயராகக் குறித்துள்ள "கைஸ்" (Kais), போர்த்துக்கேய மொழியில் "துறை" என்னும் பொருள் கொண்ட சொல்லாகும். இதுவே மருவி இன்று ஆங்கிலத்தில் "கைட்ஸ்" (Kayts) என வழங்குகிறது.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலும், தீவுப்பகுதியிலும் குறிக்கப்பட்டுள்ள ஏறத்தாழ எல்லாப் பெயர்களுமே இன்றும் வழக்கில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

வன்னிப் பகுதியில் ஏராளமான ஊர்களின் பெயர்களைக் காணமுடிகிறது. (படம்-1) கரையோரங்களில் அமைந்த ஊர்களையும் முக்கியமான வீதிகளை அண்டியுள்ள ஊர்களையுமே நிலப்படம் காட்டுகிறது. உட்புறங்களிலும் குடியிருப்புகள் இருந்திருக்கக்கூடும். அவற்றைப்பற்றிய தகவல்கள் நிலப்படத்தில் இல்லை. ஒல்லாந்த மொழிக்குரிய எழுத்துகளில் அம்மொழியின் ஒலிப்புக்கு ஏற்ப எழுதியுள்ள பெயர்களுள் பெரும்பாலானவற்றை இலகுவாக வாசித்து அடையாளம் காண முடிகின்றது. இவற்றிலிருந்து இன்று இப்பகுதியிலுள்ள பல ஊர்களின் பெயர்கள் ஒல்லாந்தர் காலத்திலும் வழக்கிலிருந்ததை அறியமுடிகிறது. கல்முனை, கௌதாரிமுனை, பூனகரி, ஆலங்கேணி, வேராவில், பல்லவராயன்கட்டு, இலுப்பைக்கடவை, கோயில்குளம், அரிப்பு, அகத்திமுறிப்பு, மறிச்சுக்கட்டி, முறிகண்டி, மல்லாவி, ஐயம்பெருமாள், நெடுங்கேணி, புளியங்குளம், மருதமடு, பூவரசங்குளம், ஒதியமலை, தண்ணிமுறிப்பு, புதுக்குடியிருப்பு, கற்சிலைமடு, ஒட்டிசுட்டான், முல்லைத்தீவு முதலிய பெயர்கள் இவற்றுக்கு எடுத்துக்காட்டுகள். இன்று பலரதும் கவனத்தை ஈர்த்துள்ள குருந்து மலை, குருந்தூர் ஆகிய பெயர்களும் நல்ல தமிழ்ப் பெயர்களாகவே நிலப்படத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது.




**படம் - 1 : தூர்சியின் நிலப்படத்தில் உள்ளபடி யாழ்ப்பாணம், மன்னார், வன்னி ஆகிய பகுதிகளில் இருந்த ஊர்களைக் காட்டும் படம். (Diessen et all இல் காணும் நிலப்படத்தைத் தழுவி வரையப்பட்டது.)**

அதேவேளை, நிலப்படத்திலுள்ள பல பெயர்கள், தற்காலத்தில் பரவலாக அறியப்பட்டவையாக இல்லை. பல பெயர்கள் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் 1926 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஊர்களின் பட்டியலில் இல்லை.[2] எடுத்துக்காட்டாக, இந்த நிலப்படத்தில் பூனகரிக்கு அண்மையாக தியாகம் (Tiagem) என்னும் ஊரைக் குறித்துள்ளனர். வேறு சில ஒல்லாந்தர்கால நிலப்படங்களிலும் இப்பெயர் ஊர்ப்பெயராக மட்டுமன்றித் துணைப் பிரிவுப்

பெயராகவும் உள்ளது. இது தற்காலத்தில் பெரு வழக்கில் இல்லை. 1690 களில் குறிப்பிடத்தக்கனவாக இருந்த இவ்விடங்கள் காலப்போக்கில் தமது முக்கியத்துவத்தை இழந்திருக்கலாம் அல்லது வேறு பெயர்கள் பெற்றிருக்கலாம். ஒல்லாந்தர்காலப் பிற்பகுதியிலும் பிரித்தானியர் காலத்திலும் இப்பகுதியில் ஏற்பட்ட வளர்ச்சிகளினால் புதிய வளர்ச்சி மையங்கள் உருவாகி முக்கியத்துவம் பெற்றதால் அவற்றுக்கு அருகில் இருந்த பழைய குடியிருப்புகள் புதிய ஊர்களுக்குள் உள்வாங்கப்பட்டிருக்கவும் வாய்ப்புகள் உண்டு. குறிப்பாக, பிரித்தானியர் காலத்தில் அமைக்கப்பட்ட புதிய வீதிகள், தொடர்வண்டிப் பாதை, குளங்கள் புனரமைப்பு போன்றவற்றால், வன்னிப்பகுதியின் குடியிருப்புகளின் பரம்பலில் தாக்கங்கள் ஏற்பட்டிருக்கும்.

தற்காலத்தில் முக்கியத்துவம் பெற்று விளங்கும் சில ஊர்களும் இந்த நிலப்படத்தில் இல்லை. கிளிநொச்சி, பரந்தன், வவுனியா என்பன இவ்வாறான ஊர்களுட் சில. இவை பிரித்தானியர் காலத்திலும் அதற்குப் பின்னரும் குடியேற்றத் திட்டங்களினூடாகவும் பிற காரணங்களுக்காகவும் முக்கியத்துவம் பெற்றவை அல்லது புதிதாக உருவானவை.

வன்னியின் ஏராளமான ஊர்களையும் அவற்றின் பெயர்களையும் குறித்துக் காட்டும் மிகப் பழைய நிலப்படங்களில் இதுவும் ஒன்று. இதனால், இந்நிலப்படத்தில் காணப்படும் ஊர்கள் தொடர்பான தகவல்கள் வன்னிப் பகுதி தொடர்பான பல்வேறு ஆய்வுகளுக்குப் பயன்படக்கூடியவை. எடுத்துக்காட்டாகக் குடியிருப்புகளின் பரம்பல் தொடர்பான வரலாறு, குறிப்பான ஊர்களின் வரலாறு, இடப்பெயர் ஆய்வு போன்ற இன்னோரன்ன ஆய்வுத் தேவைகளுக்கு இவை உதவும்.


யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள சில இடப்பெயர்களின் மொழி மூலம் குறித்து ஆய்வாளர்களிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளன. சிலர் யாழ்ப்பாணத்து இடப்பெயர்கள் பல சிங்கள மொழி மூலங்களைக் கொண்டவை என்கின்றனர். வேறு சிலர் இவை தமிழ் மொழி மூலங்களைக் கொண்டவைதான் என வாதிடுகின்றனர். ஆனால், வன்னிப் பகுதியின் இடப்பெயர்கள் பெரும்பாலும் ஐயத்துக்கு இடமின்றித் தமிழே என்பதை நிலப்படத்திலுள்ள பெயர்கள் தெளிவாகக் காட்டுகின்றன. இங்குள்ள இடங்களின் பெயர்களில் பின்னொட்டுகளாக உள்ள பொதுக் கூறுகள், குளம், கேணி, மடு, முனை, தொடுவாய், கழி, குழி, தாழ்வு, ஊர், குடியிருப்பு, கோட்டை, வயல், புலவு, வெளி, திடல், கட்டு, மலை, கண்டல், கடவை முதலிய தூய தமிழ்ச் சொற்களை அடிப்படையாகக் கொண்டவை. இவை இந்தியாவின் தமிழ்நாட்டில் உள்ள ஊர்ப் பெயர்களிலும் காணப்படுகின்றன.3 பெயர்களின் முன்னொட்டுகளாக வருகின்ற சிறப்புக் கூறுகளும் தாவரங்கள், விலங்குகள், நிகழ்வுகள், ஆட்கள், இயற்கை அம்சங்கள், செயற்கை அமைப்புகள், அளவுகள் முதலியவற்றைக் குறிக்கும் தமிழ்ப் பெயர்களாகவே பெரும்பாலும் அமைந்திருப்பதைக் காணமுடிகிறது. இது வன்னிப் பகுதியின் வரலாற்றில் தமிழ் மக்களின் மிக நீண்டகாலப் பங்களிப்பைக் காட்டுகிறது எனலாம்.

இன்றைய வட மாகாணத்தின் தெற்கெல்லைக்கு அப்பால் ஏறத்தாழ அனுராதபுரம் வரை குறித்துள்ள சில இடப்பெயர்களிலும் வயல், குளம், மடு, புளி, பூவரசு போன்ற தமிழ்க் கூறுகள் குறிப்பிடத்தக்க அளவில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. பத்தொன்பது ஆண்டுகள் கண்டியரசனால் தடுத்து வைக்கப்பட்ட பின்னர், அங்கிருந்து தப்பி 1670 களின் இறுதியில் அனுராதபுரத்துக்கு வந்த ரொபேர்ட் நொக்ஸ் என்னும் பிரித்தானியர், அவரெழுதிய நூலில், அனுராதபுரம் பற்றிய தகவல் ஒன்றைப் பதிவுசெய்துள்ளார். அதன்படி அனுராதபுரம் காடுகளால் சூழப்பட்ட ஒரு பரந்த வெளியாக இருந்தது. நடுவில் ஒரு பெரிய ஏரியும் ஆங்காங்கே பல சிறிய நகரங்களும் இருந்துள்ளன. அங்கே சிங்களவரிலிருந்து வேறுபட்ட மலபார் (தமிழ்) மக்கள் வாழ்ந்தனர். அவர்கள் கண்டி இராச்சியத்தின் குடிமக்களாயினும் சிங்கள மொழி அறியாதவர்கள். அவர்களுடைய ஆளுநரும் தமிழே பேசினார்.4 இந்தக் கூற்றுக்கும், அப்பகுதியில் ஊர்ப்பெயர்கள் பல தமிழாக இருப்பதற்கும் உள்ள தொடர்புகளை ஆராயவேண்டும்.

## தேவாலயங்கள்

ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் 26 தேவாலயங்கள் இருந்ததுபற்றியும் அவை இருந்த ஊர்களைக் குறித்துக்காட்டியிருப்பதைப் பற்றியும் ஏற்கெனவே குறிப்பிட்டோம். இவற்றுள் முதன்மைத் தேவாலயம் தெல்லிப்பளையில் அமைந்திருந்தது. (படம்-2) யாழ்ப்பாணக் குடாநாட்டை அண்டிய தீவுப்பகுதியிலும் ஊர்காவற்றுறை,

வேலணை, அல்லைப்பிட்டி, காரைதீவு (காரைநகர்), புங்குடுதீவு, அனலைதீவு, நயினாதீவு, நெடுந்தீவு ஆகிய இடங்களில் மொத்தம் எட்டுத் தேவாலயங்கள் இருந்தன.5 இதைப்போலவே மன்னார்த் தீவிலும் ஏழு தேவாலயங்கள் இருந்தன. இவை, நகரம், தோட்டவெளி, எருக்கலம்பிட்டி, கார்செல், மீனவர் குடியிருப்பு (புனித பீட்டர் தேவாலயம்), பேசாலை, தலைமன்னார் ஆகிய இடங்களில் இருந்தன. மன்னார்த்தீவை அண்டிய கரையோரப் பகுதியில் மேலும் ஏழு தேவாலயங்களையும் சேர்த்து அப்பகுதியில் 14 தேவாலயங்கள் இருந்துள்ளன.6 ஆனால், பெருங்கழிப்பற்றில் புதுக்காடு என்னும் இடத்தில் இருந்த தேவாலயத்தை மட்டுமே நிலப்படத்தில் பெயர்குறித்துக் காட்டியுள்ளனர். யாழ்ப்பாணக் குடாநாடு, தீவுப்பகுதி, மன்னார்த் தீவு ஆகிய பகுதிகளில் தேவாலயங்கள் என்று சொற்களால் குறிக்காவிட்டாலும் அவை காணப்படும் ஊர்களின் அருகில் வரைந்துள்ள கட்டடக் குறியீடுகள் தேவாலயங்களைக் குறிப்பதாக இருக்கக்கூடும்.




**படம் - 2 : போல்டேயஸ் பாதிரியாரின் நூலில் உள்ளபடி, ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் முதன்மைத் தேவாலயமான தெல்லிப்பழைத் தேவாலயம்.**

மூலம்: Baldaeus

## மடங்கள்


இந்நிலப்படத்தில் “மடம்” என்ற ஈறுகளுடன் கூடிய சில பெயர்களைக் காண முடிகின்றது. இவை உண்மையில் மடங்களைக் குறிக்கின்றனவா அல்லது மடங்களால் பெயர் பெற்ற ஊர்களைக் குறிக்கின்றனவா என்பது தெளிவில்லை. எவ்வாறாயினும், இவ்விடத்தில் மடங்கள் இருந்ததை இப்பெயர்கள் காட்டுகின்றன என்பதில் ஐயமில்லை. இலங்கையின் வடபகுதியில் வாழ்ந்த மக்களின் வாழ்வியலில் மடங்கள் முக்கிய பங்கு வகித்ததைக் காட்டும் மிகப் பழைய சான்றுகளில் ஒன்றாக இந்நிலப்படம் விளங்குகிறது. யாழ்ப்பாணப் பண்பாட்டில் மடங்கள் பல்வேறு தேவைகளுக்குப் பயன்பட்டன. கோயில் மடங்கள், சுடலை மடங்கள், சந்தை மடங்கள், அன்னதான மடங்கள், வீதியோர மடங்கள் (போக்குவரத்துப் பயன்பாடு) என அக்கால மடங்களை வகைபிரித்துப் பார்க்கமுடியும். இந்த நிலப்படத்தில் குறித்துள்ள மடங்கள் பெரும்பாலும் போக்குவரத்து வசதிக்கான மடங்களாகவே தோன்றுகின்றன.

இம்மடங்களுட் சில கடல்நீரேரிக் கரையோரமாகக் கடவைகளை அண்டிக் காணப்படுகின்றன. இவற்றை இப்பகுதிகளூடாகப் பயணம் செய்வோரின் வசதிக்காக அமைத்திருக்கக்கூடும். சுண்டிக்குளத்தில் மடம், குளவியாதன்குழி மடம், கார்த்தியன் மடம் ஆகியவை யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கும் வன்னிக்கும் இடையிலான கடல்நீரேரிகளை அண்டி அமைந்துள்ளன. பள்ளிக்குடா மடம் பூனகரிக்கு அண்மையில் மேற்குக் கடற்கரையோரமாக அமைந்துள்ளது. கிழக்குக் கரையோரமாக அமைந்த பைல் கடவைக் கோட்டைக்கு அண்மையிலும் கடல்நீரேரிக் கரையோரமாக வல்லியன் மடம் என்ற மடம் ஒன்று உள்ளது. இவ்வாறான மடங்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் காணப்பட்டதைப் பற்றி இத்தொடரின் சென்ற கட்டுரையில் குறிப்பிட்டிருந்தோம். இவ்வாறான மடங்களுட் சிலவற்றை மீனவர்களின் தேவைகளுக்காகவும் அமைத்திருக்கக்கூடும்.

முக்கிய வீதியோரமாக அமைந்திருந்த மடங்கள் சிலவற்றையும் நிலப்படத்தில் காணமுடிகிறது. பூனகரிக்கு அண்மையிலுள்ள நல்லூரிலிருந்து வலைவச்சபுலோவுக்குச் செல்லும் வீதியில் சிரத்தென் மடம் என்ற பெயரில் ஒரு மடம் உள்ளது. குளவியாதன்குழி மடம், வலைவச்சபுலோ என்பவற்றை இணைக்கும் வீதியில் கொட்டடி மடம், புதுமடம் என இரு மடங்கள் உள்ளன. குளவியாதன்குழி மடத்திலிருந்து ஒட்டன்கட்டுக்குச் செல்லும் வீதியிலும் கொல்லன் அம்பலம் என்ற பெயரில் ஒரு மடம் உள்ளது. நந்திக்கழியை (நந்திக்கடல்) அண்டி

கேப்பாய்க் கோட்டை மடம், குமார மடம் ஆகியவை காணப்படுகின்றன. ஒல்லாந்தர் காலத்தில் அல்லது அதற்கு முன்னர் இம்மடங்களை அமைத்தது யார் என்ற தகவல்கள் கிடைக்கவில்லை. இவற்றுட் சிலவற்றை அந்தந்தக் காலத்து ஆட்சியாளர்கள் அமைத்திருக்கலாம். நிலப்படத்திலுள்ள மடப் பெயர்களுட் சில ஆட்களின் பெயர்களைச் சிறப்புக்கூறாகக் கொண்டிருப்பதால், அவற்றைத் தனிப்பட்டவர்கள் அமைத்திருக்கக்கூடும். இம்மடங்களின் அமைவிடங்களைப் பொறுத்து அவற்றின் பயன்பாடுகள் வேறுபடக்கூடும். இவற்றைப்பற்றி ஆழமான ஆய்வுகளுக்கு இடமுண்டு.

## ஆறுகள்





**படம் - 3 : தூர்சியின் நிலப்படத்தில் மன்னார், வன்னிப் பகுதிகளில் காணப்பட்ட ஆறுகளும் அவற்றின் பெயர்களும். ஆறுகளின் பகுதிகள் அல்லது அவை கடலில் கலக்கும் இடங்கள் மட்டுமே நிலப்படத்தில் உள்ளன. (Diessen et all இல் காணும் நிலப்படத்தைத் தழுவி வரையப்பட்டது.)**

இந்நிலப்படத்தில் பல ஆறுகளின் பெயர்களைக் காணமுடிகின்றது. (படம்-3) பெரும்பாலும் ஆறுகள் கடலில் அல்லது நீரேரிகளில் கலக்கும் இடங்கள் மட்டுமே குறிக்கப்பட்டுள்ளன. உட்பகுதிகளில் சில இடங்களில் ஆறுகள் வீதிகளைக் குறுக்கிடும் இடங்கள் குறிக்கப்பட்டு, அவ்விடங்களில் ஆறுகளின் பெயர்களும் தரப்பட்டுள்ளன.

நிலப்படத்தில் மோதரகம் ஆறு, கல் ஆறு, முசலி ஆறு, பெருங்கழி ஆறு, மட்டி ஆறு, சந்தன் ஆறு, பாலி ஆறு, குமிழங்குழி ஆறு, மண்டாட ஆறு என்பன இலங்கையின் மேற்குக் கரையூடாகக் கடலில் கலக்கின்றன. வட்டக்கச்சி ஆறு, தேவர் ஆறு, பள்ளன் ஆறு என்பன யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கும் தலைநிலத்துக்கும் இடையிலுள்ள கடல்நீரேரியுட் கலக்கின்றன. குருவிச்சை ஆறு, நாயாறு, பட்டியன்வெளி ஆறு, சூரிய ஆறு, பணிக்கனூர் ஆறு, கட்டுக்குளத்தில் ஆறு, ஆனைவிழுந்தான் ஆறு ஆகிய ஆறுகள் கிழக்குக் கரையை அண்டியுள்ள குடாக்கடல்களினூடாக வங்காள விரிகுடாக்கடலில் கலக்கின்றன. குளவியாதன்குழி மடத்திலிருந்து ஒட்டன்கட்டு என்னும் இடத்துக்குச் செல்லும் வீதியைக் கொல்லன் ஆறு, ஆனைவிழுந்தான் ஆறு, சங்கலவன் ஆறு ஆகிய மூன்று ஆறுகள் குறுக்கிடுவதை நிலப்படத்தில் காணமுடிகின்றது. இன்னும் பல ஆறுகளை வீதிகள் கடக்கும் இடங்கள் குறிக்கப்பட்டுள்ளபோதும் அவ்வாறுகளின் பெயர்கள் நிலப்படத்தில் இல்லை.

நிலப்படத்திலுள்ள ஆறுகளுள் மோதரகம் ஆறு, கல்லாறு, பாலி ஆறு, நாயாறு (கிழக்குக்கரை) ஆகியவை இன்றும் அதே பெயர்களிலேயே வழங்குகின்றன. முசலி ஆறு,



யாழ்ப்பாணக் குடாநாடு, தீவுப்பகுதி, மன்னார்த் தீவு ஆகிய பகுதிகளில் தேவாலயங்கள் என்று சொற்களால் குறிக்காவிட்டாலும் அவை காணப்படும் ஊர்களின் அருகில் வரைந்துள்ள கட்டடக் குறியீடுகள் தேவாலயங்களைக் குறிப்பதாக இருக்கக்கூடும்.

யாழ்ப்பாணப் பண்பாட்டில் மடங்கள் பல்வேறு தேவைகளுக்குப் பயன்பட்டன. கோயில் மடங்கள், சுடலை மடங்கள், சந்தை மடங்கள், அன்னதான மடங்கள், வீதியோர மடங்கள் (போக்குவரத்துப் பயன்பாடு) என அக்கால மடங்களை வகைபிரித்துப் பார்க்கமுடியும்.

ஒல்லாந்தர்காலப் பிற்பகுதியிலும் பிரித்தானியர் காலத்திலும் இப்பகுதியில் ஏற்பட்ட வளர்ச்சிகளினால் புதிய வளர்ச்சி மையங்கள் உருவாகி முக்கியத்துவம் பெற்றதால் அவற்றுக்கு அருகில் இருந்த பழைய குடியிருப்புகள் புதிய ஊர்களுக்குள் உள்வாங்கப்பட்டிருக்கவும் வாய்ப்புகள் உண்டு.

பெருங்கழி ஆறு, குமிழங்குழி ஆறு, மண்டாட ஆறு, வட்டக்கச்சி ஆறு, குருவிச்சை ஆறு, ஆகிய ஆறுகளை முறையே இன்றைய நாயாறு (மேற்குக்கரை), பறங்கியாறு, பல்லவராயன்கட்டு ஆறு, மண்டக்கல் ஆறு, கனகராயன் ஆறு, பேராறு ஆகியவற்றுடன் அடையாளங்காண முடியும்.

## கம்பனியின் விதைப்பு வயல்கள்

ஒல்லாந்தர் காலத்தில் ஒல்லாந்தக் கிழக்கிந்தியக் கம்பனி நேரடியாகவே நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டது தொடர்பான குறிப்புக்களை அக்கால ஆவணங்கள் சிலவற்றில் காணமுடிகிறது. எடுத்துக்காட்டாக, யாழ்ப்பாணக் கட்டளைத் தளபதியாக இருந்த அந்தனி பவ்லியன், எழுதிய வழிகாட்டற் குறிப்பில் கம்பனியின் விதைப்பு வயல்களிலிருந்து கிடைக்கும் வருமானங்களைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.[7] இவ்வயல்கள் வன்னி, பூநகரி, இலுப்பைக்கடவை, வேரவில் ஆகிய பகுதிகளிலும் மன்னாருக்குச் செல்லும் பாதையை அண்டியும் குளக்கரைகளிலும் இருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார். நிலப்படத்தில் சில இடங்களில் *Zaaÿ Velt* (விதைப்பு வயல்) எனக் குறித்துக் காட்டப்பட்டுள்ளவை இவ்வாறான வயல்களாக இருக்கக்கூடும். பிற இடங்களில் விதைப்பு வயல் என்று பொதுவாகக் குறித்துள்ளபோதும் ஒரு இடத்தில் மட்டும் அது இருக்கும் இடத்துடன் சேர்த்து மன்னாகண்டல் விதைப்பு வயல் (*Zaaÿ Velt van Manna Candel*) எனக் குறித்துள்ளனர். எனவே இது மன்னாகண்டல் என்னும் இடத்தில் இருந்தது தெளிவு.

## குறிப்புகள்


1. *Phillipus Baldaeus, "A True and Exact Description of the Great Island of Ceylon", trans. Pieter Brohier, The Ceylon Historical Journal, vol. VIII nos.* 14 *(July* 1958*April* 1959), 318336.

2. *Department of Census and Statistics, Alphabetical and Numerical Lists of the Villages in the Northern Province (Colombo: Government Printer,* 1926)

3. கு. பகவதி, தமிழகம் - இலங்கை - ஊர்ப்பெயர்கள் - ஓர் ஒப்பாய்வு (சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1991), 102104.

4. *Robert Knox, An Historical Relation of the Island Ceylon in the EastIndies (London:* 1681), 256.

5. *Baldaeus, "A True and Exact Description of Ceylon,"* 336340.

6. *Baldaeus, "A True and Exact Description of Ceylon,"* 287, 294.

7. *Instructions from the GovernorGeneral and Council of India to the Governor of Ceylon* 16561665*, trans. Sophia Pieters (Colombo: Ceylon Government Printer,* 1908), 108, 109.


(தொடரும். )

'இலங்கையின் அரசியல் 1900 – 1981 : பன்முகநோக்கு' என்னும் இத்தொடர் 1900 முதல் 1981 வரையான காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் பற்றிய பன்முக நோக்கிலான கோட்பாட்டு ஆய்வுகளை தமிழ் வாசகர்களுக்கு அறிமுகம் செய்யும் ஆய்வுக் கட்டுரைகளை கொண்டதாக அமையும். ஆங்கிலத்தில் பருவ இதழ்களிலும் (Journals) அச்சு ஊடகங்களிலும் வெளியான ஆய்வுக் கட்டுரைகளை தழுவியும் சுருக்கியும் தமிழில் எழுதப்பட்டவையாக இக் கட்டுரைகள் அமையவுள்ளன. இலங்கையின் அரசியல் குறித்த பன்முக நோக்கில் (Multi Disciplinary Approach) அமையும் அரசியல் விமர்சனமும் ஆய்வும் என்ற வகையில் அரசியல் கோட்பாடு, சட்டக் கோட்பாடு என்னும் இரண்டையும் இணைப்பனவான உயராய்வுகள் பல ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன. மானிடவியல், சமூகவியல், சமூக உளவியல், வரலாறு, அரசியல் ஆளுமைகளின் வாழ்க்கை வரலாறு (Biography of Political personalities) என்னும் துறைகள் சார்ந்த உயராய்வுகளும் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன. இவ் ஆய்வுகளை தமிழுக்கு இரவல் பெற்று கொண்டு வருதலும் உள்ளீர்த்து தன்வயமாக்கிக் கொள்ளுதலும் இன்றைய அவசியத் தேவையாகும். சி. அரசரத்தினம், ஏ.ஜே. வில்சன், குமாரி ஜெயவர்த்தன, ஜயதேவ உயன்கொட, றெஜி சிறீவர்த்தன, நிறா விக்கிரமசிங்க, ஜயம்பதி விக்கிரமரட்ண, லக்ஷ்மன் மாரசிங்க, சுமணசிறி லியனகே ஆகிய புலமையாளர்களின் கட்டுரைகள் இத்தொடரில் அறிமுகம் செய்யப்படவுள்ளன. இப் பட்டியல் பூரணமானதன்று. இன்னும் பலரைச் சேர்க்க வேண்டியுள்ளது. அவ்வப்போது வேறு பலரும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். 30 மாதங்கள் வரை நீட்சி பெறவுள்ள இத் தொடரில் 30 கட்டுரைகள் வரை இடம்பெறும் என எதிர்பார்க்கின்றோம்.

*ஆங்கில மூலம் : றெஜி சிறிவர்த்தன*

கந்தையா சண்முகலிங்கம்



# ஜேம்ஸ் மனர் எழுதிய எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க அவர்களின் அரசியல் வாழ்க்கை வரலாறு நூல்

பகுதி 1

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த 'இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்' என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

'நவீன அரசியல் சிந்தனை', 'கருத்தியல் எனும் பனிமூட்டம்', 'இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்' ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.

ஜேம்ஸ் மனர் (James Manor) என்னும் பிரித்தானியரான அரசியல், வரலாற்று அறிஞர் 'The Expedient utopian: Bandaranaike and Ceylon' என்ற நூலை எழுதி வெளியிட்டார். இந்நூல் பற்றிய விமர்சனக் கட்டுரையொன்றை காலம் சென்ற அறிஞர் றெஜி சிறிவர்த்தன எழுதினார். அவரது கட்டுரை 'Thatched Patio' என்ற ஆங்கில சஞ்சிகையில் 1990 ஜனவரிபெப்ரவரி இதழில் பிரசுரமானது. அக் கட்டுரையைத் தழுவிய மொழிபெயர்ப்பை இங்கே தந்துள்ளோம்.

## அரசியல் வாழ்க்கை வரலாறு

அரசியல் வாழ்க்கை வரலாற்றை எழுதுவதென்பது ஒரு கைதேர்ந்த எழுத்தாளருக்கே வாய்க்கும் தனித்துவம் மிக்க கலை. அரசியல் வரலாற்றை எழுதப்புகும் எழுத்தாளர் / வரலாற்றாசிரியர் தாம் தேர்ந்துகொண்ட ஆளுமை ஒரு குறிப்பிட்ட காலத்தின் வரலாற்றுச் செயல்முறையில் (Historical Process) என்ன வகிபாகத்தை பெற்றார் என்பதைப் பரிசீலிப்பதற்கான முடிவை மேற்கொள்கின்றார். வரலாற்றாசிரியர் ஒருவர், தனிநபர் ஆளுமைகளுக்கு வரலாற்றில் முக்கியத்துவம் இல்லை; அத்தனிநபர்கள் ஒரு வர்க்கத்தின் பிரதிநிதியாகவோ அல்லது சமூக இயக்கங்களின் முகவர்களாகவோ செயற்படுகின்றார் என்ற

கருத்தை உடையவராக இருப்பின், வாழ்க்கை வரலாறு என்பதை எழுதுவதற்கு முன்வரமாட்டார் என்றே கருதலாம். பெருமனிதர்களே வரலாற்றை உருவாக்குகிறார்கள் என்று கருதுபவர்களாக வரலாற்றாசிரியர்கள் இருக்க வேண்டும் என்பதில்லை. ஜேம்ஸ் மனர் அவர்கள் வெளிப்படையாகவே இக் கருத்தை நிராகரிக்கிறார். வாசகர்களாகிய நாம் ஒரு அரசியல் வாழ்க்கை வரலாற்றைப் படிக்கும் போது எதனை எதிர்பார்க்கின்றோம்? ஒரு தனிநபர் ஆளுமையின் சிறப்புப் பண்புகள் எவை? அவரின் ஆளுமையின் கூறுகளும் பலமும் பலவீனமும் எவ்வாறு வரலாற்று நிகழ்வுகளைப் பாதித்தன என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகின்றோம் எனலாம்.

ஜேம்ஸ் மனர் எழுதிய நூல் அரசியல் வாழ்க்கை வரலாறு என்ற வரையறைக்குள் அமைவதாக உள்ளது. அவர் தமது நூலில் பண்டாரநாயக்கவின் தனிப்பட்ட வாழ்க்கை செய்திகள் எவையோ, அவை பற்றி மட்டுமே குறிப்பிடுகிறார். உதாரணமாக பண்டாரநாயக்கவின் சகோதரிகளுக்கும் அவருக்கும் இடையிலான உறவு, அவரது மனைவியுடனும், பிள்ளைகளுடனும் அவர் கொண்டிருந்த உறவு என்பன பற்றி இந்நூல் பேசுவதைத் தவிர்த்துள்ளது. இத் தனிப்பட்ட உறவுகளுக்கும் அவரது அரசியல் வாழ்க்கைக்கும் தொடர்பு இருக்கவில்லை என்றே ஜேம்ஸ் மனர் கருதினார் எனலாம். ஆனால் பண்டாரநாயக்கவின் பிள்ளைப் பருவ வாழ்க்கை, அவர் இளைஞனாக இருந்த காலத்து வாழ்க்கை பற்றிய விரிவான தகவல்களை மனர் தருகிறார். இளமைக்கால வாழ்வில் பண்டாரநாயக்கவின் வாழ்க்கைச் சூழலும் பின்புலமும், பிற்காலத்தில் அவரின் அரசியல் வாழ்க்கையைப் பாதிப்பதாக அமைந்தது. அவரின் ஆளுமையின் குணப் பண்புகளும் நடத்தை முறைகளும் இளமை வாழ்க்கையால் கட்டமைக்கப்பட்டவையாகும். இக் காரணத்தினாலேயே ஜேம்ஸ் மனர் இளமை வாழ்வின் தனிப்பட்ட கூறுகளை விபரிக்கிறார் எனலாம். பண்டாரநாயக்கவின் இளமைக் காலச் சித்திரம் சிறப்பாகவே நூலில் தரப்படுகிறது. பண்டாரநாயக்கவின் சுயசரிதைப் பாங்கான குறிப்புகள், அவரது நண்பர்களதும் கூட்டாளிகளதும் நினைவுக் குறிப்புகள், பண்டாரநாயக்க குடும்பத்தின் ஆவணங்கள் என்பனவற்றை ஜேம்ஸ் மனர் நன்றாகவே பயன்படுத்தி இச் சித்திரத்தை வரைந்துள்ளார்.





Image source - www.goodreads.com

பண்டாரநாயக்கவின் தந்தை சொலமன் டயஸ் பண்டாரநாயக்க 'மகா முதலியார்' என்ற பதவியை வகித்தவர் என்பது நாடறிந்த செய்தி. 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் சேர் சொலமன் டயஸ் இலங்கையில் 'முதலாவது இடத்தைபெறும் சிங்களக் கனவான்' (The first Sinhalese Gentleman) என்ற சிறப்பைப் பெற்றிருந்தார். பண்டாரநாயக்கவின் தாயார் ஒபயசேகர குடும்பத்தில் பிறந்தவர். ஒபயசேகர குடும்பம் 'சிங்கள சமூகத்தின் அதி உயர்' இடத்தில் வைக்கப்பட்டிருந்த சிறியதொரு உயர் குழாமினைச் (The Small Superelite) சேர்ந்தது. ஆயினும் பண்டாரநாயக்க சிறுவனாகத் தலையெடுக்கத் தொடங்கிய காலத்திலேயே அவரது தாயாருக்கும், தந்தைக்கும் இடையே உறவுகள் கசப்பாகி முறிவடைந்திருந்தன. அவர்கள் இருவரும் பரஸ்பரம் மனவேற்றுமையை கொண்டிருந்தனர். பண்டாரநாயக்கவின் தாயார் தனது கணவரை விடத் தமது ஒபயசேகர குடும்பம் உயர்வானது என்றும், தாம் தனது கணவரை விட அறிவில்

மேம்பட்டவர் என்றும் கருதினார். கணவரை விட மனைவி அதிகம் படித்தவர் என்பது உண்மைதான். அது மட்டுமல்லாமல் 'சீமாட்டி பண்டாரநாயக்க, சேர் சொலமனை அவரது விருந்தினர்கள் முன்னிலையிலேயே கடும் சொற்களால் புண்படுத்துவதில் தயக்கம் காட்டியது கிடையாது' எனவும் ஜேம்ஸ் மனர் எழுதுகிறார். இத்தகைய சண்டைகளின் விளைவால் பண்டாரநாயக்க எட்டு - பதினொரு வயதாக இருந்த காலத்தில், அவரது தாயார் தனது இரு சிறு பெண்பிள்ளைகளையும் உடன் கூட்டிக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறிவிட்டார். சிறுவன் பண்டாரநாயக்க தனது அப்பாவுடன் தமது பரம்பரையினர் வீடான ஹொரகொல்லவில் தனிமையில் வாழ நேர்ந்தது. அதன் பின்னர் சிறுவன் பண்டாரநாயக்கா எப்போதாவது இடைக்கிடை தாயாரைக் கண்டதுண்டு. அவர் வாழ்வு தாயின் தொடர்பு இன்றியே கழிந்தது. 'இளம் சொலமன் இளமையின் பெரும்பகுதியைத் தனிமையிலேயே கழித்தார். அவருக்கு பாசத்தின் நெருக்கமும் அரவணைப்பும் கிடைக்கவில்லை'. அவரது தந்தையார், சிறுவன் சொலமன் உயர்குழாத்தின் பிற குடும்பத்து சிறுவர்களோடு கூடப் பழகக்கூடாது என்ற கட்டுப்பாட்டை விதித்தமையால் சிறுவனின் தனிமை வாழ்வு மேலும் கொடுமை மிக்கதாயிற்று. சிறுவன் சொலமனிற்கு 16 வயது ஆகும் வரை பிரித்தானியர்களான ஆசிரியர்கள், வீட்டில் வைத்தே பாடம் சொல்லிக் கொடுத்தனர். பின்னர் 16 வயதானதும் தந்தையார் அவரை சென்ற். தோமஸ் கல்லூரியில் சேர்த்தார். அங்கே, பண்டாரநாயக்கா மாணவர் விடுதியில் தங்குவதற்குப் பதிலாக, 'வார்டன்' (Warden) ஆகிய ஸ்ரோண் (Stone) வீட்டில் தங்கியிருப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

பண்டாரநாயக்கவின் இளமைக்கால வாழ்க்கையில் அவரது தந்தையின் ஆதிக்கத்தின் பாதிப்பு இருந்தது. இதனால் சிறுவன் பண்டாரநாயக்கவின் மனதில் தந்தை மீதான ஒரு அச்சம் உருவாகியிருந்தது. அதேவேளை அவர் தந்தையின் மீது கடும் கோபத்தையும் எதிர்ப்புணர்வையும் மனதில் மறைத்து வைத்திருந்தார். தந்தையின் ஆதிக்கத்தில் இருந்து தப்பிச் செல்வதற்கான வழி அவருக்குக் கிடைக்கவில்லை. ஆயினும் அவரது தந்தை, பண்டாரநாயக்கவின் உள்ளத்தில் ஒரு நம்பிக்கையை ஆழமாக வேரூன்றச் செய்தார். 'நான் விதிவிலக்கான ஒருவன். பிறப்பிலேயே ஒப்பற்ற எதிர்காலம் எனக்கு உள்ளது என்பது தீர்மானிக்கப்பட்டுவிட்டது.' என்ற மனப்பாங்கு பண்டாரநாயக்கவின் உள்ளத்தில் உறைந்திருந்தது. அவர் பள்ளி மாணவனாக இருந்த காலத்திலேயே இப்படி எழுதினார். "என்னைச் சூழவுள்ள பிறரைவிட நான் மேலானவன் என்ற நம்பிக்கை என்னிடம் இருந்தது. எனது மேன்மையும் மாண்பும் ஒருநாள் மலரும் என்று எண்ணினேன்." ஆங்கிலத்தில் *"I was brought up with the idea of greatness and superiority to others surrounding me and imbued with the notion of my greatness to come."*



சொலமன் டயஸ் பண்டாரநாயக்க மற்றும் அவரது மனைவி

Image source - www.reddit.com

மேற்படி கூற்று அவர் இளமைக் காலத்தில் எழுதியது. அவருக்கு முப்பது வயதானபோது அவர் எழுதியிருப்பது அவரது வீண் தற்பெருமையை வெளிப்படுத்துவது; உண்மைக்கு மாறான பீற்றுதல்; வரட்டு பெருமை என்றே கருதத்தக்கது (*Posturing and Humourless, It is a deadly self - exposure of personal vanity*).

"நான் பள்ளியில் படிக்கும் போதும், ஒக்ஸ்போர்ட்டில் பட்டதாரி மாணவனாக இருந்தபோதும், இப்பொழுது பொதுவாழ்வு என்ற பரந்தவெளியில் நிற்கும் போதும், நான் செய்வதற்கு மகத்தான பணிகள் காத்துக்கிடக்கின்றன என்ற உணர்வு என்னிடம் எப்போதும் மேலோங்கி இருந்தது" என்று

குறிப்பிடும் பண்டாரநாயக்க கீழ்வருமாறு தொடர்ந்து எழுதுகிறார்.

“ஆயினும் எனது அகத்தின் ஒருபகுதியில் எளிமையான வாழ்க்கை குறித்த தீவிர ஏக்கமும் இருந்தது. சில வேளைகளில் ஒரு துறவியின் அமைதியான வாழ்க்கை, அதில் அவர் அடையும் திருப்தி, கோவில் என்ற மூடுண்ட உலகத்துக்குள் அவர் அனுபவிக்கும் தனிமை என்பனவற்றை நினைத்துப் பார்ப்பேன். இன்னும் சில வேளைகளில் நான் ஒரு காட்டுவாசியின் இன்ப உலகைக் கற்பனை செய்து பார்ப்பேன். அவன் தலைக்கு மேலாக நீலவானின் கீழ் இசைபாடிப் புள்ளினங்கள் பறப்பதையும் அவனுடைய ‘சோலிசுறட்டு’ இல்லாத வாழ்வையும் நினைத்துப் பார்ப்பேன். அத்தோடு சாதாரண மனிதனின் வாழ்க்கையை, அவனது சின்னச் சின்னச் சந்தோஷங்கள், சிறு சிறு தொல்லைகள் என்பனவற்றோடு அவன் காலம் ஓட்டுவதை நினைத்துப் பார்ப்பேன். ஆயினும் ஐயகோ! என்னால் அத்தகைய வாழ்க்கைக்குத் திரும்பவே முடியாது”

அவர் பிரதமாராகப் பதவி வகித்தபோதும், அவர் தனது ‘இன்டலெக்சுவல் மீதகைமையை’ (Intellectual Superiority) வெளிப்படுத்தும் கூற்றுக்களைக் கூறும் வழக்கத்தைக் கொண்டிருந்தார். ஒரு தடவை தாம் பதவியிலிருந்து ஓய்வு பெற்றபின் ‘போரும் வாழ்க்கையும்’ (War and Peace) போன்றதொரு வரலாற்று நாவலை எழுதப் போவதாகக் குறிப்பிட்டார். அவரிடம் மேலோங்கியிருந்த இந்த உயர்வு மனப்பான்மைக்கு அவரைச் சூழ, அவரது வாழ்க்கையிலும் செயல்களிலும் பங்குகொண்டவர்களான அநாமதேயங்களும் காரணங்களாக, அவ் எண்ணத்தை அவர் மீது பதியச் செய்வதற்கு உதவினார்கள் என்றும் கருதலாம். ஒரு தடவை பண்டாரநாயக்கவின் மந்திரிசபையைச் சேர்ந்த அமைச்சர் ஒருவர் பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போது அறிஞர் ஒருவரின் கூற்றுக்களை மேற்கோள் காட்டி உரையாற்றிக் கொண்டிருந்தார். அப்போது அந்த மேடையில் வீற்றிருந்த பண்டாரநாயக்க ஒரு ஊடகவியலாளரைப் பார்த்து “பாருங்கள்! எனது அமைச்சர்கள் உண்மையில் புத்தகங்களை வாசிக்கிறார்கள் அல்லவா?” என்றார்.

அரசியல் மாணவர் என்ற முறையில் நாம் கவனத்தில் மேற்கொள்ள வேண்டிய முக்கிய விடயம்: பண்டாரநாயக்கவின் இளமை வாழ்க்கையின் ஊடாக அவரிடத்தில் உருவான தனிநபர் நடத்தைக் கோலங்கள் பிற்காலத்தில் அரசியலில் எவ்வாறு வெளிப்பட்டது என்பதாகும்.

தந்தை - மகன் அதிகார உறவுகள் இளைய பண்டாரநாயக்கவின் மனோபாவத்தைப் பிற்காலத்தில் கட்டமைப்பதற்கு உதவியதாக மனர் குறிப்பிடுகிறார். பண்டாரநாயக்க **1925** இல் ஒக்ஸ்போர்ட்டில் இருந்து திரும்பிய போது அவரது தந்தை ‘வெற்றிவாகை சூடிவரும்’ வீரனிற்குரிய வரவேற்பு வைபவம் ஒன்றை ஒழுங்கு செய்தார். கொழும்பு துறைமுகத்தில் அவரை வரவேற்க ஒரு பெரும் கூட்டம் கூடியது. அங்கு கூடிய உறவினர்கள் அவரைக் கிறிஸ்தவ தேவாலயத்திற்கு (All Saints Church) ஊர்வலமாக அழைத்துச் சென்று வழிபாடுகளைச் செய்தனர். சிலநாட்கள் கழிந்தபின் அவர் ஹொரகொல்ல வளவுத் தோட்டத்திற்கு வண்டியில் அழைத்துச்



பண்டாரநாயக்கவின் குடும்பம்

Image source - www.reddit.com

செல்லப்பட்டு, அத்தோட்டத்திலிருந்து மூன்று மைல் தூரம் வரை ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். அவ்வூர்வலத்தின் முன்னால் அலங்கரிக்கப்பட்ட யானைகள் அணிவகுத்துச் சென்றன. நடனம், இசை முதலிய கலைகளை நிகழ்த்திக் காட்டும் குழுக்கள் ஊர்வலத்தில் பின்தொடர்ந்தன. தோட்டத்தின் வாசலை


நெருங்கிய போது ஒரு 'பிரம்மாண்டமான' மக்கள் கூட்டம் அவரை வரவேற்றது. அலங்காரப் பந்தல்கள் அங்கே அமைக்கப்பட்டிருந்தன. அங்கே கூடியிருந்தோர் பண்டாரநாயக்காவை தாழ்ந்து பணிந்து உபசரித்து வரவேற்றனர். அப் பகுதியின் கிராமவாசிகளின் உபசார மொழி அளவுகடந்த பணிவை வெளிப்படுத்துவதாக இருந்தது. ஹொரகொல்ல வளவு மாளிகை வீட்டின் முன்னுள்ள புற்தரையில் பல வேடிக்கை விளையாட்டுகள் இடம்பெற்றன; அருகே உள்ள பாடசாலையில் விளையாட்டுப் போட்டி நடத்தப்பட்டது. மரபுவழி நடனங்களும் வாண வேடிக்கைகளும் இடம்பெற்றன. அங்கு பண்டாரநாயக்க ஏற்புரையை நிகழ்த்தும்போது பின்வருமாறு குறிப்பிட்டார். "உங்கள் மத்தியில் என்னை விதி ஒரு முக்கியமான ஆளாக முன்னிறுத்தியிருக்கின்றதென்றால், நான் உங்களின் எஜமானாக இருப்பதற்கு இங்கு வரவில்லை. நான் உங்களின் சேவகனாக இருப்பேன்."

இளைஞரான பண்டாரநாயக்கா மக்களைப் பார்த்து 'உங்களின் சேவகனாக' இருப்பேன் என்று கூறியமை அவரின் தந்தைக்கு (உள்ளூர) விருப்பின்மையை உண்டாக்கியது. தன் மகனின் வாழ்க்கைச் செலவுக்காக தந்தை பணம் கொடுக்க முன்வந்தார். ஆனால் பண்டாரநாயக்க அதனை ஏற்க மறுத்துவிட்டு நகரத்திலுள்ள வீட்டில் குடியிருந்தார். சட்டவளவாளராக தொழில் செய்து தனது வாழ்க்கைக்கான வருமானத்தைத் தேடிக்கொள்ளத் தொடங்கினார். தனது தந்தையின் விருப்பத்திற்கு மாறாக அரசியலில் பிரவேசிக்கவும் முடிவுசெய்தார். **1926** இல் கொழும்பு முனிசிப்பல் சபைத் தேர்தலின் போது மருதானை வட்டாரத்தில் ஏ.ஈ குணசிங்கவுக்கு எதிராக பண்டாரநாயக்க போட்டியிட்டார். அக்காலத்தின் பலம்மிக்க அரசியல்வாதியான ஏ.ஈ குணசிங்கவுடன் மோதுவதற்கு பண்டாரநாயக்க தனது தந்தையின் உதவியை நாடவேண்டியதாயிற்று. ஏ.ஈ.டி. சில்வா என்பவர் (இவர் பின்னர் சேர். ஏர்னஸ்ட் எனப் பட்டம் சூட்டப்பட்டு அழைக்கப்பட்டவர்) மருதானை வட்டாரப் பிரதிநிதியாக இருந்து வந்தார். தந்தை சொலமன் டயஸ் செல்வாக்கை உபயோகித்து ஏ.ஈ.டி. சில்வாவைப் போட்டியிலிருந்து விலகச்செய்தார். மருதானை வட்டாரத்தில் வாக்குப் பலம்மிக்கவர்களாய் இருந்த முஸ்லீம் சமூகத்தினரது ஆதரவைத் தன் செல்வாக்கினால் பெற்றுக்கொண்டார்.

தந்தை மகன் உறவில் இங்கே தங்கியிருத்தலும் பணிந்து போதலும், பின்னர் இடையிடையே கிளர்ந்தெழுந்து போர்க்கொடி தூக்குதல் என்ற இரண்டும் மாறி மாறி இடம்பெறுவதைக் காண்கிறோம். பண்டாரநாயக்கவின் பிற்கால அரசியல் வாழ்க்கையில் அதிகாரத்தை (Authority) எதிர்கொண்டபோது இதே பாங்கிலான தங்கியிருத்தலும், கிளர்ச்சியும் (Dependence and rebellion) என்ற நடத்தை வெளிப்பட்டதை மனர் சுட்டிக் காட்டுகிறார். மனர் பண்டாரநாயக்கவின் நடத்தைக்கு அவரது அரசியல் வாழ்வில் இருந்து மூன்று நிகழ்வுகளை எடுத்துக்காட்டுகிறார். முதலாவது சட்டசபையில் (State Council) உறுப்பினராக பின்வரிசை ஆசனத்தில் இருந்த 'Backbencher' ஆன பண்டாரநாயக்க மந்திரிசபையை முதலில் கண்டனம் செய்ய ஆரம்பித்தார். ஜயதிலகவிடமும் சேனநாயக்கவிடமும் இருந்து அவருக்கு முகத்தில் அடித்தாற்போல் பதில் தாக்குதல் வந்தது. இதனால் அடங்கிப்போன பண்டாரநாயக்க மந்திரிசபைக்குப் பணிந்துபோனவராகவும் மந்திரிசபைக்கு எதிராக வெளியிலிருந்துவரும் விமர்சனத்திற்குப் பதிலளிப்பவராகவும் மாறினார்.

இரண்டாம் உலகயுத்த காலத்தில் பண்டாரநாயக்க, ஆளுநர் கல்டிகொட் (Caldecott) மீது தனிப்பட்ட தாக்குதலைத் தொடுத்தார். குடிவரவு தொடர்பான பிரச்சினையில் கல்டிகொட் மந்திரிசபைக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை எனக் குற்றம்சாட்டிப் பேசினார்; பிரித்தானியாவின் யுத்தக் கொள்கையின் இலக்குகள் பற்றிக் கேலி செய்து பேசினார். தன் கட்டுப்பாட்டில் இருந்த உள்ளூராட்சி மன்றங்களை போர் நிதிக்குப் பங்களிப்பு செய்ய வேண்டாம் என உத்தரவிட்டார். இவற்றை அவதானித்த கல்டிகொட் "இந் நடவடிக்கைகள் உங்கள் அமைச்சுப் பதவிநிலைக்கு ஏற்றவை அல்ல; முரணானவை" எனக் குறிப்பிட்டுக் கடிதம் அனுப்பினார். தனது அமைச்சர் பதவி பறிபோகப் போகிறது, பதவி நீக்கம் நடைபெறப் போகிறது என்று அச்சம் கொண்ட பண்டாரநாயக்க, பின்வாங்கிக்கொண்டார். இந்தச் சம்பவம் இன்னொரு வகையிலும் விளக்கப்படலாம். அப்போது இலங்கையில் தீவிர தேசியவாத இயக்கம் என்று ஒன்று இருக்கவில்லை. அந்நிலையில் தமக்கு ஆதரவு தரக்கூடிய மக்கள் பலம் இல்லாத நிலையில், பின்வாங்குவதைச் சரியான வழி என அவர் நினைத்திருக்கலாம். ஆனால் இந்நிகழ்வுக்குப் பின், மந்திரிசபையில் ஆளுநரின் ஆதரவாளராக பண்டாரநாயக்க மாறினார். இவ்வாறான 'குத்துக்கரணமடித்தல்;

முதலில் கிளர்ச்சி பின்னர் பணிந்துபோதல்' என்ற மனர் (Manor) குறிப்பிடும் நடத்தைப் பாங்குக்கு சரியான உதாரணமாக விளங்குகிறது.



பரம்பரை வீடான ஹொரகொல்ல

Image source - www.reddit.com

சுதந்திரத்திற்குப் பின்னர், 1949 - 1951 காலத்தில் பண்டாரநாயக்க மந்திரியாக இருந்தார். அப்போது பிரதமராக டி.எஸ். சேனநாயக்கவுடனான இவரது உறவுகளிலும் முதலில் கிளர்ச்சி பிறகு பணிந்துபோதல் என்ற நடத்தைப் போக்கு வெளிப்பட்டது. அக்காலத்தில் நடந்த முக்கிய சம்பவம் 1951 யூலை மாதம் அவர் இராஜினாமா செய்தமையாகும். சுதந்திரத்திற்குப் பிந்திய அமைச்சரவையில் உறுப்பினராக இருந்த பண்டாரநாயக்க பல கோரிக்கைகளையும் முன்மொழிவுகளையும் ஐக்கிய தேசியக்கட்சி அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தார். அவற்றில் பெரும்பான்மையானவை தேசியவாதப் பிரச்சினைகளுடன் தொடர்புடையவையாக இருந்தன. இவரது கோரிக்கைகளை டி.எஸ். சேனநாயக்கவும் அமைச்சரவையும் நிராகரித்து வருதல் வழக்கமாயிற்று. இதனைவிட பண்டாரநாயக்கவை அவமானப்படுத்த வேண்டுமென்பதற்காகவே, வேண்டுமென்றே திட்டமிட்டுச் செய்யப்பட்ட பல நிகழ்வுகளும் இடம்பெற்றன. அவ்வேளைகளில் பண்டாரநாயக்கவின் கூட்டாளிகள் பலர் டி.எஸ் சேனநாயக்க குழுவினருடன் மோதலுக்கு தயாராக முன்வந்த வேளையிலும், பண்டாரநாயக்க பின்வாங்கிக்கொண்டு அமைதியானார். 1957 யூலை மாதம் அவர் இராஜினாமாச் செய்தமை, வேறுவழி எதுவும் இல்லாத நிலையில் மேற்கொண்ட முடிவாகும். டி.எஸ் சேனநாயக்க மாற்று வழி எதனையும் வழங்கவில்லை. மனர் இவ்விடத்தில் உளவியலாளர் எரிக்சனின் உளவியல் கருத்துக்களை பயன்படுத்துகிறார் எனலாம். ஆனால் இவ்வாறு தனிமனித உளவியலைப் பயன்படுத்தி அரசியல் நடத்தையை விளக்குவதைப் பலர் ஏற்பதில்லை. மனர் தமது விளக்கத்திற்கு பண்டாரநாயக்கவின் வாய்ச் சொற்களையே ஆதாரம் காட்டுவது அவரது விளக்கத்திற்குப் பலம் சேர்க்கிறது. 1951 இல் பாராளுமன்றத்தில், தான் ஏன் இராஜினாமா செய்கிறேன் என்பதற்கான காரணங்களை பண்டாரநாயக்க தனது பேச்சின்போது குறிப்பிட்டார். அப்போது இளமையில் தனது தந்தையுடன் ஏற்பட்ட முரண்பாட்டை குறிப்பிடுகிறார். 1951 இல் தாம் டி.எஸ். சேனநாயக்கவுடன் உறவை முறித்துக்கொண்டு வெளியேறியதை 1926 இல் தனது தந்தையின் விருப்பத்திற்கு மாறாக அரசியலில் புகுந்ததோடு தொடர்புபடுத்திப் பேசும்போது அவர் கூறியவை;

"நான் இம் முடிவை எடுத்தபோது, என்னுடன் தனிப்பட்ட உறவுகளை வைத்திருப்பவர்களுடன் முரண்பாடு கொண்டு, நான் எவர் எவரை மனம் வருந்தச் செய்ய விரும்பமாட்டேனோ அவர்களையெல்லாம் வருந்தச் செய்யும் நிலையில் இருப்பது மட்டுமல்லாது, நான் பல தியாகங்களைச் செய்ய வேண்டியேற்படும். பல கஷ்டங்களை அடையநேரிடும் என்பதையும் உணர்ந்துகொண்டேன். இப்போதும் அதையொத்த முடிவு ஒன்றை எடுத்திருக்கிறேன் என்பதை உணருகிறேன்." தனது இராஜினாமா பற்றித் தொடர்ந்து கூறிய அவர் "நான் என்னை வெற்றிகொண்டுவிட்டேன்" என்றும் குறிப்பிட்டார்.

அதிகாரத்தில் உள்ளவர்களையும்

அதிகாரபீடங்களையும் எதிர்கொள்ளும்போது பண்டாரநாயக்கவின் மனப்பாங்கு எவ்விதமாக இருந்தது என்பதை ஆராயும்போது, அவர் தமது வாழ்வின் பிற்பகுதியில் நாட்டின் அரசாங்கத் தலைவராக (பிரதமராக) பதவிவகித்தபோது எவ்வாறு நடந்துகொண்டார் என்ற வினா எழுகிறது. இதுபற்றி நாம் குறிப்பிடுவதற்கு முன்னர் பண்டாரநாயக்கவின் அரசியல் தத்துவம் (Political Philosophy) யாது என்பது குறித்துப் பார்ப்பது அவசியமானது. அவரது அரசியல் தத்துவம் பற்றிய புரிதலுக்கு உதவக்கூடிய அவரது கூற்றுக்கள் இரண்டை எடுத்துக்காட்ட விரும்புகிறோம். முதலாவது கூற்று ‘உண்மை’ (Truth) பற்றிய அவரது கருத்து.

“உண்மை பற்றிய எக்காலத்துக்கும் பொதுவான விழுமியங்கள் இருக்கலாம். ஆனால் உண்மை என்பது சார்பு நிலையானது. இன்று உண்மை என்று நாம் எதனைக் கருதுகின்றோமோ, அதுவே நேற்றும் உண்மையாக இருந்ததில்லை. நாளைக்கு உண்மையெனக் கருதப்படுவது நாம் இன்று உண்மை எனக் கருதுவதைவிட வேறாக இருக்கலாம். ஒருவருக்கு உண்மையாகத் தோன்றுவது, இன்னொருவருக்கு உண்மையாக இருக்க வேண்டிய அவசியம் கிடையாது. பெரும்பாலும், உண்மை முழுமையாக ஒருபக்கத்திடம் இருப்பதில்லை. அது முழுமையாக இன்னொரு பக்கத்தில் இருப்பதும் இல்லை. உண்மை என்பது புதிரான ஒரு விடயம் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பலவிடயங்களின் கலப்புப்பொருளாகவே அது விளங்குகிறது.”

**பண்டாரநாயக்கவின் இளமைக் காலச் சித்திரம் சிறப்பாகவே நூலில் தரப்படுகிறது. பண்டாரநாயக்கவின் சுயசரிதைப் பாங்கான குறிப்புகள், அவரது நண்பர்களதும் கூட்டாளிகளதும் நினைவுக் குறிப்புகள், பண்டாரநாயக்க குடும்பத்தின் ஆவணங்கள் என்பனவற்றை ஜேம்ஸ் மனர் நன்றாகவே பயன்படுத்தி இச் சித்திரத்தை வரைந்துள்ளார். பண்டாரநாயக்கவின் தந்தை சொலமன் டயஸ் பண்டாரநாயக்க ‘மகா முதலியார்’ என்ற பதவியை வகித்தவர் என்பது நாடறிந்த செய்தி.**

அடுத்ததாக நாம் எடுத்துக் காட்ட விரும்புவது சமூகமாற்றம் பற்றிய அவரது கருத்துப் பற்றியது. இக் கருத்தை அவர் பாராளுமன்றத்தில் ஒரு உரையின்போது குறிப்பிட்டார். அவ்வேளை பண்டாரநாயக்க ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னிருக்கை (Front Bench) உறுப்பினராகப் பாராளுமன்றத்தில் இருந்தார். ஆகையால் அவரது உரை, தனக்கும் சேனநாயக்க அணி, ஐக்கிய தேசியக் கட்சியினருக்கும் இடையிலான வேற்றுமை மட்டுமல்லாது, எதிர்க்கட்சியினருக்கு இடையிலான வேற்றுமை மட்டுமல்லாது, எதிர்க்கட்சியில் இருந்த இடதுசாரிகளுக்கும் தனக்கும் இடையிலான வேற்றுமையையும் சுட்டிக்காட்டும் முறையில் அமைந்தது.

“நான் எனது சக்திக்கு உட்பட்ட வகையில் ‘நர்ஸ்’ (Nurse), மருத்துவிச்சி (Midwife) என்ற இருவகைப் பணிகளைச் செய்பவனாக இருக்க விரும்புகின்றேன். நான் உயிருக்காகப் போராடும் ஒருவரின் கட்டிலருகே ‘நர்ஸ்’ ஆக நின்று



எஸ்.டபுள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க
Image source - nexttravelsrilanka.com

பணிசெய்ய விரும்புகிறேன். ஓர் உயிர் பிரியப்போகிறது இறுதித்தருணம் நெருங்கிவிட்டது. ஒவ்வொரு மனிதரும் இறக்கும்போது, அந்த நிகழ்வு அமைதியானதாகவும், கௌரவிப்புக்குரியதாகவும் இருக்க வேண்டும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. செயற்கையான முறையில்

இறப்பைத் தடுத்து நிறுத்துவதை நினைத்துப் பார்க்கவே எனக்கு அதிர்ச்சி உண்டாகிறது. அவ்வாறே மரணம் நெருங்கி வந்துகொண்டிருக்கும் வேளையில் ஒருவரின் உயிரைச் செயற்கையான முறையில் போக்குவதும் எனக்கு அதிர்ச்சி தருவதாக இருக்கிறது."

"பிறப்பு நிகழும் வேளையில் நான் மருத்துவிச்சியின் பணியை ஆற்றுவதை விரும்புவேன். பிரசவம் இயன்றளவு வலி குறைந்ததாகவும் மங்களகரமான நிகழ்வாகவும் அமைவதை நான் விரும்புவேன். கருவில் இருக்கும் குழந்தை இயல்பாகவே வெளியே வருவதற்கு முன்பே கருவிகளை உபயோகித்து இழுத்தெடுப்பதும் ஒரு சிசுவை கருப்பையில் வைத்தே நெரித்துக் கொல்வதும் என்னால் நினைத்துப்பார்க்கவே முடியாத விடயங்கள்."

இரண்டாவதாகத் தரப்பட்ட கூற்றில் பண்டாரநாயக்க 'மருத்துவிச்சி' என்ற உருவகத்தை உபயோகிக்கிறார். இவ்விடத்தில் அவர் கார்ல் மார்க்சின் புகழ்பெற்ற கூற்றை இரவல் பெற்றுக்கொள்கிறார்.

"*Force is the midwife of every old society pregnant with the new*" எனும் மார்க்சின் கூற்றின் பொருளைத் தமிழில் பின்வருமாறு கூறலாம்.

"பழைய சமுதாயம் ஒவ்வொன்றும் புதிய சமுதாயத்திற்கான கருவை தன் கருப்பையில் சுமந்துகொண்டே வருகிறது. கருவிலிருந்து சிசு வெளியேறும் நிலையில் பலாத்காரம் என்ற மருத்துவிச்சியின் சேவை அவசியமாகிறது."

மேற்படி உருவகத்தை உபயோகிக்கும் பண்டாரநாயக்க, வயிற்றில் இருக்கும் சிசுவை வெளியே எடுப்பதற்கு கருவிகளை (Forceps) உபயோகித்தல் - அதாவது புரட்சி மூலம் புதிய சமூகத்தைப் பிறக்கச் செய்தலை நிராகரிக்கிறார்.

பழைய சமுதாயத்தின் அழிவிலும் புதிய சமுதாயத்தின் அழிவிலும் புதிய சமுதாயத்தின் உருவாக்கத்திலும் தாம் 'நர்ஸ்', 'மருத்துவிச்சி' என்ற இருவகை வகிபாகங்களையும் (Roles) ஒரே சமயத்தில் வகிக்க விரும்புவதாக கூறும் பண்டாரநாயக்க சமூகமாற்றம் என்ற செயல்முறையில் அரசியல் தலைமைத்துவம் ஆற்றவேண்டிய பணிகளின் முக்கியத்துவத்தை குறைத்துவிடுகிறார். (*There is a devaluation of the tasks of political leadership*) மாற்றம் ஒரு உயிரியல் செயல்முறை (Organic Process) போன்றும், அது தன்போக்கிலேயே செயற்பட்டு, தவிர்க்கமுடியாத ஒரு விடயமாக புதிய சமுதாயத்தின் தோற்றத்திற்கு வழிவிடுகின்றது என்பது போன்றும் பண்டாரநாயக்கவின் கருத்து அமைகிறது.

தலைவரின் பணி புதிய சமுதாயத்தின் தோற்றத்திற்கும் மாற்றத்திற்குமான நிலைமைகளை உருவாக்கிவிடுவது மட்டுமே. அம் மாற்றம் தானாவே இயல்பாகவும், அமைதியாகவும் நடந்தேறிவிடுமென்றும் பண்டாரநாயக்க கருதுகிறார். இவ்வாறாக சமூக மாற்றம் என்ற கருத்தாக்கத்தை வரையறுத்துக்கொள்வதில் ஒரு சிக்கல் உள்ளது.

இந்த வரையறை;

அ. ஒரு சமூகம் அடைய வேண்டிய இலக்குகளைத் தெரிவு செய்தல் (Choice of goals),

ஆ. தெரிந்தெடுத்த இலக்குகளை நோக்கி சமூகத்தை நெறிப்படுத்தலும் வழிகாட்டுதலும் (Guidance and Direction),

ஆகிய பணிகளை ஆற்றும் தேவை தலைமைத்துவத்திற்கு கிடையாது என்று கூறமுனைகிறது. இதனை சமூக மாற்றம் பற்றிய கொள்கையுடன் இணைத்துப் பார்க்க வேண்டும். உண்மை எது, இதுவா? அதுவா? என்று நிச்சயமற்ற நிலையான அறியொணாக் கொள்கையை (Agnosticism) உடையவர் பண்டாரநாயக்க என்பது தெளிவானது. இந்த நிலையில் சமூக சக்திகளைத் தமது போக்கில் செயல்பட அனுமதித்து. அவை தம்போக்கில் தாமே தேர்ந்துகொண்ட பாதைகளில் செல்வதைப் பார்த்து நிற்பதைவிட தலைவனால் என்ன தான் செய்துவிடமுடியும்?


சமூக மாற்றம் தொடர்பாக பண்டாரநாயக்கவின் அரசியல் நிலைப்பாடு (Political Position) ஏற்புடையதும் விரும்பத்தக்கதுமான அம்சங்களையும் கொண்டது என்பதை நாம் மறுப்பதற்கில்லை.

அவரது அரசியல் தத்துவத்தை பொல்பொட் அல்லது ரோஹண விஜயவீரவின் அரசியல் மாதிரியுடன் (Political Model) ஒப்பிட்டுப் பார்க்கலாம். பிற்கூறிய இருவரும் தாம் நம்பிக்கை கொண்டிருந்த வழிமுறைகளை சமூகத்தின் மீது திணிக்க விரும்பினார்கள். ஆயின் பண்டாரநாயக்கவின் ஆட்சியில் நடந்தவை யாவை, அவர் பிரதமர் என்ற முறையில் என்ன செய்துகொண்டிருந்தார்?

பகுதி

2

*1956 ஆம் ஆண்டின் தேர்தல் வெற்றி பண்டாரநாயக்கவிற்கு நாட்டின் அரசியல் தலைமைத்துவத்தை வழங்கியது. தலைமைத்துவத்தை ஏற்றுக்கொண்ட பண்டாரநாயக்க செய்ய வேண்டிய சட்டப்படி நியாயமான (Legitimate) கடமைகள் பல இருந்தன. இவை அவசியமான கடமைகள் ஆகவும் இருந்தன. அவற்றைச் செய்யாமல் அப் பதவிக்குரிய பொறுப்புகளை அலட்சியமாகப் புறந்தள்ளும் அவரது நடத்தை மிகவும் மோசமான பின்விளைவுகளை ஏற்படுத்தின. நாம் இங்கு ஒவ்வொரு விடயத்தையும் விபரிக்க வேண்டியதில்லை. பண்டாரநாயக்கவின் நடத்தை பற்றி மனர் பின்வருமாறு கூறுகிறார்.*



பண்டாரநாயக்க தேசிய உடையில் மேடையில் உரையாற்றுதல்

Image source - thuppahis.com

*"எந்தவொரு குழுவாயினும் தேவையற்ற நியாயமற்ற கோரிக்கைகளுடன் வரும்போதெல்லாம், அவற்றுக்குச் சம்மதம் தெரிவித்துச் சலுகைகளை வழங்குவதும் விட்டுக்கொடுப்பதுமான அவரது நடத்தைப் போக்கு அதிர்ச்சியளிப்பது. அவரின் இந்தப் பழக்கம் சிங்கள - தமிழ் இனத்துவ உறவுகள் சம்பந்தப்பட்ட விடயங்களில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தின."*

*1940 களின் நடுப்பகுதி முதல் இலங்கையின் அரசியல் தலைவர்களிடம் சிங்களம், தமிழ் ஆகிய இருமொழிகளுக்கும் உத்தியோக மொழி என்ற அந்தஸ்து வழங்குவதில் கருத்தொற்றுமை உருவாகிக்கொண்டிருந்தது. அவ்வேளை ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சரவையில் ஒரு உறுப்பினராக இருந்த பண்டாரநாயக்க, நேர்மையாகவும் சரியாகவும் ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார். அதாவது சிங்களம், தமிழ் ஆகிய இரு தேசிய மொழிகளும் உத்தியோக அலுவல்களில் இடம்பிடித்துக்கொள்ள வேண்டும்; ஆங்கிலத்திற்குப் பதில் அவை அரசகரும மொழிகளாக ஆக்கப்பட வேண்டும் என்பது அவரது நிலைப்பாடாக இருந்தது. 1950 களில் சிங்கள மத்திய வகுப்பினர் மத்தியில் சிங்கள மொழித் தேசியவாதம் (Linguistic Nationalism) மேற்கிளம்பியது. சிங்கள புத்திஜீவிகள் சிலரும் அதற்கு ஆதரவாகச் செயற்பட்டனர். அவ்வேளை அவர்கள் பண்டாரநாயக்க தங்கள் இயக்கத்திற்கு தலைமை வகிக்கக்கூடிய ஒருவர் என்று நினைத்துப் பார்க்கவேயில்லை. ஏனெனில் பண்டாரநாயக்க தன்னைப்பற்றி உருவாக்கி வைத்திருந்த பிம்பமும் அவரது பொதுவெளி நடத்தையும் இயல்பாகவே பண்டாரநாயக்கவின் ஆதரவைப் பெறமுடியாது என்ற எண்ணத்தை அவர்களிடம் ஏற்படுத்தியிருந்தது. சிங்கள மத்தியதர வர்க்கத் தேசியவாதிகள், சிங்களப் புத்திஜீவிகள் ஆகிய சமூகக் குழுக்களைப் பண்டாரநாயக்க 1937 முதல் 'சிங்கள மகாசபை' ஊடாக தன்பக்கம் ஈர்த்து வைத்திருந்தார் என்பது உண்மையே ஆயினும் அவர் தனது 'ஆங்கில மயப்பட்ட உயர்குழாம் ஆளுமை' (Anglicised and Elite Personality) என்ற பிம்பத்தைப் பொதுவெளியில் காட்டிக்கொண்டார். அவரது இந்த வெளித்தோற்றத்தில் ஒரு முரண்பாடு உள்ளார்ந்து இருந்தது. வாழ்வின் இறுதிநாட்கள் வரை அவரது இம் முரண்பட்ட ஆளுமைப் பண்பு தொடர்ந்திருந்தது. 1938 ஆம் ஆண்டில் பண்டாரநாயக்க தேசிய உடையை அணிந்துகொண்டு பொதுமேடையில் ஏறி ஆங்கிலேயப் பண்பாட்டு வழமைகளைக் கண்டித்துப் பேசினார். இம் மேடைப்பேச்சு நடைபெற்று இருவாரம் கழிந்தபின்னர் அவர் மேற்கத்தைய உடையணிந்துகொண்டு Greyhound*

*Billy Micaber* என்ற செல்ல நாயுடன் செல்லும் காட்சி புகைப்படமாக வெளியாயிற்று என்பதைச் சுட்டிக்காட்டுகிறார். இன்னொரு சம்பவத்தையும் மனர் குறிப்பிடுகிறார். பண்டாரநாயக்க பிரதமராகப் பதவியேற்ற பின் நடைபெறும் வாராந்தப் பத்திரிகையாளர் மாநாட்டின்போது இடம்பெறும் காலை உணவு விருந்தில் சிங்களப் பண்பாட்டைப் புகுத்தினார். சேர். யோன் கொத்தலாவல பிரதமராக இருந்தபோது முட்டை அப்பம் காலை உணவாக வழங்கப்பட்டு வந்தது. பண்டாரநாயக்க அதற்குப் பதில் பாற்சோறு (கிரிபத்) வழங்கினார். இந்தக் குறியீட்டு வடிவிலான மாற்றத்தின் பயனை பண்டாரநாயக்க, பாற்சோறை கரண்டியால் சாப்பிடுவது மூலம் கெடுத்துக்கொண்டார் என மனர் குறிப்பிடுகிறார். மனர் கூறும் குறுங்கதைகள் முக்கியமானவை.

ஆனால் அவரால் கூறப்படாத குறுங்கதை ஒன்றை நான் இவ்விடத்தில் பதிவுசெய்ய விரும்புகிறேன். 1956 இற்குப் பிந்திய ஆண்டுகளில் நான் ஊடகவியலாளராக பாராளுமன்றத்தின் பத்திரிகையாளர் கலரியில் இருந்தபோது நான் நேரடியான கண்ட, கேட்ட விடயத்தையே இங்கு கூறுகிறேன். ஒருநாள் பிரதமர் பண்டாரநாயக்கவிற்கும் றொபர்ட் குணவர்த்தனவிற்கும் இடையே காரசாரமான விவாதம் நடந்துகொண்டிருந்தது. அந்த விவாதம் ஆங்கில மொழியில் நடந்துகொண்டிருந்தது. ஒரு கட்டத்தில் றொபேர்ட் குணவர்த்தன இலக்கண வழுவுடைய செம்மையற்ற ஆங்கிலத்தில் சில வசனங்களைப் பேசிவிட்டார். பண்டாரநாயக்க றொபர்ட் குணவர்த்தன மீது நாணிக் குறுகச் செய்யும் கேலியான பார்வையைச் செலுத்தியவாறு பின்வருமாறு கூறினார்.

"ஏன் உங்களுக்குத் தெரிந்த புரியக்கூடிய மொழியிலிலேயே பேசக்கூடாது? சிங்களத்தில் பேசுங்கள்!" (*Why don't you speak a language you understand? Speak sinhalese.*)

பண்டாரநாயக்க பேசிய தொனி, சிங்கள மொழியானது சமூகத்தின் கீழ்த்தட்டு மக்களுக்கு ஏற்ற மொழி என்ற கருத்தை சந்தேகத்திற்கு இடமற்ற முறையில் வெளிப்படுத்தியது. பிரதமர் தனது தவறை பின்னர் உணர்ந்தார் போலும். 'ஹன்சார்ட்' பத்திரிகை வெளியான போது அவரின் இந்த இகழ்ச்சி மொழிகள் அதில் காணப்படவில்லை.

1955 இல் சிங்களத் தேசியவாதிகளுக்கு தமக்குத் தலைமை வழங்கக்கூடிய கவர்ச்சி ஆளுமைமிக்க தலைவர் தேவைப்பட்டது. அப்போது அவர்களின் முதலாவது தெரிவாக பண்டாரநாயக்க இருக்கவில்லை. அத் தேசியவாதிகள் டட்லி சேனநாயக்கவையே முதலில் தேர்ந்துகொண்டனர். டட்லி சேனநாயக்க அவர்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்க மறுத்தபின்னரே சிறீலங்கா சுதந்திரக் கட்சியிடம் சென்றனர். சிங்களத் தேசியவாதிகளின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு சிறீலங்கா சுதந்திரக்கட்சி மொழிக்கொள்கை தொடர்பாக 1955, செப்டம்பர் மாதம் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. அந்தத் தீர்மான வரைவை எழுதித் தயாரித்த பண்டாரநாயக்க, தமிழுக்கு பிரதேசமொழி என்ற அந்தஸ்தை வழங்கும் முறையில் அதனை



பண்டாரநாயக்க செல்வநாயகம் அவர்களுடன்

Image source - www.tamilguardian.com

எழுதினார். அத் தீர்மானம் இவ்வாறு அமைந்தது.

"எல்லா நீதிமன்றுகளிலும் அரசாங்க அலுவலகங்களிலும் உள்ளூராட்சி சபைகளிலும் சிங்களம் உத்தியோக அலுவல் மொழியாக இருத்தல் வேண்டும். வடக்கு கிழக்கு மாகாணங்கள் இதற்கு விதிவிலக்காக அமைதல் வேண்டும். அம் மாகணங்களில் உத்தியோக அலுவல் மொழி தமிழாக இருத்தல் வேண்டும்."

அமுக்கக் குழுக்களின் (*Pressure Groups*) அழுத்தங்களுக்கு வளைந்து கொடுப்பதை வழக்கமாக கொண்டிருந்த பண்டாரநாயக்க இனவாதக் கோரிக்கையான 'சிங்களம் மட்டும்'

கோரிக்கையை ஏற்றுச் செயற்பட்டார். அவருடைய விட்டுக் கொடுப்புகளில் மிகவும் வெட்கக் கேடானதும், இறுதியாகவும் அமைந்தது பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தத்தை செல்லுபடியற்றதாக்கியமை ஆகும். தனது றொஸ்மீட் பிளேஸ் இல்லத்தின் முன்பாக தரையில் அமர்ந்து சத்தியாக்கிரகம் செய்த பிக்குகளின் கோரிக்கைக்கு இணங்கி வெட்கப்படவேண்டிய இச் செயலைச் செய்தார். இவ்விடத்தில் மனர் (Manor) அவர்களின் கூற்றை மேற்கோள் காட்ட விரும்புகிறேன்.

"பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தம் வலிதற்றதாக்கப்பட்டுவிட்டது என்று வானொலி மூலம் அறிவிப்புச் செய்தார். பின்னர் அவர் வீடு திரும்பி தாம் செய்த அறிவித்தல் பற்றி அவர்களுக்கு எடுத்துக் கூறினார். ஆனால் பிக்குகள் அந்த அறிவிப்புப் பற்றி எழுத்தில் தரும்படி கேட்டனர். எழுத்தில் தரவேண்டிய அவசியமில்லை எனக்கூறி அவர்கள் கோரிக்கையைப் பண்டாரநாயக்க நிராகரித்தார். ஆயினும் பிக்குகள் விடாது அக் கோரிக்கையில் உறுதியாக நின்றனர். இறுதியில் பண்டாரநாயக்க அதற்குச் சம்மதித்தார். அத்தோடு நிறுத்திவிடாது பிக்குகளின் தலைவர் பண்டாரநாயக்கவை மேலும் அவமானப்படுத்தினார். சமஷ்டிக் கட்சியை தடைசெய்ய வேண்டும், ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களை இந்தியாவிற்கு திருப்பி அனுப்ப வேண்டும், அரசாங்க உத்தியோகத்தர்கள் உபயோகிக்கும் உத்தியோக முத்திரைகளில் (Official Stamp) தமிழ் எழுத்துக்கள் நீக்கப்பட வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தனர். இந்த மூன்றில் இறுதியாகக் குறிப்பிட்ட கோரிக்கையை மட்டும் நிறைவேற்றும் அதிகாரம் தம்மிடம் உள்ளது எனக் கூறிய பிரதமர், அதனை நிறைவேற்றுவதற்கு உறுதியளித்தார்."

ஜேம்ஸ் மனர் தமது நூலிற்கு 'The Expedient Utopian' எனத் தலைப்பிட்டுள்ளார் (தமிழில் இதனைச் சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்றவகையில் செயற்படும் இலட்சியவாதி என்ற நீண்ட தொடரால் மொழிபெயர்த்துக் கொள்ளலாம்). பண்டாரநாயக்க ஒரு இலட்சியவாதி, பூரணமான கற்பனா உலகம் 'உட்டோப்பிய' மலரவேண்டும் என்ற இலட்சியமுடையவர். ஆயினும் தம் இலட்சியங்களுக்கு முரணான அறநெறிக்கு ஒவ்வாத செயல்களையும் செய்பவர். அவரிடம் தாராண்மைவாதம், இலட்சியவாதம் என்ற இரண்டும் கலந்த சிந்தனை இருந்தது. அரசியல் தேவைகள் எழும்போதெல்லாம் அவர் தனது தாராளவாத, இலட்சியக் கொள்கைகளை விட்டுக்கொடுப்பதாக இருந்தார். அவரது இச் சந்தர்ப்பவாதப் போக்கை நாம் மேலே குறிப்பிட்ட அவரது அரசியல் தத்துவத்துடன் (Political Philosophy) இணைத்துப் புரிந்துகொள்ளவேண்டும். பண்டாரநாயக்கவின் அரசின் தத்துவமாக மக்கள் வாதம் (Populism) அமைந்தது. வெகுஜனங்கள் அழுத்தங்களைப் பிரயோகிக்கும்போது, அந்த அழுத்தங்களுக்குப் பணிந்து விட்டுக்கொடுத்தல் வேண்டும்; அதிகாரத்தில் உள்ளவர்கள் சனங்களின் சக்தியின் முன் பணிந்து போகவேண்டும் என்ற கருத்துக்குச் சார்பானதாக அவரது சிந்தனை அமைந்தது.

பண்டாரநாயக்கவிற்குப் பின்னர் உள்ள 30 ஆண்டுகாலத்தில் (1959 - 1989) இலங்கையில் பலாத்கார வன்முறைகள் தொடர்ச்சியாக நடந்து பேரழிவுகளை ஏற்படுத்தி வந்துள்ளன. இவற்றுக்கெல்லாம் பண்டாரநாயக்க எந்தளவுக்குப் பொறுப்பை ஏற்க வேண்டியவர்? சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலத்தில் சிங்களவர், தமிழர் என்ற இரு இனக்குழுக்கள் மத்தியிலும் இனத்துவ உணர்வு மேற்கிளம்பியதும், அதனால் முரண்பாடுகள் கூர்மையடைந்தமையும் நிதர்சனமான உண்மையாகும். இவ்வாறான போக்கால் மோதல் நிலை (Conflict) ஏற்படுதல் உள்ளார்ந்த ஒரு செயல்முறையாக இருந்துள்ளது. ஆனால் இந்த முரண்பாடுகள் தீவிரம் பெறாமல் தவிர்க்கப்பட்டிருக்கலாம். அதிகாரத்தில் இருந்த அரசியல்வாதிகள் தேசியவாத சக்திகளை உள்ளீர்த்து சமரசம் செய்துவைக்கும் தொலைநோக்குடைய நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்க வேண்டும். குறிப்பாக உத்தியோக அலுவல்களில் தேசிய மொழிகளை (சிங்களமும் தமிழும்) புகுத்தும் மாற்றம், சுதந்திரத்திற்கு 5 ஆண்டுகளுக்கு முன்னர் யாவராலும் ஏற்கப்பட்ட கொள்கையாக இருந்தது. இக் கொள்கையை அதிகாரத்திற்கு வந்த அரசியல்வாதிகள் நேர்மையோடு நிறைவேற்றத் தவறினார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைமை குறுகிய நோக்கம் கொண்டதாய் இருந்தது. அவர்களது உயர் வர்க்கச் சார்பும், பண்பாட்டு மதிப்பீடுகளும் அவர்களைச் சரியான திசையில் பயணிக்க அனுமதிக்கவில்லை. பண்டாரநாயக்க ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேற்றப்படாதிருந்தால், தேசியவாத அழுத்தங்கள் தணிக்கப்பட்டிருக்கலாம். பிரதமர் டி.டிஸ். சேனநாயக்க 1952 இல் இறந்த போது, பண்டாரநாயக்க பிரதமராகப் பதவி ஏற்றிருப்பார். அவர் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டதால் இது நடைபெறவில்லை. ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருந்தவாறு அவர் தலைமைத்துவத்தை ஏற்றிருந்தால் அவரது

தாராண்மைவாதக் கொள்கைகள் நடைமுறைக்கு உட்படுத்தப்பட்டிருத்தல் கூடும்.

மேற்குறித்தபடி 'இப்படி நடந்திருந்தால்' எனப் பல 'ஆல்' களை வைத்துக்கொண்டு வரலாற்றை மதிப்பீடு செய்தல் பயனற்றது. ஆகையால் ஜேம்ஸ் மனர் கூறுவது போல் இலங்கை எதிர்கொண்ட பேரழிவுக்கான பொறுப்பு பண்டாரநாயக்கவிற்கு உரியது என்பதை நான் ஏற்கவேண்டியவனாக உள்ளேன். பண்டாரநாயக்க செய்தவையும் அவர் பொறுப்பற்ற முறையில் செய்யாமல் விட்டவையும் எமது சமூகத்திற்கு பேரழிவுகளை கொண்டுவந்தன. பண்டாரநாயக்கவின் ஆளுமைக் குறைபாடுகள் அவரது தவறான நடத்தைகளுக்குக் காரணமாயின. அவர் தலைமைத்துவத்தின் வகிபாகம் (Role of Leadership) பற்றிக் கொண்டிருந்த தவறான எண்ணங்கள், பல பொறுப்பற்ற செயல்களை அவர் செய்யக் காரணமாயின. தலைவர் ஒருவர் செய்ய வேண்டியவற்றைச் செய்யாமல் விடுவதற்கும் அவை காரணமாயின.

ஜேம்ஸ் மனர், பண்டாரநாயக்கவின் ஆளுமையை உருவாக்குவதிலும் அவரது நடத்தையை தீர்மானிப்பதிலும் பங்குகொண்ட பண்பாட்டு அம்சம் ஒன்றைக் குறிப்பிடவில்லை. அதனை நான் குறிப்பிட விரும்புகிறேன். பண்டாரநாயக்க சிங்கள பௌத்த தேசியவாத உணர்வுகளைக் கொண்ட சமூகக் குழுக்களை தூண்டிவிட்டு அக் குழுக்களை அரசியல் அணிதிரட்டலுக்கு உபயோகித்தார். ஆயினும் தாம் அக் குழுக்களுக்கு ஓர் அந்நியன் (Outsider) என்னும் உணர்வு அவரிடம் தீவிரமாக வளர்ந்திருந்தது. அவர் ஆங்கில மயப்படுத்தப்பட்ட பிரபுக்குலத்தின் (Anglicised Aristocrats) குலக்கொழுந்தாக தான் எஞ்சியுள்ளேன் என்பதை நன்கு அறிந்திருந்தார். தான் பிறப்பில் கிறிஸ்தவர் என்பதும் அவரை உறுத்திக்கொண்டிருந்தது. இந்த நிலையில் மக்கள் தன்னைச் சிங்கள நலன்களுக்கு எதிராகத் துரோகம் செய்யக்கூடியவர் என்று கருதலாம் என்பதை உணர்ந்திருந்தார். அவர் சிங்கள நலன்களுக்கு மாறானவர் என்ற கறையை அவர் மீது பூசும் பிரச்சாரம் சிங்களத் தீவிரவாதிகளால் பல தடவைகள் நடத்தப்பட்டதும் உண்மை. இதனால் அவரிடம் ஒரு பண்பாட்டுப் பாதுகாப்பின்மை உணர்வு (Cultural Insecurity) இருந்து வந்தது. தாமே தூண்டி வளர்த்துவிட்ட சக்திகள் தம்மீதே பாயலாம் ("வளர்த்த கடா மார்பில் பாய்வது போல்") என்ற அச்சவுணர்வும் தம்மை அச் சக்திகள் மிரட்டலாம் என்ற பாதுகாப்பற்ற உணர்வும் அவரிடம் இருந்து வந்தது. இல்லாவிடின் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காகத் தாராண்மைவாதக் கொள்கைகளை அலட்சியப் பாவனையுடன் தூக்கி வீசியிருப்பாரா? தானே வளர்த்துவிட்ட சக்திகளின் அழுத்தங்களுக்குப் பணிந்து போயிருப்பாரா?

அவரது றொஸ்மீட் பிளேஸ் இல்லத்தில் குழுமிய பிக்குகளுக்கு அவர் அடிபணிந்துபோன சம்பவத்தை மேலே குறிப்பிட்டோம். தற்போது பிறிதொரு சம்பவத்தை நான் இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இச்சம்பவம் ஜேம்ஸ் மனரால் குறிப்பிடப்படாதது என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன். 'சிங்களம் மட்டும்' சட்ட மசோதா கொண்டுவரப்பட்ட சந்தர்ப்பத்தில் சமஷ்டிக் கட்சியினர், காலி முகத்திடலில் சத்தியாக்கிரகம் செய்தனர். அமைதியான முறையில் சத்தியாக்கிரகம் செய்தவர்கள் மீது அப்போது தாக்குதல் நடத்தப்பட்டது. அமைதியான முறையில் எதிர்ப்பை வெளியிட்ட தமிழர்கள் மீது மேற்கொண்ட இத் தாக்குதல் சம்பவம் பற்றி நேரில் கண்ட சாட்சியாக உள்ள ஊடகவியலாளர்கள் தரும் தகவல்களைக் கொண்டு இதனை விபரிக்கவுள்ளேன். இந்த ஊடகவியலாளர் கூறும் சான்றுகளை நான் நம்புகின்றேன். சத்தியாக்கிரகிகளை தாக்கிய காடையர்களுக்கு சத்தியாக்கிரகிகள் திருப்பித் தாக்கமாட்டார்கள் என்பது கூடிய தென்பை அளித்தது. அவர்கள் பலரை அருகேயிருந்து பெய்ரா வாய்க்காலுக்குள் தூக்கி வீசினர். அவர்களுள் சிலர் சத்தியாக்கிரகிகள் மீது மூத்திரம் பெய்தனர். ஆயினும் சிறிது நேரத்தின் பின்னர் பொலிசார் அவ்விடத்திற்கு வந்து சேர்ந்தனர். பொலிசார் தமது தற்துணிவின் அடிப்படையில் அமைதியைப் பேணும் நோக்குடன் அவ்விடத்துக்கு வந்ததும் காடையர்கள் பின்வாங்கிச் சென்றனர். அவ்வேளை பாராளுமன்றத்தின் வாசற்படிகளால் பிரதமர் இறங்கி வந்தார் எனவும், அவ்விடத்துக்கு வந்த பிரதமர் பொலிஸ் குழுவின் தலைவரான உத்தியோகத்தரை தம்மிடம் வருமாறு அழைத்தார் எனவும் நேரில் கண்ட சாட்சியான ஊடகவியலாளர் கூறுகிறார். அந்த உத்தியோகத்தர் பிரதமருடன் உரையாடிய பின் திரும்பிச் சென்று தமது ஏனைய உத்தியோகத்தர்களையும் வண்டியில் ஏற்றிக்கொண்டு அவ்விடத்தைவிட்டு நீங்கிய உடனே காடையர்கள் மீண்டும் அவ்விடத்துக்கு வந்து தாக்குதலைத் தொடர்ந்தனர். இங்கே நியாயமான ஊகம் ஒன்று எழுகிறது. பிரதமர் பொலிசாரை அவ்விடத்தைவிட்டு போய்விடும்படி உத்தரவிட்டார் என்பதே அவ் ஊகம். சத்தியாக்கிரகிகளைக் காடையர்கள் தாக்கியமை, பொலிசார் வந்ததும் அவ்விடத்தைவிட்டு ஓடியமை ஆகிய சம்பவங்கள் வரையான நிகழ்வுகளுக்கு என்னிடம் நிறைய ஆதாரங்கள் உள்ளன. அவை

பற்றிப் பலரும் உறுதிப்படுத்தியுள்ளார்கள். அதற்குப் பிந்திய கதைக்கு ஊடகவியலாளரான நண்பரையே சாட்சியமாகக் கொள்கிறேன். பல ஆண்டுகள் கழிந்த பின் குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் "உமது ஆட்களைக் கூட்டிக்கொண்டு இவ்விடத்தைவிட்டு போய்விடுங்கள்" என்ற உத்தரவு விடுக்கப்பட்ட உண்மையை எனது நண்பரான ஊடகவியலாளருக்கு உறுதிப்படுத்தினார். குறித்த உத்தியோகத்தர் பொலிஸ் தலைமை அலுவலகத்திற்குத் திருப்பிச் சென்றார். மாலையானதும் பொலிஸ் மா அதிபர் (IGP) குறித்த உத்தியோகத்தரை தம்மிடம் வரும்படி அழைத்தாராம். காலிமுகத்திடலுக்குத் திரும்பிப் போகும்படி பிரதமர் கேட்டிருப்பதாக பொலிஸ்மா அதிபர் கூறினாராம் (பிரதமருக்கு பயம் பிடித்துவிட்டது போலும்). குறித்த உத்தியோகத்தர் "நான் அங்கு போனபோது பிரதமர் அவர்களே இவ்விடத்தைவிட்டுப் போகும்படி எனக்குக் கட்டளையிட்டார். ஆகையால் என்னால் இப்போது அவ்விடத்துக்குப் போக முடியாது" என்று கூறினாராம். அவ்வாறு கூறிய பின்னர் அந்த உத்தியோகத்தர் பதவி இராஜினாமாக் கடிதத்தை எழுதிச் சமர்ப்பித்துவிட்டு நாட்டைவிட்டு வெளியேறினார் (பிறநாடு ஒன்றிற்கு குடியேறியாகப் போனார்).

பண்டாரநாயக்க இச்சம்பவத்தின் போது நடந்துகொண்ட விதம் ஆச்சரியத்தைத் தருவதாக உள்ளது. ஏனெனில் பண்டாரநாயக்க தனது அரசியல் எதிரிகள் மீது பழிவாங்கும் குணம் உடையவரல்ல. அவர் எதிர்க்கட்சியில் இருந்தபோது லேக்ஹவுஸ் பத்திரிகைகள் அவரைக் கேவலப்படுத்திச் சாடின. அவர் பிரதமரான போது அப் பத்திரிகைகள் அவரது அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு முயற்சித்தன. ஆனால் பண்டாரநாயக்க லேக்ஹவுஸ் பத்திரிகைகளைத் தேசியமயமாக்கும் எண்ணத்தைக் கொண்டிருக்கவில்லை. அவரது கட்சியின் பின் இருக்கை உறுப்பினர்களில் ஒருவர் லேக்ஹவுஸ் பத்திரிகைகளை தேசியமயமாக்க வேண்டும் ஒன்று ஆலோசனை வழங்கியபோதும் பண்டாரநாயக்க அதனை நிராகரித்தார். பின்னர் அவரின் விதவை மனைவி அப் பத்திரிகைகளை தேசிய மயமாக்கினார். அவர் இறப்புக்குப் பின் நிகழ்ந்த இப் பழிவாங்கும் செயலை பண்டாரநாயக்க ஏற்றுக்கொண்டிருக்க மாட்டார் என்றே ஜேம்ஸ் மனர் ஊகம் தெரிவிக்கின்றார். தனது எதிரியும் தன்னால் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டவருமான சேர்.யோன். கொத்தலாவலவிற்கு பிரதமர் பண்டாரநாயக்க செய்த உதவியொன்றைப் பற்றியும் ஜேம்ஸ் மனர் குறிப்பிடுகிறார். இங்கிலாந்தில் 'Kent' என்ற இடத்தில் பண்ணை மாளிகை ஒன்றைக் கொள்வனவு செய்து அங்கு போய்க் குடியேற விரும்பிய கொத்தலாவலவிற்கு 'நாணயப் பரிமாற்றுக் கட்டுப்பாட்டு பிரமாணங்களை வளைந்துகொடுக்கச் செய்து' பண்டாரநாயக்க உதவினார் என ஜேம்ஸ் மனர் குறிப்பிடுகிறார். இவ்வாறு இருக்க, தமிழ்ச் சத்தியாக்கிரகிகள் விடயத்தில் பண்டாரநாயக்கவின் நடத்தை அதிர்ச்சியளிப்பதாகவே உள்ளது. சிங்கள இனவாத வன்முறையாளர்களின் நம்பிக்கைக்குரிய ஒருவராகத் தான் இருக்கவேண்டும் எனப் பண்டாரநாயக்க விரும்பியதே இதற்கான காரணம் என நான் கருதுகிறேன். இது போன்ற தருணங்களில் அவர் தனது தாராண்மைவாதத்தை மட்டுமல்ல, ஒரு அரசாங்கத்தின் தலைவர் என்ற முறையில் சரியானதான ஒழுக்க நடத்தை விதிகள் எவையோ அவற்றையும் கைவிடத் தயாராக இருந்தார் எனக் கருதத் தோன்றுகிறது.

தனிநபர் உளவியல், அரசியல் நடத்தை என்ற இரண்டிற்கும் இடையிலான தொடர்பை விளக்குவதற்கு கிறிஸ்தவராக இருந்த அவர் பௌத்தத்திற்கு மாறியதை உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம். அவரது மதமாற்றத்தை சந்தர்ப்பவாதம் என்று கூறுவதற்கும் அவரைக் குற்றம் சுமத்துவதற்கும் ஜேம்ஸ் மனர் தயாராக இருந்தபோதும் அவர் பண்டாரநாயக்கவை 'டொனமூர் பௌத்தர்' என குறிப்பிடாமைக்கான விளக்கம் தமிழ் வாசகர்களுக்கு அவசியமானது. **1931** ஆம் ஆண்டில் டொனமூர் அரசியல் யாப்பு நடைமுறைக்கு வந்தது. அதன்படி **21** வயதுக்கு மேற்பட்ட ஆண் - பெண் அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது. அதுவரை காலமும் ஆளுநர் நியமனம், மட்டுப்படுத்தப்பட்ட வாக்காளர்களின் படித்த, சொத்துரிமையுள்ள ஆண்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்படல் என்ற இருவழிகளில் சட்டசபை உறுப்புரிமையை பெறக்கூடிய வாய்ப்பை அனுபவித்த அரசியல்வாதிகள் சர்வசன வாக்குரிமையால் தங்கள் அரசியல் எதிர்காலம் சூனியமாகப் போவதைக் கண்டு கலக்கம் அடைந்தனர். இவ் அரசியல்வாதிகளுள் கிறிஸ்தவர்களாக இருந்த பலர் விரைந்து பௌத்தத்திற்கு மதம் மாறிப் பௌத்தர்களாயினர் (இவர்கள் 'டொனமூர் பௌத்தர்' எனக் கிண்டலாக அழைக்கப்பட்டனர், மொர்). பண்டாரநாயக்கவை 'டொனமூர் பௌத்தர்' எனக் கூறமுடியாது என்பதற்குப் பல சான்றுகளை ஜேம்ஸ் மனர் தருகின்றார். பண்டாரநாயக்க ஒருபோதும் கிறிஸ்தவத்தில்

நம்பிக்கையுள்ள விசுவாசியாக இருந்ததில்லை. பௌத்தம் ஒரு அறிவார்ந்த மதம் என்பதால் அதன் அறிவார்ந்த தன்மை (Rationality) அவரை அம் மதம் மீது மதிப்புக்கொள்ளச் செய்தது. அவர் கிறிஸ்தவத்தை விட்டு பௌத்தராக மாறியதற்கு காரணம் இதுவே என ஜேம்ஸ் மனர் வாதிடுகிறார். பண்டாரநாயக்கவின் பௌத்தம், பல மத்தியதர அறிவாளிகளால் போற்றப்பட்ட 'புரட்டஸ்தாந்திய பௌத்தம்' (Protestant Buddhism) ஆகும். சிங்கள பௌத்தர்களால் நம்பப்பட்டுவந்த இயற்கை கடந்த சக்திகளுக்கான வழிபாட்டுச் சடங்குகளில் பண்டாரநாயக்கவுக்கு நம்பிக்கை இருக்கவில்லை. ஆனால் அவரது வாழ்க்கையின் இறுதிக்கட்டத்தின் போது, அவர் அரசியல் நெருக்கடிகளால் ஏற்பட்ட அழுத்தங்களால் பாதிக்கப்பட்டிருந்த போது, அவரின் நடவடிக்கைகளில் ஒரு வித்தியாசம் காணப்பட்டது. ஜேம்ஸ் மனர் பண்டாரநாயக்கவின் வாழ்க்கையின் இறுதிக் கட்டத்தில் நடைபெற்ற விநோதமான நிகழ்வை சிறப்பாக படம்பிடித்துக் காட்டியுள்ளார். முந்திய காலப்பகுதியில் அவரது மனைவியை லுணாவ என்ற இடத்தில் உள்ள கத்தரகம கடவுளின் கோயிலுக்கு நேர்த்திக் கடன் செய்வதற்காக அழைத்துச் சென்றார். தம் மனைவியுடன் அங்கு சென்ற பண்டாரநாயக்க அங்கு நிகழ்த்தப்பட்ட சடங்குகளில் ஒரு பார்வையாளராக விலகி நின்று அவற்றைப் பார்த்துக்கொண்டிருந்தார். 1959, யூலை மாதம் பாராளுமன்றத்தில் அவரது பெரும்பான்மைப் பலம் குறைந்து, அவர் தோற்கடிக்கப்படும் ஆபத்து உருவாகிக்கொண்டிருந்தது. அவ்வேளை தென்பகுதியின் சோதிடர் ஒருவரிடம் பண்டாரநாயக்க ஆலோசனை பெற்றார். அச் சோதிடர் (ஒரு பெண்மணி; 'ஒளிவாசிப்பு' என்ற சோதிடக் கலைநிபுணர்) ஆலோசனைப்படி பண்டாரநாயக்க லுணாவ கோவிலுக்கு மீண்டும் ஒருமுறை சென்றார். முந்திய தடவை விலகி நின்று பார்வையாளராக இருந்தவர், இத்தடவை கோவில் சடங்குகளில் பங்குகொண்டார். காவடி நடனமாடுவோர் சூழவர அவர் கத்தரகம கடவுளின் முத்துக்களால் அலங்கரிக்கப்பட்ட உருவச்சிலையை தேவாலயத்திலிருந்து சுமந்துசென்று தேரில் வைத்தார். அதன்பின் தேர் ஊர்வலமாக இழுத்துச்செல்லப்பட்டது. அவர் கொலை செய்யப்படுவதற்கு இரு மாதங்களுக்கு முன்னர் நடந்த இச் சம்பவம், அவரது வாழ்க்கையின் முரண்பாடுகளைப் படம்பிடித்துக் காட்டுவதாக அமைந்தது.

ஜேம்ஸ் மனரின் நூலின் அறிமுகப் பகுதியில் வரும் ஒரு கூற்றை எடுத்துக்காட்டி பண்டாரநாயக்கவின் வாழ்க்கை பற்றிய இலாப நட்டக் கணக்கை மதிப்பிடலாம் என விரும்புகிறேன்.

"பண்டாரநாயக்க இனவாதம், சீர்திருத்தம் என்ற இரு அடிப்படைக் கூறுகளை, இரண்டு முரண்பட்ட கூறுகளை இலங்கையின் அரசியலில் நிறுவனமயப்படுத்துவதற்கு (To Institutionalise), பிறர் எவரையும் விட அதிகப் பங்களிப்புச் செய்தார்."

ஜேம்ஸ் மனரது கூற்றின்படி பண்டாரநாயக்கவின் சீர்திருத்தம் (Reform) - சமூகநலன் விருத்தித் திட்டங்கள் - முக்கிய கூறாக இருந்ததெனக் கருதப்படுகிறது. இக் கருத்துடன் எனக்கு உடன்பாடில்லை. பண்டாரநாயக்கவை இந்த விடயத்தில் புத்தாக்கமான திட்டங்களை நடைமுறைப்படுத்திய ஒருவராகக் கொள்ள முடியாது. சுதந்திரம் பெற்ற காலம் முதல் பதவிக்கு வந்த எல்லா அரசாங்கங்களும் சமூகநலன் (Welfare) திட்டங்களுக்கு முதன்மை அளித்தன. ஆனால் அரசியல் முறைமையில் (Political System) சீர்திருத்தம் கொண்டுவருதல் என்ற விடயத்தில் மட்டுமே பண்டாரநாயக்கவின் அக்கறை பெரிதாக இருந்தது. அரசாங்கத்தை மக்களுக்குக் கிட்டியதாக இலகுவில் அனுகக்கூடியதாக மாற்றுவதிலும் அரசாங்கம் மக்களின் விருப்பங்களையும் தேவைகளையும் அறிந்து செயலாற்றவும் நடைமுறைகளை ஜனநாயகமயப்படுத்துவதிலும் பண்டாரநாயக்க உண்மையான அக்கறை கொண்டிருந்தார். 1959 இல் அவர் பதவியேற்றபோது, தமது நோக்கங்களில் ஒன்றாக அரசியல் முறைமையில் சீர்திருத்தம் என்பதைக் கொண்டிருந்தார். அவர் பதவியேற்ற தொடக்க விழாவில் பாராளுமன்ற அவைக்குள் திரண்ட சனக்கூட்டமும் தொடக்க மாதங்களில் அவர்கள் 'அப்பே ஆண்டுவ' என்று உணர்ச்சிப் பெருக்கோடு கூறத்தொடங்கியதும் அவரது சீர்திருத்த நோக்கத்திற்குக் கிடைத்த அங்கீகாரத்தின் அடையாளங்களாகும். ஒருவகையில் அவர் தம் நோக்கத்தினை அடைவதில் வெற்றிகண்டார் என்றே கூற வேண்டும். றொஸ்மீட் பிளேஸ் இல்லத்தில் எவராயினும் தடையின்றி நுழைந்து தன்னைச் சந்திக்கலாம் என்ற நடைமுறையை அவர் புகுத்தினார். இவ்வாறு அவர் செய்திராவிட்டால் கொலையாளி அவரை எளிதில் அணுகியிருக்க முடியாது.

அவரது கொள்கைகளின் பயனாக சிங்களத்தில் கல்வி கற்றோருக்கு சமூக நகர்வுக்கான (Social Mobility) வாய்ப்புக் கிடைத்தது. சுயமொழியில் கல்விகற்ற சிங்களவர்கள் பலர் அரசியல் அதிகாரப் பதவிகளிலும் உத்தியோக அதிகாரப் பதவிகளிலும் இடம்பிடித்துக்கொள்ள வாய்ப்பு ஏற்பட்டது. ஆயினும் பண்டாரநாயக்கவின் கொள்கையான மக்கள் வாதம் சிங்களமொழி, பௌத்த சமயம் என்ற இரண்டின் அடிப்படையான ஆதிக்கத்தன்மையுள்ள இனவாதப் பெரும்பான்மைப் பிரிவினரை

திருப்திப்படுத்தும் நிர்ப்பந்தத்தை பண்டாரநாயக்கவிற்கு உண்டாக்கியது. இதனால் பண்டாரநாயக்க பதவியேற்பதற்கு முன்பிருந்ததைவிட ஆழமாகப் பிளவுண்டுபோன ஒரு சமூகத்தை அவர் இறப்பின்போது விட்டுச்சென்றார். இந்த அர்த்தத்தில் அவர் இனவாதம், சீர்திருத்தம் என்ற இருவிடயங்களை மனர் கூறுவதைப் போல் நிறுவனமயப்படுத்தினார். இவை இரண்டும் ஒன்றோடொன்று முரண்பட்டவை.

பிராந்தியங்களுக்கு அதிகாரத்தைப் பகிர்தல் (Regional Devolution of Power), அவர் நீண்ட நாள் கனவாக இருந்த திட்டம். இதன் மூலம் ஊரக மாநாட்டில் ஜனநாயகத்தை (Locally based democracy) வளர்த்து முன்னெடுத்துச் செல்ல அவர் விரும்பினார். ஆனால் நடந்தது என்ன? இனக்குழும மோதல் (Ethnic Conflict) அதைச் சிதறடித்தது. அவர் இலங்கைச் சமூகத்தை இரண்டாக பிளவுபடுத்திய மோதல்களைக் கட்டுப்படுத்தாததன் விளைவாக கட்டுக்கடங்காத இராணுவமயமாக்கல், அரசாங்கத்தின் சர்வாதிகாரப் போக்கு என்பன எல்லை மீறிச் சென்றன. அவருக்கும் பின்வந்த ஆட்சியாளர்கள் இவை இரண்டையும் முழுநிறைவான வடிவில் செயற்படுத்தினர். பண்டாரநாயக்க இப்படி நிகழும் என்று நினைத்திருக்க மாட்டார். ஆனால் அது நிகழ்வதற்கான வழியை அவர் வகுத்துவிட்டுச் சென்றார்.

## றெஜி சிறிவர்த்தன



றெஜி சிறிவர்த்தன
Image source - www.sundaytimes.lk

றெஜி சிறிவர்த்தன இலங்கையின் மேற்கு மாகாணத்தின் இரத்மலானையில் பிறந்தவர். மத்தியதர வர்க்கப் பின்புலத்தினை உடையவரான றெஜி, இளமைக் காலக் கல்வியை சென். தோமஸ் கல்லூரியிலும் பின்னர் மருதானை ஆனந்தா கல்லூரியிலும் பெற்றார். இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியில் புலமைப் பரிசில் பெற்று ஆங்கில இலக்கியத்தை சிறப்புப் பாடமாகக் கற்று பட்டம் பெற்றார். இரண்டாம் உலக யுத்தக் காலத்தில் காலனிய அரசால் தடை செய்யப்பட்ட லங்கா சமசமாஜக் (LSSP) கட்சியின் உறுப்பினராக இணைந்து தலைமறைவுச் செயற்பாட்டாளராக இருந்த றெஜி சிறிவர்த்தன, மாணவராக இருந்த காலம் முதல் மார்க்சியத்தில் அக்கறை உடைய எழுத்தாளராகவும் செயற்பாட்டாளராகவும் இருந்து வந்தார்.

பல்துறை ஆற்றல்கள் மிக்க கலைஞராகவும் எழுத்தாளராகவும் விளங்கிய இவர், தனது வாழ்நாள் அக்கறையாக அரசியல், இலக்கியம் என்ற இரண்டு விடயங்களையும் முதன்மையானவையாகக் கொண்டிருந்தார். இரு தொகுதிகளாக வெளியிடப்பட்ட 'Selected Writings of Regi Siriwardena (2006)' எனும் நூலில் இவரது அரசியல் இலக்கிய விமர்சனக் கட்டுரைகள் சேர்க்கப்பட்டுள்ளன. ICES நிறுவனத்தின் வெளியிடான இவ்விரு தொகுதிகளையும் ஏ.ஜே. கனகரட்ண தொகுத்துப் பதிப்பித்தார். இலக்கியத்திலும் அரசியலிலும் ஈடுபாடு கொண்ட தமிழ் எழுத்தாளர்கள் வாசகர்கள் மத்தியில் நன்கு அறியப்பட்டவராகவும் இவர் விளங்கினார். இவரது ஆக்கங்கள் சில வருமாறு:

**கவிதை :**

- Waiting for the Soldier (1989)
- To the Muse of Insomnia (1990)
- Among My Souvenirs (1997)

**சுயசரிதைக் குறிப்புகள் :**

- Working Underground: The LSSP in Wartime (1999)

**திரைக்கதை :**

- Gamperaliya (1965)
- Golu Hadawatha (1969)

**கட்டுரை :**

- MA de Silva & Reggie Siriwardena, Communication Policies in Sri Lanka: a Study, Paris: Unesco, 1977.
- Reggie Siriwardena, K. Indrapala, Sunil Bastian & Sepali Kottegoda, School Text Books and Communal Relations in Sri Lanka, Council for Communal Harmony Through the Media, Colombo.
- Reggie Siriwardena, Equality and the religious traditions of Asia, New York: St Martin's Press, 1987.

*ஜேம்ஸ் மனர் பற்றிய விமர்சனக் கட்டுரை 'Political Biography and The Role of Personality' என்ற தலைப்புடையது. 'Selected Writings of Regi Siriwardena - Volume 2' நூலில் சேர்க்கப்பட்டுள்ளது.*

*நன்றி*

*The Expedient Utopian : Bandaranaike and Ceylon by James Manor (Cambridge University Press, 1989: PP 327 + Bibliography and Index).*

*'The Thatched Patio' என்ற ஆங்கிலச் சஞ்சிகையின் 1990 ஜனவரி/பெப்ரவரி இதழில் றெஜி சிறிவர்த்தன அவர்களின் விமர்சனக் கட்டுரை வெளியானது.*

(தொடரும்.)

”யாழ்ப்பாணக் குடாநாட்டின் நூலகப் பாரம்பரியம் என்ற இத்தொடரானது, யாழ்ப்பாணத்தில் புராதன நூலக வரலாறு முதல் நவீன தனியார் நூலக வளர்ச்சி, பொது நூலக வளர்ச்சி, நூலகவியல் கல்வியின் அறிமுகம், நூலகத்துறையில் ஈழத்தமிழர்களின் முன்னோடி முயற்சிகளாக யாழ்ப்பாணத்தில் எழுந்த நூலகவியல்சார் நூல் வெளியீடுகள், நூலகவியல் துறைசார் சஞ்சிகைகளின் வெளியீடுகள், யாழ்ப்பாண கல்வியியல் வரலாற்றில் தடம் பதித்த நூலகங்களின் வரலாறு என்பவை உள்ளிட்ட விடயங்களை பற்றி பேசவிழைகின்றது.



நடராஜா செல்வராஜா

# யாழ்ப்பாணத்தில் உருவான சில ஆரம்பகால நூலகங்கள்

**பகுதி 8**

யாழ்ப்பாணத்தின் ஆரம்பகால நூலகங்கள் பற்றிய இக்கட்டுரைத் தொடரில் யாழ்ப்பாணப் பொதுசன நூலகத்தின் வரலாற்றைப் பதிவுசெய்யும் வேளை ‘01.08.1934 முதல் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள ஒரு சிறிய வாடகை வீட்டில் படிப்பகமும் நூலகமும் செயற்படத் தொடங்கின’ என்று அறிந்துகொண்டோம். ஆயின், இதுவே யாழ்ப்பாணத்தின் முதலாவது நூலகம் அல்லது முதலாவது பொதுசன நூலகம் என்ற பிம்பம் நீண்டகாலமாக வளர்த்தெடுக்கப்பட்டு வந்துள்ளது. இது தவறானதாகும். யாழ்ப்பாணப் பொது நூலகம் வேரூன்றிய காலத்திலும் அதற்கு முன்னரும் யாழ்ப்பாணத்தில் நூலகப் பாரம்பரியமொன்று அறிஞர்களால் வளர்த்தெடுக்கப்பட்டு வந்துள்ளதை அறியமுடிகின்றது. அமரர் க.மு. செல்லப்பாவின் தனிப்பட்ட சேகரிப்புகள் எவ்வாறு கூட்டுச் சேகரமாகி யாழ்ப்பாணப் பொது நூலகத்தின் உருவாக்கத்திற்கு வழிகோலியிருந்தனவோ,





Image source - www.amazon.co.uk

அவ்வாறே யாழ்ப்பாணக் குடாநாட்டில் மேலும் சில நூலகங்கள் தனியாரால் அல்லது ஒரு சிறு குழுவினரால் தொடங்கப்பட்டு, பின்னாளில் அது ஒரு பாரிய நூலகமாகப் பரிமாணம் பெற்று, வாழ்ந்ததும், காலக்கிரமத்தில் பெயர்மாற்றம் பெற்று இன்றளவில் வாழ்வதும் கண்கூடு. இந்த வகையில் ‘விக்ரோரியா படிப்பகம்’ பற்றிய அறிமுகத்துடன் இன்றைய தொடருக்குள் நுழைவோம்.

நடராஜா செல்வராஜா, யாழ். இராமநாதன் பெண்கள் கல்லூரியில் நூலகராகவும், யாழ்ப்பாண, சர்வோதய சிரமதான சங்கத்தின் யாழ்.மாவட்ட நூலகப் பொறுப்பாளராகவும், இலங்கை உள்ளூராட்சி அமைச்சின் நூலகராகவும், இந்தோனேசியா, ஐக்கியநாடுகள் சபையின் கிராமிய பொது நூலக அபிவிருத்திப் பிரதிநிதியாகவும், ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டியல் நிறுவனத்தின் ஆய்வு நூலகத்தின் பொறுப்பாளராகவும், கொழும்பு இனத்துவக் கல்விக்கான சர்வதேச நிலைய ஆய்வு நூலகப் பொறுப்பாளராகவும் பதவி வகித்துள்ளார்.

அயோத்தி நூலக சேவையின் ஸ்தாபகரும், நூலகவியல் காலாண்டுச் சஞ்சிகையின் தாபக ஆசிரியராகவும் செயற்பட்டார். ஊடகத்துறையிலும் பணியாற்றிவிட்டு, தற்போது ஐக்கிய இராச்சியத்தில் வசிக்கும் இவர், ரோயல் மெயில் தபால் நிறுவனத்தின் அந்நிய நாணயப்பிரிவில் அதிகாரியாக தற்போது பணியாற்றுகின்றார். இவர் நூலகவியல் பற்றி தொடர் ஆய்வுகளை மேற்கொண்டு வருவதுடன், நூலகவியல் பற்றியும் பல வெளியீடுகளை செய்துள்ளார்.

## விக்ரோரியா படிப்பகம்
## (The Victoria Reading Hall)

*1887 ஜுூன் 28 அன்று இலங்கை முழுவதும் விக்ரோரியா மகாராணியின் முடிசூட்டு விழாவின் (20.06.1837) ஐம்பதாவது ஆண்டு நினைவு தினம் கொண்டாடப்பட்டது.*

*பொன் விழா நினைவாக, 1888 ஆம் ஆண்டு ஜனவரி 29 ஆம் திகதி விக்ரோரியா படிப்பகம் (The Victoria Reading Hall) யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணையில் தாபிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்து வழக்கறிஞராகவிருந்த அமரர் சின்னத்தம்பி நாகலிங்கம் அவர்களின் அயராத உழைப்பின் பெறுபேறாக உருவாக்கப்பட்ட இந்தப் படிப்பகத்தில் நூல்கள், பத்திரிகைகள் என்பன வாசிப்பதற்கான வசதியுடன், இயங்கிவந்துள்ளது. அவ்வப்போது அறிஞர் பெருமக்களின் விரிவுரைகளும் இடம்பெற்றிருந்தன. அவ்வகையில் ஆவணப்படுத்தப்பட்ட ஒரு நிகழ்வாக 29.06.1888 அன்று திரு. நெவின்ஸ் செல்லத்துரைப்பிள்ளை அவர்களது 'The Third National Congress' என்ற தலைப்பிலான விரிவுரை இடம்பெற்றிருந்தது. 30.03.1892 அன்று மீண்டும் திரு. நெவின்ஸ் செல்லத்துரைப்பிள்ளை அவர்களின் விரிவுரையொன்று 'Decision of Character' என்ற தலைப்பில் விக்ரோரியா படிப்பகத்தில் நிகழ்த்தப்பட்டுள்ளது. நெவின்ஸ் செல்லத்துரைப்பிள்ளை அக்கால கட்டத்தில் இந்து உயர் பாடசாலையின் தலைமை ஆசிரியராகப் பணியாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இத்தகவல்கள் John H. Martyn's Notes on Jaffna: Chronological, Historical, Biographical என்ற நூலில் ஆங்காங்கே காணப்படுகின்றன.*

*விக்ரோரியா படிப்பகத்தை உருவாக்கிய சமகாலத்திலேயே திரு சின்னத்தம்பி நாகலிங்கம் அவர்களிடம் புதியதொரு பொறுப்பும் சுமத்தப்பட்டிருந்தது. 1887 இல் வில்லியம் நெவின்ஸ் முத்துக்குமாரு சிதம்பரப்பிள்ளை அவர்களால் உருவாக்கப்பட்டிருந்த 'சுதேசிய பட்டண உயர்நிலைப் பள்ளி (Native Town High School)' என்ற தனியார் பாடசாலை நிதிப் பற்றாக்குறையினால் இயங்கமுடியாத நிலையில் 1889 இல் அட்வகேட் நாகலிங்கத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவரது பாடசாலை 'நாகலிங்கம் பட்டணப் பாடசாலை' என வழங்கப்பட்டிருந்தது. The Victoria Reading Hall, Native Town High School ஆகிய இவ்விரு அறிவுசார் நிறுவனங்களையும் பின்னாளில் 1890 இல் 'யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை'யினரிடம் திரு. நாகலிங்கம் கையளித்திருந்தார்.*

**விக்ரோரியா படிப்பகத்திற்கும் யாழ்ப்பாண இந்துக் கல்லூரிக்கும் இடையேயான தொடர்புக்கு அதன் தாபகர் திரு. சின்னத்தம்பி நாகலிங்கமே காரணகர்த்தாவாவார்.**

*யாழ்ப்பாணம் சைவ சமய பரிபாலன சபை இரண்டாண்டுகளுக்கு முன்னரே 1888 இல் உருவாக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் அப்பாடசாலை The Hindu High School என்ற பெயரில் அழைக்கப்பட்டது. இந்நிறுவனங்களைப் பொறுப்பேற்ற யாழ்ப்பாண சைவ சமய பரிபாலன சபையே பின்னாளில் இதனை சிறப்புற முகாமை செய்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியாக வளர்த்தெடுத்தது. அக்கல்லூரியின் பிரார்த்தனை மண்டபத்தில் "In Memory of the Late Mr. Sinnathamby Nagalingam, Advocate, The Founder and The First Manager of this Institution" என்ற வாசகங்கள் பொறித்த நினைவுக் கல்வெட்டொன்றும் வைக்கப்பட்டது.*

*விக்ரோரியா படிப்பகத்தின் நூற்சேர்க்கைகள் பின்னாளில் யாழ்ப்பாண இந்துக் கல்லூரியின் நூலகத்தின் ஆரம்பகாலச் சேர்க்கைகளாக உள்வாங்கப்பட்டன. இவை பாடசாலையின் வரையறுக்கப்பட்ட இடவசதியைக் கருத்திற்கொண்டு ஒரு வகுப்பறையிலேயே நீண்ட காலமாக வைத்துப் பராமரிக்கப்பட்டிருந்தது.*

*விக்ரோரியா படிப்பகத்திற்கும் யாழ்ப்பாண இந்துக் கல்லூரிக்கும் இடையேயான தொடர்புக்கு அதன் தாபகர் திரு. சின்னத்தம்பி நாகலிங்கமே காரணகர்த்தாவாவார். இவர் பிரவுன் சின்னத்தம்பி என்று ஆங்கிலேயராலும் சக சுதேசிகளாலும் அழைக்கப்பட்ட அமரர் அம்பிகைபாகர் சின்னத்தம்பி (Brown Proctor)*


அவர்களின் மூன்றாவது மகனாவார். 'யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி நூற்றாண்டு (1890-1990) மலர்' என்ற சிறப்பு மலரில் திரு. சமாதிலிங்கம் சத்தியசீலன் அவர்களினால் எழுதப்பட்ட யாழ். இந்துக்கல்லூரியின் வரலாறு பற்றிய கட்டுரையில் திரு. சின்னத்தம்பி நாகலிங்கம் பற்றிய விரிவான குறிப்புகள் காணப்படுகின்றன.

## யாழ்ப்பாண இந்துக் கல்லூரி நூலகம்

"யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் நூலக வளர்ச்சிப்போக்கை அதன் ஆரம்பகாலம் தொட்டு அட்டவணைப்படுத்துவதற்கு பழைய ஆவணங்கள் கிடைக்கப்பெறாமை சில கஷ்டங்களை ஏற்படுத்துகின்றது. அதிலும் நூலகம் எப்பொழுது உருவாகியது, அது கொண்டிருந்த நூல்கள் எத்தகையன, நூலகர் இருந்தாரா, நூலகம் எப்படிச் செயற்பட்டது, எவ்வளவு நூல்கள் இருந்தன, மாணவர்களின் வாசிப்புப் பாவனை எப்படி இருந்தது? போன்ற விபரங்கள் கிடைக்கப்பெறவில்லை" என்கிறார் அக்கல்லூரியின் நூலகராகப் பணியாற்றிய பொ. இராசரத்தினம் அவர்கள். 'யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி நூற்றாண்டு (1890-1990) மலர்' என்ற ஆவணத்தில் இவர் எழுதிய கட்டுரையொன்று 'யாழ். இந்துக் கல்லூரி நூலகம் தோற்றமும் வளர்ச்சியும்' என்ற தலைப்பில் இடம்பெற்றுள்ளது. அக்கட்டுரை எமக்குப் பல வரலாற்று விடயங்களை தெளிவுபடுத்துகின்றன.

கிடைக்கப்பெற்ற இந்து சாதனம் பத்திரிகைத் தகவல்களின் (18.09.1912) அடிப்படையில் 1910 ஆம் ஆண்டு சென்னையில் இயங்கிய யாழ்ப்பாண மாணவர் சங்கம், மொத்தம் 200 நூல்களை இப்பாடசாலை நூலகத்திற்கு சேர்த்து அனுப்பியுள்ளது. பயிற்றப்பட்ட நூலகர்கள் அற்ற நிலையில் ஆரம்பகால நூலகர்களாக ஆசிரியர்களே இப்பாடசாலையில் பணியாற்றியுள்ளனர்.

இந்தியாவைச் சேர்ந்த இக்கல்லூரி அதிபர் ஜி. சிவராவ் (1910-1913) இளைப்பாறி தாயகம் திரும்பிய கையோடு பெறுமதிமிக்க 100 நூல்களை இந்நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார். இவரைத் தொடர்ந்து அதிபராகப் பணியாற்றிய பீ. சஞ்சீவராவ் (1913-1914) அவர்களும் ஓய்வுபெற்று நாடுதிரும்பும் வேளை தனது சேகரிப்பில் இருந்த பெறுமதிமிக்க நூற்றொகுதியை பாடசாலை நூலகத்திற்கென வழங்கிச் சென்றுள்ளார்.




**அட்வகேட் நாகலிங்கம்**
Image source - jhcobavictoria.org

1926-27 காலகட்டத்தில் அதிபராகப் பணியாற்றிய W.A. Troupe அவர்கள் தனது பணிக் காலத்திலே, அதுவரை சிறு அறையொன்றில் இயங்கிவந்த பாடசாலை நூலகத்தை அந்நாளில் பிரார்த்தனைக் கூடமாகப் பயன்படுத்தப்பட்டு வந்த மண்டபத்திற்கு இடம்மாற்றியிருந்தார். விரிவான இடவசதி இருந்தபோதிலும் நூலகத்துக்குரிய தனிப்பட்ட வசதிகள் இருக்கவில்லை. அவ்வேளையில் அம்மண்டபம் ஒரு கேட்போர் கூடமாகவும் பிரார்த்தனை மண்டபமாகவும் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வந்தமை கவனத்திற்குரியது. இம்மண்டபத்திலேயே சுவாமி விவேகானந்தர், மகாத்மா காந்தி போன்றோரது வரலாற்று முக்கியத்துவமான சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன.

திரு. நெவின்ஸ் செல்லத்துரை அவர்கள் அதிபராக இருந்த 1892-1909, 1914-1926 ஆகிய இரு காலகட்டங்களிலும் தென்னிந்தியாவிலிருந்து பல

**"யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் நூலக வளர்ச்சிப்போக்கை அதன் ஆரம்பகாலம் தொட்டு அட்டவணைப்படுத்துவதற்கு பழைய ஆவணங்கள் கிடைக்கப்பெறாமை சில கஷ்டங்களை ஏற்படுத்துகின்றது. அதிலும் நூலகம் எப்பொழுது உருவாகியது, அது கொண்டிருந்த நூல்கள் எத்தகையன, நூலகர் இருந்தாரா, நூலகம் எப்படிச் செயற்பட்டது, எவ்வளவு நூல்கள் இருந்தன, மாணவர்களின் வாசிப்புப் பாவனை எப்படி இருந்தது? போன்ற விபரங்கள் கிடைக்கப்பெறவில்லை" என்கிறார் அக்கல்லூரியின் நூலகராகப் பணியாற்றிய பொ. இராசரத்தினம் அவர்கள்.**

நூல்களைத் தருவித்து நூலகத்தை விரிவாக்கியிருந்தார்.

திரு.என். குமாரசுவாமி அவர்கள் அதிபராகப் பணியாற்றிய (1933-1952) காலகட்டத்தில், 1950 ஆம் ஆண்டில், அதுவரை பிரார்த்தனை மண்டபத்தில் இயங்கிவந்த நூலகத்தை இப்போதுள்ள (இது 1990 இல் எழுதப்பட்ட குறிப்பு) இடத்திற்கு மாற்றியமைத்தார். இதுவே யாழ்ப்பாண இந்துக் கல்லூரி வரலாற்றில் முறையானதொரு நூலக அபிவிருத்திக்கு நுழைவாயிலாக அமைந்தது. ஆசிரியராகப் பணியாற்றிய ஏ.கே. பொன்னம்பலம் அவர்களை முழுநேர நூலகராக நியமித்ததுமல்லாமல் அவருக்கென்றொரு உதவியாளரையும் நியமித்து நூலகத்தை சிறப்பாக இயக்குவிக்கும் வாய்ப்பினை அளித்தார். ஏ.கே. பொன்னம்பலம் அவர்கள் இளைப்பாறிய பின்னரும் அங்கு நூலகராகத் தொடர்ந்து பணியாற்றினார். சிரேஷ்ட தராதரப் பத்திர வகுப்பு மாணவர்களும், உயர்வகுப்பு மாணவர்களுமே அக்காலத்தில் நூலகத்திற்குள் அனுமதிக்கப்பட்டனர். அக்காலத்தில் தான் அங்கு உசாத்துணைப் பகுதியும், நூல் இரவல் வழங்கும் பகுதியும் வளர்த்தெடுக்கப்பட்டன.

1963 இல் இலங்கைக்கான முன்னாள் இந்தியப் பிரதித் தூதுவர் ஆர்.எஸ். மணி அவர்கள் இந் நூலகத்திற்கு ஒரு தொகுதி நூல்களை அன்பளிப்பாக வழங்கியிருந்தார்.

திரு.என். சபாரத்தினம் அவர்கள் அதிபராகவிருந்த 1964-1971 காலகட்டத்தில் கல்வி நிறுவன நூலகரின் பணியின் முக்கியத்துவம் மேலும் உணரப்பட்டது எனலாம். அவரது காலகட்டத்தில் நூலகருக்கான இரண்டு நாட் பயிற்சியினை பிரித்தானியக் கழகத்தினரின் (British Council) உதவியுடன் பெற்றுத்தந்திருந்தார். 1970 ஆம் ஆண்டில் நூலகத்தின் நூற்சேர்க்கை 5543 ஆகவிருந்தமை குறிப்பிடத்தக்கது. 1973 இல் அவை 7902 ஆக உயர்ந்தன. இத்தொகை 1994 இல் 13,293 ஆக உயர்ந்திருந்தது.

யுத்த காலத்தில் குண்டுவீச்சுகளுக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியும் இலக்கான வேளைகளில் சுமார் 3000 நூல்கள் அழிந்துபோனமை கவலைக்குரிய விடயமாகும்.

திரு.இ. சபாலிங்கம் அவர்கள் கல்லூரி அதிபராகவிருந்த 1971-1975 காலகட்டத்தில் 1972 ஆம் ஆண்டில் ஒரு நிரந்தர நூலகர் பதவியை இக்கல்லூரிக்குப் பெற்றுக்கொடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. நிரந்தர நூலகரைக் கொண்ட பாடசாலை நூலகங்கள் இக்காலகட்டத்தில் மிகச் சொற்பமாகவே காணப்பட்டிருந்தது.

திரு.அ. பஞ்சலிங்கம் அவர்கள் 1991 இல் அதிபராகப் பொறுப்பெற்ற பின்னர் நூலகப் புனரமைப்பில் அதிக அக்கறை செலுத்தினார் என்று நூலகர் பொ. இராசரத்தினம் அவர்கள் தனது கட்டுரையில் ஓரிடத்தில் குறிப்பிட்டுள்ளார். "1992 ஆம் ஆண்டு வரை நூலகம் பாடசாலையின் மத்தியில் இருந்தாலும் நுழைவாயிலைப் பல வகுப்பறைகளினூடாகக் கடந்து தான் செல்லவேண்டியிருந்தது. அதனாற்றான் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டன. இதனால் நூலகத்தின் கிழக்குப் பக்கமாக ஒரு வாயில் அமைத்து மேல் மாடிக்கு ஏறி இறங்கப் பலகையினாலான படிகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டது." என்று அவர் குறிப்பிடுகிறார். திரு.அ. பஞ்சலிங்கம் அவர்களது காலத்திலேயே கீழ்வகுப்பு மாணவர்களுக்கென 'இளநிலை நூலகம்' ஒன்றினை (Junior Library) அமைத்துக் கொடுத்திருந்தார்.

தொண்ணூறுகளின் பின்னரான யாழ். இந்துக் கல்லூரியின் வளர்ச்சி இக்கட்டுரையில் இடம்பெறவில்லை. கடந்த முப்பதாண்டு வளர்ச்சி பற்றிய தகவல்களை இக்கல்லூரியின் நூலகரிடமிருந்து எதிர்பார்க்கிறேன். அது கிடைக்கப்பெறின் மற்றொரு இயலில் இதனைத் தொடரலாம்.

(தொடரும்.)

காலநிலை மாற்றத்தின் விளைவுகளை இன்று அனைவருமே அனுபவிக்கின்ற நிலையில் பசுமை நோக்கிய நகர்வு குறித்த விழிப்புணர்வும் அக்கறையும் பரந்துபட்டளவில் மக்களைச் சென்றடைந்துள்ளது. பசுமையின் பெயரால் வளச்சுரண்டல்கள், உரிமை மறுப்புகள், மோசடியான வர்த்தகம், போலியான திட்டங்கள் என அனைத்தும் அரங்கேறுகின்றன. குறிப்பாக மூன்றாமுலக நாடுகள் இதற்குப் பலியாகின்றன. இலங்கையும் இதற்கு விலக்கல்ல. இலங்கை உயிரினங்களின் செறிவு அடிப்படையில் ஆசியப் பிராந்தியத்தில் முக்கியமான நாடாக கருதப்படுகிறது. ஆனால் இலங்கையின் உயிர்ப்பல்வகைமை மிகப்பாரிய சவாலை எதிர்கொண்டுள்ளது. கடந்த இரண்டு தசாப்த காலத்தில் காலநிலை மாற்றத்தின் கொடும் விளைவுகளையும் இலங்கை சந்தித்துள்ளது. இவை குறிப்பாக விவசாயத் துறையை சீரழித்துள்ளது. உயரும் கடல்மட்டம் இலங்கைக்கு ஒரு மிகப்பெரிய சவாலாக உருவெடுக்கும் வாய்ப்புகளும் உண்டு. இத்தகைய பின்புலத்தில் இலங்கைச் சூழலில் பசுமை எனும் பெயரால் நடைபெறுகின்ற விடயங்களைத் தத்துவார்த்த ரீதியிலும் வரலாற்று நோக்கிலும் சமகால நிகழ்வுகளுடனும் நோக்க இத்தொடர் விழைகிறது. பசுமையின் பெயரால் நடந்தேறுபவை ஏற்படுத்தும் சமூகப் பொருளாதார மாற்றங்களையும் அதன் அரசியல் சிக்கல்களையும் சேர்த்தே ‘பசுமை எனும் பேரபாயம்‘ எனும் இத்தொடர் கவனம் செலுத்துகிறது.

மீநிலங்கோ தெய்வேந்திரன்



# பசுமை என்ற எண்ணக்கரு: நல்லுணர்வா? கொடுங்கனவா?

ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக உள்ள ஞாலசீர்த்தி மீநிலங்கோ தெய்வேந்திரன் அங்கு சர்வதேச அபிவிருத்தி ஆய்வுகள் முதுகலைத் திட்டத்தை வழிநடத்துகிறார். பூகோளத் தெற்கில் புதுப்பிக்கத்தகு சக்தி மாற்றங்களின் சமத்துவமும் நீதியும் சார் அம்சங்கள் பற்றிய அவரது ஆய்வு, புவிசார் அரசியலின் இயக்கவியல் மீதும்; துப்புரவான சக்தி மாற்றங்களை எய்தலில் வளரும் நாடுகள் எதிர்கொள்ளும் கொள்கைச் சவால்கள் மீதும்; குறிப்பான கவனஞ் செலுத்துகிறது. இவர் கற்பித்தல், திட்ட முகாமை, பொதுக் கொள்கை, சர்வதேச அபிவிருத்தி ஆகியவற்றில் இருபது வருடப் பணி அனுபவம் உடையவர். ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் மானுடப் புவியியலில் முனைவர் பட்டம் பெற்றவராவார்.



## தொடக்கக் குறிப்புகள்

காலநிலை மாற்றம் உலகளாவிய ரீதியில் ஏற்படுத்தியுள்ள தாக்கம் நாம் வாழும் சூழல் குறித்து நாம் கவனங்கொள்ள வைத்துள்ளது. நகரமயமாக்கல் ஏற்படுத்தியுள்ள நெருக்கடிகள் சுத்தமான காற்று, சுகாதாரமான குடிநீர், தூய்மையான வாழிடம் குறித்து எல்லோரும் அக்கறை செலுத்த வேண்டிய தேவையை உருவாக்கியுள்ளது. இப்பின்புலத்தில் பசுமை என்ற எண்ணக்கரு தவிர்க்கவியலாத ஒன்றாக முன்னிலையடைந்துள்ளது. பசுமைக்கு மாறுதல் (Going Green) என்பது இன்று அநேகமான அனைவரதும் தாரக மந்திரமாகவுள்ளது. வேலைத்தலங்களில், பாடசாலைகளில், விற்பனை நிலையங்களில், அரச நிறுவனங்களில், பொருட்களின் விளம்பரங்களில் என அன்றாட வாழ்வின் அம்சமாக பசுமைக்கு மாறுதல் என்பது இருக்கிறது. பசுமைசார் செயற்பாடுகளை மேற்கொள்வோர் ‘பூவுலகைக் காக்கவந்த இரட்சகர்கள்’ போலக் கருதப்படுவது பசுமை குறித்த நல்லுணர்வை எல்லோரிடமும்

ஏற்படுத்துகிறது. பசுமைசார் செயல்களைச் செய்வோர், காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்த பங்களிப்போராகவும் சுற்றுச்சூழல் காவலர்களாகவும் ஒரு தோற்றம் உருவாக்கப்பட்டுள்ளது.

பசுமைச் செயல்கள் குறித்த நல்லுணர்வானது, இன்னும் சரியாகச் சொல்வதானால் பசுமைக்கு முரணானதாகச் சொல்லப்படும் விடயங்களைச் செய்வது தவறானது என்ற குற்றவுணர்வையும் சேர்த்தே ஏற்படுத்துகிறது. இது இரண்டு வகையான விளைவுகளுக்கு வழிகோலியுள்ளது. முதலாவது பசுமைத் தீர்வுகள் நல்லதொரு இலாபம் தரும் வர்த்தக நடவடிக்கையாகப் பல்கிப் பெருகியுள்ளன. பசுமைப் பொருட்கள் (green products) இயற்கையானது (natural) சூழலுக்குத் தீங்கில்லாது (environmental friendly) போன்ற தலைப்புகளோடு சந்தைக்கு வரும் பொருட்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இன்று இந்தப் பசுமைப் பொருட்களும் சேவைகளும் கவனமீர்ப்பதாக உள்ளன. இது ஒரு புதிய சந்தையை உருவாக்கியுள்ளது. காலநிலை நெருக்கடி புதிய சந்தை வாய்ப்புகளை உருவாக்கியுள்ளது. ஆனால் உண்மையில் இவை பசுமைத் தீர்வுகளா அல்லது பசுமை என்ற பெயரில் நடக்கும் வியாபாரத் தந்திரங்களா? இவ்வினா முக்கியமானது.

பசுமை குறித்த நல்லுணர்வு ஏற்படுத்தும் இரண்டாவது விளைவு, உரியோர் பொறுப்பைக் கைகழுவுதலாகும். காலநிலை மாற்றத்தைத் தடுப்பதற்குப் பங்களித்தல், பசுமைத் தீர்வுசார் கொள்கைகள், அதன் நடைமுறைப்படுத்தல் போன்றவற்றைச் செயற்படுத்த வேண்டிய அரசாங்கங்களும் பங்களிக்க வேண்டிய தனியார் துறையும் தங்கள் பொறுப்புக்களில் இருந்து ஒதுங்கி அதைப் பொதுமக்களின் பொறுப்பாக்க முயற்சிக்கிறார்கள். இதன் மூலம் காலநிலையைக் கட்டுப்படுத்துவதற்கு பங்களிப்பை மக்களிடம் சுமத்துகிறார்கள். காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்துவது தனிமனிதர்களின் பொறுப்பாகிறது. இது ஒரு ஏமாற்றும் யுத்தி.

ஒரு சிறிய உதாரணத்தைப் பார்ப்போம். இலங்கையின் பெரும்பாலான ஹோட்டல் அறைகளில் “துவாயை மீண்டும் பயன்படுத்துங்கள்: சூழல் காப்புக்கு பங்களியுங்கள்” போன்ற வாசகங்கள் தொங்கவிடப்பட்டிருப்பதைக் காணலாம். இதன் மூலம் வாடிக்கையாளர்கள் தங்கள் துவாயை பல தடவைகள் பயன்படுத்தும்படி கோரப்படுகிறார்கள். இது துவாய் கழுவிச் சுத்தமாக்கப்படும் தடவைகளைக் குறைப்பதன் மூலம் நீர்ச் சேமிப்புக்கும், மின்சாரச் சேமிப்புக்கும் பங்களிக்கிறது. இது பேண்தகைமை (sustainable) மிக்கது. துவாயைப் பல தடவைகள் பயன்படுத்தும் வாடிக்கையாளர், தான் பசுமைபேண பங்களிப்பதாக உணர்கிறார். அதேவேளை துவாய் அசுத்தமாக இருந்தாலும் மீளப் பயன்படுத்தாவிட்டால் பசுமைக்கு பங்கம் விளைவிக்கிறோமோ என்ற குற்றவுணர்ச்சிக்கு ஆளாகிறார். ஹோட்டலின் வாசகம் அத்தகையை மனநிலையை ஏற்படுத்தும் வகையிலேயே எழுதப்பட்டிருக்கிறது. வாடிக்கையாளர்கள்



Image source - www.newscutter.lk

துவாயைப் பலதடவைகள் மீளப் பயன்படுத்தும் போது அது ஹோட்டலுக்கு பொருளாதார இலாபத்தை ஏற்படுத்துகிறது. எனவே பசுமையை இலாபம் பார்க்கும் ஒரு வழியாக மாற்றியிருக்கிறார்கள். ஆனால் பொதுப்புத்தியில் இவ்வாறு செய்வது நல்லது தானே என்று சிந்திக்க வைக்கப்பட்டுள்ளது.

சிக்கல் யாதெனில், இவ்வாறு பேண்தகைமைச் செயற்பாடுகளை வாடிக்கையாளர்களிடம் வலியுறுத்தும் ஹோட்டல்கள் தங்களுடைய செயல்களில் பேண்தகைமையைப் பேணுவதில்லை. உதாரணமாக, தங்களுக்கான மின்சாரத்தை புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களில் இருந்து பெறுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்ற போதும் அதற்கான நடவடிக்கைகளை

எடுப்பதில்லை. ஏனெனில் அதற்கு மேலதிக முதலீடு தேவை. அதேபோல பொலித்தீனுக்கு மாற்றான பொருட்கள் சந்தையில் கிடைக்கின்ற போதும் பொலித்தீன் பொருட்களே பயன்படுத்தப்படுவதைக் காணலாம். ஏனெனில் அது இலாபகரமானது. இங்கு கேள்விக்குட்படுத்துவது இந்த ஹோட்டல்களின் நோக்கங்களையே.

வாடிக்கையாளரிடம் பசுமைக்கும் சூழலுக்கும் பங்களிக்கக் கோருமிடத்து ஹோட்டல்கள் தங்களின் பங்களிப்பை வழங்க வேண்டாமா? வாடிக்கையாளரின் பங்களிப்பை மொத்தமாக தங்களின் பங்களிப்பு என்று கணக்குக்காட்டுவது எவ்வாறு நியாயமாகும். இந்த இரட்டை நிலைப்பாடு தான் பிரச்சனைக்குரியது. பசுமை என்பது பூவுலகத்தைக் காப்பதற்கான வழிவகையாக இல்லாமல் இலாபத்தைப் பெருக்குவதற்கான புதிய வழிமுறையாக மாறியிருக்கிறது. இதனாலேயே பசுமை என்பது பேரபாயமாக மாறியிருக்கிறது.

இந்தப் பேரபாயத்திற்கு இலங்கையும் விலக்கல்ல. கடந்த பத்தாண்டுகளில் இலங்கையில் பசுமைப் பொருட்கள் அதிகரித்துள்ளன. மக்களிடம் அதுகுறித்த விழிப்புணர்வும் அதிகரித்துள்ளது. அதேவேளை காலநிலை மாற்றத்தின் கோர விளைவுகளையும் நாம் தினமும் அனுபவிக்கிறோம். எமது சுற்றுச்சூழல் குறித்து அதிகம் அக்கறையற்ற ஒரு சமூகமாகவே நாம் வாழ்ந்து வந்திருக்கிறோம் என்பது கசப்பான உண்மை. இப்பின்புலத்தில் மக்களின் நலமானதும் வளமானதுமான வாழ்வுக்கு பேண்தகைமையை எவ்வாறு கையாள்வது? பேண்தகு அபிவிருத்தியைச் சாத்தியமாக்குவது எவ்வாறு? எமது சூழலியல் வரலாற்றில் இருந்து கற்றுக்கொள்ளக் கூடிய பாடங்கள் எவை? நுகர்வை முன்தள்ளும் இலாபநோக்க சந்தைப் பொருளாதாரச் சூழலில் மக்கள் நோக்கிலான பசுமைத் தீர்வுகள் சாத்தியமா?

இவை இயல்பாக எம்முன் எழும் கேள்விகள். இவற்றின் அடிப்படையில் தத்துவார்த்தம் சார்ந்தும் நடைமுறை சார்ந்தும் எழும் மூன்று கேள்விகள் முக்கியமானவை:

- பேண்தகு அபிவிருத்தி சாத்தியமானதா?
- பொருளாதார வளர்ச்சி என்பது எல்லையற்றதா?
- எல்லையற்ற வளர்ச்சியிலும் நுகர்விலும் பேண்தகைமை எவ்வாறு சாத்தியமாகும்?

இவ்வினாக்களை இக்கட்டுரைத் தொடர் விரிவாக இலங்கை அனுபவங்களின் வழி ஆராய விழைகிறது.

## பசுமை பற்றிய கட்டுகதைகள்

எம்மத்தியில் பசுமை தொடர்பான கட்டுக்கதைகள் நிறைந்துள்ளன. குறிப்பாக சந்தையில் உள்ள பொருட்களில் எமக்கு வழங்கப்படும் சேவைகளில் இவை பல்கிப் பெருகியுள்ளன. அதில் மூன்றை பற்றி மட்டும் இங்கு நோக்கலாம். இது பசுமை என்பது இருபக்கமும் கூரான கத்திபோன்றது என்ற யதார்த்தத்தை விளங்கப்படுத்த உதவும்.

முதலாவது, இன்று பல பொருட்களில் 'இயற்கையானது' என்ற லேபலைக் காண்கிறோம். அது எமக்கு ஏற்படுத்துகின்ற தோற்றம், குறித்த பொருள் இயற்கையான பொருட்களால் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது என்பதே. ஆனால் உண்மையில் அவ்வாறு அமையவேண்டிய தேவை இல்லை. ஏனெனில் இலங்கைச் சட்டத்தின் கீழ் 'இயற்கை' என்ற சொல் ஒழுங்குபடுத்தப்படவில்லை. இயற்கை அல்லது இயற்கை என்று பெயர் உள்ள எதிலும் செயற்கைப் பொருட்கள் மற்றும் தீங்கு விளைவிக்கும் நச்சுகள் உட்பட இயற்கை அல்லாத பொருட்கள் இருக்கலாம். இன்று இயற்கையான சுவை கூட செயற்கையான சுவையூட்டிகளின் வழியே தயாரிக்கப்படுகிறது. இயற்கையானது என்று குறிப்பிடப்பட்ட பல பொருட்களின் லேபலில் பல செயற்கைப் பொருட்கள் இடம்பெற்றிருப்பதை அவதானிக்கலாம்.

இரண்டாவது கட்டுக்கதை, கரிமப் (organic) பொருட்கள் சிறந்தவை என்பது. இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லிகள் போன்றவற்றைப் பயன்படுத்தாமல் கரிமப் பொருட்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்டவை அல்லது அவ்வாறான உற்பத்தியை உள்ளடக்கியவை தரமானவை. கரிம உணவுகளை வாங்குவோரிடையே நடாத்தப்பட்ட கருத்துக்கணிப்பில் அவர்கள் அதைக் கொள்வனவு செய்வதற்கு மூன்று காரணங்களைச் சொன்னார்கள்:

1. கரிம உணவுகளில் இராசயனப் பொருட்கள் இல்லை, எனவே பாதுகாப்பானது.
2. கரிம உணவுகள் சாதாரண உணவுகளை விட ஊட்டச்சத்து நிறைந்தவை.
3. கரிம உணவுகள் சாதாரண உணவுகளை விடச் சுவையானவை.

இந்த மூன்றும் உண்மையல்ல. அவை கட்டுக்கதைகள் என்பதே வருந்தத்தக்க உண்மை. இவற்றை ஒவ்வொன்றாகப் பார்க்கலாம். இரசாயன உரங்கள் பூச்சிக் கொல்லிகள் பயன்படுத்தப்படாமை நல்லதே. ஆனால் அவ்வாறு நிகழ்வதில்லை. ஒப்பீட்டளவில் கரிம உணவுகளில் கரிமமல்லாத உணவுகளை விட குறைவான பூச்சிக்கொல்லிகளே பயன்படுத்தப்படுகின்றன. அதன் பொருள், கரிம உணவுகளில் பூச்சிக்கொல்லிகளே இல்லை என்பதல்ல. ஆனால் 20 இற்கும் மேற்பட்ட இரசாயனங்களை விவசாயிகள் கரிமப் பயிர்களில் பயன்படுத்துகின்றனர். அவை அப்பயிர்களை பூச்சிகள் தாக்காமல் பாதுகாக்க உதவுகிறது. முக்கியமாக, விவசாயிகள் பயிர்களுக்குச் சிகிச்சையளிக்க இயற்கைப் பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்துகிறார்கள். மேலும் இந்தப் பூச்சிக்கொல்லிகள் செயற்கை பூச்சிக்கொல்லிகளை விட சுற்றுச்சூழலுக்கு (அல்லது உடல் ஆரோக்கியத்திற்கு) மிகவும் பாதுகாப்பானது என்று பொருளல்ல. பாரிய கரிம உணவு உற்பத்தித் தளங்களில் செயற்கைப் பூச்சிக்கொல்லிகளும் இரசாயன உரங்களும் பயன்படுத்தப்படுகிறது. ஏனெனில் கரிம உற்பத்திச் சான்றிதழைப் பெற்றுவிட்ட பிறகு உற்பத்தியாளர்கள் உற்பத்தியை அதிகரிக்கவும் சேதத்தைக் குறைக்கவும் இவற்றைப் பயன்படுத்துகிறார்கள்.

கரிமப் பொருட்கள் சிறந்தவை என்பதற்குச் சொல்லப்படும் இன்னொரு கட்டுக்கதை அவை ஊட்டச்சத்து மிக்கவை என்பது. ஆனால் கரிம உணவுகள் சாதாரண உணவுப் பொருட்களைவிட மேலதிக சக்தியோ, ஊட்டச்சத்தோ கொண்டவையல்ல. ஆனால் இயற்கை விவசாயம் அதிக சத்தான உணவை உற்பத்தி செய்கிறது என்று சிலர் நம்புகிறார்கள். இருப்பினும், கரிம உணவுகள் சாதாரண உணவுகளை விட எந்த வகையிலும் ஆரோக்கியமானவை என்பதற்கான எந்த ஆதாரத்தையும் அறிவியலால் கண்டுபிடிக்க முடியவில்லை. கடந்த 50 ஆண்டுகளாக இது தொடர்பான தொடர்ச்சியான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால் கரிமப்பொருட்கள் ஊட்டச்சத்தானவை என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை.

கரிம உணவு சிறந்த சுவையைத் தரக்கூடியது என்று வாதிடுவோரின் பெரும்பான்மையோர் மாட்டு இறைச்சியில் இதைக் குறிப்பாக உணர முடியும் என்கிறார்கள். இதை மையமாகக் கொண்டு ஆராய்ச்சியாளர்கள் இரண்டு வகையான இறைச்சியையும் உண்ணக் கொடுத்து வேறுபாட்டைக் கண்டுபிடிக்கும் சோதனையை மேற்கொண்டார்கள். இவ்வாறு நடத்தப்பட்ட



மீதொட்டமுல்ல குப்பைமேடு

Image source - www.newsfirst.lk

பரிசோதனைகளில் பங்குபற்றியோரால் இரண்டிற்கும் உள்ள வித்தியாசத்தை கண்டுபிடிக்க முடியவில்லை. எனவே, சுருக்கமாக, கரிமப் பொருட்கள் நமக்குச் சிறந்தவை அல்ல, அவற்றிற்கும் கரிமமல்லாத உணவுகளுக்கும் உள்ள வித்தியாசத்தை நம்மால் சொல்ல முடியாது. இயற்கை வேளாண்மையில் நல்ல பல விஷயங்கள் இருக்கின்றன - பண்ணைகளில் பல்லுயிர் பெருக்கத்திலிருந்து ஒற்றைப் பயிர்களை விட்டு விலகுவது வரை - ஆனால் ஆரோக்கியமான மற்றும் சுவையான உணவுகளை உற்பத்தி செய்வது அவற்றில் ஒன்றல்ல.

கரிம மாமிச உணவுகளைப் பொறுத்தவரையில் அறம் சார்ந்த கேள்வி மேலோங்குகிறது. கரிம உணவுக்காக வளர்க்கப்படும் கால்நடைகள் நோயுறும் போது நுண்ணுயிர் எதிர்ப்பிகளைப் (antibiotics) பயன்படுத்த முடியாது. எனவே இவ்வாறான கரிமப் பண்ணைகளில் வளர்க்கப்படும் கால்நடைகள் சாதாரண பண்ணைகளில் வளர்க்கப்படுவவற்றை விட அதிக துன்பத்துக்கு ஆளாகின்றன. ஒரு ஆய்வின்படி சாதாரண பண்ணைகளில் வளர்க்கப்படும் பன்றிகளை விட கரிமப் பண்ணைகளில்





வளர்க்கப்படும் பன்றிகள் அதிகமாகவே நிமோனியா காய்ச்சலுக்கு உள்ளாகின்றன.

மிகுந்த கவனத்துடன் வளர்க்கப்படும் போது கரிமப் பண்ணைகளில் நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் குறைவு என்பது உண்மை. ஆனால் கடந்த ஒரு தசாப்த காலத்தில் கரிம மாமிசத்திற்கான கேள்வி தொடர்ச்சியாக அதிகரித்து வந்துள்ளது. எனவே இப்பண்ணைகளில் வளர்க்கப்படும் விலங்குகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கின்றது. இது இவ்விலங்குகள் நோய்த்தொற்றுக்கு ஆளாவதற்கான வாய்ப்பை அதிகரித்துள்ளன. இதைக் குறைக்க வேண்டுமாயின் சாதாரணப் பண்ணைகளின் அளவை விட அதிக நிலப்பரப்பைக் கொண்ட பண்ணைகள் தேவைப்படுகின்றன. இது நிலம் சார்ந்த இன்னொரு நெருக்கடியைச் சுட்டுகிறது. உலகளாவிய காடழிப்பில் 41% விலங்குணவுப் பண்ணைகளுக்காக செய்யப்படுபவை. இப்பண்ணைகளை உருவாக்குவற்காகவே 80% அமேசன் மழைக்காடுகள் அழிக்கப்படுகின்றன.

மூன்றாவது கட்டுக்கதை, கழிவகற்றலின் இறுதித் தீர்வு மீள்சுழற்சியே. பொதுவாக மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்டுள்ள பிம்பம் யாதெனில் நீங்கள் எவ்வளவு பொருட்களையும் வாங்கலாம், பயன்படுத்தலாம். ஆனால் அவை மீள்சுழற்சிக்கு உள்ளாவதை உறுதி செய்ய வேண்டும். இதன்மூலம் நீங்கள் பேண்தகு வாழ்வியலுக்கு பங்களிக்கிறீர்கள் என்பதாகும். இது அடிப்படையில் தவறான ஒரு கருத்தாகும். சந்தையில் பொருட்கள் விற்கப்பட வேண்டும், மக்கள் தடையின்றி நுகர்வை மேற்கொள்ளவேண்டும் என்பதே முதலாளித்துவ சந்தை விதி. இந்த விதியை பசுமைக்கு ஏற்றவகையில் பொதிசெய்து வழங்கும் நோக்கில் உருவாக்கப்பட்டதே இந்த கட்டுக்கதை.

இதை விளங்கிக் கொள்ள முதலில் உலகளாவிய கழிவுகள் பற்றிப் பேசியாக வேண்டும். மனிதர்கள் எப்பொழுதும் கழிவுகளை உற்பத்தி செய்திருக்கிறார்கள். ஆனால் இப்போதுள்ள அளவில் ஒருபோதும் கழிவுகளை நாம் உற்பத்தி செய்ததில்லை. உதாரணமாக ஒவ்வொரு ஆண்டும் உலகளவில் 480 பில்லியனுக்கும் அதிகமான பிளாஸ்டிக் போத்தல்கள் விற்பனை செய்யப்படுகின்றன. அதாவது ஒவ்வொரு வினாடிக்கும் அண்ணளவாக 20,000 போத்தல்கள். மனிதன் அதிகம் பயன்படுத்திக் கழிக்கும் பொருள் என்ற பெருமை பிளாஸ்டிக் சிகரெட் வடிப்பான்களுக்குரியது. ஆண்டுதோறும் நான்கு டிரில்லியன் பிளாஸ்டிக் சிகரெட் வடிப்பான்கள் சாதாரணமாக தரையில் கழிவுகளாகப் போடப்படுகின்றன.

இரண்டு பில்லியன் மக்கள் தற்போது திடக்கழிவுச் சேகரிப்புக்கு அணுகல் இல்லாமல் வாழ்கின்றனர். உலகின் மூன்றில் ஒரு பங்கு திடக்கழிவுகள் திறந்த வெளியில் கொட்டப்படுகின்றன அல்லது எரிக்கப்படுகின்றன. அவை நமது ஆறுகள், கடல்களில் வீசப்படுகின்றன அல்லது கழுவப்படுகின்றன. தொழிற்சாலைகள், மின் நிலையங்களில் இருந்து நச்சுகளோடு வெளியேறும் கழிவுகள் சாக்கடைகளில் இணைகின்றன.

எவரெஸ்டின் உருகும் பனிப்பாறைகளிலும் நமது ஆழமான கடல் அகழிகளிலும் பிளாஸ்டிக் கழிவுகள் இருக்கின்றன. எவெரெஸ்டில் 27,700 அடி உயரத்தில் மைக்ரோ பிளாஸ்டிக் துகள்களைக் கண்டுபிடித்துள்ளார்கள். பிளாஸ்டிக் கழிவுகளிலேயே மிகவும் மோசமானவை மைக்ரோ பிளாஸ்டிக் கழிவுகள்; அவை கண்களுக்குத் தெரியாதவை. அவற்றை அகற்றுவது மிகக் கடினம். உலகின் மிக ஆழமான அகழியான மரியான ஆழியின் அடியிலும் பிளாஸ்டிக் பைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. சில ஆண்டுகளுக்கு முன்பு, கடல்கீழ் ஆய்வாளர் விக்டர் வெஸ்கோவோ இந்த ஆழியின் ஆழமான புள்ளியை அடைய முயன்றார். அங்கு, மேற்பரப்பிலிருந்து 10,900 மீட்டர் கீழே, மரியானா அகழியின் ஒளியற்ற வெற்றிடத்தில் பிளாஸ்டிக் பையைக் கண்டார். இது பிளாஸ்டிக் நெருக்கடியின் தீவிரத்தை உணர்த்துகிறது.

கடந்த சில தசாப்தங்களாக மறுசுழற்சி

செய்வதற்கான இடைவிடாத உந்துதல் இருந்துள்ள நிலையில் தொடர்ச்சியாக அதிகரிக்கின்ற பிளாஸ்டிக் கழிவுகளை எவ்வாறு விளங்கிக் கொள்வது. நாம் வீட்டில் கழிவுகளைப் பிரித்தே பராமரிக்கிறோம். கழிவுகற்றல் பிரித்தே நடக்கிறது. ஆனால் ஏன் இன்னும் பிரச்சனை தொடர்கிறது?

மறுசுழற்சி செய்யப்படுவதாக நாம் நினைத்தவற்றில் பெரும்பாலானவை உண்மையில் மறுசுழற்சிக்கு உள்ளாவதில்லை. பல தசாப்தங்களாக, மேற்குலக நாடுகள் நமது குப்பைகளை மூன்றாமுலக நாடுகளுக்கு அனுப்பியுள்ளன; அங்கு உழைப்பு மலிவானது. அங்கு சுற்றுச்சூழல் தரங்கள் பலவீனமாக உள்ளன. பசுமைச் செயற்பாடுகள், மீள்சுழற்சி என்ற பெயரில் சேகரிக்கப்படுபவை இவ்வாறு குப்பைகளாக மூன்றாமுலக நாடுகளில் கொட்டப்படுகிறது. சில ஆண்டுகளுக்கு இவ்வாறான குப்பைகள் இலங்கைக்கு வந்தது உங்களுக்கு நினைவிருக்கக்கூடும். இது 'நச்சுக் காலனித்துவம்' (toxic colonialism) என்று அழைக்கப்படுகிறது.

மேற்குலக நாடுகளில், அனைத்து வீட்டுக் கழிவுகளில் பாதிக்கும் குறைவானதே மறுசுழற்சி செய்யப்படுகிறது. மேலும் பெரும்பாலானவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஆசியாவின் நதிகளை அடைத்துக்கொண்டிருக்கும் கழிவுகள் அவர்களுடையவை. உலகளாவிய வடக்கில் உள்ளோரது அதிகப்படியான நுகர்வு வாழ்க்கை முறைகளால், கழிவுகளின் அளவு எல்லையற்றதாக மாறிவிட்டது.

துன்பம் யாதெனில், உலகளவில் 20 மில்லியன் மக்கள் கழிவுகளைச் சேகரிப்பவர்களாகவும், பிரித்தெடுப்பவர்களாகவும் வாழ்கின்றனர். அவர்களது வாழ்வாதாரம் இவ்வாறான கழிவுகளிலேயே தங்கியிருக்கிறது. அவர்களுக்குப் பல பெயர்கள் வழங்கப்படுகின்றன: எகிப்தில் அவர்கள் ஜபலீன், மெக்சிகோவில் பெபெனாடோர்ஸ், பிரேசிலில் கேடடோர்ஸ், தென்னாப்பிரிக்காவில் பாகெரேசி, இந்தியாவில் கபடிவாலா (கந்தல் ஆண்கள்). குப்பை மலைகள் வழியாக அவர்கள் ஊர்ந்து செல்கிறார்கள்; நாம் கழிவென எறியும் பொருளின் மதிப்பைக் கண்டறிகிறார்கள். உலக அசமத்துவம் ஒருபுறம் அளவுக்கதிகமாக செல்வத்தின் வழி மிகை நுகர்வையும் எல்லையற்ற கழிவுகளையும் ஏற்படுத்தியுள்ளது. மறுபுறம் கழிவுகளை நம்பிச் சீவிக்கும் மக்கள் கூட்டத்தையும் உருவாக்கியுள்ளது.

மறுசுழற்சி செய்வது அவசியமானதும் பயனுள்ளதும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. உதாரணமாக, ஒரு அலுமினியத்தை மறுசுழற்சி செய்வதற்கு தோராயமாக 92 சதவீதம் குறைவான ஆற்றல் தேவைப்படுகிறது. கன்னி உலோகத்திலிருந்து ஒன்றை தயாரிப்பதை விட 90 சதவீதம் குறைவான கார்பனை இது வெளியிடுகிறது. சேமிக்கப்படும் ஒவ்வொரு டன் அலுமினியத்திற்கும், எட்டு டன் மதிப்புள்ள பாக்சைட் தாதுவை வெட்டி எடுக்காமல் தவிர்க்க முடிகிறது. ஒரு டன் எஃகு மறுசுழற்சி செய்வதற்கு, அதை புதியதாக உருவாக்குவதற்கு தேவைப்படும் சக்தியின் காற்பங்கே அவசியமாகிறது. இது அதனுடன் தொடர்புடைய காற்று மாசுபாட்டை 86 சதவீதம் குறைக்கிறது. அத்தோடு சுமார் 3.6 பீப்பாய்கள் எண்ணெய்யைச் சேமிக்கிறது. மறுசுழற்சி செய்யப்பட்ட கண்ணாடியை உற்பத்தி செய்ய 30 சதவீதம் குறைவான சக்தியே தேவைப்படுகிறது. மறுசுழற்சி குறைந்த நீர் மற்றும் காற்று மாசுபாட்டை உருவாக்குகிறது. இது குப்பையின் அளவைக் குறைக்கிறது. அவ்வகையில் அது முக்கியமானது.



Image source - phys.org

பிரச்சனை யாதெனில் உலோகக் கழிவுகள் போன்றதல்ல ஏனைய கழிவுகள். பிளாஸ்டிக் தனியே கழிவுகளாக மட்டும் முடிவடைவதில்லை; அவை கழிவுகளாகத் தொடங்குகின்றன. எத்திலீன், பென்சீன், ஃபீனால், ப்ரோப்பிலீன், அக்ரிலோனிட்ரைல் போன்ற பல பிளாஸ்டிக்கின் வேதியியல் கட்டுமானத் தொகுதிகள், புதைபடிவ எரிபொருள் உற்பத்தியில் உருவாக்கப்பட்ட இயற்கையான கழிவுப் பொருட்கள் ஆகும். 1920 கள் மற்றும் 1930 கள் வரை அவை வழக்கமாக எரிக்கப்பட்டன அல்லது வளிமண்டலத்தில் வெளியிடப்பட்டன. காலப்போக்கில் தொழில் முனைவோரும் எண்ணெய் மற்றும் நிலக்கரித் துறைசார் அறிவியலாளர்களும் இணைந்து அவற்றை பாலிமர்களாக திடப்படுத்துவதற்கான வழிகளைக் கண்டுபிடித்தனர்.

இரண்டாம் உலகப் போர் பிளாஸ்டிக் புரட்சியை ஏற்படுத்தியது. பாராசூட்டுகள், விமான உதிரிப்பாகங்கள், ரேடார்கள், போர்வீரரின் பூட்ஸ் சப்பாத்துகள், துப்பாக்கிகள், போரியல் உபகரணங்கள் - அனைத்தும் ஆய்வகங்களில் இருந்து புதிய பொருட்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்டன. 1939 மற்றும் 1945 இற்கு இடையில், உலகளாவிய பிளாஸ்டிக் உற்பத்தி கிட்டத்தட்ட நான்கு மடங்கு அதிகரித்தது. விரைவில், அதே பொருட்கள் பல - நைலான், பெர்ஸ்பெக்ஸ், பாலிஎதிலின் - வீடுகளுக்குள் வெள்ளம் போல் புகுந்தன.

குறைபாடுகளைக் கொண்டிருந்தாலும் பிளாஸ்டிக்குகள் ஒரு அற்புதமான வகைப் பொருட்கள் என்பது உணரப்பட்டது. மலிவான, ஈயக்கூடிய, இலகுரக, நீடித்த, கிட்டத்தட்ட எந்த வடிவத்தையும் அல்லது நிறத்தையும் எடுக்கும் திறன் கொண்டவையாக அவை இருந்தன. திடீரென்று, எமது அன்றாட வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் நீக்கமற நிறைந்ததாக பிளாஸ்டிக் மாறியுள்ளது. புதிய பிளாஸ்டிக் துறையில் லாபம் என்பது, உள்ளார்ந்த நிலைத்தன்மையுடன் உயர்தரத் தயாரிப்புகளை உருவாக்குவதில் அல்ல, மாறாக அதற்கு நேர்மாறாக 'ஒற்றைப் பயன்பாட்டில்' (single use) உள்ளது என்பதை உணர்ந்து கொண்டதுதான் இன்றைய நெருக்கடிக்கும் அதன் பெயரால் உருவாக்கப்பட்டுள்ள கட்டுக்கதைக்கும் காரணம்.

பானைகள், பாத்திரங்கள், தட்டுகள் என உற்பத்தியாளர்கள் விரைவில் கிட்டத்தட்ட அனைத்தையும் ஒருமுறை பயன்படுத்திய பின் தூக்கியெறியும் (use and throw) பிளாஸ்டிக் பொருட்களாக உருவாக்கினர். இதனால் குப்பைக் கிடங்குகள் மற்றும் எரியூட்டிகள் விரைவில் பிளாஸ்டிக் போத்தல்கள், பிளாஸ்டிக் குடங்கள், பிளாஸ்டிக் குழாய்கள், பிளாஸ்டிக் பைகள் மற்றும் பிளாஸ்டிக்கில் உருவான காகிதாதிகள் ஆகியவற்றால் நிரம்பி வழிகின்றன. பிளாஸ்டிக்கை அசாதாரணமானதாக மாற்றும் குணாதிசயங்களே அவற்றைச் சிக்கலான கழிவுகளாக்குகின்றன. அவற்றின் மூலக்கூறுகளை ஒன்றாக இணைக்கும் கோவலன்ட் பிணைப்புகள் பிடிவாதமாக நிலைத்து நீடித்திருக்கும். உயிருள்ள எதுவும் அவற்றை மக்கச் செய்வதில்லை; எனவே அவை சிதைவதில்லை.

பிளாஸ்டிக்குகள், புற ஊதாக் கதிர்வீச்சினால், தனிமங்களால் அல்லது சக்தியால் உடைக்கப்படும்போது, அவை பிரியும் அளவுக்குச் சிதைவதில்லை; அவற்றின் சங்கிலி போன்ற கட்டமைப்புகள் சிறிய சிறிய துண்டுகளாகப் பிரிகின்றன. மேக்ரோபிளாஸ்டிக்ஸ், மைக்ரோபிளாஸ்டிக்ஸ் ஆகிப் பின்னர் நானோபிளாஸ்டிக் ஆகிறது. அவை நம் இரத்த ஓட்டங்கள், மூளை, பிறக்காத குழந்தைகளின்




Image source - www.researchgate.net

நஞ்சுக்கொடி ஆகியவற்றில் நுழையும் அளவுக்குச் சிறியதாக இருக்கும். நமது உடலில் இந்தப் பொருட்களின் தாக்கங்களை மனிதகுலம் இப்போதுதான் புரிந்து கொள்ளத்

தொடங்கியுள்ளது. இது தருகின்ற கெட்ட செய்தி யாதெனில்; யாரும் நலமுடன் இருக்க வாய்ப்பில்லை.

நல்ல செய்தி என்னவென்றால், சில பிளாஸ்டிக்குகள் இப்போது மறுசுழற்சி செய்யக்கூடியவை; அதற்கான தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்துள்ளது. ஆனால் எல்லாப் பிளாஸ்டிக்கும் மறுசுழற்சிக்கு உரியவையல்ல. உலகளாவிய பிளாஸ்டிக் கழிவுகளில் 9% மட்டுமே மீள்சுழற்சிக்கு உள்ளாகிறது. இன்றைய தேவை தனியே மீள்சுழற்சி அல்ல. நுகர்வு குறைய வேண்டும். குறைவான அளவில் மக்கள் பொருட்களை வாங்க வேண்டும். வாங்கிய பொருட்களை மீளப் பயன்படுத்த வேண்டும். அவற்றைச் செய்யாமல் மீள்சுழற்சியைக் காரணங்காட்டி நுகர்வை ஊக்குவிப்பது தீர்வல்ல. ஆனால் நுகர்வே சந்தைக்கு அவசியம். எனவே மீள்சுழற்சியே கழிவுப் பிரச்சனைக்குத் தீர்வு என்ற கட்டுக்கதை பரப்பப்படுகிறது. இதன்மூலம் கட்டற்ற நுகர்வால் பிரச்சனைகள் எதுவுமில்லை; ஏனெனில் அனைத்தும் மீள்சுழற்சிக்கு உள்ளாக்கக் கூடியவை; இவை பசுமைக்குப் பாதகமானவையல்ல என்ற கருத்துருவாக்கம் உருவாக்கப்பட்டுள்ளது. இது தந்திரமானது; இலாபநோக்கத்திற்காக பசுமையைக் காவு வாங்குவது.

**உலகளவில் 20 மில்லியன் மக்கள் கழிவுகளைச் சேகரிப்பவர்களாகவும், பிரித்தெடுப்பவர்களாகவும் வாழ்கின்றனர். அவர்களது வாழ்வாதாரம் இவ்வாறான கழிவுகளிலேயே தங்கியிருக்கிறது.**

## நிறைவுக் குறிப்பு

பசுமை என்பதன் பெயரால் இன்று சந்தைச் சக்திகள் செய்கின்ற விடயங்கள் இரண்டு விளைவுகளை ஏற்படுத்துகின்றன. முதலாவது மக்களை ஏமாற்றுவதனூடு பல்கிப்பெருகிய இலாபத்தை தொடர்ச்சியாகப் பெறுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இரண்டாவது பசுமையின் பெயரால் நடைபெறும் செயற்பாடுகள் குறிப்பிடத்தக்களவு பயனைத் தராத, தரவியலாத வகைகளிலேயே பசுமையைப் பேணும் செயல்கள் திட்டமிடப்பட்டுள்ளன. பசுமையின் பெயரால் பூவுலகைக் காப்பது என்ற பிம்பம் ஊதிப் பெருப்பிக்கப்பட்டுள்ளது. இது எவ்வாறு சாத்தியமானது, இன்றும் எவ்வாறு அது நிலைபெற்றுள்ளது போன்ற வினாக்கள் ஆழமான பார்வையை வேண்டுவன. குறிப்பாக பொருளாதார நெருக்கடியில் அல்லலுறும் இலங்கை போன்ற நாடுகள் இந்த மாயப் பிம்பத்துக்கு இலகுவில் பலியாகின்றன. இவை குறித்தும் அடுத்த கட்டுரையில் நோக்கலாம்.

### அடிக்குறிப்புகள்

1. 1958 இற்கும் 2008 இற்கும் இடைப்பட்ட காலத்தில் கரிம மற்றும் கரிமமல்லாத பயிர்கள், உணவுகள் பற்றி மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் வழி வெளியான 162 ஆய்வுக் கட்டுரைகளை மையமாக வைத்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது சில முக்கியமான முடிவுகளை வெளியிட்டது. விட்டமின் சி, கரோட்டின் மற்றும் கால்சியம் உட்பட 15 இற்கும் மேற்பட்ட வெவ்வேறு ஊட்டச்சத்துக்களின் உள்ளடக்கத்தில் இரண்டுக்குமிடையில் வேறுபாடுகள் இருந்ததற்கான எந்தவொரு ஆதாரமும் இல்லை. இருப்பினும் வேறு சில வேறுபாடுகள் இருந்தன. வழக்கமான பயிர்கள் அதிக நைட்ரஜன் அளவைக் கொண்டிருந்தன; அதே சமயம் கரிமப் பயிர்கள் அதிக பாஸ்பரஸ் மற்றும் அமிலத்தன்மையைக் கொண்டிருந்தன. இவை எதுவுமே ஊட்டச்சத்து தரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. இறைச்சி, பால், முட்டை போன்ற கால்நடைப் பொருட்கள் மீதான இதேபோன்ற ஆய்வுகளைப் பகுப்பாய்வு செய்தபோது ஊட்டச்சத்து உள்ளடக்கத்தில் சில வேறுபாடுகள் கண்டறியப்பட்டன. கரிம உணவுகளில் ஒட்டுமொத்த கொழுப்புகள், குறிப்பாக டிரான்ஸ் கொழுப்புகள் (எண்ணெய் திண்மக் கொழுப்பாதல்) அதிக அளவில் உள்ளன. இதன்படி உண்மையில் கரிம கால்நடை உணவுகள் நமக்கு மோசமானவை. மேலதிக தகவல்களுக்கு பார்க்க: Dangour et al. (2010). Nutritionrelated health effects of organic foods: a systematic review. The American Journal of Clinical Nutrition. 92(1): 203210.

2. Fillion, L. and Arazi, S. (2002). Does organic food taste better? A claim substantiation approach, Nutrition & Food Science. 32(4): 153157.

3. https://thehumaneleague.org/article/meatindustrydeforestationcop26

4. https://www.nationalgeographic.com/environment/article/microplasticsfoundneareverestspeakhighesteverdetectedworldperpetualplanet

5. https://www.nationalgeographic.com/science/article/plasticbagmarianatrenchpollutionsciencespd

(தொடரும். )

கனடா, பெல்ஜியம், சோவியத் ஒன்றியம், சுவிற்சர்லாந்து, இந்தியா, ஸ்பானியா (Spain) ஆகிய ஆறு நாடுகளின் சமஷ்டி அரசியல் முறைமைகளைப் பற்றி ஆழமான ஆய்வுகளாக இக்கட்டுரைத்தொடர் அமைகிறது. மேற்குறித்த நாடுகளின் அரசியல் வரலாறும், அரசியல் யாப்பு வரலாறும், போருக்கு பிந்திய இலங்கையின் அரசியல் தீர்வு முயற்சிகளுக்கு வழிகாட்டியாக அமையும், அரசியல் பாடங்களை (polit ical lessons) கற்றுக்கொள்வதற்கு உதவுவனவாக 'சமஷ்டி அரசியல் முறைமைகள்' என்ற இத்தொடர் அமைகின்றது. இக்கட்டுரைத்தொடர் அரசியல் கோட்பாடுகள் (Political theories) அரசியல் யாப்பு தத்துவங்கள் (constitutional principles) என்பன சார்ந்த விடயங்களை குவிமையப்படுத்தும் உரையாடலை தொடக்கிவைப்பதாக அமைகிறது. தமிழ் சமூகவெளியில் (social space) சமஷ்டி முறைதொடர்பான ஆரோக்கியமான ஒரு விவாதம் இக்கட்டுரைத்தொடரின் பெறுபேறாக அமையும்.

*ஆங்கில மூலம் : றேக்கா சாக்சன*

கந்தையா சண்முகலிங்கம்



# இந்தியாவின் சமஷ்டி மாதிரி

**பகுதி 1.2**

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த 'இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்' என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

'நவீன அரசியல் சிந்தனை', 'கருத்தியல் எனும் பனிமூட்டம்', 'இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்' ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.




இந்தியாவின் மாநிலங்கள்

Image source - populationmatters.org

சமஷ்டி, பாராளுமன்ற முறை என்ற இரண்டும் இந்திய அரசியல் முறைமையின் அடிப்படையான கூறுகளாகும். ஒன்றுக்கொன்று முரண்பாடான இத் தத்துவங்களில் பாராளுமன்ற முறை (PARLIAMENTARISM ), பாராளுமன்றத்தின் அதியுயர் அதிகாரத்தை வலியுறுத்துவது. சமஷ்டி (FEDERALISM), அரசியல் அதிகாரம் பரவலாக்கப்படுவதை முதன்மைப்படுத்துவது. இவ்வாறாக மத்தியப்படுத்திய பாராளுமன்ற அதிகாரமும் அதிகாரப் பரவலாக்கமும் என்ற இரண்டு கூறுகளும் ஒன்றிணைந்து இருத்தல் இந்தியாவிற்கு அவசியத் தேவையாக இருந்தது. இந்தியாவின் பிரமாண்டமான

பரப்பளவு, அதன் பிராந்திய பன்மைத்துவம் (REGIONAL DIVERSITY) என்பன இப் பண்பைத் தேவைப்படுத்தின. 1947 இல் இந்தியாபாகிஸ்தான் பிரிவினைக்குப் பின்பும் கூட இத்தேவை இருந்து வந்துள்ளது.

இந்தியா, கனடா, அவுஸ்திரேலியா என்ற மூன்று நாடுகளும் சமஷ்டி முறையை ஏற்றுக் கொண்டதோடு பிரித்தானியாவின் பாராளுமன்ற முறையையும் அரசியல் யாப்பில் ஏற்று உள்வாங்கிக் கொண்டன. பொதுநலவாயத்தின் வரலாற்றில் முதன்முதலாக சமஷ்டி, பாராளுமன்ற முறை என்ற இரண்டையும் இணைத்துக் கொண்ட மூன்று நாடுகள் இவை எனலாம். இந்திய சமஷ்டியும், கனடாவின் சமஷ்டியும் பலமான மத்தியைக் கொண்ட (STRONG CENTER) அதிகாரமுடைய நிறுவனமாக பாராளுமன்றத்தைக் கொண்டிருந்தன. இந்நாடுகள் வெஸ்ட்மினிஸ்டர் முறைக்கு (WEST MINSTER SYSTEM) நன்கு பழக்கப்பட்டிருந்தமையால் இந்தவகையான சமஷ்டி முறையை (கலப்பு முறையை) ஏற்பதற்கான தூண்டுதல் இருந்தது. கனடாவும், இந்தியாவும் சமஷ்டி முறையை ஏற்ற போதும் சமஷ்டி முறை எமக்குத் தேவைதான் ஆனால் முழுமையாக அது தூய சமஷ்டியாக இருக்க வேண்டியதில்லை என்று கருதின எனலாம் (FEDERAL IS NECESSARY BUT NOT NECESSARILY FEDERAL). சமஷ்டி எண்ணக்கருவை இவ்விரு நாடுகளும் மிகுந்த முன்யோசனையுடன் ஏற்றுக் கொண்டன. கனடாவிலும், இந்தியாவிலும் பண்பாட்டு வேற்றுமைகளும் பிராந்திய வேறுபாடுகளும் மிகுதியாக இருந்தமையால் சமஷ்டி பொருத்தமானதொரு முறை என அவை முடிவு செய்தன. அவுஸ்திரேலியாவில் பண்பாட்டு வேறுபாடுகள் முக்கியம் பெற்றிருக்கவில்லை. ஆனால் அதன் புவியியல், ஒரு கண்டம் என்ற அளவுக்குப் பரந்ததாக இருந்தமையால் அங்கு பிராந்திய அடிப்படையிலான அடையாளங்கள் வளர்ச்சியுற்றிருந்தன. அவுஸ்திரேலியாவும், பிராந்திய அடையாளங்களுக்கு ஏற்புடைமை அளித்துச் சமஷ்டி முறையைத் தழுவிக் கொண்டது.

## தேசிய ஐக்கியம்

கனடாவிலும், இந்தியாவிலும் பண்பாட்டு வேறுபாடுகள் மிகுதியாகக் காணப்பட்டதால் தேசிய ஐக்கியத்தை (NATIONAL UNITY) பேணுதல் வேண்டுமென்ற ஆதங்கம் இருந்து வந்தது. இக்காரணத்தால் இவ்விரு நாடுகளும் அதிகாரப் பலம் மிக்க மத்திய அரசையுடைய சமஷ்டி முறையை உருவாக்கின. அவுஸ்திரேலியாவிற்கு இத்தேவை இருக்கவில்லை. இந்தியாவில் பாக்கிஷ்தான் பிரிவினையால் எழுந்த அவலநிலை, பலம் பொருந்திய மத்தியின் தேவையை உணர்த்தி நின்றது. சுதந்திரம் அடைந்த பின்னர் சமஷ்டிச் சட்டகத்திற்குள், திட்டமிடப்பட்ட பொருளாதார வளர்ச்சி (PLANNED ECONOMIC DEVELOPMENT) என்னும் தந்திரோபாயத்தைக் கையாள வேண்டுமென இந்தியாவின் தேசியவாத உயர் குழாம் (NATIONAL IST ELITE) விருப்பம் கொண்டிருந்தது.

## 1935 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பு

இந்தியாவில் பிரித்தானியர் ஆட்சி பலமான மத்தியைக் கொண்ட மத்தியப்படுத்தப்பட்ட நிர்வாக முறையாக (CENTRALISED ADMINISTRATIVE SYSTEM ) இருந்து வந்தது. இத்தகைய முறைக்குள் சமஷ்டி ஒழுங்கமைப்பைப் புகுத்தும் முயற்சி 1935 இல் மேற்கொள்ளப்பட்டது. இந்திய அரசியல் சட்டம் 1935 (THE GOVERNMENT OF INDIA ACT 1935 ) என்ற அரசியல் யாப்புச் சட்டம் இதனைத் தொடக்கி வைத்தது. ஆயினும் இந்தியாவின் சமஸ்தானங்கள் இச்சமஷ்டி ஒழுங்கில் இணைந்து கொள்ளச் சம்மதம் தெரிவிப்பதில் தயக்கம் காட்டின. இதனால் 1935 அரசியல் யாப்பின் படி பிரித்தானியாவின் நேரடி ஆட்சிக்குட்பட்டிருந்த மாகாணங்கள் (PROVINCES) மட்டுமே இணைந்தன. அம் மாகாணங்களில் அதிகாரப் பரவலாக்கத்துடன் கூடிய மாகாண அரசுகள் உருவாக்கப்பட்டன. 1935 சட்டம், மாகாண அரசுகளை இயங்க வைத்தது. அதேவேளை அதன் மத்தி (மாநில அரசுகளின் பிரதிநிதித்துவத்தைக் கொண்ட மத்திய அரசு) செயற்பாடு உடையதாக இருக்கவில்லை. அது பின்போடப்பட்டது. இருந்த போதும் 1950 ஆம் ஆண்டில் சுதந்திர இந்தியா, பாராளுமன்ற முறையிலான மத்தியமயப்படுத்தப்பட்ட அரசியல் யாப்பு முறையை உருவாக்கிக் கொள்வதற்கு 1935 அரசியல் யாப்புச் சட்டம் அடித்தளம் இட்டிருந்தது. சுதந்திர இந்தியாவில் இருநிலையிலும் இயங்கும் அரசாங்கங்கள் (TWO LEVELS OF GOVERNMENT) செயற்பாட்டிற்கு வந்தன. அவற்றிற்கிடையிலான அதிகாரங்களை எல்லை வகுத்துக் கூறும் மூன்று அட்டவணைகள் (THREE LISTS) அரசியல் யாப்பில் சேர்க்கப்பட்டன. இந்த மூன்று அட்டவணைகளும் முறையே;

1. மத்திய அரசின் நியாயாதிக்கம் (FEDERAL JURISDICTION),

2. மாநிலங்களின் நியாயாதிக்கம் ( PROVINCIAL JURISDICTION),

3. ஒருங்கிணை நியாயாதிக்கம் (CONCURRENT JURISDICTION)

என்பனவற்றை வகுத்துரைத்தன. புதிய அரசியல் யாப்பு பல திருத்தங்களையும் சேர்த்துக் கொண்டது.

## மொழிவழி மாநிலங்கள்

இந்தியா சுதந்திரமடைந்த பின்னர் இனத்துவ - மொழிவழிக் கோரிக்கைகள் (ETHNICLINGUISTIC DEMANDS) அதிகரித்தன; தீவிரம் பெற்றன. இந்தியாவின் தேசியத் தலைமை,



**ஜவகர்லால் நேரு**

Image source - timesofindia.indiatimes.com

பிராந்தியங்களிலிருந்து வந்த கோரிக்கைகளுக்குச் செவிசாய்த்து நடவடிக்கை எடுக்க முன்வந்தது. ஆயினும் தொடக்கத்தில் ஒருமொழி மாநிலக் கோரிக்கைகள் (UNILINGUAL STATES) நிராகரிக்கப்பட்டன. பன்மொழி மாநிலங்கள் முறையே தொடர வேண்டும் என்று கருதப்பட்டது. அம் முறையே தேசிய ஒருமைப்பாட்டிற்கு உதவும் எனவும் நோக்கப்பட்டது. 1935 இல் மாநில அரசுகள் மறு ஒழுங்கமைப்பு ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. இதன் விசாரணை அறிக்கை 1955 இல் வெளியாயிற்று. அவ்வறிக்கையிலும் பன்மொழி மாநிலங்கள் முறையே தொடர வேண்டும் என்றும், அவசியமேற்பட்டால் அல்லாது மொழிவழி மாநிலங்கள் கோரிக்கைகளுக்கு இடமளித்தல் கூடாது எனக் கூறப்பட்டது.

1950 களில் தென்னிந்தியாவில் மொழிவழி மாநிலங்கள் அமைக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து மேற்கு இந்தியாவிலும், வட இந்தியாவிலும் 1960 களில் மாநிலங்களின் மறுசீரமைப்பு இடம்பெற்றது. 1970 களில் வடகிழக்கு இந்திய மாநிலங்கள் மறுசீரமைக்கப்பட்டன. (இக்கட்டுரையை எழுதும் வேளையில்) புதிய மாநிலங்களின் உருவாக்கம் பற்றிய கோரிக்கைகள் பரிசீலனையில் இருந்தன (உதாரணம்: தெலுங்கானா - ஆந்திர மாநிலம், விதர்ப்பா - மகாராஷ்டிரா). உத்தரப் பிரதேசத்தில் உத்தராஞ்சல் மாநிலமும், பிகாரில் ஜார்கன்ட் மாநிலமும், மத்தியப் பிரதேசத்தில் சதிஸ்கார் மாநிலமும் 2000 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் உருவாக்கப்பட்டுவிட்டன. இந்தியாவின் எல்லைகள் இனிவரும் காலங்களில் எவ்வாறெல்லாம் மாறப்போகின்றன என்பது உறுதியாகக் கூறமுடியாத விடயம்.

## சமஷ்டிக் கட்டமைப்பு

இந்தியாவின் சமஷ்டிக் கட்டமைப்பு (FEDERAL STRUCTURE) பற்றி அடுத்து நோக்குவோம். அரசியல் யாப்பு, பாராளுமன்ற முறையிலான சமஷ்டி முறையை உருவாக்கியது. பாராளுமன்ற முறையில் நிறைவேற்று அதிகாரம் (EXECUTIVE POWER) தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட சட்டசபையிடம் (LEGISLATURE) பொறுப்பளிக்கப்பட்டிருக்கும். இந்திய ஒன்றியத்தின் (UNION) பாராளுமன்றம் லோக்சபா, ராஜ்யசபா என இரு சபைகளைக் கொண்டது. லோக்சபா உறுப்பினர்கள் நேரடியாக வாக்காளர்களால் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படுவர். ராஜ்யசபா என்னும் இரண்டாவது சபை (FEDERAL SECOND CHAMBER) நேரடியாக அல்லாத முறையில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டமைவது. மாநில சட்டசபைகளின் உறுப்பினர்களும் ராஜ்யசபா உறுப்பினர்களின் தேர்தலில் வாக்காளர்களாகப் பங்கேற்பர். மாநிலங்கள் சிலவற்றில் இருசபைகள் உள்ளன. வேறு சில மாநிலங்கள் ஒருசபை (UNICAMERAL) மட்டும் உடையனவாக உள்ளன.

## ஜனாதிபதியும் ஆளுநர்களும்

இந்திய சமஷ்டி அரசின் தலைவராக ஜனாதிபதி விளங்குகின்றார். ஜனாதிபதியை, தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களும் மற்றும் ராஜ்யசபா, மாநில சட்டசபைகள் என்பனவற்றின் உறுப்பினர்களும் தெரிவு செய்வர். மாநிலங்களின் ஆளுநர்கள் ஒன்றிய அரசின் நிறைவேற்றுத் துறையால் (UNION EXECUTIVE) நியமிக்கப்படுவர். ஜனாதிபதியும், மாநிலங்களின் ஆளுநர்களும் பெயரளவுத் தலைவர்கள் (NOMINAL HEADS), சடங்கியல் தன்மையுடைய கடமைகளைச் செய்பவர்கள் எனவும் கருதப்படுவர். ஆயினும் இத் தலைவர்களுக்கு தற்துணிவு அதிகாரத்தை உபயோகிக்கும் சில சந்தர்ப்பங்களும் எழுவதுண்டு. குறிப்பாகத் தேர்தல் முடிந்த பின்னர், அதிலும் பெரும்பான்மையுடைய ஒரு கட்சி இல்லாதவிடத்து, அல்லது பல கட்சிகள் சேர்ந்த கூட்டு ஆட்சியமைக்க முன்வரும் பொழுது, பிரதமரை அல்லது முதலமைச்சரை நியமிக்கும் தற்துணிவு அதிகாரம் பிரயோகிக்கப்படுதல் கூடும். ஒன்றிய அரசின் பிரதமரும் அவரது அமைச்சரவையும், மாநில அரசுகளின் முதலமைச்சர்களும், அவர்களது அமைச்சரவைகளும் இந்தியாவின் உண்மையான நிறைவேற்று அதிகாரம் (REAL EXECUTIVE AUTHORI TIES) உடையனவாய்; ஒன்றியம், மாநிலங்கள் என்ற இரு நிலைகளிலும் செயற்படுகின்றன.

## நீதித்துறை

இந்திய சமஷ்டி அமைப்பின் நீதித்துறை (FEDERAL JUDICIARY) படித்தர அமைப்புடைய ஒன்றிணைந்த பொது அமைப்பாக விளங்குகின்றது. நீதிபதிகளை ஒன்றிய நிறைவேற்றுத்துறை நியமனம் செய்கிறது. நீதிபதிகளின் பதவி நீக்க நடைமுறை பற்றி அரசியல் யாப்பின் உறுப்புரை 124 (2), 124 (4) என்பன விளக்கிக் கூறியுள்ளன. பாராளுமன்றத்தின் இருசபைகளிலும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் படி ஜனாதிபதி பதவி நீக்கத்தைச் செய்வார். இத் தீர்மானங்கள் இருசபைகளிலும் தனித்தனியாக சமூகமளித்த உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டிருத்தல் வேண்டும்.

### அகில இந்திய சேவைகள்

இந்தியாவின் சமஷ்டி முறையின் தனித்துவமான இயல்புகளில் அகில இந்திய சேவைகள் (ALL INDIA SERVICES) முக்கியம் வாய்ந்ததொன்றாகும். இப்போது அங்கு மூன்று சேவைகள் செயற்பாட்டில் உள்ளன.

**1. இந்திய நிர்வாக சேவை (IAS)**

**2. இந்திய பொலிஸ் சேவை (IPS)**

**3. இந்திய வனத்துறைச் சேவை (IFS)**

இவற்றை விட மத்திய சேவைகள், மாநில அரசுச் சேவைகள் ஆகியனவும் உள்ளன. ஒன்றிய பொதுச் சேவை ஆணைக்குழுவினால் (UPSC) அகில இந்திய சேவை உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்படுவர். இச் சுதந்திர அமைப்பு உத்தியோக ஒன்றிய அரசு கல்விக் கழகங்களில் (ACADEMIES) பயிற்சி வழங்குகிறது. பின்னர் உத்தியோகத்தர்களுக்கும் மாநில அரசுப் பதவிகளில் வேலையின் ஊடான பயிற்சி வழங்கப்படுகிறது. இவ்வாறு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு பயிற்றுவிக்கப்பட்டோருக்கு மாநில அரசுகளில் நீண்டகாலம் பணியாற்ற இடமளிக்கப்படுகிறது. இடையிடையே அவ் உத்தியோகத்தர்கள் மத்திய அரசுக்கும் பணிக்காக விடுவிக்கப்படுவர்.

சமஷ்டி முறையின் முக்கியமான சேவைகளில் ஒன்று இந்தியத் தேர்தல் ஆணைக்குழு (உறுப்புரை 324) ஆகும். இவ் ஆணைக்குழு ஒன்றிய அரசின் தேர்தல்களையும், மாநில அரசுகளின் தேர்தல்களையும் நடத்தும் பொறுப்புடையது. கணக்காய்வு கட்டுப்பாட்டாளரும், கணக்காய்வு நாயகமும் (COMPTROLLER AND AUDITOR GENERAL OF INDIA ) (உறுப்புரை 148 ) ஒன்றிய அரசினதும், மாநில அரசுகளதும் கணக்குகளைக் கணக்காய்வு செய்பவராய் விளங்குகின்றார். இதனை விட ஒன்றிய நிதி ஆணைக்குழு (FINANCE COMMISSION ) ( உறுப்புரை 280 ) என்றொரு அமைப்பு உள்ளது. இது 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை நியமனம் செய்யப்படும். இவ் ஆணைக்குழு, கிடைக்கும் நிதி வருவாயை ஒன்றிய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் பங்கீடு செய்தல் பற்றிய தத்துவங்களையும் நடைமுறைகளையும் இந்திய அரசியல் யாப்பு ஏற்பாடுகளுக்கு அமைவாகச் செய்யும்.

### அடுக்கு அரசாங்கம்

இந்திய அரசியல் முறைமையின் மூன்றாம் அடுக்கு அரசாங்க நிறுவனங்களாக கிராம, நகர மட்ட உள்ளூராட்சி அமைப்புக்கள் விளங்குகின்றன. நகர மட்டத்தில் முனிசிப்பல் சபைகளும் கிராம மட்டத்தில் பஞ்சாயத்துப் போன்ற அமைப்புக்களும் இயங்குகின்றன. உள்ளூராட்சி, மாநில அரசுகளின் நியாயாதிக்கத்திற்கு உட்பட்ட

அமைப்புக்களாகும். 1992 இல் கொண்வரப்பட்ட அரசியல் யாப்பு திருத்தச் சட்டங்கள் 73,74 என்பன அந் நிறுவனங்களுக்கு அரசியல் யாப்புச் சட்ட அந்தஸ்தை வழங்கின. இத் திருத்தங்களின் படி மாநில அரசினால் உள்ளூராட்சி நிறுவனங்களிற்கும் பகிர்ந்தளிக்கக் கூடிய அதிகாரங்கள் விபரித்துக் கூறப்பட்டுள்ளன.

## அரசுகளுக்கிடையிலான உறவுகள்


இந்திய சமஷ்டி முறையில் ஒன்றிய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இடையே உறவுகளை (INTERGOVERN MENTAL RELATIONS) பேணுவதற்குரிய நிறுவன அமைப்புக்கள் உள்ளன. இவ் நிறுவன அமைப்புகள் ஒரு மாநிலத்திற்கும் பிற மாநிலங்களுக்கும் இடையிலான உறவுகளை (INTRA GOVERNMENTAL) பேணிவளர்க்கவும் உதவுகின்றன.

1. 1990 ஆம் ஆண்டின் உறுப்புரை 263 இன் படி INTER STATE COUNCIL (ISN) என்னும் அமைப்பு இயங்குகிறது.

2. 1952 இல் அமைச்சரவைத் தீர்மானத்தின் படி உருவாக்கப்பட்ட NATIONAL DEVELOPMENT COUNCIL (NDC) இயங்கி வருகிறது. இது ஐந்து ஆண்டுத் திட்டங்களைத் தயாரித்து நிறைவேற்றி வருகிறது.

3. ஒன்றிய அரசு மட்டத்திலும், மாநில அரசுகள் மட்டத்திலும் பணியாற்றும் பிரதம மந்திரி ஒன்றிய அரசின் முக்கிய அமைச்சர்கள், முதலமைச்சர்கள், அவர்களது செயலாளர்கள் ஒன்றியப் பிரதேசங்களின் நிர்வாகத் தலைவர்கள் ஆகியோர் ஒன்றுகூடிக் கலந்து பேசும் மாநாடுகள் (CONFERENCES) காலத்திற்கு காலம் இடம்பெறுகின்றன.

மேற்குறித்த நிறுவன அமைப்புக்கள் பொதுவான விடயங்கள் குறித்த பேரம் பேசல்கள், கொள்கைகளின் சமரசமான இணக்கம், நிறைவேற்றுதலில் (அமுலாக்கம்) ஒருங்கிணைப்பு என்பனவற்றைச் சாத்தியமாக்கியுள்ளன. மேலே குறித்த அரசுகளிற்கிடையிலான உறவுகள் (IN TERGOVERNMENTAL RELATIONS), நிறுவனங்களின் சிறப்பியல்பு ஒன்றைக் குறிப்பிடுதல் அவசியம். இந்த சந்திப்பு அரங்குகளில் (Forums) Inter State Council (ISC) மட்டும் அரசியல் யாப்பின் படி (உறுப்புரை 263) உருவாக்கப்பட்டதாகும். ஏனையவை அரசியல் யாப்பினால் அல்லது சட்டங்களால் உருவாக்கப்பட்டவை அல்ல. அவை நிறைவேற்றுத்துறையின் தீர்மானங்களால் அல்லது முன்முனைவுகளால் உருவாக்கப்பட்டவை. அவற்றின் செயற்பாட்டில் முறைசாராத் தன்மையும் (Informality) உள்ளன. ISC உட்பட்ட இந்த அமைப்புகளின் கூட்டங்களின் முடிவுகள் கருத்தொருமையின்படியும், தவிசாளரின் தீர்மானப்படியும் நிறைவேற்றப்படுகின்றன.



B.R அம்பேத்கர்

Image source - openthemagazine.com

## அவசரகால ஏற்பாடுகள்

இந்திய அரசியல் யாப்பின் முக்கியமான இயல்புகளில் ஒன்று அதில் காணப்படும் அவரசரகால ஏற்பாடுகள் (Emergency Provisions) ஆகும். அரசியல் யாப்பின் படி மூன்று வகையான அவசரகால நிலைகள் தோன்றுவதற்கு இடம் உள்ளது. அரசியல் யாப்பினை வரைந்த குழுவின் தலைவரான டாக்டர் B.R அம்பேத்கர் அரசியல் யாப்பு அவையில் (Constituent Assembly) பேசும்போது இது பற்றிக் குறிப்பிட்டார். இந்தியாவின் சமஷ்டி அரசியல் முறைமையை இம் மூவகை அவசர காலநிலைமைகளும் ஒற்றையாட்சி அல்லது பாராளுமன்ற முறையின் தன்மைக்கு மாற்றிவிடுகின்றன என அம்பேத்கார் குறிப்பிட்டார். அரசியல் யாப்பு எதிர்பார்க்கும் மூன்று அவசரகால நிலைகளாவன;

- அந்நிய ஆக்கிரமிப்பினால் அல்லது உள்நாட்டுக் கிளர்ச்சியால் அல்லது இரண்டும்

*ஒன்று சேர்ந்து விடும் நிலை காரணமாக எழும் அவசர காலநிலை (உறுப்புரை 352),*

- *அரசியல் யாப்பு இயந்திரம் (அதன் நிறுவனங்கள்) செயலிழந்து போவதால் எழும் அவசரகாலநிலை (உறுப்புரை 356),*

- *ஒன்றியமோ அல்லது மாநிலமோ நிதி நெருக்கடியால் செயலிழத்தல். அதனால் எழும் அவசரகால நிலை (உறுப்புரை 360).*

*இவ்வாறான மூன்று சந்தர்ப்பங்களிலும் யூனியன் அரசு அரசாங்கம் ஒன்றை பதவி நீக்கலாம் அல்லது மாநில சட்ட சபையைக் கலைக்கலாம் அல்லது மாநில அரசு ஒன்றின் அதிகாரங்களைக் கையேற்கலாம். தேவையேற்படின் ஒரு மாநில அரசாங்கத்தைக் கலைக்காமல் அதனைப் பதவியில் இருக்கவிட்டு அதிகாரங்களை ஒன்றிய அரசு எடுத்துக்கொள்ளலாம். இதனாலேயே அவசரகாலநிலையில், இந்தியா ஒற்றையாட்சி நாடாக மாறிவிடுகிறது அல்லது பாராளுமன்ற முறை அரசாங்கத்தின் தன்மையைப் பெற்றுவிடுகிறது என B.R அம்பேத்கர் குறிப்பிட்டார்.*

## இந்திய அரசியல் அமைப்பின் அசமத்துவப் பண்புகள்

*இந்தியாவின் சமஷ்டியை அசமத்துவ சமஷ்டி (Asymmetrical Federalism) என்று அழைப்பர். இவ்வாறு அசமத்துவம் - சமத்துவம் இன்மை (Asymmetry) மாநில அரசுகளிற்கிடையே இருப்பதால் அசமத்துவ சமஷ்டி என அது அடைமொழி சேர்த்து அழைக்கப்படுகிறது. இந்தியா என்னும் பன்மைத்துவ தேசத்திற்கு (Multicultural Nation) அச்சம் தரும் பிசாசு போன்றும், பாதுகாப்பை வழங்கும் மீட்பர் போன்றும் அசமத்துவம் விளங்குவது அதன் புதிர் நிறைந்த நகை முரண் ஆகும்.*

*அசமத்துவம் என்றால் நடைமுறையில் அதன் பொருள் யாது? ஒரு பிரதேசம் அல்லது மாநிலம் அல்லது இந்திய அரசின் ஒரு அலகு, மற்ற அலகுகளை விட தனித்துவமான அரசியல் யாப்பு அந்தஸ்தைப் பெறுவதே அசமத்துவம் எனப்படும். இந்திய சமஷ்டியில் நான்கு வகையான அசமத்துவங்கள் காணப்படுகின்றன.*

*முதலாவது அசமத்துவத்திற்கு சிறந்த உதாரணம், இந்திய மாநிலங்கள் ராஜ்யசபாவில் பெறும் பிரதிநிதித்துவத்தில் காணப்படும் வேறுபாடு ஆகும். சனத்தொகையில் பெரிய மாநிலமான உத்தரப்பிரதேசத்திலிருந்து 31 உறுப்பினர்கள் ராஜ்யசபையில் பிரதிநிதிகளாக உள்ளனர். ஆனால் வட கிழக்கு மாநிலங்களான மேகாலயா, மிசோராம், மணிப்பூர் என்பனவும் புதுச்சேரி, கோவா என்பனவும் ராஜ்யசபாவில் ஒரேயொரு உறுப்பினர் பிரதிநிதித்துவத்தை உடையனவாக உள்ளன. ஐக்கிய அமெரிக்காவில் அச் சமஷ்டியில் இணைந்திருக்கும் அரசுகளுக்கிடையே இத்தகைய வேறுபாடு கிடையாது. ஐக்கிய அமெரிக்கா போன்ற நிலையை வெளிப்படையான சமத்துவம் (Formal Equality) எனலாம். இந்திய சமஷ்டியின் உறுப்புரை 4 (1), 80 (2) என்பனவற்றை அரசியல் யாப்பின் 4 ஆவது அட்டவணையுடன் சேர்த்து வாசிக்கும்பொழுது இந்தவகை அசமத்துவம் அரசியல் யாப்பினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.*

*இரண்டாவது வகை அசமத்துவம் சில மாநிலங்களின் நிர்வாகத்தோடு தொடர்புடைய விசேட பிரச்சினைகளோடு சம்மந்தமுடையவை. இவ்வகை அசமத்துவமும் மூன்றாகப் பிரித்து நோக்கத்தக்கது.*

*அ. பழங்குடிகள் வாழும் பிரதேசங்கள் பற்றியவை.*

*ஆ. குறித்த மாநிலங்களுக்கு உள்ளே உள்ள பிராந்திய வேறுபாடுகள் (Intra Regional Disparities) தொடர்பானவை.*

*இ. மகாராஷ்டிரா, குஜராத், அசாம், மணிப்பூர், ஆந்திரப் பிரதேசம், சிக்கிம், அருணாசலப் பிரதேசம், கோவா ஆகிய மாநில அரசுகளின் சட்டமன்றங்களின் (State Assemblies) ஆசனங்களைத் தீர்மானித்தல், அம் மாநிலங்களின் சட்டமும் ஒழுங்கும் பிரச்சினைகள் தொடர்பானவை.*

*உதாரணமாக மகாராஷ்டிரா அல்லது குஜராத் ஆளுநர் தமது மாநிலங்களின் பின்தங்கிய பகுதிகளின் வளர்ச்சிக்காகத் தனியான அபிவிருத்திச் சபைகளை (Separate development boards) அமைக்க வேண்டும் என்றும், அவற்றுக்கு நீதியான முறையில் அபிவிருத்திக்கான நிதிகளை ஒதுக்க வேண்டும் என்றும் உறுப்புரை 371 கூறுகிறது. மேலும் அப் பகுதிகளின் தொழில்நுட்பக் கல்வி நிலையங்களை அமைக்க வேண்டும்; தொழில்நுட்பக் கல்வி, தொழிற்பயிற்சி வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் இவ்வுறுப்புரை கூறுகிறது. 371 ஆம் உறுப்புரையில், மகாராஷ்டிரா, குஜராத் ஆளுநர்களுக்குரிய 'விசேட பொறுப்பு' (Special Responsibility) இதுவெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*மணிப்பூர் போன்ற*

மாநிலங்களில் பழங்குடி மலைப் பிரதேசவாசிகளின் நலன்களைக் கவனிப்பதற்கான, தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட சட்டமன்றக் குழுவை உருவாக்குவதற்கு *371* உறுப்புரையின் *B, C* பிரிவுகளின்படி இந்திய ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஆந்திரப் பிரதேசத்தின் பல்வேறு பிராந்தியங்கள் பின்தங்கிய பகுதிகளாகும். இப் பின்தங்கிய பகுதிகளின் மக்களுக்கு அரசாங்கத்துறையில் தொழில் வழங்குதல், கல்வி தொடர்பாக நியாயமான சந்தர்ப்பங்களும் வசதிகளும்' (*Equitable Opportunities and Facilities*) என்பன உறுப்புரை *371 F* மற்றும் *I* என்பனவற்றால் உறுதிசெய்யப்பட்டுள்ளது. அத்தோடு ஆந்திராவின் பின்தங்கிய பகுதிகளின் வளர்ச்சிக்காக மத்திய பல்கலைக்கழகம் ஒன்று நிறுவப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிக்கிம், கோவா போன்ற சிறிய மாநிலங்களின் சட்டசபைகளின் உறுப்பினர் எண்ணிக்கை ஆகக் குறைந்தது முப்பது உறுப்பினர்களுக்கு குறையாதவாறு இருக்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது (உறுப்புரை *371 F,I*). இவ்வுறுப்புரை 'சமாதானம் தொடர்பான விசேட பொறுப்பையும், பல்வேறு மக்கட் பிரிவினரதும் சமூக, பொருளாதார, முன்னேற்றத்தை உறுதிப்படுத்தும் ஒழுங்குகளைச் செய்வதையும்' மாநிலத்தின் ஆளுநரது பொறுப்பாகக் குறிப்பிடுகின்றது.

அருணாசலப் பிரதேசத்தின் 'சட்டமும் ஒழுங்கும் தொடர்பான விசேட பொறுப்பு' ஜனாதிபதிக்குரியதென உறுப்புரை *371 H* குறிப்பிடுகிறது. அவ்விடயத்தில் ஜனாதிபதி மந்திரி சபையைக் கலந்தாலோசித்து தமது 'சொந்தத் தீர்ப்பின்படி' (*Individual Judgement*) செயற்படுவதற்கும் இவ்வுறுப்புரை அதிகாரமளித்துள்ளது.

இந்திய சமஷ்டியில் காணப்படும் மூன்றாவது அசமத்துவம் ஒன்றியப் பிரதேசங்கள் அல்லது யூனியன் பிரதேசங்கள் (*Union Territories*) சம்மந்தப்பட்டதாகும். ஒன்றியப் பிரதேசங்கள் மத்தியின் ஆட்சியின் கீழ் உள்ள பிரதேசங்களாகும். எல்லாமாக ஏழு ஒன்றியப் பிரதேசங்கள் (*U.T*) உள்ளன. இவை வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு தேவைகளுக்காக உருவாக்கப்பட்டவை. இவை தனி மாநிலங்களாக




**இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்கள்**

Image source - www.quora.com

ஆக்கப்படுவதற்குப் போதுமான அளவு புவி இடப்பரப்பைக் கொண்டிருக்கவில்லை. இவற்றின் பண்பாட்டுத் தனித்துவம் காரணமாக, அருகிலுள்ள மாநிலங்களுடன் இணைக்கவும் முடியவில்லை.

மாநிலங்களுக்கிடையே நிலவிய சர்ச்சைகள், டெல்லி என்னும் தேசியத் தலைநகரத்திற்கு தேவைப்பட்ட விசேட தேவைகள், கரையோரப் பகுதிகளில் தனிமைப்படுத்தப்பட்ட புவியியல் அமைவிடம் போன்ற வெவ்வேறு காரணிகள் ஒன்றியப் பிரதேசங்களை உருவாக்குவதில் பங்குகொண்டன.

ஆரம்பத்தில் இப் பிரதேசங்கள் ஒன்றிய அரசினால் நியமிக்கப்பட்ட நிர்வாகியால் நேரடியாக ஒன்றிய அரசினால் நிர்வகிக்கப்பட்டன. இவை ஒன்றிற்கேனும் சட்டசபை கிடையாது. இவை பாராளுமன்றத்தின் கீழ்ச்சபையில் ஆகக் குறைந்தது ஒரு உறுப்பினரால் பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றன.


உறுப்புரை *241 (1)* மற்றும் *(4)* இன் படி, அயல் மாநிலம் ஒன்றின் நியாயாதிக்கத்தை விரிவாக்கி

உள்ளடக்குவதன் வழி அல்லது தனியாக ஓர் உயர்நீதிமன்றத்தை உருவாக்குவதன் வழி பாராளுமன்றம் நீதி நிர்வாக ஒழுங்கை மேற்கொள்ளலாம்.

புதுச்சேரி, டெல்லி என்ற புதுவகையான மாநிலங்கள் பின்னர் உருவாக்கப்பட்டன. 1962 இன் 14 ஆவது திருத்தச்சட்டப்படி புதுச்சேரி உருவாக்கப்பட்டது. 1991 இன் 69 ஆவது திருத்தச் சட்டத்தின்படி டெல்லி ஒன்றியப் பிரதேசம் உருவாக்கப்பட்டது. இவை இரண்டும் இரண்டாவது சபை என்று ஒன்று இல்லாத ஒரு சபையை உடைய (Unicameral) சட்ட சபைகளாக உருவாக்கப்பட்டன. இச் சட்டபை உறுப்பினர்கள் மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்படுகின்றனர். புதுச்சேரி சட்டசபையின் உறுப்பினர்களில் சிலர் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள். வேறுசில உறுப்பினர்கள் நியமனம் செய்யப்படுபவர்கள். புதுச்சேரியிலும் டெல்லியிலும் மந்திரிசபைகள் உள்ளன. இவை சட்டசபைக்கு பொறுப்புக்கூற வேண்டியன. இவ்விரு ஒன்றியப் பிரதேசங்களினதும் அரசுத் தலைவர், மத்திய அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட துணை ஆளுநர் ஆவர். அரசாங்கத்தின் முறைசார் நிறைவேற்றுச் செயற்பாடுகளை துணை ஆளுநர் நிறைவேற்றுவார். டெல்லியின் முதலமைச்சர் துணை ஆளுநரின் விதப்புரையின்படி ஜனாதிபதியால் நியமிக்கப்படுவார். டெல்லி தேசியத் தலைநகராக இருப்பதால் முதலமைச்சர் நியமனம் ஜனாதிபதியால் செய்யப்படுவதாக கருதலாம். டெல்லி சட்டசபை ஒருங்கிணை நியாயாதிக்கத்தை (Concurrent Jurisdiction) மட்டும் உடையது. அது இயற்றும் சட்டங்கள் இந்தியப் பாராளுமன்றம் இயற்றும் சட்டங்களுடன் முரண்படுமிடத்து பாராளுமன்றம் இயற்றிய சட்டமே செல்லுபடியாகும். புதுச்சேரி, லோக் சபாவிலும் ராஜ்ய சபாவிலும் ஒவ்வோர் உறுப்பினரால் பிரதிநிதித்துவம் செய்யப்படுகிறது. டெல்லி, லோக் சபாவில் ஏழு உறுப்பினர்களையும், ராஜ்ய சபாவில் மூன்று உறுப்பினர்களையும் பிரதிநிதித்துவம் செய்கிறது.

டெல்லி ஒரு மாநிலம் என்றே அழைக்கப்பட்டு வருகிறது. ஆயினும் அதற்கு காணி, பொலிஸ், சிவில் சேவை என்பன போன்ற முக்கிய விடயங்களில் அதிகாரங்கள் இல்லை. அவை மத்திய அரசால் கையாளப்படுகின்றன. ஏனைய விடயங்களில் டெல்லி அரசாங்கம் ஒருங்கிணை நியாயாதிக்கத்தையே கொண்டுள்ளது. இதனால் அதனை முழுநிறைவான மாநிலமாக அல்லாது பாதி மாநிலமாகவே கருதவேண்டும். ஆகையால் டெல்லிக்கு மாநில அந்தஸ்து (Statehood) வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை நீண்டகாலமாக இருந்துவருகிறது. புதுச்சேரி மாநில அரசு காணி, பொலிஸ், சிவில் சேவைகள் என்பன தொடர்பான நியாயாதிக்கம் உடையதாக இருந்து வருகிறது.

ஜம்மு காஷ்மீர், நாகலாந்து, மிசோரம் ஆகிய மாநிலங்கள் தொடர்பான அசமத்துவம், இந்திய சமஷ்டியின் நான்காவது அசமத்துவம் எனலாம்



நாகாலாந்து மாநிலம்

Image source - www.mapsofindia.com

(உறுப்புரை 370, 371 A, 371 G). இவற்றுள் ஜம்மு காஷ்மீர் ஆகக்கூடிய அசமத்துவம் கொண்ட பகுதியாக இருந்து வந்துள்ளது (அண்மையில் ஜம்மு காஷ்மீர் இரண்டாகப் பிரிக்கப்பட்டுவிட்டது - மொர்).

இந்தியாவின் அரசியல் யாப்பின் உறுப்புரை 370 'தற்காலிக ஏற்பாடுகள்' (Temporary Provisions) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்திய பாராளுமன்றத்தில் சட்டவாக்க அதிகாரங்கள் 'இணக்க சாதனத்தில் குறிப்பிட்ட விடயங்களுடன் பொருந்துவனவாக இருத்தல் வேண்டும்' ('Corre spond to Matters Specified in the instrument of accession') என்று குறிப்பிடுகிறது. வேறெந்த விடயமும் 'மாநில அரசாங்கத்தின் இசைவுடன் கூடியதாக இருத்தல் வேண்டும்' (With the concurrence of the government of the state) எனவும் குறிப்பிடப்படுகிறது.

இவ்விடத்தில் 1947 ஆம் ஆண்டு பிரித்தானியப் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட இந்திய சுதந்திரச் சட்டத்தின் (Independence of India Act 1947)

அரசியல் பின்னணியை நோக்குதல் பொருத்தமானது. இச்சட்டத்தைப் பிரித்தானியப் பாராளுமன்றம் இயற்றியபோது ஜம்மு காஷ்மீர் என்ற முடியாட்சி அரசு பிரித்தானிய அரசாங்கத்தின் ஆதிக்கத்தில் இருந்து விடுவிக்கப்பட்டு, சுதந்திர நாடாக இருக்க விரும்பினால் அவ்வாறே செய்யலாம் என்றும், விரும்பினால் இந்தியாவுடனோ பாகிஷ்தானுடனோா இணைந்துகொள்ளலாம் என்றும் கூறப்பட்டது என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளலாம். முஸ்லீம்களை பெரும்பான்மையினராகக் கொண்ட ஜம்மு காஷ்மீரின் அரசராக இந்து சமயத்தவரான ஹரி சிங் (*Hindu Maharaja Hari Singh*) இருந்தார். மகராஜா ஹரிசிங் தனக்கிருந்த இருதெரிவுகளில், முதலாவது தெரிவான இந்தியாவுடன் இணைவதற்கு விரும்பினார். ஆனால் அவ்வாறு முடிவுசெய்தால் பாகிஷ்தான் இராணுவம் படையெடுத்து ஆக்கிரமிப்புச் செய்யும் என்ற அச்சம் காரணமாக இந்தியாவிடம் இராணுவ உதவி கேட்டார். அப்போது இந்தியாவின் ஆளுநராக மௌன்ட் பேட்டன் பிரபு (*Lord Mountbatten*) தொடர்ந்து இருந்தார். அவர் இந்தியா அந்நிய நாடு ஒன்றிற்கு தனது படைகளை அனுப்ப முடியாது என அபிப்பிராயம் தெரிவித்தார் (*Opined that India could not send its troops to a foreign State*). அதன் பின்னர் மகராஜா ஹரிசிங் இந்தியாவின் இராணுவத் தலையீட்டிற்கு வழிதிறக்க வேண்டும் எனக் கருதி இந்தியாவுடன் ஜம்மு காஷ்மீரை இணைக்கும், இணக்கம் எய்தல் சாதனத்தை (*Instrument of Accession to India*) கையெழுத்திட்டு வழங்கினார். இதன்படி, இந்தியா தனது இராணுவத்தை அனுப்பித் தலையீடு செய்வதற்கு வழி ஏற்படுத்தப்பட்டது. ஆயினும் இந்தியா தனது இராணுவத்தை அனுப்பி ஜம்மு காஷ்மீர் முழுவதையும் கைப்பற்றுவதற்கு முன்பே பாகிஷ்தானின் ஊடுருவல் படைகள் ஒரு பகுதியை ஆக்கிரமித்துவிட்டன. அவ்வேளை ஐக்கிய நாடுகள் தாபனம் (*UNO*) தலையிட்டு யுத்த நிறுத்தத்தைக் கொண்டுவந்தது.

மேற்குறிப்பிட்ட அரசியல் வரலாற்றுப் பின்புலம், ஜம்மு காஷ்மீர் அரசுக்கு இந்திய ஒன்றியத்தின் அரசியல் யாப்பில் சிறப்பு அந்தஸ்தை (*Special Status*) வழங்கியமைக்கான காரணத்தை விளக்குவதாக உள்ளது. இணக்கம் எய்தல் சாதனம் கைச்சாத்திடப்பட்ட காலம் முதல் காஷ்மீர் இந்திய ஒன்றியத்துடன் ஒரு மாநிலமாக இணைத்துக்கொள்ளப்பட்டது.

## நாகாலாந்து, மிசோராம்

நாகாலாந்து, மிசோராம் ஆகிய மாநிலங்களிற்கும் மேற்கூறியவை போன்ற விசேட ஏற்பாடுகள் உள்ளன. இந்தியப் பாராளுமன்றத்தால் இயற்றப்படும் நியதிச் சட்டங்கள் சிலவற்றிற்கு நாகாலாந்து, மிசோராம் ஆகிய மாநிலங்களின் இணக்கம் தேவை என உறுப்புரை 371A,E கூறுகிறது. இணக்கம் தேவைப்படும் சட்டங்கள் பின்வருவன.

அ. மிசோ, நாகர் ஆகிய இரு மக்களதும் சமயநடைமுறைகள், சமூக நடைமுறைகள் தொடர்பான சட்டங்கள்.

ஆ. மிசோ, நாகர் மக்களின் வழமைச் சட்டங்கள் அவர்களின் குற்றவியல் நடைமுறை என்பனவற்றோடு தொடர்புடைய சட்டங்கள்.

இ. மிசோ, நாகர் மக்களின் சிவில், குற்றவியல், நீதி, நிர்வாக நடைமுறைகளுடன் தொடர்புடைய சட்டங்கள்.

ஈ. இந்த இரு மாநிலங்களதும் நில வளங்களின் (*Land Resources*) உடைமை மாற்றம் என்பன தொடர்பான சட்டங்கள்.

நாகலாந்தின் மாநில சட்டசபை 46 இற்குக் குறையாத உறுப்பினர்களையும், மிசோராம் மாநில சட்டசபை 40 இற்குக் குறையாத உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும் என்றும் மேற்குறித்த உறுப்புரையில் குறிப்பிட்டுள்ளது. நாகலாந்து ஆளுநருக்கு உறுப்புரை 371A, விசேட பொறுப்பு ஒன்றையும் குறிப்பிட்டுள்ளது. நாகலாந்து அமைக்கப்படுவதற்கு முன்னர் நாகமலைகளின் டெங்சாங் பகுதியில் 'உள்நாட்டுக் குழப்பம்' நிலவியது. அது தொடர்ந்து கொண்டிருக்கும் வரை சட்டத்தையும் ஒழுங்கையும் பேணும் விசேட பொறுப்பு அம் மாநிலத்தின் ஆளுநருக்கு உள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நியாயாதிக்க எல்லைகள்

மத்திய அரசாங்கத்தின் நியாயாதிக்க எல்லைகளையும், மாநில அரசுகளின் நியாயாதிக்க எல்லைகளையும் வகுத்துரைக்கும் மூன்று அட்டவனைகள் அரசியல் யாப்புச் சட்டத்தில் உள்ளன. இவை மூன்றும் முறையே;

அ. ஒன்றியப் பட்டியல் (*Union List*),

ஆ. மாநிலப் பட்டியல் (*State List*),

இ. ஒருங்கிணைப்பு பட்டியல் (*Concurrent List*)

என அழைக்கப்படும். இவ் எல்லை வகுத்தலும் பிரிப்பும்; I. பொருத்தமுடமை (*Subsidiarity*), II. ஒருங்கிணை தன்மை (*Concurrency*) என்றும் இரண்டு தத்துவங்களின் படி வகுக்கப்பட்டன. குறிப்பிட்ட ஒரு விடயத்தை எந்த மட்டத்திலுள்ள அரசாங்கம்

சிறப்பாகவும், பயனுறுதி வாய்ந்ததாகவும் செய்யக்கூடியதாக உள்ளதோ, அந்த விடயத்தை குறித்த மட்டத்தில் உள்ள அரசாங்கத்திடம் ஒப்படைத்தலை பொருத்தமுடைமை என்ற கருத்து விளக்குவதாக உள்ளது. தெளிவற்றவையாக இருந்த கருகலான விடயங்கள் இருவகை அரசாங்கங்களுக்கும் உரியனவாக ஒதுக்கப்பட்டன. அவை தொடர்பாக முரண்பாடுகள் ஏற்படுமிடத்து மாநிலச் சட்டங்களுக்குப் பதில் மத்திய பாராளுமன்றச் சட்டங்கள் செல்லுபடியாகும். ஒருங்கிணைவு (Concurrence) என்னும் கருத்து இவ்விதமே விளங்கிக்கொள்ளப்படுகிறது.

- மத்திய அரசாங்கப் பட்டியலில் 97 விடயங்களும் (Items),
- மாநில அரசாங்கப் பட்டியலில் 66 விடயங்களும்,
- ஒருங்கிணை பட்டியலில் 47 விடயங்களும்

சேர்த்துக்கொள்ளப்பட்டன. 1950 - 2001 காலப்பகுதியில் 50 ஆண்டுகளில் மாநில அரசாங்கப் பட்டியலில் இருந்து ஒன்றிய அரசாங்கப் பட்டியலுக்கும், ஒருங்கிணை பட்டியலுக்கும் 27 விடயங்கள் மாற்றப்பட்டன. இம் மாற்றங்கள் அரசியல் யாப்பு சட்டத்திருத்தங்கள் மூலம் செய்யப்பட்டன. இத் திருத்தச் சட்டங்களின் விளைவாக மத்திய பட்டியலில் 9, மாநிலப் பட்டியலில் II, ஒருங்கிணை பட்டியலில் 7 என மூன்று பட்டியல்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டன.

மத்திய பட்டியலில் செய்யப்பட்ட ஒன்பது மாற்றங்களில் 4 மாற்றங்கள் மத்தியின் அதிகாரங்களை விரிவாக்கின. அதன் நிறைவேற்று அதிகாரங்கள் அதிகரித்தன. பண்பாட்டுத்துறை அதிகாரங்களும் விரிவாக்கம் பெற்றன. மாநிலங்களின் அரசுகளைக் கட்டாயப்படுத்தும் பலாத்கார அதிகாரங்களும் (Coercive Powers) அதிகரித்தன. உதாரணமாக 1956 ஆம் ஆண்டின் 6 ஆவது திருத்தம் மத்திய பட்டியலில் ஒரு புதிய வரியைச் சேர்த்தது. இது மாநிலங்களுக்கு இடையிலான வர்த்தகத்தில் பொருட்களின் கொள்வனவு, விற்பனை தொடர்பான வரி அறவிடுதலை மத்திய அரசு எடுத்துக்கொண்டது தொடர்பானது.

ஒருங்கிணை பட்டியல் (Concurrent list) ஒரு விடயத்தையேனும் இழக்கவில்லை. அந்தப் பட்டியலின் விடயங்களின் எண்ணிக்கை அதிகரித்தது. உதாரணமாக 1976 ஆம் ஆண்டின் 42 ஆவது திருத்தம் நான்கு புதிய விடயங்களை ஒருங்கிணை பட்டியலில் சேர்த்தது.

1. மாநிலம் ஒன்றின் நீதிநிர்வாகமும் (Administra tion of Justice) கீழ் நீதிமன்றங்களும்.
2. வனப் பரிபாலனம்.
3. கல்வி.
4. மக்கள் தொகைக் கட்டுப்பாடும் குடும்பத்திட்டமிடலும்.

27 மாற்றங்களில், நேரு ஆட்சிக் காலத்தில் 13 மாற்றங்களும், 14 மாற்றங்கள் இந்திராகாந்தி ஆட்சி, அதற்குப் பிந்திய கூட்டுக்கட்சிகளின் அரசாங்க ஆட்சி என்பனவற்றிலும் நிறைவேற்றப்பட்டன.

அரசியல் யாப்பின் 7 ஆவது அட்டவணை மத்திய பட்டியலிலும் மாநிலப் பட்டியலிலும் வரிவிதிக்கும் அதிகாரங்களைச் சேர்த்துள்ளது. மத்திய அரசாங்கத்திற்கு ஒதுக்கப்பட்ட வரி மூலங்கள் நெகிழ்திறனுள்ள இறைவரி மூலங்களாகும் (Elastic Sources of Revenue). மாநில அரசுகளுக்கு ஒதுக்கப்பட்டவை, இத் தன்மையில்லாதவையாகவும் அபிவிருத்தி விரிவாக்க வேலைகளுடன் தொடர்புடையவையாகவும் இருந்தன. இதனால் வரி வருமானம் அறவிடுதலில் ஒரு சமநிலையின்மை (Imbalance) இருந்துவந்தது. மிகவும் நெகிழ்வுடைய வரி மூலங்களான வருமானவரி (Income Tax), கம்பனி வரி (Corporate Tax), மதுவரி, சுங்கவரி என்பன மத்திய அரசுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதை காணலாம். மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட வரிமூலங்கள், அவை மேற்கொள்ள வேண்டிய பல்வேறு அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கான பாரிய செலவுகளை ஈடுசெய்வதற்குப் போதியதாக இல்லை.

மத்திய பட்டியலில் உள்ள சில வரிகளின் வருமானம், பகுதியளவிலோ முழுமையாகவோ மாநிலங்களுக்கு ஒதுக்கப்படுகின்றன. மாநிலங்களின் தொழிற்பாடுகளுக்கும், அவற்றிற்கான வளங்களுக்குமிடையே காணப்படும் சமநிலையின்மையைக் குறைப்பதே இதன் நோக்கமாகும்.

உறுப்புரை 375, பொறுப்பாணை சார் மத்திய கொடைகளை (Mandatory Central GrantsIn Aids) மாநிலங்களுக்கு வழங்கும் ஏற்பாட்டைக் கொண்டுள்ளது. இக் கொடைகள் நிதி ஆணைக்குழுவின் (Finance Commission) சிபாரிசின்படி மத்திய அரசால் மாநிலங்களுக்கு வழங்கப்படுகின்றன. இவை மாநிலத்திற்கு

மாநிலம் வேறுபடுகின்றன. இவ் விடயங்கள் தொடர்பாக திட்டமிடல் ஆணைக்குழு (Planning Commission) இயங்கிவருகிறது. இவ் ஆணைக்குழு 1950 ஆண்டு நியதிச்சட்டத்தினால் நிறுவப்பட்டது.

## முடிவுரை

இந்தியாவின் விசேட தேவைகளையும் பிரச்சினைகளையும் கருத்திற்கொண்டு இந்திய அரசியல் யாப்புச் சட்டம் வரையப்பட்டது என்பதை மேற்கூறியவற்றால் தெரிந்துகொள்ள முடிகிறது. அது அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக செயற்பட்டுள்ளது. இக் காலத்தில் அது பெரும்பிரச்சினைகளை எதிர்நோக்கவில்லை. இந்தியக் குடியரசின் மாறிவரும் தேவைகளுக்கும் மட்டுப்பாடுகளுக்கும் ஏற்ப அரசியல் யாப்பு நெகிழ்ந்து கொடுத்தது. அது உறுதியுடையதாகவும் இருந்து வந்துள்ளது.




**மிசோரம் மாநிலம்**

Image source - www.mapsofindia.com

ஒருகட்சி ஆதிக்கம் செலுத்திய (காங்கிரஸ் காலம்) முதற்கட்டத்தில் மத்திய பாராளுமன்றம் அதிகாரம் மிக்கதாக விளங்கியது. அப்போது அது ஒற்றையாட்சியின் தன்மைகள் கூடிய அளவில் காணப்பட்ட சமஷ்டி அமைப்பாக விளங்கியது. 1989 இற்குப் பின்னர் இந்திய அரசியல் முறை கூட்டாட்சித் தன்மை உடையதாக ஆகியுள்ளது. இம் மாற்றத்திற்கு பலகட்சி முறையும் (Multi - Party System) பலகட்சிகள் சேர்ந்து ஆட்சி அமைக்கும் கூட்டரசாங்கங்களும் (Coalition Governments) உதவின. நாட்டின் நீதித்துறையும் கூட்டாட்சிச் சார்பான தீர்ப்புகளை வழங்கியது. 1991 இற்குப் பின்னர் நவதாராளவாதக் கொள்கைகள் (Neo - Liberal Economic Policy) பல சீர்திருத்தங்களைப் புகுத்தியது. இவை அரசாங்கத்தின் பொருளாதார ஆதிக்கத்தை தளர்த்தியதோடு அரச உடமையாக இருந்த தொழிலிலும் வர்த்தகமும் முக்கியத்துவம் இழந்து தனியார் துறை வேகமாக வளரவும் உதவியது. இக் காலத்தில் பொருளாதார முன்னேற்றம் காரணமாக மாநில அரசுகளின் சுயத்துவம் (Autonomy) அதிகரித்தது. மாநிலக் கட்சிகளின் ஆதிக்கம் மேலோங்கியதால் பிராந்தியங்களின் பன்மைத்துவமும் அடையாளமும் முக்கியத்துவம் பெற்றன. இதன் பயனாக மாநிலங்களின் முக்கியத்துவமும் பலமும் அதிகரித்தன. மாநிலங்களுக்கிடையிலான சமச்சீரின்மை அல்லது அசமத்துவமும் அதிகரித்தது. பன்மைத்துவத்திற்கு இடமளிக்கும் வகையில் அரசியல் யாப்பின் அசமத்துவ ஏற்பாடுகள் (Asymmetrical Provisions) இயைந்து கொடுத்தன. இம் மாற்றங்களின் விளைவாக இந்திய அரசியலின் சமூக உளவியல் அடிப்படைகள் பெரும்மாற்றத்திற்கு உட்பட்டன.

இந்தியச் சமஷ்டி மாதிரி நாட்டின் ஐக்கியத்தையும் அதன் பன்மைத்துவத்தையும் பாதுகாத்துப் பேணுவதாக அமைந்துள்ளது.

### றேக்கா சாக்சன

டெல்லி பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானத் துறையின் பேராசிரியராகப் பணிபுரியும் கலாநிதி றேக்கா சாக்சன அவர்கள் சமஷ்டி (Federalism) பற்றிய துறையில் நிபுணத்துவம் பெற்ற புலமையாளர். பல நூல்களின் ஆசிரியர். பருவ இதழ்களில் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதி வருபவர். கனடா நாட்டின் தலைநகர் ஒட்டாவாவில் அமைந்துள்ள 'சமஷ்டி ஆட்சி நாடுகள் மன்றம்' (Forum of Federations) என்ற அமைப்பின் ஆலோசகராகக் கடமையாற்றி வருபவர். 2004 ஆம் ஆண்டில் 'மாற்றுக் கொள்கைக்கான நிலையம்' (Centre for Policy Alternatives) மற்றும் 'சமஷ்டி ஆட்சி நாடுகளின் மன்றம்' என்பன இணைந்து வழங்கிய 'The Federal Idea' என்னும் கட்டுரை தொகுப்பில் இடம் பெற்ற 'The Indian Model of Federalism' என்ற தலைப்பிலான இவரது கட்டுரையின் தழுவலாக்கமாக இக் கட்டுரை அமைந்துள்ளது.

### குறிப்பு

கருத்துச் செறிவுடைய கூட்டுவாக்கியங்களாக அமைந்த ஆங்கில மொழிநடையில் எழுதப்பட்ட இக் கட்டுரை, இலகுபடுத்திய தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ளது. நேரடி மொழிபெயர்ப்பாக அல்லாமல் தழுவலாக்கமாக அமைந்துள்ளது.

நான்கு தசாப்தங்களுக்கு மேலாக வர்க்க அரசியலை மேவியதாக அடையாள அரசியல் மேலெழுந்து வந்துள்ளது. இனத்தேசியம் மதபேதம் என்பவற்றுக்கு அப்பால் சாதியுணர்வுடன் இணைந்த அடையாள அரசியல் முதன்மை இடம்பெற்றுள்ள இன்றைய சூழலில் எமது சமூக கட்டமைப்பில் வர்க்கமும் சாதியும் பின்னிப்பிணைந்துள்ளன எனும் விடயம் பேசுபொருளாகியுள்ளது. எமது சமூக உருவாக்கம் வர்க்க அடித்தளம் உடையதல்ல சாதிகளின் கட்டமைப்பு சார்ந்து இயங்கும் எமக்கான அரசியல் செல்நெறி வர்க்க அமைப்பின் வரலாற்றுச் செல்நெறிக்குரியதினின்றும் வேறுபட்டது என்ற விடயத்தினை தமிழர் வரலாற்றுத் தொடக்கமாக அமைந்த திணை வாழ்வியலை மையமாக கொண்டு ஆய்வு செய்வதாக ‘தமிழ்ப் பண்பாடு: ஊற்றுகளும் ஓட்டங்களும்’ என்ற இத்தொடர் அமைகிறது.




நடேசன் இரவீந்திரன்

# இந்து மதத்தின் உச்ச வடிவம்

இரவீந்திரன் அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி கலைப்பட்டதாரி. பேராதனைப் பல்கலைக்கழகத்திலேயே முதுகலைமாணிப்பட்டத்தினையும் ‘திருக்குறளின் கல்விச்சிந்தனை’ எனும் தலைப்பில் ஆய்வு மேற்கொண்டு முனைவர் பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் மலையகத்தின் சிறிபாத கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளதுடன் 1995இல் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியிலும் பணியாற்றியுள்ளார்.

இரவீந்திரன் 18இற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் ‘பாரதியின் மெய்ஞ்ஞானம்’, ‘இலங்கையின் சாதியமும் அவற்றிக்கெதிரான போராட்டங்களும்’, ‘பின்நவீனத்துவமும் அழகியலும்’, ‘கலாச்சாரம் எதிர் கலாச்சாரம் புதிய கலாச்சாரம்’, ‘இந்துத்துவமும் இந்து விடுதலை நெறியும்’, ‘சாதியமும் சமூக மாற்றங்களும்’, ‘இரட்டைத் தேசியமும் பண்பாட்டுப் புரட்சியும்’, ‘சாதி தேசம் பண்பாடு’ என்பன குறிப்பிடத்தக்கவை.



**இராமானுஜர் சிலை**

Image source - desamaedeivam.wordpress.com

*தமிழ்ப் பண்பாடு : ஊற்றுக்களும் ஓட்டங்களும்’ என்ற தேடலின் இரண்டாம் பகுதியான ‘சாதிய வாழ்வியல்’ தோற்றம் பெற்று வளர்ந்தவாறினைக் கடந்த எட்டு இயல்களில் கண்டு வந்துள்ளோம். ஏனைய சமூகங்களில் ஏற்றத்தாழ்வுச் சமூக முறைமை ஏற்பட்ட பின்னர் சாத்தியப்பட்டு இருந்த பண்பாட்டு விருத்தியைத் தமிழகம் அதனது வேறுபட்ட புவிச் சூழல்கள் (திணைகள்) வழங்கிய வாய்ப்பில் சமத்துவத்தை உள்ளும் புறமும் பேணியபடியே எட்ட இருந்த பிரத்தியேகக் குணாம்சங்களை முதல் பகுதியில் பேசியிருந்தோம். விவசாயப் பெருக்கத்தின் பேறாகப் பெரும்படை நடாத்தி ஏனைய திணைகளை மருதத் திணை வெற்றி கொண்டு மேலாதிக்கம் புரிந்த பின்னராக உள்வாங்கப்பட்ட சாதிய வாழ்வியல் பற்றியது நிறைவை எட்டி இருக்கும் இந்த இரண்டாம் பகுதி!*

*முதல் திணை மேலாதிக்கம் (இதனை ஐரோப்பியப் புரிதல் அடிப்படையில் ஏங்கல்ஸ், ‘முதல் வர்க்கப் பிளவு..’ என்பார்) பெண்கள் மீதான ஆண்கள் மேற்கொண்ட ஒடுக்குமுறை; மருதத் திணை மேலாதிக்கத்தின் சாத்தியப்பாட்டிலும் கொற்றவை பெற்றிருந்த முக்கியத்துவத்தைப் பறித்தெடுத்து அந்தத் தாய்த் தெய்வம் உள்ளிட்ட மூத்த தேவிகள் அனைவரையும், வேறுள தெய்வங்களையும் அடக்கி ஆளும் ஆண் தெய்வ மேலாதிக்கம் சிவன் எனும்*

பரம்பொருள் பற்றிய பேசுபொருளை மேற்கிளம்ப வழி கோலியது. கொற்றவை மைந்தன் எனக் கொண்டாடப்பட்ட முருகன் சிவனின் மகனாக வரிக்கப்பட்டார்; கொற்றவையும் பிராமண மதத்தின் உமையுடன் இணைக்கப்பட்டு மாதொரு பாகமாக சிவன் வெளிப்பட உதவும் துணை(வி)ப் பொருள் என மாற்றப்பட்டார். அனைத்தையும் வெற்றிகொண்டு அடக்கி மேலாண்மை பெற்ற ‘தென்னாடுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் இறை’ எனும் வகை மேலாதிக்கம் சோழப் பேரரசின் ஊடாக எட்டப்பட்டு இருந்தது!



கொற்றவை

Image source - ta.wikipedia.org

முன்னதாகத் திணைகளின் உள்ளேயும் திணைகள் இடையேயும் சமத்துவம் ஊடாடிய காலத்தில் இருந்து ஆசீவகக் கருத்தியலுக்கு உட்பட்ட வகையில் வழிபடப்பட்டு வந்த தாய்த் தெய்வ வழிபாடுகளுக்கு உரிய மூத்த தேவியான மூதேவியைத் தொடர்ந்தும் போற்றுவதாக அமைந்த சமூக உணர்வானது நிலப்பிரபுத்துவ எழுச்சி வலுப்பட்டு உச்ச நிலையெய்தி வந்த போது தரவிறக்கத்துக்கு உள்ளாகித் திட்டுதலுக்கு உரிய பொருளாக்கப்பட்டார் மூதேவி.

வணிக எழுச்சி நிலவிய ஆரம்ப காலத்திலும் வணிக மேலாதிக்கம் சாத்தியப்பட்டு இருந்த அறநெறிக் காலத்திலும் காகம் (கடல் பயணத்தில் தரையின் நெருக்கத்தை அறிய உதவியது), கழுதை (பொதி சுமந்த வாகனம்), ஆமை (கடல் பயணத்துக்கு உரிய நீரோட்ட வழித்தடத்தைக் காட்டுவது) எனும் உயிரினங்கள் வணிகத்துக்கு உதவின என்ற வகையில் தமிழர் சமூகத்தில் பெரு மதிப்பைப் பெற்றனவாக இருந்தன. நிலப்பிரபுத்துவ மேலாதிக்கம் வலுப்பட்டு வந்தபோது காகமும் கழுதையும் திட்டுதலுக்கு உரியனவாக ஆக்கப்பட்டன; ‘ஆமை புகுந்த வீடு உருப்படாது’ என ஆமையையும் கண்டிக்கும் நிலை தோன்றியது (ஆமையை விஷ்ணுவின் ஒரு அவதாரமாகப் பார்க்கும் வைணவத்துக்கும் தமிழர் வாழ்வியலில் அதியுயர் மேலாதிக்கம் பெற்ற சைவத்துக்கும் இடையே உள்ள முரணும் அவற்றிடையேயான இணக்கங்களும் கவனிப்புக்கு உரியன).

நீண்ட காலமாக மிகப் பெரும் மதிப்பைப் பெற்றிருந்தவை கால மாற்றத்துடன் தூற்றலுக்கு உரியனவாகத் திரிபுறக் காரணம் என்ன? ஆரியப் பிராமணர் மேலாதிக்கம் பெற்றுச் செய்த சதியின் விளைவாகத் தமிழர் மனப்பாங்கு கெடுக்கப்பட்டதான குற்றச்சாட்டுகள் இன்று முன்வைக்கப்படுவதனைக் காண்கிறோம். இத்தகைய உணர்வு மாற்றத்தில் பிராமணியத்துக்கு உரிய இடம் மறுக்கவிலாதது; அத்தகைய ‘பிராமணச் சதிக்கு’ தமிழர் பண்பாடு ஆட்பட்டது எதன் அடிப்படையில் என்ற தேடல் அவசியமானது!

பிராமணரே முன்முயற்சி எடுத்துப் பூர்வத் தமிழ்க் கருத்தியல் தளத்தைத் தகர்த்தவர்கள் அல்ல. வட இந்தியாவில் சாதிபேதம் ஏற்பட்ட மூன்று, நான்கு நூற்றாண்டுகளில் கூட சாதிப் பிளவுறாமல் ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்று வாழ்ந்த தமிழர் பண்பாட்டில் சாதிக்கொரு நீதி பேசிய மனு தர்மம் புகுந்துவிட இயலுமான சூழல் தமிழகத்தில் உள்ளியக்கத்தின் வாயிலாக ஏற்பட்ட பொருளுற்பத்தி விருத்தியின் விளைவாக நிழ்ந்தாக வேண்டிய, தவிர்க்க இயலாத மாற்றம். இயற்கை விளைபொருட்களான ஏலம், கறுவா (இலவங்கம் பட்டை), கராம்பு, மிளகு, முத்து, உப்பு என்பனவற்றை தமக்கிடையேயும் கடல் கடந்தும் வர்த்தகம் செய்த திணைகளுக்குள் கைத்தொழில் விருத்தியும் வலுத்து வந்த கிமு 6 முதல் கிமு 3 ஆம் நூற்றாண்டுகள் வரையான காலப் பரப்புக்கு உரியதாய் நிலவிய சமத்துவம் பலராலும் புரிந்து கொள்ளச் சிரமமானதாக உள்ளது. அந்தச் சமகாலத்தில் வட இந்தியாவில் விவசாய விருத்தி சாத்தியப்பட்டு, அதனை வாய்ப்பாக கொண்டு பிற நிலப் பரப்புகளை ஆக்கிரமிக்கும் சத்திரியரும் நிலவுடமையைப் பெற்ற பிராமணரும் அவ்விரு தரப்பாருக்கும் பண்டப் பரிவர்த்தனையை

மேற்கொண்ட வணிகரும் உடலுழைப்புக்கு மட்டுமானவர்களாக ஒடுக்கப்பட்டுச் சுரண்டப்படும் சூத்திரர்களும் எனச் சாதிய ஏற்றத்தாழ்வுக்கு உரிய வாழ்முறை வளர்ந்து வரலாயிற்று; மேலைத் தேசங்களான கிரேக்கத்திலும் ரோமிலும் வர்க்கப் பிளவடைந்த வாழ்முறை தோன்றி ஆண்டான் - அடிமைகள் கொண்ட வர்க்கச் சமூக வாழ்முறை உருப்பெற்றிருந்தது. திணைகள் இடையே கொண்டும் கொடுப்பதுமாக அமைந்த பண்டப் பரிமாற்ற முறைக்குரிய வர்த்தகம் மற்றும் கடல் கடந்த வாணிகப் பெருக்கம் சாத்தியப்படுத்தி இருந்த கைத்தொழில் விருத்தி என்பவற்றுடன் இணைந்து ஏற்பட்டு வந்த நகர்ப் பண்பாட்டு விருத்தியில் ஊடாடிய சமத்துவத்தைத் தகர்த்து கிமு 3 ஆம் நூற்றாண்டு முதல் ஏற்பட்டு வந்த மருதத் திணை மேலாதிக்கம் எமக்கான ஏற்றத்தாழ்வுச் சமூக முறைமையை தோற்றுவித்தது. இந்த 'முழுச் சமூக சக்தி' என்பதான மருதத் திணையின் மேலாதிக்கம் வாயிலாக உருப்பெற்ற சமூகப் படிநிலையாக்கம் மிகுந்த கவனிப்புக்கு உரியது!

இத்தகைய வரலாற்று இயக்கத்தினூடாக மேலாதிக்க வாய்ப்பைப் பெற்றவர்கள் அதனைக் கருத்தியல் ஆயுதத்தின் வாயிலாக நிலைநிறுத்தத் தாமாகவே பங்காளிகளாக்கி அரவணைத்த ஒரு சமூக சக்தியே பிராமணர்கள்; அவர்கள் அனைவரும் வடக்கில் இருந்து வந்தவர்களும் அல்ல - வந்தவர்களுடன் தமிழகத்தில் உருப்பெற்ற பிராமணக் கோத்திரங்களும் கைகோர்த்து இயங்கின என்பதனைப் பல ஆய்வுகள் வெளிப்படுத்தி உள்ளன. தம்மால் அரவணைக்கப்பட்டவர்கள் தமது மேலாதிக்கத்தை நியாயப்படுத்த ஏற்ற அதியுயர் பீடத்தில் உள்ளனர் என முழுச் சமூகத்துக்கும் எடுத்துக்காட்டும் வகையில் பிராமணர்களுக்கானதாகத் தாமே வழங்கிய அதீத ஆன்மீகப் புனிதம் தம்மிலும் மேலான இடத்தை அவர்களுக்கு வழங்கிவிட்டது என வரலாறு உணர்த்திய போது அவர்களினதை விடவும் மேலாதிக்கம் பெற்ற தத்துவமாகத் தமக்கே உரியதான சைவ சித்தாந்தத்தை வெளிப்படுத்திக் கொண்டனர் தமிழக மேலாதிக்கத்தைக் கையகப்படுத்திய வெள்ளாளர் எனும் சாதிப் பிரிவினர்.

## இராமானுஜரின் சைவ மேலாதிக்க எதிர்ப்பில் சாதிய மறுப்பு

வணிகக் கருத்தியலின் அடித்தளத்தில் சமத்துவக் குணாம்சங்கள் பலவற்றை உடையதானதாகக் கட்டமைக்கப்பட்டிருந்த தமிழ்ப் பண்பாட்டுத் தளத்தை மாற்றியமைத்து ஏற்றத்தாழ்வுச் சாதியக் கருத்தியலுக்கு இடமளிக்க வைக்க வேண்டியிருந்தது. அதன்பொருட்டு வடக்கில் இருந்து வந்த பிராமணர்களது சாதியக் கருத்தியலுக்கு தாம் வெளிப்படுத்திய பக்திப் பாசுரங்கள் வாயிலாக மிகை முக்கியத்துவம் கொடுத்துப் பரப்புரை செய்த வெள்ளாளர்கள் என்ற திணை பின்னர் பிராமணச் சமூக சக்தியுடன் முரண்பாட்டை வெளிப்படுத்திய போதிலும் அதனைச் சகோதர மோதலாகவே கையாண்டனர்.

பகை முரண்பாட்டுக்கு உரியனவாகிய பௌத்தம், சமணம் என்ற மதப் பிரிவுகள் முற்றாக வீழ்த்தப்பட்டு முழுமையான மேலாதிக்கத்தை நிலவுடமையாளர்களுக்கு உரியதான சைவநெறி பெற்றுக்கொண்ட பின்னர் கூர்மையான போராட்டங்களுக்கு இடமிருக்கவில்லை என்றில்லை; 'புறச் சமயங்கள்' எனப் பௌத்தமும் சமணமும் வீழ்த்தப்பட்ட பின்னர் வேத ஆகமங்களைப் பின்பற்றும் 'அகச் சமயங்கள்' எனப்பட்ட சைவத்துக்கும் வைணவத்துக்கும் இடையிலான முரண் மேலெழுந்து வரலாயிற்று. வேதத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்கிய வேதாந்தப் பிராமணர்கள் - ஆகமத்தைப் பின்பற்றிய சைவசித்தாந்த வெள்ளாளர்கள் எனும் சமூக சக்திகள் (திணைகள்) ஒரேவகையான பொருளுற்பத்தித் தளத்தின் மேலாதிக்கத்துக்கு உரியவர்கள் என்ற வகையில் அவர்களிடையேயான பிணக்கு நட்பு முரணுக்கு உரியதாக அமைந்திருந்தது. வணிக - நிலவுடமைச் சமூக சக்திகள் இடையேயான புற - அகச் சமயங்கள் என்பவற்றின் வாயிலாக வெளிப்பட்ட அதிகார மோதல் மற்றொரு வடிவத்துக்கு உரியது; இவ்விரு மதப் பிரிவுகளும் வேறுபட்ட பொருளுற்பத்தி உறவுகளைக் கட்டமைப்பன என்ற வகையில் பகை முரண்பாட்டுக்கு உரியதாக புற - அகச் சமயங்கள் இடையேயான மோதல் அமைவுபெற்று இயங்கின.

சைவநெறியின் முற்றுமுழுதான மேலாதிக்கம் உறுதிப்பட்ட (நிலப்பிரபுத்துவச் சமூக முறைமை வலுவாக வேரூன்றிவிட்ட) உச்ச நிலையாக சோழப் பேரரசர் காலம் திகழ்ந்தது. பின்னதாக, சோழப் பேரரசின் வீழ்ச்சியை அடுத்து விஜய நகரப் பேரரசர் ஆட்சிக் காலத்தில் வெள்ளாள - பிராமண முரண்பாடு தொடக்கம் பெற்றபோது தமக்கு உரியதாக சைவசித்தாந்தத்தை வெள்ளாளர்கள் வெளிப்படுத்த வேண்டி இருந்தது குறித்து இந்த இரண்டாம் பகுதியில் ஏற்கனவே பார்த்து வந்திருக்கிறோம். சோழப் பேரரசு

உச்சத்தில் இருந்தபோது வேறொரு முரண்பாடு இயக்கம் பெற்றிருந்தது. இது 'புறச் சமயங்களுடன்' ஏற்பட்ட பகை முரண்பாடு அளவுக்கு மோதி வீழ்த்தும் தீவிரத்துக்கு உரியதும் அல்ல, பின்னர் மேலெழுந்த வெள்ளாள - பிராமணர் இடையே ஏற்பட இருக்கும் நட்பு முரண்பாட்டைப் போன்றதாயும் இல்லை. முழுத் தமிழகத்திலும் மேலாதிக்கம் செலுத்திய சைவத்துடன் முரண்பாட்டை வெளிப்படுத்திய வைணவம் அதனைப் போல நிலப்பிரபுத்துவப் பொருளுற்பத்தி முறைக்கு உரியதாக இருந்த வகையில் நட்பு முரண் என்ற போதிலும் பூரணமான உடன்பாட்டுக்கு வர இயலாததாக இருந்தது.



Image source - marinabooks.com

பெரு நிலப்பிரபுத்துவத்துக்கு உரிய கருத்தியலைச் சைவம் கொண்டிருந்தது. வைணவமோ சிறு நிலவுடமையாளர்களின் கருத்தியலை வெளிப்படுத்தியது. இரண்டுமே நிலவுடமைப் பொருளுற்பத்தி சார்ந்தன என்ற வகையில் வைதிக நெறிக்கு உரியவை என்ற போதிலும் பெரு நிலப்பிரபுக்கள் - சிறுநிலவுடமையாளர் எனும் வர்க்க பேதமானது தமக்குள் அடிப்படைப் பண்பு வேறுபாடுகளை வெளிப்படுத்துவனவாக அமைந்திருந்தன. இத்தகைய வர்க்க மோதலை முன்னதாக பக்திப் பேரியக்கச் சூழலிலும் காண இயலுமாக இருந்தது. அறநெறிக் காலத்தில் அரசு முறை வணிக சக்திக்கானதாக இருந்தது. வணிகத் தரப்புக்குள் கடல் கடந்து வர்த்தகத்தை மேற்கொண்ட பொற்குவை உடையோர் - உள்ளூர் வணிகச் செயற்பாட்டில் ஈடுபட்ட சிறு வணிகர் என்ற வர்க்க பேதம் நிலவியது. பெரு வணிகரது நலன்களுக்கே முன்னுரிமை வழங்கிய அரசியல் முன்னெடுப்பில் விவசாயம் நலிந்து போன காரணத்தால் பஞ்சம், பசி, பட்டினி பெருக வழியேற்பட்ட போது சிறு வணிகர்களும் பாதிப்புக்கு உள்ளாகினர்.

பெரு வணிகர்களது மேலாதிக்கத்தைத் தகர்த்து விவசாய நலன்பேணும் ஆட்சி மாற்றத்துக்காகப் பக்திப் பேரியக்கம் செயற்படத் தொடங்கிய போது பெரு வணிகர்களுடன் வர்க்கப் போராட்டத்தில் ஈடுபட்டவாறு இருந்த சிறு வணிகர்கள் விவசாயத் திணைக்குத் தமது ஆதரவுக் கரத்தை நட்ட ஏற்றதான சமூக அமைப்பு மாற்ற உணர்வுந்தல் கிபி 7 ஆம் நூற்றாண்டு முதல் ஏற்படலாயிற்று. முன்னதாக மருதத் திணை மேலாதிக்கத்தில் நிலவுடைமையாளர்களான விவசாயச் சமூகச் சக்தியிடம் இருந்து கிபி 2 ஆம் நூற்றாண்டில் வணிகச் சமூகச் சக்தி (திணை) அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டது. வணிக மேலாதிக்கம் நிலவிய கிபி 2 - 6 ஆம் நூற்றாண்டுகளின் அறநெறிக் காலத்தை முடிவுக்குக் கொண்டு வரும் விவசாயத் திணையின் மீளெழுச்சியே கிபி 7 ஆம் நூற்றாண்டின் பக்திப் பேரியக்கமாக வெளிப்பட்டது. இவ்வாறு திணைகளிடையேயான மோதலின் வாயிலாக எட்டப்படும் மேலாதிக்க ஆட்சி முறைமையானது ஒன்றிடம் இருந்து மற்றொரு திணைக்கு கைமாறுவதாக அமைவு பெற்று இயங்கியவாறு தான் எமக்கான சமூக மாற்றச் செயலொழுங்கு நிகழ்ந்தேறி வந்துள்ளது. அதன்போது இடம்பெறும் (சிறுவணிகர்கள், சிறுநிலவுடமையாளர்கள் மேற்கொண்டது போன்ற) வர்க்கப் போராட்டத்துக்கான சாத்தியங்கள் இருப்பதும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுதல் அவசியம். திணைகள் இடையேயான மோதலின் வாயிலாக அரசியல் அதிகாரத்துக்கு உரியதாயுள்ள மேலாதிக்க சக்தி ஒன்றிடம் இருந்து மற்றொன்றுக்குக் கைமாறுவதாகவே எமக்கான சமூக மாற்றப் போக்கு அமைகிறதே அன்றி வர்க்கப் போராட்டத்தின் மூலமாகச் சமூக மாற்றம் ஏற்படவில்லை என்பதனை வர்க்க வாதிகள் கண்டுகொள்வதில்லை. இந்தத் திணை மோதல்களின்போது ஆட்சி அதிகாரம்பெற்ற திணைக்குள்ளே இடம்பெறும் வர்க்கப் போராட்டம் முதன்மையான கருவியாக இல்லாத போதிலும் செல்வாக்குச் செலுத்துகின்ற உந்துவிசையாகச் செயற்படுகிறது. இத்தகைய வர்க்கப் போராட்டத்தின் இடத்தைச் சாதிவாதிகள், இனவாதிகள் போன்ற அடையாள அரசியலாளர்கள் கவனங்கொள்வதில்லை.

பெரு நிலப்பிரபுத்துவ மேலாதிக்கத்தால் பாதிக்கப்படும் சிறுநிலவுடமையாளர்களின்

கருத்தியல் வெளிப்பாடாக வைணவம் அமைந்திருந்தது. வெள்ளாளர்களிலும் சிறுநிலவுடமையாளர் எனும் வர்க்கத் தட்டுக்கு உரிய தரப்பினர் பெருநிலப்பிரபுத்துவ வர்க்கப் பிரிவினருக்கு எதிரான போர்க்குரலை வைணவ மதத்தின் வாயிலாக வெளிப்படுத்தினர். மேலாதிக்க நிலைபெற்ற வெள்ளாளர்கள் அந்த ஆட்சி உரிமைக்கான கருத்தியலைப் பிராமணியத்தின் ஊடாக உறுதிப்படுத்திய வகையில் பெருநிலப்பிரபுத்துவ வர்க்க நிலையுடைய பிராமணர்களே வெள்ளாளரது பெருந்தெய்வமான சிவனை எந்நாட்டவர்க்கும் இறை என உணர்த்தும் புனிதத்தைக் கற்பித்தனர். பிராமணருக்குள் இடம்பெறும் வர்க்கப் போராட்டத்தில் வைணவப் பிராமணர் சைவ எதிர்ப்பை வெளிப்படுத்தும் முதல் சமூக சக்தியாக வெளிப்பட்டனர். இராமானுஜர் அத்தகைய மேலாதிக்க எதிர்ப்பாளராக இலக்கியப் பதிவைப் பெற்றுள்ளார்.

சைவ மேலாதிக்கத்தை எதிர்த்த வேகத்தில் வைணவத்தின் வர்க்கத் தளமான சிறுநிலவுடமையாளர்களுக்கும் அவசியப்பட்டதாக இருந்த சாதியத்தையும் இராமானுஜர் நிராகரிப்பவராக இருந்தார். அவரது தீவிர நிலைப்பட்ட சமத்துவ நாட்டம் வைணவத்தில் பிளவை ஏறபடுத்தி, மேலாதிக்க நாட்டத்தைத் தமக்குரிய அளவில் உள்வாங்கிய வடகலை வைணவத்துக்கு மாறாக இராமானுஜரின் தென்கலை வைணவப் பிரிவை உருவாக்கித் தொடர வேண்டி இருந்தது. இராமானுஜர் வெளிப்படுத்திய சமத்துவ நாட்டத்தின் நீடிப்பாக சுதந்திரப் போராட்ட காலத்தில் பாரதியின் கண்ணன் பாடல்கள் அமைந்தன; மார்க்சியத்திலும் எஸ்.என். நாகராஜன் முன்னிறுத்திய 'கீழை மார்க்சியக்' கருத்தியலுக்கான அடித்தளமாக ஆகியிருந்தது!

வடகலை வைணவத்தின் மேலாதிக்கக் கருத்தியலுக்கான அடித்தளம் வட இந்நியச் சமூக முறையினூடாகவும் தொற்றிக்கொள்வதாக இருந்தது; அங்கே சைவம் சிறுநிலவுடமையாளரது மதமென இயக்கம்பெற வைணவமே பெரு நிலப்பிரபுக்களுக்கான கருத்தியலை வெளிப்படுத்தி இருந்தது. சாதிய மறுப்பு, அதற்கான ஆட்சியதிகாரத்தைப் பெற்றிருந்த சைவ சமயத்தை எதிர்த்தல் என்பன காரணமாக சோழப் பேரரசு எல்லைக்குள் வாழ இயலாமல் இராமாநுஜர் தேசப்பிரஷ்டம் செய்துகொண்டு தலைமறைவாக வாழ வேண்டியவரானார். அத்தகைய சைவ - வைணவ முரண்பாட்டை விடக் குறைவற்ற வகையில் வடகலை - தென்கலை எனுமிரு வைணவப் பிரிவுகளுக்கு இடையேயான மோதல் அன்று தொட்டு இன்று வரை நிலவி வருவதனை அவதானிக்க இயலும்.

முழுச் சமூக சக்திகள் (திணைகள்) இடையேயான மோதலே எமக்கான சமூக மாற்றக் கருவி என்பதனை விளக்கம் கொள்ளும் அதேவேளையில் அவற்றினுள் இயக்கம் பெறும் இத்தகைய வர்க்கப் போராட்ட நிதர்சனத்தையும் கவனத்தில் எடுத்துக்கொள்வது சமூக மாற்றப் போராட்ட சக்திகளுக்கு மிகமிக அவசியப்படுகின்ற கற்கைத் தளமாகும்!


### 'புறச் சமயங்களின்' தாக்கமும் அறுவகைச் சமயங்களும்

அரசியல் அதிகாரத்தை வெற்றி கொண்ட நிலவுடமையாளர்கள் இடையேயான வர்க்க வேறுபாடு பின்னர் ஏற்பட்டு வளர்ந்த ஒன்று. பக்திப் பேரியக்கத்தின் தொடக்க நிலையில் வணிக மேலாதிக்கம் தகர்க்கப்பட வேண்டி இருந்த போது அதற்கு உரியதான மதங்களாகத் திகழ்ந்த சமணத்துக்கும் பௌத்தத்துக்கும் எதிராகப் போராடும் அவசியம் நிலவியது. நிலப்பிரபுத்துவப் படிவளர்ச்சியை இன்னமும் எட்டாத விவசாயத் திணைக்குரிய கருத்தியல்களாக வெளிப்பட்ட சைவமும் வைணவமும் தமக்குள் பேதப்படாமல் ஒன்றுபட்டு இயங்கியவாறு 'வேத, ஆகம மறுப்பாளர்கள்' என்ற வகையில் 'புறச் சமயத்துக்கு' உரியோர் என அடையாளப்படுத்தப்பட்ட அவைதிக சமயங்களுக்கு எதிராக முனைப்புடன் போராடின. அத்தகைய கருத்தியல் தளப் போராட்டம் வாயிலாக ஆட்சி அதிகாரத்தை வென்ற பின்னர் பெருநிலப்பிரபுக்களாக வளர்ந்துவிட்ட வெள்ளாளப் பிரிவினருக்கு உரியனவாகத் தேவாரப் பாடல்பெற்ற தலங்கள் (சிவன் கோயில்கள்) ஆட்சியாளர்களது அனுசரணையுடன் விண் முட்டும் கோபுரங்களுடன் விருத்தி பெற்றன. ஆழ்வார்களின் திவ்வியப் பிரபந்தப் பாடல்களில் இடம்பெற்ற திருத்தலங்களில் மிகப் பெரும்பாலானவை சிறுநிலவுடமையாளர்களுக்கு உரியன என்பதைப் பறைசாற்றும் வகையில் இன்று வரை எவ்விதப் பிரமாண்டங்களையும் எட்டாமல் எளிமைத் தோற்றத்துடனேயே உள்ளன. பின்னதாக விஜயநகரப் பேரரசர் காலத்தில் வைணவ சமயம் ஆட்சாயாளரது மதமாக ஆகிவிட்ட சூழலில் சில வைணவக் கோயில்கள் பிரமாண்ட விருத்தியுடன் திகழ்ந்த போதிலும்

ஒட்டுமொத்தமாக சைவக் கோயில்களே தமிழகத்துக்கான பேரடையாளங்களாக போற்றப்படும் நிலையில் மாற்றம் ஏற்பட்டுவிடவில்லை!

இவ்வகைச் சைவ - வைணவ முரண் தோன்றுவதற்கு முன்னரும் அவை ஒன்றுபட்டுப் போராடக் களம் அமைத்த பக்திப் பேரியக்கம் தோற்றம்பெற்று ஒரு நூற்றாண்டின் பின்னர் அது வீறுபெற்று இயக்கம் கொண்டவாறிருந்த காலத்துக்கு உரியதுமான தமிழகத்தின் (இன்றைய கேரள எல்லைக்கு உட்பட்ட) காலடியில் இருந்து வட இந்தியா சென்ற சங்கரரே ஒன்றுபட்ட வைதிகநெறிக்கான கருத்தியலாளராக மேற்கிளம்பி வந்துள்ளார் என்பது வரலாற்று முக்கியத்துவமிக்க ஒரு அம்சம். பிராமணியம் வடக்கில் இருந்து தெற்குக்கு வந்ததாயினும் நிலப்பிரபுத்துவக் காலத்துக்கு ஏற்புடைய உச்ச வடிவக் கருத்தியலை ஒழுங்கமைத்து வெளிப்படுத்தியது தென்னிந்தியாவே என்பது கவனிப்புக்கு உரியது. இதையடுத்த இரு நூற்றாண்டுகளின் பின்னர் சோழப் பேரரசின் விரிவாக்கத்தில் தமிழக நிலப்பிரபுத்துவத்தின் அதியுச்ச மேலாதிக்கமும் சைவ வேளாளரின் சாதிய மேட்டிமையும் மிகைப்பட்டு இருந்தன. அவ்வகையில் பெருநிலப்பிரபுத்துவ வர்க்க வெள்ளாளரின் பிரதிபலிப்பான சிவனுடன் முரண்படுவதாகவே இராமானுஜரின் தென்கலை வைணவம் எழுச்சி பெற்றது!

அத்தகைய எதிர் நிலைக்குள் கூட 'ஹரி ஹர' மூர்த்தமாக விஷ்ணு - சிவன் இணைப்பு மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெறும் வகையில் சங்கரர் கிபி 8 ஆம் நூற்றாண்டில் ஏற்படுத்திய சண் மார்க்கம் (ஆறு சமயங்களின் இணைப்பாக) வைதிக நெறியின் ஒருமையை வெளிப்படுத்தி இருந்தது. ஸ்மார்த்த பிராமணர்களான சங்கரர் மரபினர் இவ்வகையில் சிவ - விஷ்ணு இணைப்பை வலியுறுத்தி இயங்கி வந்ததன் பேறாக வேற்றுமைக்குள் ஒற்றுமை இழையோட இயலுமாயிற்று. அதேவேளை, தம்மை நடுநிலையாளர்களாகக் கருதி இரு மதப்



ஆதி சங்கரர் சீடர்களுடன்

Image source - tamilandvedas.com

பிரிவினரது உள்விவகாரங்களில் ஸ்மார்த்தப் பிராமணர்கள் கருத்துரைக்கும்போது எதிர் நிலைச் சமயக்காரராக ஒவ்வொரு தரப்பாலும் அடையாளப்படுத்தபடுகின்றனரே அன்றி எந்தத் தரப்பும் இவர்களை நடுநிலையாளர்களாக ஏற்பதில்லை. சைவர்கள் இவர்களை வைணவர்களாகப் பார்க்கும்போது வைணவர்களால் ஸ்மார்த்தப் பிராமணர்கள் சைவர்களாகக் கண்டுணரப்படுகின்ற விநோதம் நிலவுகின்றது. ஒருவகையில் இரண்டற்ற குணாம்சத்தின் விவர்த்தமான வெளிப்பாடாக இதனைக் கொள்ளலாம்!

புறத்தாக்கங்களால் தமக்குள் ஒன்றுபட வேண்டி வரும்போது வைதிக நெறி - அகச் சமயங்கள் என ஐக்கியப்படுவதும், தத்தமக்கான சாதிய வர்க்க நலன் பேணுகையில் வேறுபட்டு மோதுவதும் அறுவகைச் சமயங்களுக்கான நியதி. 'சனாதன தர்மம்' என ஒன்றுபட்ட கூறுகளுடன் இயங்கியவர்கள் பிரித்தானியர் ஆட்சியின் கீழ் குடிசன மதிப்பீட்டின் நிர்ப்பந்தத்தால் இடப்பட்ட 'இந்து சமயம்' எனும் அடையாளத்தை ஏற்க வேண்டியவர்களாகினர். நிலப்பிரபுத்துவத்தை முற்றாகத் தகர்க்காத அதே நேரம் காலனித்துவம் ஏற்படுத்திய நவீன வாழ்வியலுக்கான அறிமுகமாக ஊடுருவிய காலனித்துவ கிருஸ்தவ மதமும் ('புறப் புறச் சமயம்') இந்து சமயப் பாதுகாப்பு உணர்வை வலியுறுத்தும் பின்புலமாக அமைந்தது. மட்டுமன்றி, முன்னர் ஒன்றுபட்டு ('புறப் புறச் சமயம்' என வகைப்படுத்திய போதிலும் கொண்டும் கொடுத்தும்) வாழ்ந்த இஸ்லாமியருடன் மோதும் நிலைக்கு இந்து மதத்தவர்கள் உள்ளாக்கப்பட்டு காலனித்துவ ஆட்சியில் இந்து - முஸ்லிம் முரண் வளர்க்கப்பட்ட போது இந்து சமய அடையாளத்தைச் சிக்கெனப் பற்றும் நிர்ப்பந்தம் இந்தியா பூராவிலும் இருந்த மேலாதிக்கச் சாதிய வர்க்கத்தவர்களுக்கு ஏற்பட்டது.

நிலப்பிரபுத்துவ மேலாதிக்கம் உறுதிப்படுத்திய வாழ்வியல் நிலப்பிரபுத்துவச் சமூகச் சிதைவுடனும் காலனித்துவ மயப்பட்ட காலத்திலும் எத்தகைய அதிர்வுகளுக்கு உள்ளானது. 'சாதியத் தகர்ப்புக் கருத்தியல்கள்' எவ்வகையில் வெளிப்பட்டன என்பதனை மூன்றாம் பகுதிக்கு உரிய ஆறு இயல்களினூடாகத் தொடர்ந்து அலசுவோம்!

(தொடரும்.)

இலங்கையில் பண்பாட்டுத் தனித்துவம் கொண்ட பல்வேறு நிலப்பரப்புகளுள் கிழக்கு மாகாணத்தின் கீழைக்கரை எனும் நிலப்பரப்பும் ஒன்றாகும். இந்நிலப்பரப்பு ஒரு நெடிய பாரம்பரியத்தையும், ஆதிவேரான பழங்குடிகளின் தொல்மரபையும் கொண்டமைந்துள்ளது. அவ் வரலாற்றை சிங்கள வரலாற்றாதாரங்களுடன் ஒப்பிட்டு, நவீன ஆய்வுப்பார்வையில் எழுதும் முயற்சியே 'ஈழத்துக் கீழைக்கரை: ஒரு வரலாற்றுப் பார்வை' என்ற இத்தொடராகும். இதன்படி, இலங்கையின் கிழக்கு மாகாணம் எனும் அரசியல் நிர்வாக அலகின் பெரும்பகுதியையும் அப்பகுதியைத் தாயகமாகக் கொண்ட மக்களின் பண்பாட்டையும் வரலாற்று ரீதியில் இது ஆராய்கிறது. கிழக்கிலங்கையின் புவியியல் ரீதியான பண்பாட்டு வளர்ச்சியையும், அங்கு தோன்றி நிலைத்திருக்கும் தமிழர், சோனகர், சிங்களவர், ஏனைய குடிகள் போன்றோரின் வரலாற்றையும், இன்றுவரை கிடைத்துள்ள சான்றுகளை வைத்துத் தொகுத்துக் கூறும் தொடராக இது அமைகிறது.

விவேகானந்தராஜா
துலாஞ்சனன்



# கீழைக்கரையில் நாகரும் அனுரை அரசரும்

விவேகானந்தராஜா துலாஞ்சனன் அவர்கள் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தில் மூலக்கூற்று உயிரியலும் உயிர் இரசாயனவியலும் கற்கைநெறியில் இளமாணிப் பட்டம் பெற்றவர். அதே பல்கலைக்கழகத்தின் பட்டக்கற்கைகள் பீடத்தில் பொது நிர்வாகமும் முகாமைத்துவமும் துறையில் முதுமாணிக் கற்கையைத் தொடர்கிறார்.

இலங்கை நிர்வாக சேவை அதிகாரியாகக் கடமையாற்றும் இவர் தற்போது மட்டக்களப்பு போரதீவுப்பற்று வெல்லாவெளி பிரதேச செயலகத்தில் உதவிப் பிரதேச செயலாளராகப் பணி புரிகிறார்.

இலங்கை சைவநெறிக்கழக வெளியீடான 'அலகிலா ஆடல்: சைவத்தின் கதை' எனும் சைவ வரலாற்று நூலையும் (2018), தனது திருமண சிறப்புமலராக 'மட்டக்களப்பு எட்டுப் பகுதி' நூலையும் (2021) வெளியிட்டுள்ளார்.

## கீழைக்கரையில் நாகர்

“கலி கடந்து எண்ணூறு ஆண்டுகளின் பின்னர் இலங்கையில் நாகர் இயக்கரோடு கலந்து ஓரினமானார்கள். அவர்கள் தனி இனமாக பல்வேறு நகரங்களை ஆளலாயினர். அவர்களது முதன்மை நகராக உகந்தம் எனும் நகர் விளங்கியது.” என்று ஆரம்பிக்கின்றது மட்டக்களப்புப் பூர்வ சரித்திரம். இலங்கையில் வாழ்ந்த நாகர் எனும் இனம் இயக்கர் என்னும் இன்னொரு குலத்தை வென்று கலந்ததும், அவர்கள் உகந்தையை அரசிருக்கையாக்கியமையையும் சொல்லும் பாடல் இது.

நாகபாம்பை குலக்குறியாகக் கொண்டிருந்தோர் என ஊகிக்கப்படும் நாகர்கள் பற்றி தெற்காசியா - தென்கிழக்காசியா முழுவதும் ஏராளமான தொன்மங்கள் நிலவுகின்றன. இராமாயணம், மகாபாரதம் முதலிய இதிகாசங்களிலும், இந்தியப் புராணங்களிலும் புத்த சாதகக் கதைகளிலும் நாகர்கள் பற்றிய பல்வேறு கதைகள் வழங்குகின்றன. நாகர்கள் பற்றிய கதைகள் மிகைப்படுத்தப்பட்டவை என்றாலும், அப்பெயரில் உண்மையிலேயே ஒரு தனியினம் வாழ்ந்ததா என்பதில் பல்வேறு வாதப்பிரதிவாதங்கள் வரலாற்றுலகில் உள்ளன. எவ்வாறெனினும் தெற்காசியாவில் பல்வேறு மொழி பேசிய, பல்வேறு இடங்களில் வசித்த இனக்குழுக்கள் தங்களை நாகங்களோடு தொடர்புபடுத்தி தம்மை நாகர் என்று அழைத்துக்கொண்டார்கள் என்பதை

தொல்லியல் சான்றுகள் மூலம் உறுதிப்படுத்திக்கொள்ள முடிகின்றது.

இப்படி இலங்கையில் வசித்த நாகர், மாப்பார் பண்பாட்டை இலங்கைக்கு அறிமுகம் செய்த நாகரிகமுற்ற இனக்குழுவினர். இவர்களது மிகப்பழைய கல்வெட்டுகள் தமிழியில் கிடைப்பதால் இவர்கள் தமிழ் பேசினர் என்றும் தமிழகத்திலிருந்து வந்து குடியேறினர் என்றும் அறியமுடிகின்றது (பத்மநாதன், 2016). உழவுத்தொழில், அதற்கான நீர்ப்பாசன வழிமுறைகள், நீர்நிலைகளைச் சீரமைத்தல், குடியிருப்புகளை அமைத்து வாழ்தல், மட்பாண்டம் முதலான கைத்தொழில்களும் கைப்பணிப் பொருட்களை ஏனையோருடன் விற்று வாங்குதலும் முதலிய மாப்பார் சமூகமொன்றின் இயல்புகளை நாகரும் கொண்டிருந்தார்கள்.



**உரு. 01 மட்டக்களப்பு வந்தாறுமூலை பாற்சேத்துக்குடாவில் 2015 ஆம் ஆண்டு பேரா.சி. பத்மநாதன் குழுவினரால் கண்டெடுக்கப்பட்ட, தமிழி எழுத்தில் நாகன் பெயர் எழுதிய பொறிப்பு.**

Image source - news.lk

கைத்தொழில் வளர்ச்சியும் வணிகமும் இரும்புக் காலத்தில் வளர்ச்சியுற்ற முக்கியமான விடயங்கள். நாகர்கள் கடல் கடந்து இங்கு வந்தோர் என்பதாலும், போக்குவரத்துக்கும் வணிகத்துக்கும் கப்பல், வள்ளம் முதலிய கடலோடிக் கலங்களை உருவாக்கிப் பயன்படுத்தினர் (Archaeology.lk, 2024). இந்தக் கடற்பயணங்களின் வழியே வட இந்தியாவில் உருவாகி வந்த புதிய அரசுகளுடனும் உரோமப் பேரரசு முதலிய மேலைத்தேய அரசுகளுடனும் ஊடாடும் வாய்ப்பு நாகருக்கு ஏற்பட்டது. இரும்புக் காலத்தின் முதன்மையான சான்றுகளில் ஒன்றான குதிரை இறக்குமதியும் குதிரை வளர்ப்பும் இலங்கையில் நிலவியது. (The archaeological background and origin of the state, n.d:192)

கல்லில் செக்கு, ஆட்டுக்கல், சுடுமண்ணாலான மட்கலங்கள், செங்கற்கள் முதலியவற்றை நாகர்கள் உருவாக்கிப் பயன்படுத்தி வந்தனர். கல்லில் மாத்திரமன்றி, இத்தகைய அன்றாடப் பாவனைப் பொருட்களிலும் தங்கள் பெயரை எழுதுவது அவர்களது வழக்கமாக இருந்து வந்தது (உரு. 01). விலங்கு, மனிதர், தெய்வங்களின் சுடுமண் சிற்பங்களை செதுக்கும், வடிக்கும் வழக்கமும் அவர்களிடம் காணப்பட்டது. தெய்வ நம்பிக்கை கொண்டிருந்த நாகர், நாகங்களின் அரசனான 'மணிநாகன்' என்ற தெய்வத்தை வழிபட்டு வந்தார்கள். அத்தெய்வம் ஆரம்பத்தில் வெறும் கல்லாகவும் பின்னர் ஐந்தலை நாகபாம்பின் வடிவிலும் பின்னர் பாதி மனிதன் பாதி நாகமாகவும் சித்தரிக்கப்பட்டது. கல்லில் செதுக்கிய மணிநாகனின் சிற்பங்கள் காரைதீவு, பாலாமடு முதலிய இடங்களில் கிடைத்துள்ளன.

மணிநாகனுக்கு மலையிலும் மண்ணிலும் கோவில் அமைத்துக் கும்பிடும் வழக்கம் நாகரிடம் இருந்ததாகத் தெரிகிறது. அவை மணிநாகன் பள்ளி என்று அழைக்கப்பட்டன. 'மணிநாகன்', 'மணிநாகன் பள்ளி' என்ற பெயர் பொறிக்கப்பட்ட கற்றூண்களும் மலைப்படுக்கைகளும் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் கணிசமான அளவு தற்போதுவரை கண்டறியப்பட்டுள்ளன (கி.மு இரண்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட நாகர் கல்வெட்டு வந்தாறுமூலையில் கண்டுபிடிப்பு, 2015).

உற்பத்தி அதிகரிப்பாலும் செல்வச் செழிப்பாலும் நாகரில் செல்வந்தர் உருவானார்கள். செல்வந்தர்களிலிருந்து நிலக்கிழார்கள் உருவானார்கள். நிலக்கிழார்களிடம் அதிகாரப்போட்டி ஏற்பட்டபோது அவர்களிடையே குழுக்களும் குழுக்களிடையே மோதலும் உண்டானது. அந்த மோதலில் வென்றோர் அருகிலுள்ள இன்னொரு குழுவை வெல்ல முயன்றனர். இந்தப் போராட்டங்களின் வழியே ஒருவரை ஒருவர் வென்றடக்கி இறுதியாக மேலெழுந்தவன் பெரிய நிலப்பரப்புக்கும் அதன் கீழ் அடங்கும் மக்களுக்கும் தலைவன் ஆனான். இந்தத் தலைவனை நாகர் 'வேள்' என்று

அழைத்தனர். வேளிர் பலரால் ஆளப்பட்டது நாகர் நிலம்.

வேள் பட்டம் தந்தை - மகன் என்ற முறையிலோ மாமன் - மருகன் என்ற முறையிலோ தலைமுறைகளூடாகக் கடத்தப்பட்டது. வேளிர் பெரும்பாலும் நாகன், கண்ணன் என்ற பெயர்களைத் தங்களுக்குள் மாறிமாறிச் சூடிக்கொண்டார்கள். அன்றாடப் பாவனைப் பொருட்களிலும் ஈமத்தாழிகளிலும் தங்கள் வேளிரின் மூன்று தலைமுறைகளை "வேள்நாகன் மகன் வேள்கண்ணன் வேள்கண்ணன் மகன் வேள்நாகன்" என்று பல தடவை தமிழ் எழுத்தில் பொறிப்பது நாகரின் வழக்கமாக இருந்தது. அதிகாரமும் ஆற்றலும் பொருந்திய வேளிரின் இல்லங்கள் மணிநாகனின் பள்ளிகளுக்கு அடுத்த இடத்தில் கருதப்பட்டதுடன், அவை 'வேள்நாகன் பள்ளி' என்று அறியப்பட்டன. வேளிர் பின்னாளில் அரசர்களாக வளர்ச்சி கண்டபோது, வேள்நாகன் பள்ளிகள் அரண்மனைகளாக மலர்ந்தன.

**கல்லில் செக்கு, ஆட்டுக்கல், சுடுமண்ணாலான மட்கலங்கள், செங்கற்கள் முதலியவற்றை நாகர்கள் உருவாக்கிப் பயன்படுத்தி வந்தனர். கல்லில் மாத்திரமன்றி, இத்தகைய அன்றாடப் பாவனைப் பொருட்களிலும் தங்கள் பெயரை எழுதுவது அவர்களது வழக்கமாக இருந்து வந்தது**

நாகரின் பண்பாடு சார்ந்த தொல்லியல் சின்னங்கள், தமிழிக் கல்வெட்டுகள் கிடைத்த இடங்களின் அடிப்படையில் பேரா.சி. பத்மநாதனால் சுமார் பதினைந்து நாகரின் வேளிர் ஆட்சிப் புலங்கள் இனங்காணப்பட்டன. அவர் கருத்தின்படி, இவை பதினைந்தும் வடக்கே வாகரையிலிருந்து தெற்கே சங்கமன்கண்டி வரை துண்டுபட்ட புவியியற் பரப்புகளில் அமைந்திருந்தன. அவரது அனுமானம் சரி எனின், இன்னும் ஏராளமான வேள்புலங்கள் அவற்றுக்கு வடக்கிலும் தெற்கிலும் மேற்கிலும் மறைந்திருக்கின்றன என்றே பொருள்.

## அனுரை அரசர்

அனுராதபுரம் மூவாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக மக்கள் குடியிருப்புப் பகுதியாக நீடித்து வருகின்ற தொல்நகரம். அங்கு எப்போது முதலரசு தோன்றியது என்று தெரியவில்லை. பாலி வம்ச இலக்கியங்களில் சொல்வதன்படி, அது பண்டுகாபய மன்னனால் அரசிருக்கை ஆக்கப்பட்டது. அவனுக்கு முன்னர் ஆண்ட மன்னர்களான விசயன், உபதிசையன், பண்டு வாசுதேவன் முதலியோர் தம்பபண்ணி அல்லது உபதீச நகரி முதலிய வேறு நகரங்களிலிருந்து ஆட்சிபுரிந்து வந்ததாகச் சொல்லப்படுகிறது.

வம்ச இலக்கியங்களின் விசயன் தொன்மத்துக்குச் சமனான பல தொன்மக்கதைகள் பழைய இலங்கையில் வழங்கி வந்ததை அறியமுடிகின்றது. வரலாற்றாய்வாளரில் சிலர், தொல்லியல் சான்று கிடையாத காரணத்தால் விசயன் தொன்மத்தை மறுப்பர். வம்ச இலக்கிய அரசர்களில், பொமு 3 முதல் பொபி 1 ஆம் நூற்றாண்டு வரை வாழ்ந்த தேவானாம்பிரிய திசையன், உதியன், இலாஞ்ச திசையன், குடாக்கண்ண திசையன், வசபன், முதலாம் கசபாகு (Gajabahu I) ஆகியோரின் நேரடிப் பெயர் பொறித்த பிராமிக் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. நேரடியாகப் பெயர் குறிப்பிடப்படாவிட்டாலும் காமணி, நாகன், திசையன் எனும் பெயர்கள் வரும் கல்வெட்டுகளை அவற்றின் வரிவடிவக் காலங்களைக் கணித்து துட்டகாமணி, வட்டகாமணி, ஆமந்தகாமணி, மகாதாடிக மகாநாகன், மாகல்லக நாகன், சத்தா திசையன், மகாசூலி மகாதிசையன் ஆகிய மன்னர்களால் பொறிக்கப்பட்டதாகக் கொள்வோரும் உண்டு.

எவ்வாறெனினும் தேவானாம்பிரிய திசையனுக்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்ததாகக் கருதப்படும் விசயன், உபதீசன், பண்டுவாசுதேவன், பாண்டுகாபயன், மூத்தசிவன் முதலிய மன்னர்களின் கல்வெட்டுகள் கிடைக்கவில்லை என்பதே பொதுக்கருத்து (Paranavitana, 1970: XLIX - LI). ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் ஆட்சி செலுத்திய அனுராதபுர அரசர்களின் கல்வெட்டுகள் கீழைக்கரை உட்பட இலங்கைத்தீவு முழுவதும் கிடைத்திருப்பதால் அனுராதபுரம் பொதுக்காலத்திலேயே ஒரு பலம் வாய்ந்த அரசாக வளர்ச்சி கண்டு வந்தது என்பதை ஊகிக்கலாம்.

ஆனால், அனுராதபுர அரசு தோன்றியபோது, கீழைக்கரை சுதந்திரமான தனியரசாக விளங்கியது. அந்தத் தனியரசு பற்றிய தகவல்களை நாம் பாலிமொழி வம்ச இலக்கியங்களிலிருந்து அன்றி, நேரடியாகவே கல்வெட்டு ஆதாரங்கள் மூலமே கண்டடைந்திருக்கிறோம் என்பது சுவாரசியமான தகவல்.

## அடிக்குறிப்புகள்

1. ”கலிகடந்து எண்ணூறு ஆண்டில் கருதிய இலங்கை தன்னில் வலியவர் இயக்கரோடு கலந்தவர் மரபொன்றாகி நலிவில்லா நிருபம் செய்து நகர் எல்லாம் இறைகள் என்ன ஒலிவளர் உகந்தம் என்னும் நகரதில் உறைந்தார் நாகர் – (கமலநாதன் & கமலநாதன், 2005:03)

2. நாகம் என்பது பாம்புகளில் ஒருவகை. பாம்புகளில் இன்னொரு வகையான உரகர் பற்றியும் புராணங்களில் குறிப்புண்டு. நாகம் என்பது யானைகளுக்கும் உரிய பெயரே. நாகம் என்ற பெயரில் மரம், உலோகம் என்பன உள்ளதையும் இங்கு நாம் ஒப்பிடலாம்.

3. தமிழி, பிராமிக் கல்வெட்டுகளில் 'மருமகன்' என்ற சொல் வாசிக்கப்பட்டது. பரணவிதானவால் தவறாக பேரன் எனப் பொருள்கொள்ளப்பட்ட இச்சொல்லை, இந்திரபாலா, பரமு பு^ச்பரட்ணம் முதலியோர் தமிழ்ச் சொல்லான மருமகனே என்று நிறுவியுள்ளனர்.

4. வாகரைக்கு வடக்கே தம்பலகாமம்பற்றின் கந்தளாய், கொட்டியாரப்பற்று மேற்கு (சேருவில) பகுதியில் அமைந்துள்ள திருக்கரைசை, ஆதியம்மன்கேணி ஆகிய இடங்களில் வேள்நாகர் தமிழிக் கல்வெட்டுகள் கிடைத்தமையை பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார் (பத்மநாதன், 2016:464). நாக வேளிர் பற்றிய தொல்லியற்சான்று கிடைத்த இரு இடங்களுக்கிடையே சற்று தூரம் அல்லது தொல்லியல் சான்று கிடைக்காத வெளியொன்று காணப்படுகின்றது என்ற ஒரே காரணத்துக்காக அவை இரண்டும் வெவ்வேறு வேள்புலங்களுக்கு உட்பட்டவை என்று சொல்வது கடினம். தொடர்ச்சியான குடியேற்றங்கள், நகரமயமாக்கம், இயற்கை – செயற்கை பேரிடர்களின் பின்னணியில் தொல்லியற்சான்றுகள் சிதைந்து மறைந்துபோயிருக்க வாய்ப்புண்டு. எனவே தற்போது துண்டுபட்டு தனித்தனி ஆட்சிப்பரப்புகளாக சி. பத்மநாதனால் இனங்காணப்படும் நாக வேள்புலங்கள், ஒருகாலத்தில் தொடரான ஒரே தனிப்பிராந்தியமாக இருந்திருக்கலாம் என்பதை மறுப்பதற்கு போதிய தரவில்லை. ஆக, நாக வேளிர் கீழைக்கரையின் பெரும்பரப்பில் ஆட்சிபுரிந்து வந்தமை உண்மையே என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள முடிகின்ற போதும், நாகராட்சி இத்தனை நாக வேள்புலங்களாக தனித்தனி இடங்களில் நீடித்துவந்தன என்று கூறுவது மேலதிக ஆய்வுக்குரியது.

5. பொபி 2 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த திவ்யாவதானம் எனும் வடமொழிப் பௌத்த நூலிலும் ஐந்தாம் நூற்றாண்டில் இலங்கை வந்த சுவாங்சங் எனும் சீனப்பயணியின் குறிப்பிலும் காணப்படும் குறிப்பின்படி நாவலந்தீவின் பெருவணிகன் சிங்கனின் மகன் சிங்களன். அவன் ஐநூறு வணிகருடன் இலங்கை மணிகளுக்காக தங்கியிருக்கும் போது இராட்சசிகளின் உதவியைப் பெறுகிறான். இராட்சசிகளால் தாங்கள் சிறைப்பிடிக்கப்படலாம் என அஞ்சிய அவர்கள் பறக்கும் குதிரையிலேறித் தப்பிச் செல்கின்றனர். பிறகு சிங்களன் படையோடு வந்து இராட்சசிகளை அழித்து இங்கு அரசொன்றை அமைக்கின்றான். சுவாங்சங்கின் இன்னொரு கதையில் தென்னகத்தில் சிங்கத்துக்கு மகனாகப் பிறந்த சிங்களன் எனும் இளவரசன் இலங்கையை வந்தடைந்து, இங்கு மாணிக்கக்கற்களைப் பொறுக்க வந்த வணிகர்களைச் சூறையாடி இங்கு அரசமைத்த கதை சொல்லப்படுகின்றது. சீனப்பயணி பாகியனின் (பொபி 337 – 422) குறிப்பின்படி தென்னகத்திலிருந்து இயக்கரிடம் மாணிக்கம் பெற வந்த வணிகர்கள் இத்தீவின் செழிப்பில் மயங்கி இங்கேயே தங்கி அரசொன்றை அமைத்தனர் (Gunawardana & Dissanay ake, 2020:5557).

6. தேவானாம்பிரியன் திசையன் = |தெவநபிய மஃகரஜச (Deva napiya Maharaja) இல. 03; உதியன் = |தெவநபிய மஃகரஜச |கமனி உதி (Devanapiya Maharaja Gamani Uti) இல.47 ; இலாஞ்சதிசையன் = |தெவநபிய லஜலதி`ச ("Devanapiya Lajalatisa,), இல. 16 ; குடாக்கண்ணன் திசையன் = |தெவநபிய புடகன |கமனி அபய (Devanapiya Pudakana Gamani Abaya), இல. 22 ; வசபன் = வஃக|ப மகரஜசஃக மருமகன் (Vahaba maharajaha marumakana) இல. 57. (இலக்கங்கள் Inscription of Ceylon Vol. Iஇல் கண்டபடி: Paranavitana, 1970).

## உசாத்துணை


1. *கமலநாதன், சா.இ., கமலநாதன், க. (2005). மட்டக்களப்பு பூர்வ சரித்திரம், கொழும்பு, சென்னை : குமரன் புத்தக இல்லம்.*

2. *கி.மு இரண்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட நாகர் கல்வெட்டு வந்தாறுமூலையில் கண்டுபிடிப்பு, (2015.06.22), The Government Official Web Portal, retrieved from: http://www.news.lk.*

3. *Archaeology.lk, (2024). The first evidence of Prehistor ic seafarers of South Asia was found on Velanai Island in Jaffna., retrieved from:// www.archaeology.lk.*

4. *Gunawardana, N., Dissanayake, U. (2020). Two Stories on Origin of Sinhalese as in the Records of Xuanzang, AJMRD, 2(10), pp. 5557.*

5. *5. Paranavitana, S. (1970). Inscriptions of Ceylon, Volume I, Ceylon: Department of Archaeology. The archaeological background and origin of the state, (n.d), in Chapter III The State, Kingship and Bud dhism in Ancient Sri Lanka, retrieved from https:// docplayer.net/64469037Thestatekingshipandbuddhism inancientsrilanka.html.*


(தொடரும்.)

கனடா, பெல்ஜியம், சோவியத் ஒன்றியம், சுவிற்சர்லாந்து, இந்தியா, ஸ்பானியா (Spain) ஆகிய ஆறு நாடுகளின் சமஷ்டி அரசியல் முறைமைகளைப் பற்றி ஆழமான ஆய்வுகளாக இக்கட்டுரைத்தொடர் அமைகிறது. மேற்குறித்த நாடுகளின் அரசியல் வரலாறும், அரசியல் யாப்பு வரலாறும், போருக்கு பிந்திய இலங்கையின் அரசியல் தீர்வு முயற்சிகளுக்கு வழிகாட்டியாக அமையும், அரசியல் பாடங்களை (polit ical lessons) கற்றுக்கொள்வதற்கு உதவுவனவாக 'சமஷ்டி அரசியல் முறைமைகள்' என்ற இத்தொடர் அமைகின்றது. இக்கட்டுரைத்தொடர் அரசியல் கோட்பாடுகள் (Political theories) அரசியல் யாப்பு தத்துவங்கள் (constitutional principles) என்பன சார்ந்த விடயங்களை குவிமையப்படுத்தும் உரையாடலை தொடக்கிவைப்பதாக அமைகிறது. தமிழ் சமூகவெளியில் (social space) சமஷ்டி முறைதொடர்பான ஆரோக்கியமான ஒரு விவாதம் இக்கட்டுரைத்தொடரின் பெறுபேறாக அமையும்.

*ஆங்கில மூலம்: ஜோர்ஜ் மத்தியு*

கந்தையா
சண்முகலிங்கம்



# இந்தியக் குடியரசின் அரசியல் யாப்பு

**பகுதி I, 2**

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த 'இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்' என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

'நவீன அரசியல் சிந்தனை', 'கருத்தியல் எனும் பனிமூட்டம்', 'இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்' ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.

### சமஷ்டி முறையின் வரலாறும் வளர்ச்சியும்

இந்தியா 3.287 மில்லியன் சதுர கிலோ மீற்றர் பரப்பளவை உடைய நாடு. இங்கு 1.098 பில்லியன் மக்கள் (2002) வாழ்கிறார்கள். இனத்துவ பன்மைத்துவமுடைய இப் பரந்த தேசத்தில் பல்வேறு இனத்துவக் குழுமங்களும், மொழிகளும், பண்பாடுகளும் காணப்படுகின்றன. இந்தியாவில் 28 மாநில அரசுகளும் 7 ஒன்றியப் பிரதேசங்களும் (Union Territories) உள்ளன (2002). ஒன்றியப் பிரதேசம் என்பதில் தேசியத் தலைநகரான டெல்லியும் அடங்குகிறது. இந்தியச் சமஷ்டியின் இவ் அலகுகள் இயற்கை வளம், நிர்வாகத் தலைமை, பொருளாதார அடைவு என்பனவற்றில் வேற்றுமை கொண்டனவாய் உள்ளன. இந்தியாவில் வறுமை பரவலாகவும் செறிந்தும் காணப்பட்டு வருகிறது. 1999 - 2000 ஆண்டுகளின் மதிப்பீட்டின்படி 260 மில்லியன் மக்கள் (சனத்தொகையின் 26% மக்கள்) வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழ்வோராவார்.



இருந்தபோதும் 2000 - 2001 காலத்தில் இந்தியாவின் மொத்தத் தேசிய உற்பத்தியின் (GDP) வளர்ச்சி 6% வீதமாக இருந்தது.

பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியிடமிருந்து 1858 இல் பிரித்தானிய அரசாங்கம் இந்தியாவைப் பொறுப்பேற்றுக்கொண்டது. அக்காலம் முதல் இந்தியா முடிக்குரிய காலனியாக (Crown colony) இருந்துவந்தது. பிரித்தானிய அரசின் பிரதிநிதியாகிய ஆளுநர் நாயகத்தின் தலைமையிலான மத்தியப்படுத்தப்பட்ட (Cen tralised) ஆட்சிமுறை நடைமுறைக்கு வந்தது. ஆளுநர் நாயகத்திடம் சட்டவாக்கம், நிர்வாகம்,

நிதி அதிகாரம் என்பன குவிந்திருந்தன. மத்தியப்படுத்தப்பட்ட ஆட்சி முறையைக் கொண்டியங்குவதில் ஏற்பட்ட தடங்கலைக் குறைப்பதற்காக 1861 ஆம் ஆண்டின் கவுன்சில் சட்டம் (Councils act of 1861), பின்னர் 1909 ஆம் ஆண்டின் மின்டோமோர்லி சட்டம் ஆகிய சட்டங்களால் அதிகாரம் பரவலாக்கப்பட்டது. 1919 இன் மொன்டேக் - செம்ஸ்போர்ட் சட்டம் மாநில சுயாட்சி (Provincial Autonomy) என்ற கருத்தையும் புகுத்தியது. இவ்வாறான அதிகாரப் பரவலாக்கம் (Devolution) மாகாணங்களின் நிர்வாகத்தில் பொறுப்பாட்சி அரசாங்கம் (Responsible Government) என்ற தத்துவத்தைப் புகுத்துவதற்கு உதவியது. ஆயினும் ஒரு சில விடயங்கள் மட்டுமே மாகாணங்களின் பொறுப்பில் கையளிக்கப்பட்டன.

1858 - 1919 வரையான காலப்பகுதியில் பிரித்தானியா இந்தியத் தேசியவாதத்தைக் கட்டுப்படுத்துவதிலும், இந்தியா மீதான தனது பிடியை வலுப்படுத்துவதிலுமே கவனம் செலுத்தியது. 1930 இல் சைமன் ஆணைக்குழு (Simon Commission) விசாரணை அறிக்கை வெளியிடப்பட்டது. இதன் பின்னர் வட்டமேசை மாநாடு (Round Table Conference) நடைபெற்றது. இறுதியில் இந்திய அரசாங்கச் சட்டம் 1935 (Government of India act 1935) என்னும் அரசியல் சட்டம் இயற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. இவை யாவும் இந்தியத் தேசியவாத எழுச்சியைக் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல், பிரித்தானியாவின் ஆட்சியதிகாரத்தைப் பலப்படுத்துதல் என்ற மேற்கூறிய இரு நோக்கங்களினைக் கருத்தில்கொண்டே மேற்கொள்ளப்பட்டன. 1935 இன் இந்திய அரசாங்கச் சட்டம் ஒரு திருப்புமுனையாகும். இச் சட்டம் இந்தியாவிற்கு ஒரு சமஷ்டிக் கட்டமைப்பை (Federal Structure) வழங்கியது. பிரித்தானிய இந்தியாவின் (நேரடி ஆட்சியின் கீழ் இருந்த) மாகாணங்களையும் சமஸ்தான அரசுகளையும் (Princely States என இவை அழைக்கப்பட்டன) ஒன்றிணைத்த கூட்டாட்சி அல்லது சமஷ்டி (Federation) என்ற வகையான அரசியல் யாப்பு முறையை இது இந்தியாவிற்கு அறிமுகம் செய்தது. ஆயினும் சமஸ்தான அரசுகள், சமஷ்டியில் இணைவதற்கான சம்மதத்தை வழங்க மறுத்தமையால் திட்டமிட்டபடி 'Federation' என்ற அமைப்பு நடைமுறைக்கு வரவில்லை.

1935 சட்டம், சட்டவாக்க அதிகாரங்களை மத்திய சட்டசபை, மாநில சட்டசபைகள் என்ற இரு சட்டசபைகளுக்குப் பகிர்ந்தளித்தது. மாநில சட்டசபைகள் மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களைக் கொண்டிருந்தன. 1935 சட்டம், இந்திய அரசுக்கு (Government of India) மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கங்கள் என்ற கட்டமைப்பை உருவாக்கியது. இவ்வமைப்பில் சமஸ்தான அரசுகள் சேராமல் விலகியிருந்தன. இரண்டாம் உலக யுத்தம் ஆரம்பித்ததும் இந்த ஒழுங்கமைப்பு முடிவுக்கு வந்தது.

1947 ஆகஸ்ட் 15 ஆம் திகதி இந்தியா சுதந்திரம் பெற்றது. 1949 நவம்பர் 26 ஆம் திகதி இந்திய அரசியலமைப்புச் சட்ட அவையால் வரையப்பட்ட அரசியல் யாப்பு ஏற்கப்பட்டது. அது 1950 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் திகதி நடைமுறைக்கு வந்தது. இவ் அரசியல் யாப்பு பலம்பொருந்திய மத்திய அரசு அமைய வழிவகுத்தது. 14 மாநில அரசுகளும் 6 யூனியன் பிரதேசங்களும் இந்திய ஒன்றியத்தின் பகுதிகளாக அமைந்தன.

1955 இல் மாநில அரசுகளின் மறுசீரமைப்புக்கான ஆணைக்குழு (States Reorganization Commission) நியமிக்கப்பட்டது. பின்வரும் தத்துவங்களின் அடிப்படையில் பிராந்திய அலகுகளை மறுசீரமைக்க வேண்டும் எனச் சிபாரிசு செய்யப்பட்டது.

- இந்திய ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பையும் பேணுதலும் பலப்படுத்தலும்
- மொழிப் பண்பாட்டு ஒருமைத்தன்மையைப் பேணுதல்
- நிதி, பொருளாதாரம், நிர்வாகம் ஆகிய தேவைகளைக் கருத்தில் கொள்ளுதல்

மாநில அரசுகளை மறுசீரமைக்கும் போது மொழி என்ற காரணிக்கு முதன்மையளிக்கப்பட்டது. சமூக - கலாசார அடையாளமும் மொழியும் ஒன்றோடொன்று பிணைப்புடையனவாய் இருந்ததால் மொழிக்கு முதன்மை அளிக்கப்பட்டது. 1956 இல் இயற்றப்பட்ட மாநில அரசுகளின் மறுசீரமைப்புச் சட்டம் இந்தக் கருத்துக்குச் செயல்வடிவம் கொடுத்தது. குறிப்பிட்ட பிரதேசத்தின் மொழியை அடிப்படையாக வைத்து மாநில எல்லைகள் வரையறுக்கப்பட்டன. இவ்வாறு வரையறுத்தல் பொருளாதாரச் சமத்துவமின்மை, சமச்சீரற்ற அபிவிருத்தி, குறிப்பிட்ட சாதிகள் அல்லது வர்க்கங்களின் மேலாதிக்கம் போன்ற பல்வேறு பிரச்சினைகளிற்கு மொழி அடிப்படையிலான மறுசீரமைப்பு தீர்வாக அமையும் எனக்

கருதப்பட்டது. 1956 தொடக்கம் மாநில எல்லைகள் மீள்வரையறை செய்யப்படுவதும் புதிய மாநிலங்கள் உருவாக்கம் பெறுவதும் தொடர்ந்தது. அண்மைக்காலத்தில் வடகிழக்கு இந்தியாவில் 2000 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சத்தீஷ்கார், ஜார்க்கண்ட், உத்தராஞ்சல் என்னும் மூன்று மாநில அரசுகள் உருவாக்கப்பட்டன.

அரசியல் யாப்பை வரைந்தபோது அதன் வரைவில் தொடர்புபட்ட தலைவர்கள் இந்தியாவின் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் பேணுவதையே முதன்மையான அக்கறையாகக் கொண்டிருந்தனர். இந்தியா சுதந்திரமடைந்தபோது இந்திய மாநிலங்களைவிட 600 வரையான சமஸ்தான அரசுகளும் இருந்தன. இவை யாவற்றையும் ஒன்றிணைத்த ஐக்கியப்பட்ட அரசை அமைக்கும் தேவை இருந்தது. அரசியல் யாப்பு இந்தியாவை 'அரசுகளின் ஒன்றியம்' (Union of States) என்று குறிப்பிட்டது. அரசியல் யாப்பில் வரும் 'பெடரல்' (Federal) என்ற சொல் பலமுள்ள மத்தியைக் (Strong Centre) குறிப்பதாக அமைகிறது. 'ஒன்றியம்' என்ற சொல் திட்டமிட்ட நோக்கத்துடனேயே உபயோகிக்கப்பட்டது என அரசியல் யாப்பின் சிற்பியான பி.ஆர். அம்பேத்கர் குறிப்பிட்டார். இந்தியா ஒரு சமஷ்டியாக (Federation) உருவாகுதல் வேண்டும் என அரசியல் யாப்பை வரைந்த குழு கருதியபோதும், அச் சமஷ்டியின் உறுப்பு அலகுகளின் முன்மொழிவின் பயனான உடன்படிக்கையின்படி அரசியல்யாப்பு வரையப்பட்டதல்ல என்ற கருத்தை அக்குழு தெளிவுபடுத்த விரும்பியது.

சாதாரண நிலைமைகளின் கீழ் இந்தியா ஒரு சமஷ்டி முறைமையாகவே இயங்கி வருகின்றது. ஆனால் அசாதாரணமான சூழ்நிலைகளின்போது அது ஒற்றையாட்சி முறையாக மாறிவிடுகிறது (Transformed into a unitary state during extraordinary circumstances).

## இந்திய அரசியல் யாப்பின் சமஷ்டி இயல்புகள்

இந்தியா பாராளுமன்ற முறைமையைக் கொண்ட சமஷ்டி அமைப்புடைய நாடாகும். இந்தியாவில் (2004 இல் இக் கட்டுரை எழுதப்பட்டபோது, மொர்) 28 மாநில அரசுகள் உள்ளன. அவற்றுள் மூன்று மாநில அரசுகள் நாம் குறிப்பிட்டது போல் அண்மையில், 2000 ஆண்டில் உருவாக்கப்பட்டவை. மத்திய அரசு லோக்சபா, ராஜ்யசபா என இரு சபைகளைக் கொண்டது. ராஜ்யசபா மேற்சபையாகும்; இது மாநில அரசுகளின் பிரதிநிதிகளைக் கொண்டமைவது. கீழ்ச்சபையான லோக்சபா மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டமைவது. இந்திய அரசியல் யாப்பினை ஆராய்ந்த புலமையாளர்கள் இந்திய அரசியல் முறையை முழுமையான சமஷ்டியாகக் கருதமுடியாது எனக்குறிப்பிட்டதோடு அதற்குப் பலவித அடைமொழிகளைச் சேர்த்து அழைக்கலாயினர். அவ்வடைமொழிகள் Cooperative Executive, Emergent, Responsible, Parliamentary, Populist, legislative, Competitive, Fiscal, Restructured, Reluctant, Quasi எனப் பலவாகும். இவற்றுள் இறுதியாகக் குறிப்பிட்ட 'Quasi' என்ற அடைமொழியுடன் இணைத்து Quasi - Federalism எனக்கூறும்போது 'அரைகுறைச் சமஷ்டி' என்ற கருத்தாக அது பொருள்படும். இந்திய சமஷ்டியின் அடிப்படைக் கூறாக சமஷ்டி என்னும் தத்துவம் (Federal Principle) அமைந்துள்ள போதும், மாநில அரசுகளின் அதிகாரங்களையும் அவற்றின் நியாயாதிக்கத்தையும் (Jurisdiction) மீறும் வகையில் மத்திய அரசு சட்டங்களால் செயற்படுத்தப்படுகிறது என்பதையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

அரசியல் யாப்பில் உள்ள பல ஏற்பாடுகள் மத்திய அரசு மாநில அரசுகளின் உரிமைகளை மீறிச் செயற்படுவதற்கு உதவுவதாய் உள்ளன. இவ் ஏற்பாடுகள் சிலவற்றைக் குறிப்பிட்டுக் கூறலாம்.

### உறுப்புரை 249

இவ் உறுப்புரையின்படி, பாராளுமன்றத்தின் மேற்சபையான ராஜ்யசபாவின் தீர்மானத்தின் மூலம் மாநிலப் பட்டியலில் (State List) மாநிலங்களுக்கென ஒதுக்கப்பட்ட எந்த விடயம் பற்றியும் மத்தியப் பாராளுமன்றம் சட்டங்களை ஆக்கலாம். ராஜ்ய சபையின் இத்தீர்மானம் அச் சபையில் சமூகமாயிருந்து வாக்களிக்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையினரின் வாக்குகளால் நிறைவேற்றப்பட்டதாக இருத்தல் வேண்டும். சூழ்நிலையின் தேவையும் தேசிய நலனும் (Sake of expediency and national interest) அவ்வாறு மாநில அரசுப் பட்டியல் விடயங்களில் சட்டமியற்றுவதற்கான நிபந்தனையாக அமைவதையும் காணலாம். இவ்வாறு நிறைவேற்றப்படும் தீர்மானம் ஒரு ஆண்டுகாலத்திற்கு வலிதுடையதாக இருக்கும். அத் தீர்மானத்தை இன்னொரு தீர்மானம் மூலம் மேலும் ஒரு வருடத்திற்கு நீடிக்கும் அதிகாரம் ராஜ்ய சபாவிற்கு உள்ளது.

அரசியல் யாப்பின் ஏழாவது அட்டவணை (The seventh schedule) யூனியன் அரசாங்கத்திற்கும் மாநில அரசுகளுக்குமுரிய கடமைகளையும்

அதிகாரங்களையும் வகுத்துரைப்பதாக உள்ளது. 97 விடயங்கள் மத்திய அரசிற்குரியதாக (யூனியன் அரசு) குறிப்பிடப்படுகின்றன. மாநில அரசுக்குரியவை 66 எனவும், ஒருங்கிணை விடயங்கள் 47 எனவும் அட்டவனையில் குறிப்பிடப்பட்டுள்ளன. மத்திய அரசுப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள முக்கியமான விடயங்களாக பாதுகாப்பு, அணுசக்தி, இராஜதந்திர சேவை, குடியுரிமை, நாடுகடத்தல், மாநிலங்களிற்கிடையிலான வர்த்தகம், கணக்காய்வு, நாணயப் பரிவர்த்தனை, சட்டப்பணம் என்பன உள்ளன. மாநில அரசுப் பட்டியலில் பொது அமைதி (Public order), உள்ளூராட்சி, பொதுச் சுகாதாரமும் ஆரோக்கியமும், தொடர்புச் சாதனங்கள், விவசாயம், மீன்பிடி, மாநிலத்திற்கு உட்பட்ட வர்த்தகம், வரிவிதிப்பு, பொலிஸ் என்பன குறிப்பிடப்பட்டுள்ளன.

குற்றவியல் சட்டம், வனங்கள், பொருளாதாரமும் திட்டமிடலும், தொழிற் சங்கங்கள், கல்வி, தடுப்புக்காவலில் வைத்தல் ஆகியன ஒருங்கிணை விடயங்களாக குறிப்பிடப்பட்டவற்றுள் முக்கியமானவையாகும். இந்தப் பட்டியல்களில் உள்ள விடயங்கள் பற்றி அரசியல் யாப்புத் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. இத் திருத்தங்கள் மத்திய அரசின் (யூனியன் அரசின்) அதிகாரங்களைக் அதிகரிக்கும் நோக்குடன் செய்யப்பட்டனவாகும்.

## உறுப்புரை 250

மத்திய அரசு மாநில அரசுகளின் அதிகாரங்களில் தலையிடுவதற்கு உதவும் இன்னொரு அரசியல் உறுப்புரையாக 250 விளங்குகிறது. மாநில அரசு அட்டவணையில் குறிப்பிட்ட எந்தவொரு விடயம் பற்றியும் மத்திய அரசு அவசரகால நிலையின்போது சட்டம் இயற்றலாம் என உறுப்புரை 250 கூறுகிறது. பாராளுமன்றம் மாநில அரசுகளின் அட்டவணையில் உள்ள 5 விடயங்களை ஒருங்கிணை அட்டவணையிலும் 3 விடயங்களை மத்திய அரசு அட்டவணையிலும் சேர்த்துக்கொண்டது. 1954 இன் மூன்றாவது திருத்தச் சட்டம், 1956 இன் ஆறாவது திருத்தச் சட்டம், 1982 இன் நாற்பத்தி ஆறாவது திருத்தச்சட்டம் என்பன மூன்று அட்டவணைகளிலுமுள்ள விடயங்களில் மாற்றங்களை ஏற்படுத்திய அரசியல் யாப்புச் சட்டத் திருத்தங்களிற்கு உதாரணங்களாகும். 1976 ஆம் ஆண்டின் 42 ஆம் திருத்தம் 7 ஆவது அட்டவணையில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தியது. இத் திருத்தம் மூலம் கல்வி, வனங்கள், வனவிலங்குகள் பாதுகாப்பு, நிறைகளும் அளவுகளும் தரக்கட்டுப்பாடும் என்பன மாநிலப் பட்டியலில் இருந்து ஒருங்கிணை பட்டியலிற்கு மாற்றப்பட்டன. 1976 ஆம் ஆண்டின் 42 ஆம் திருத்தம் மத்திய அரசு இராணுவத்தை எந்தவேளையிலும் எந்த மாநிலத்திற்குள்ளும் இராணுவ நடவடிக்கைக்காக அனுப்பும் அதிகாரத்தை மத்திய அரசுக்கு வழங்கியது. இவ்வாறு அனுப்பப்படும் இராணுவத்தின் மீது மாநில அரசுக்கு எவ்வித கட்டுப்பாட்டு அதிகாரமும் இருக்கமாட்டாது.

## உறுப்புரை 356

மத்திய அரசு மாநிலங்களின் நியாயாதிக்கத்தில் தலையீடு செய்வதற்கு வழிவகுத்துள்ள இன்னொரு உறுப்புரை 356 ஆகும். இது 'ஜனாதிபதி ஆட்சி' (President's rule) பற்றியது. இதன் மூலம் மாநில அரசாங்கத்தின் அதிகாரங்களை மத்திய அரசு நேரடியாக கைப்பற்றலாம். இந்த உறுப்புரையை உபயோகித்து 100 இற்கு மேற்பட்ட தடவைகள் மாநில அரசாங்கங்களின் பதவி கவிழ்க்கப்பட்டன. 1994 இல் இந்திய உச்சநீதிமன்றம் முக்கியமான தீர்ப்பு ஒன்றை வழங்கியது. 'உறுப்புரை 356 இன்படி மாநில அரசாங்கம் ஒன்றைப் பதவியிலிருந்து நீக்குதல் முழுமையானதும் தடையற்றதுமான அதிகாரம் அன்று; அது நிபந்தனைக்குட்பட்டது (Not an absolute But a conditional power)' என்று தீர்ப்பளித்தது.

இந்திய அரசியல் யாப்பிற்கான திருத்தங்கள் மூன்று வகையில் நிறைவேற்றப்படலாம். ஒருவகைத் திருத்தம், வெறும் பெரும்பான்மை வாக்குகளின் அடிப்படையில் செய்யப்படுவதாகும். அரசியல் யாப்பின் சில ஏற்பாடுகள் இவ்வாறு வெறும் பெரும்பான்மையுடன் (Simple Majority) திருத்தக் கூடியவை. இரண்டாவது வகைத் திருத்தம், லோக் சபாவில் அல்லது ராஜ்ய சபாவில் முன்மொழியப்பட்ட மசோதா அவையில் சமூகமாயிருக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டதாக இருத்தல் வேண்டும். இதற்கு ஜனாதிபதியின் சம்மதம் வழங்கப்பட்டது. அது அரசியல் யாப்பின் திருத்தமாக அமையும். மூன்றாவதாக அமையும் திருத்தம், அரசியல் யாப்பின் சமஷ்டிக் கட்டமைப்பை (Federal Structure) மாற்றுவதாக அமையும் திருத்தமாகும். இத்தகைய திருத்தம் மேலே இரண்டாவது வகை திருத்தத்திற்கு உரிய

நிபந்தனைகளுடன் மேலதிகமாக இன்னொரு நிபந்தனையையும் கொண்டுள்ளது. இந்திய யூனியனின் மாநிலங்களின் அரைப்பங்கிற்குக் குறையாத மன்றங்களினால் ஏற்கப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும் என்பதே அந் நிபந்தனை. திருத்த மசோதா ஜனாதிபதியின் சம்மதத்திற்காகச் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் மேற்குறித்த நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்.

### மத்திய மாநில உறவுகளுக்கான சபை (Inter State Council)

மத்திய அரசுக்கும் மாநிலங்களுக்கும் இடையிலான உறவுகள் பிரச்சனைகளைத் தோற்றுவிப்பனவாய் இருந்துள்ளன. இக் காரணத்தால் உறுப்புரை 263 இன்படி 'ISC' என்று அழைக்கப்படும் மத்திய மாநில உறவுகளுக்கான சபை என்ற சட்டப்படியான அமைப்பை உருவாக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இச் சபையின் பணிகளாவன;

அ. மாநில அரசுகளுக்கிடையே எழும் பிரச்சினைகள் குறித்து விசாரணை செய்து ஆலோசனை வழங்குதல்.

ஆ. சில மாநிலங்களுக்கு அல்லது எல்லா மாநிலங்களுக்கும், மத்திய அரசுக்கும் ஒரு மாநிலத்திற்கும் அல்லது மத்திய அரசுக்கும் ஒரு மாநிலத்திற்கும், அல்லது மத்திய அரசுக்கும் எல்லா மாநிலங்களுக்கும் அல்லது மத்திய அரசுக்கும் எல்லா மாநிலங்களுக்கும் பொதுவானதான பிரச்சனைகள் பற்றி விசாரணை செய்து விளக்கமளித்தல்.

இ. பிணக்குக்குரிய ஒரு விடயம் பற்றிய கொள்கை அல்லது நடவடிக்கை குறித்து சிறந்த ஒழுங்கமைப்பை உருவாக்கும் வகையில் சிபாரிசுகளை வழங்குதல்.

### உச்சநீதிமன்றம் (Supreme Court)

இந்தியாவின் உச்ச நீதிமன்றம் இந்திய அரசியல் யாப்பின் காவலர் (Guardian) என்ற தகுதியுடையதாய் உள்ளது. உச்ச நீதிமன்றத்தில் பிரதம நீதிபதியும் 25 நீதிபதிகளும் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டு பதவி வகிப்பர். மாநிலங்களுக்கிடையே எழும் பிரச்சனைகளுக்கும் இறுதியான நடுத்தீர்ப்பை வழங்கும் அதிகாரம் உடையதாக உச்சநீதிமன்றம் விளங்குகிறது. பிறநாடுகளில் அதி உயர் நீதிமன்றங்களின் அதிகாரங்களினதும் நியாயாதிக்கத்தினதும் இயல்பையும் விரிவையும் விட இந்திய உச்சநீதிமன்றத்தின் அதிகாரமும் நியாயாதிக்கமும் விரிந்ததாக இருப்பதைக் காணலாம்.

### வரிவிதிப்பு - அதிகாரங்கள்

மத்திய அரசினதும், மாநில அரசுகளினதும் வரிவிதிப்பு அதிகாரங்கள் (Taxation Powers) தனித்தனியாக வேறாக்கப்பட்டுள்ளன. மத்திய அரசுப் பட்டியலில் வரி விதிப்புக்குரியனவான 12 விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. மாநில அரசுப் பட்டியல் 19 விடயங்களைக் குறிப்பிடுகிறது. நகரசபைகளும் உள்ளூராட்சி சபைகளும் வரிவிதிக்கும் அதிகாரங்களை உடையன. நிதி விடயங்களில் மத்தியப்படுத்தப்படுதல் (Centralisation) போக்குக் காணப்படுகிறது. இதில் மத்திய அரசாங்கத்தின் அதிகாரம் கூடியதாகக் காணப்படுகிறது. கடந்த 40 ஆண்டுகளின் நடைமுறைகளை அவதானிக்கும்போது சமஷ்டி எண்ணக்கருக்களுக்கு (Federal Concepts) மாறான நிர்வாக முறைமைகள் பொருளாதார நிறுவனங்களில் புகுத்தப்படுவதும், அவற்றை ஊக்குவிப்பதுமான போக்கு இந்தியாவில் காணப்படுகிறது.

### மத்திய நிதி ஆணைக்குழு

அரசியல் யாப்பின் உறுப்புரை 280, மத்திய நிதி ஆணைக் குழுவினை (Central Finance Commission) நியமிப்பதற்கான ஏற்பாடு உள்ளது. இவ் ஆணைக்குழு தவிசாளர் ஒருவரையும் நான்கு உறுப்பினர்களையும் கொண்டதாக இருக்கும். ஒவ்வொரு 5 ஆண்டுகளுக்கு ஒரு தடவை ஜனாதிபதி இவ் ஆணைக் குழுவை நியமனம் செய்வார். ஆணைக்குழு, மத்திய மாநில வருவாய்த்துறை உறவுகள் குறித்துச் சிபாரிசுகளை வழங்கும். இவ்வாறான சிபாரிசுகள் நிதி ஆணைக்குழுவினால் மத்தியினதும் மாநிலங்களினதும் நிதி நிலை பற்றிய விரிவான மதிப்பீடுகள் செய்தபின்னரும், மத்திய மாநில அரசுகளுடனும், நலன்சார்ந்த அக்கறையுடையோர் பலருடனுமான விரிவான கலந்துரையாடல்களின் பின்னரும் வழங்கப்படுகின்றன. எல்லா விதமான மத்திய வரிகளில் இருந்தும் தீர்வைகளில் இருந்தும் கிடைக்கும் வருமானத்தின் குறிப்பிட்டதொரு வீதம் மாநிலங்களுக்கு ஒதுக்கப்படுகிறது. 2002 ஆம் ஆண்டு 12 ஆவது நிதி ஆணைக்குழு நியமனம் செய்யப்பட்டது. இவ் ஆணைக்குழு தனது அறிக்கையை 2004 யூலை மாதம் சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அறிக்கை 2005-2006 முதல் 2010-2011 காலம் வரையான 5 ஆண்டு காலத்திற்கான மத்திய அரசு, மாநிலங்களுக்கு வழங்கும் வரி ஒதுக்கீடுகளைத் தீர்மானிப்பதற்கான வழிகாட்டியாக இருக்கும்.

மத்திய திட்டமிடல் ஆணைக்குழுவும்

மாநிலங்களின் தன்னாட்சிச் சபைகளும் (Autonomous Councils) மத்திய - மாநில உறவுகளில் முக்கியக் கருவிகளாக உள்ளன. இந்தியா சுதந்திரம் பெற்றபொழுது வறுமை, படிப்பறிவின்மை, உணவுப் பற்றாக்குறை, கைத்தொழிலில் பின்தங்கிய நிலை என்பனவற்றைக் கையாள்வதற்குத் திட்டமிடுதல் அவசியத் தேவையாக இருந்தது. திட்டமிடற் செயன்முறையை மேற்கொள்வதற்காக திட்டமிடல் ஆணைக்குழு 1951 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நிறுவப்பட்டது. இதன் பின்னர் இவ் ஆணைக்குழு 5 ஆண்டுத் திட்டங்களையும், ஆண்டுத் திட்டங்களையும் வரைந்தளித்தது. இத் திட்டங்களில் அரசுத்துறைக்கு அதிக வகிபாகம் வழங்கப்பட்டது. நிதியிடலுக்கான வரவு - செலவு ஏற்பாடுகள் செய்யப்படுவதற்கு முன்னர் திட்டமிடல் ஆணைக்குழு பெரிய திட்டங்களையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் அங்கீகரிக்க வேண்டும் என்ற நடைமுறை பின்பற்றப்பட்டது. திட்ட உதவியை நிர்ணயிப்பதும் ஒதுக்குவதுமே திட்டமிடல் ஆணைக்குழுவின் முக்கியமான பணியாகும். மொத்தத் திட்டமிடல் வளங்கள் வரையறுக்கப்பட்டனவாக இருந்தன. மாநிலங்களுக்கு வளங்களைப் பங்கீடு செய்வதில் சமத்துவமின்மை இருந்தது. இக்காரணத்தால் சமஷ்டி ஆட்சித் தொடர்புகளில் பிணக்குகள் தோன்றின.

## அண்மைக்கால அரசியல் இயங்கியலும் போக்குகளும்

இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னர் இந்தியாவின் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் பேணுதல் முதன்மையான பணியாக இருந்தது. இந்திய அரசியல் யாப்பு இந்திய ஐக்கியத்திற்கான ஒரு கருவியாக உபயோகிக்கப்பட்டது. இந்தியா முழுமைக்குமான ஒரே சீரான நிர்வாகத்தை செயற்படுத்த வேண்டிய தேவை இருந்தது. நிர்வாகம், தேர்தல் மூலம் ஜனநாயக வழியில் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட நிறுவனங்கள் ஊடாக நடத்தப்படுதல் வேண்டும். இந்நிறுவனங்கள் கிராமங்கள் அல்லது நகரங்கள் என்ற நிலையிலிருந்து மாவட்டங்கள், மாநில அரசாங்கம் என்ற நிலை வரை செயற்பட்டதோடு மத்திய அரசாங்க நிறுவனங்கள் வரை சங்கிலித் தொடர் போல் பரவியிருந்தது. இதனால் ஒரே சீரான நிர்வாகம் என்ற அறைகூவலை எதிர்கொண்டபோது, இந்திய அரசியல் யாப்புத் தோல்வி கண்டது எனலாம். அரசியல் யாப்பு விதிமுறைகள், இந்தியாவின் ஐக்கியம் என்ற நியாயத்தைக் காட்டி மீறப்பட்டன. அரசியல் யாப்பு ஏற்பாடுகள் தலைகீழாயின. இதன் விளைவாக 1980 களில் இந்தியா தீவிர நெருக்கடிகளை எதிர்கொண்டது. வன்முறைகள், பிரிவினைவாத அச்சுறுத்தல்கள், தன்னாட்சி, சுயநிர்ணயம், தீவிர அதிகாரப் பரவலாக்கம் ஆகிய பிரச்சினைகளை இந்தியா எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது. இப் பிரச்சினைகள் இந்தியாவின் ஐக்கியத்தைப் பேணுவதற்கும் அதனைப் பலமுள்ள தேசமாகக் கட்டி எழுப்புவதற்கும் சமஷ்டித் தத்துவம் (Federal Principle) மட்டும் உதவ முடியும் என்ற உண்மையை உணர்த்தின. சமஷ்டி அரசியல் முறை இந்திய நாட்டின் சமூக - பண்பாட்டுப் பன்மைத்துவத்தைப் பேணுவதோடு மாநிலங்களையும் இந்திய ஒன்றியத்தையும் ஐக்கியப்படுத்தவல்லது எனவும் கருதப்பட்டது. இதனால் இந்தியாவின் அறிவாளிகள், சட்டவாளர்கள் ஆகியோரும் சமஷ்டி முறையை மேம்படுத்தக்கூடிய நிறுவன அமைப்புகளை உருவாக்குவதில் தம் கவனத்தைச் செலுத்தினார்கள். அரசியல் கட்சிகளும் இதற்கு தமது ஆதரவைக் கொடுத்தன.

## பல்மட்ட சமஷ்டி ஆட்சி

1980 களில் இந்தியா பல்மட்ட சமஷ்டி ஆட்சி (Multi - Level federalism) என்ற இலக்கை நோக்கி நகரத்தொடங்கியது. சமஷ்டி எண்ணக்கரு, அதிகாரப் பரவலாக்கம் (Decentralisation) மூலமாக அதிகாரத்தை கிராமம் அல்லது நகரம் என்ற கீழ்மட்டம் வரை எடுத்துச்செல்ல வேண்டும் என்பதை முக்கியத்துவப்படுத்தும் கருத்தாக்கமாகும். மாநில அரசுக்கு அடுத்த நிலைக்கு (Substate level) அரச அதிகாரத்தைப் பகிர்வதற்கான திட்டங்கள் பற்றி ஆராயப்பட்டன. 1983 ஆம் ஆண்டில் சர்க்காரியா ஆணைக்குழு (Sarkaria Commission) நியமிக்கப்பட்டது. அவ்வாணைக் குழு மத்திய அரசு - மாநில அரசுகள் என்ற இரு மட்டச் சமஷ்டிச் சட்டகத்திற்கு (Two Level Federal Frame) அப்பால் செல்லும் நோக்கத்தைக் கொண்டிருக்கவில்லை. அது மத்திய அரசு - மாநில அரசுகள் இடையிலான அதிகார உறவுகள், கடமைகள், பொறுப்புகள் பற்றியே விசாரணை செய்தது. சர்க்காரியா ஆணைக்குழு மத்தியை நோக்கி அதிகாரங்கள் குவிக்கப்படும் போக்கைக் கண்டித்து விமர்சனம் செய்தது. மாநில அரசுகளுக்கு உரியதென ஒதுக்கப்பட்ட விடயங்களில் மத்திய அரசு என்ற நிலைக்கு அடுத்தான மக்களால் தெரிவுசெய்யப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கு (Local Elected Bodies) அதிகாரம்

பரவலாக்கப்பட்ட வேண்டும் என்ற கருத்தை ஆதரித்துப் பயனுள்ள கருத்துக்கள் ஆணைக்குழுவின் அறிக்கையில் (1988 அறிக்கை) கூறப்பட்டன. ஆயினும் சர்க்காரியா ஆணைக்குழு பல்மட்ட சமஷ்டி ஆட்சியை (Multilevel Federalism) ஒத்ததான கருத்துக்களை அறிக்கையில் கூறியிருப்பதாகக் கொள்ளமுடியாது.

1980 களில் இந்தியா பல்மட்ட சமஷ்டி ஆட்சி என்ற இலக்கை நோக்கி நகர்ந்து சென்றதை ஒரு முக்கியமான மாற்றம் என்றே கூறலாம். அண்மைக்காலத்தில் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நிறுவன மாற்றங்கள் விரிவானவையாகவும், ஜனநாயகப் பண்புடையனவாகவும், நிலைத்து நிற்கும் தன்மையுடையனவாகவும் அமைந்தன.

### பஞ்சாயத்துகளும், முனிசிப்பல் சபைகளும்

பஞ்சாயத்துக்களுக்கும் முனிசிப்பல் சபைகளுக்கும் இந்திய அரசியல் யாப்பின் அங்கீகாரம் இருக்கவில்லை. இவ்வாறு அங்கீகாரம் இல்லாத நிலை நாட்டின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் தடையாக இருந்தது. இந்தியாவின் அரசியல் யாப்பு மத்திய அரசு (யூனியன் அரசு), மாநில அரசுகள் என்ற இரு நிலைகளிற்கு மட்டுமே அங்கீகாரத்தை வழங்கியிருந்தது. 1980 களில் பஞ்சாயத்துகளுக்கும், முனிசிப்பல் சபைகளுக்கும் அரசியல் யாப்பு அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற கருத்து வலுப்பெற்றது. இது பற்றிய உரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டன. மேற்கு வங்காளம் (1978) கர்நாடகா (1987) ஆந்திரப்பிரதேசம் (1987) ஆகிய இடங்களில் உள்ளூராட்சி பற்றிய அளவு மீறிய ஆர்வம் கிளர்ந்தெழுந்தது.

1989 மே 15 ஆம் திகதி பிரதமர் ராஜீவ் காந்தி பஞ்சாயத்துகளுக்கு அரசியல் யாப்பு அங்கீகாரத்தை வழங்கும் நோக்குடன் 64 ஆவது திருத்தச் சட்ட மசோதாவை பாராளுமன்றத்தில் முன்மொழிந்தார். இது வரவேற்கத்தக்க முன்மொழிவாகும். ஆயினும் இம் மசோதாவிற்கு, இதில் உள்ள இரு குறைபாடுகள் காரணமாகக் கடும் எதிர்ப்புக் கிளம்பியது.

அ. இம் மசோதா மாநில அரசுகளை அலட்சியம் செய்யும் முறையில் பஞ்சாயத்துகளுடன் மத்திய அரசு நேரடியாகத் தொடர்பு கொள்வதற்கான ஏற்பாடுகளைக் கொண்டதாய் இருந்தது. மத்திய அரசு அதிகாரத்தை விரிவாக்குவதற்குப் பஞ்சாயத்துக்களைக் கருவியாக உபயோகிக்கும் எண்ணத்தை வெளிப்படுத்தியது.

ஆ. இந்தியா முழுமைக்கும் ஒரே சீரான பஞ்சாயத்து ஆட்சி நடைமுறைகளைக் கொண்டு வருவதற்கு இம் மசோதா முயற்சித்தது. வெவ்வேறு பகுதிகளின் தேவைகளுக்கு ஏற்றபடி மாநில அரசுகள் பஞ்சாயத்துகள் தொடர்பான சட்டங்களை இயற்றுவதற்கு மசோதா இடமளிக்கவில்லை.

அரசியல் கட்சிகள் இம் மசோதாவை எதிர்த்தன. அறிவாளிகளும், குடிமக்களும் இதற்கான எதிர்ப்பை வெளிப்படுத்தினர். லோக்சபாவில் இம் மசோதா மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டபோதும், 1989 ஒக்டோபர் 15 ஆம் திகதி ராஜ்ய சபாவில் இரு வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடிக்கப்பட்டது.

பஞ்சாயத்துக்களுக்கு அரசியல் யாப்பு அங்கீகாரம் வழங்கும் முயற்சி கைகூடாது போயிற்று ஆயினும் பல்மட்ட சமஷ்டி ஆட்சி (Multi Level Federalism) தொடர்பான பரிசோதனை முயற்சிகள் பல இடங்களில் மேற்கொள்ளப்பட்டன. இப் பரிசோதனைகள் சாதகமான விளைவுகளை ஏற்படுத்தின. டார்ஜீலிங் கோர்கா மலைநாட்டு கவுன்சில் (1988), போடாலான்ட் சுயாட்சிக் கவுன்சில் (1993) லடாக் சுயாட்சி மலைநாட்டு மாவட்ட கவுன்சில் (1995) ஆகிய உள்ளூராட்சி சபைகள் உருவாக்கப்பட்டன. இவை அதிகாரப் பரவலாக்கல் அலகுகளாகும். இவ்வாறான பல் அடுக்கு அமைப்புகள் உருவாக்கப்பட்டமை பல்மட்ட சமஷ்டி ஆட்சி என்ற கருத்துக்கு ஆதரவுப்பலம் சேர்ப்பனவாக அமைந்தது.

### 1990 களில் ஏற்பட்ட மாற்றங்கள்

1990 களில் வரலாற்றுத் திருப்பமாக அமைந்த மாற்றங்கள் ஏற்பட்ட. 1991 செப்டம்பர் மாதத்தில் பிரதமர் நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரஸ் அரசாங்கம் இரு மசோதாக்களை முன்மொழிந்தது. அவற்றுள் ஒரு மசோதா கிராம மட்டத்தில் செயற்படவேண்டிய மக்களால் தெரிவுசெய்யப்படும் பஞ்சாயத்துகள் தொடர்பானது. மற்றது நகரங்களின் உள்ளூராட்சி மன்றங்களான முனிசிப்பல் சபைகள் தொடர்பானது. இவையிரண்டும் பங்கேற்பு ஜனநாயகத்தை (Participatory Democracy) கிராமங்களிற்கும் நகரப்பகுதிகளிற்கும் எடுத்துச்செல்லும் நோக்கமுடையவை. இம் மசோதாக்கள் 1992 டிசம்பர் 23 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு 1993 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்தன. 73 ஆவது, 74 ஆவது திருத்தச் சட்டங்கள் என அழைக்கப்படும் இச்சட்டங்கள் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட

காலம் நடைபெற்ற விவாதங்கள் உரையாடல்கள் என்பனவற்றின் பெறுபேறாக அமைந்தன. மாநில அரசுகளின் பொறுப்பில் இருந்த 47 விடயங்கள் பஞ்சாயத்துகளிற்கும் முனிசிப்பல் சபைகளுக்கும் மாற்றுவதற்கு இத் திருத்தச் சட்டங்கள் உதவின. இத் திருத்தச் சட்டங்கள் பழங்குடிகள் வாழும் பகுதிகளுக்கும் (Tribal Areas) 1996 ஆம் ஆண்டில் விரிவாக்கம் செய்யப்பட்டன.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இத் திருத்தச் சட்டங்கள் மிக முக்கியமான மாற்றங்களுக்கு வழிகோலின:

1. பஞ்சாயத்துகளும் முனிசிப்பல் சபைகளும் அபிவிருத்திக்கான கருவிகள் அல்லது முகவர்கள் (Agents) என்று கருதப்பட்ட நிலையிலிருந்து 'தன்னாட்சி நிறுவனங்கள்' (Institutions of self govern ment) என்ற தகுதியுடையனவாக மாற்றம் பெற்றன.

2. பஞ்சாயத்துகளிற்கு உட்பட்ட கிராமங்களும் முனிசிப்பல் சபைகளின் வட்டாரங்களும் (Wards) ஜனநாயக முறைமையின் அடிப்படை அலகுகளாகச் செயற்படும் நிலை ஏற்பட்டது.

3. இவ்விரு அரசியல் யாப்புத் திருத்தச் சட்டங்களும் அரசியல் அதிகாரம் செயற்படும் புதிய அடுக்குகளை அல்லது மட்டங்களை (Tiers or Levels) உருவாக்கின. பஞ்சாயத்து முறையில் மூன்று அடுக்குகள் உருவாக்கப்பட்டன. கீழ் அடுக்கில் கிராமங்களும், அதற்கு அடுத்த இடைநிலையில் வட்டாரங்களும் (Blocks), மேல்நிலையில் மாவட்டங்களும் (Districts) அமைந்தன.

4. திருத்தச் சட்டங்கள் நாட்டின் ஜனநாயக அடித்தளத்தை விரிவாக்கம் செய்துள்ளன. பஞ்சாயத்துகளிலும் முனிசிப்பல் சபைகளிலும் உள்ள மூன்று மட்டங்களின் உறுப்பினர் பதவிகளுக்கு ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் தேர்தல் மூலம் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுகின்றனர். இவ்வாறு ஜனநாயகம் விரிவாக்கம் செய்யப்பட்டதன் பயனாக இதுவரை காலமும் பிரதிநிதித்துவம் வழங்கப்படாத அடிநிலைச் சாதிகளுக்கும், பழங்குடியினருக்கும், பெண்களுக்கும் ஒதுக்கப்பட்ட ஆசனங்கள் ஊடாகப் பிரதிநிதித்துவம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

5. ஒவ்வொரு மாநிலத்திற்கும் தனியான தேர்தல் ஆணைக்குழு அமைக்கப்பட்டது. இவ் ஆணைக்குழுக்கள் தேர்தல் மேற்பார்வை, தேர்தல் செயல்முறையைக் கொண்டியங்குதல், வாக்காளர் அட்டவணைகளைத் தயாரித்தல் போன்ற பணிகளை செய்து வருகின்றன.

6. இத் திருத்தச் சட்டங்கள் நிதி ஆணைக்குழுவினால் பஞ்சாயத்துகளுக்கும், முனிசிப்பல் சபைகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்வதற்கான கொள்கைகளையும் தத்துவங்களையும் வகுத்துரைத்தன. அத்தோடு மாவட்டத் திட்டமிடல் குழுக்களும் (District Planning Committees) அமைக்கப்பட்டன. பஞ்சாயத்துகளுக்கும் முனிசிப்பல் சபைகளுக்கும் மாநில அரசு வழங்கும் நிதிக்கொடைகள் முக்கிய நிதி மூலமாகும். இதனைவிட சில வரிகளின் வருமானத்தை பங்கீடு செய்தல், சில வரிகளை நேரடியாகவே அறவிடுதல் போன்ற ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.

நாம் மேலே குறிப்பிட்டது போன்று, அரசாட்சியின் ஜனநாயக அடித்தளம் விரிவாக்கப்பட்டு மூன்றாம் அடுக்கு அரசாங்கத்தின் ஆட்சி (Third Tier of Governance) செயல்முறைக்கு வந்தது. இதற்கு முன்னர் ஏறக்குறைய 4,963 பேர் பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் சட்டமன்ற உறுப்பினர்களாகவும் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்களாய் இருந்தனர். இப்போது ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை முப்பது லட்சம் பிரதிநிதிகள் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படுகின்றார்கள். இம் முப்பது லட்சத்தில் பத்து லட்சம் பேர் பெண்களாவார். முன்னர் விலக்கிவைக்கப்பட்ட சமூகங்களைச் சேர்ந்தோர் இப்போது நிர்வாக முடிவுகளை மேற்கொள்ளும் சபைகளில் உறுப்பினர்களாய் உள்ளனர். இந்தியா மத்திய அரசு, மாநில அரசுகள் என்ற இரு மட்டங்களிலான சமஷ்டி (Two Level Federalism) என்ற வகையிலிருந்து பல்மட்ட சமஷ்டி (Multi Level Federalism) என்ற வகைக்கு உயர்ந்துள்ளது. பஞ்சாயத்துகளும், முனிசிப்பல் சபைகளும் மூன்றாம் அடுக்கு அரசாங்கமாக விளங்குகின்றன.

பஞ்சாயத்துகளையும், முனிசிப்பல் பல் சபைகளையும் இயங்க வைத்து அவற்றுக்கு நிர்வாக அதிகாரங்களையும் நிதி அதிகாரங்களையும் கையளித்தல் 'நிர்வாக சமஷ்டியை' (Administrative Federalism) பலப்படுத்தலே அன்றி அரசாங்கத்தை உள்ளூர் மட்டத்திற்கு கொண்டுவருதல் எனக்கூறமுடியாது எனச் சில ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். ஏனெனில் சட்டங்களை இயற்றும் அதிகாரம் மாநில அரசுகளிடமே உள்ளது. பஞ்சாயத்துகளுக்கும் முனிசிப்பல் சபைகளுக்கும் தெளிவான வரையறுக்கப்பட்ட நிர்வாக, சட்டவாக்க, நிதி அதிகாரங்களோ அல்லது நீதி அதிகாரமோ கிடையாது. அவை அரசியல் யாப்பு அங்கீகாரத்தைப் பெற்றுள்ளன. அவற்றின் உறுப்பினர்கள் தேர்தல் மூலம் தெரிவு

செய்யப்படுகிறார்கள். இக் காரணங்களால் அவை மூன்றாம் அடுக்கு அரசாட்சியை (Third of Gover nance) நிறுவியுள்ளன எனக் கூறமுடியாது என்றும் வாதிடப்பட்டுள்ளது. ஆயினும் இந்த வாதம் பஞ்சாயத்துகளும், முனிசிப்பல் சபைகளும் ஏற்படுத்திய ஜனநாயக அரசியல் மாற்றங்களைக் கவனத்தில் கொள்ளவில்லை என்றே கருதவேண்டியுள்ளது.

மேற்குறித்த விமர்சனத்திற்கு மாறுபட்ட கருத்துடையவர்கள் பஞ்சாயத்துகளும் முனிசிப்பல் சபைகளும் இந்தியாவின் அரசியலமைப்பின் சமஷ்டி இயல்பை அதிகரிக்கச்செய்து பண்பு மாற்றத்தை (Qualitative Change) ஏற்படுத்தியுள்ளன எனக் கூறியுள்ளனர். ஒவ்வொரு மாநில அரசிலும் மாவட்டம், வட்டாரம் (Block) கிராமம் என்ற மூன்று அடுக்குகள் உருவாகியுள்ளன. இக் கட்டமைப்பையுடைய ஒவ்வொரு மாநிலமும் இந்திய ஒன்றியத்தின் சமஷ்டி முறையின் அங்கமாக இணைக்கப்பட்டுள்ளது. இது தனித்துவம் மிக்க சமஷ்டிப் பண்பாகும். இந்தியா 'கிராமசபா' (கிராமச் சபை) முதல் சமஷ்டிப் பாராளுமன்றமான லோக்சபா வரை ஜனநாயகச் செயல்முறையை வலுப்படுத்தக் கிடைத்த வாய்ப்பை பயன்படுத்த வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

பல்மட்ட சமஷ்டியை பயனுறுதி வாய்ந்ததாக ஆக்குவதற்கு மத்திய அரசாங்கம் மாநில அரசுகளுடன் அதிகாரங்களை சமத்துவ அடிப்படையில் பகிர்ந்து கொள்வதற்கு முன்வருதல் வேண்டும். சமஷ்டிச் சட்டகத்தைப் பலப்படுத்துவதற்கு புத்தாக்க முறையில் நிறுவனங்களை உருவாக்குதல் வேண்டும். இந்தியச் சமஷ்டி முறை பற்றிய ஆய்வாளரும் அரசியல் சட்ட நிபுணருமான ரஷீட்டீன் கான் (Rashideen Khan) பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"இந்தியா படிப்படியாக பரிணாம வளர்ச்சி பெற்றுவரும் சமஷ்டி அமைப்பை உடைய நாடு. அது ஒரு தேசம் (Nation) என்ற வகையில் அரை நூற்றாண்டு வாழ்வைக் கடந்துவந்துவிட்டது. இப்போது இந்தியா பல்மட்ட சமஷ்டி யுகம் என்ற கட்டத்தில் உள்ளது. அது வெறுமனே அரசுகளின் ஒன்றியம் (Union of States) என்ற நிலையில் இருந்து மாறிவிட்டது."

அரசியல் கட்சி முறையில் மாற்றம்

இந்திய சமஷ்டியின் இன்னோர் குறிப்பிடத்தக்க மாற்றம் அதன் அரசியல் கட்சி முறையில் ஏற்பட்ட மாற்றமாகும். 1977 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல் வரை இந்தியாவில் காங்கிரஸ் கட்சியின் மேலாதிக்கம் ஓங்கியிருந்தது. அதற்குப் பின்னர் கூட்டாட்சி அரசாங்கங்கள் பதவியேற்றன. மத்தியிலும் மாநிலங்களிலும் பல்கட்சிகளின் கூட்டணிகள் ஆட்சி அமைக்கும் போக்கு காணப்படுகிறது. இன்று காங்கிரஸ் கட்சி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு பிற கட்சிகளுடன் கூட்டணி அமைக்கவேண்டிய நிலை காணப்படுகிறது. அதனால் தனித்து ஆட்சியைக் கைப்பற்றவோ நீடித்து நிற்கவோ முடியாது (2004 ஆம் ஆண்டில் இந்தியாவின் அரசாங்கம் 24 கட்சிகளின் கூட்டு அரசாங்கமாக உள்ளது). இந்தியாவில் இன்று 550 பதிவுசெய்யப்பட்ட அரசியல் கட்சிகள் உள்ளன. அவற்றுள் 6 கட்சிகள் மட்டும் தேசியக் கட்சிகள் என்ற தகுதியை உடையவை. 40 கட்சிகள் மாநிலக் கட்சிகளாகும். மீதமுள்ள 504 கட்சிகள் மாநிலத்தின் ஒரு பிராந்தியத்தில் அல்லது பகுதியில் ஆதரவுப் பலம் உடைய கட்சிகளாகும். இன்று மாநிலக் கட்சிகளும் பிராந்தியக் கட்சிகளும் மத்திய அரசாங்கத்தில் குறிப்பிடத்தக்க அளவு செல்வாக்கைப் பிரயோகிக்கும் நிலையில் உள்ளன. இதனால் மத்திய அரசாங்கத்தின் பொறுப்புக்கூறல் (Account ability) அதிகரித்துள்ளது. குறிப்பிடத்தக்க அளவு பலமுள்ள ஒரு கட்சி அல்லது சில கட்சிகள் கூட்டரசாங்கத்திலிருந்து விலகும்போது அரசாங்கம் கவிழ்க்கப்படும். கொள்கை, மாநில நலன்கள் என்ற அடிப்படையில் மாநிலங்களின் பேரம்பேசும் சக்தி அதிகரித்துள்ளது.

### அரசியல் யாப்புத் திருத்தச் சட்டங்கள்

2000 - 2003 காலத்தில் நிறைவேற்றப்பட்ட சில அரசியல் யாப்புத்திருத்தச் சட்டங்கள் இந்திய அரசியலில் குறிப்பிடத்தகுந்த மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. எண்பதாவது திருத்தச்சட்டம் 2000 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டது. இச் சட்டம் மத்திய அரசின் வருமானத்தை முழுமையாக மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்க வழிசெய்துள்ளது. அரசியல் யாப்பின் எண்பத்தி நான்காவது திருத்தச்சட்டம் (2002) பாராளுமன்றத் தேர்தல் தொகுதிகளை மீள்வரையறை செய்வதை 2026 வரை பிற்போட்டுள்ளது. மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதில் பெரு முன்னேற்றத்தைச் சாதித்தவையான தென் மாநிலங்களின் சனத்தொகை, இதனைக் கட்டுப்படுத்த தவறிய வட மாநிலங்களோடு ஒப்பிடுகையில் சனத்தொகை வளர்ச்சி வேகம் குறைந்தவையாக

இருந்தன. இதனால் 2001 இல் பாராளுமன்றத் தேர்தல் தொகுதி மீள்வரையறை செய்யப்பட்டிருந்தால் தென் மாநிலங்கள் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தில் எதிர் மறையான பாதிப்புக்கு உட்பட்டிருக்கும். ஹிந்தி பேசும் வட மாநிலங்களின் பலம் கூடியிருக்கும். இக் காரணத்தினாலேயே 2026 வரை தேர்தல் தொகுதிகளின் மீள்வரையறை பிற்போடப்பட்டுள்ளது.

2003 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவ (திருத்தச்) சட்டம் (Representation of the people (Amendment) Act, 2003) குறிப்பிடத்தக்க ஒரு திருத்தச் சட்டமாகும். இச்சட்டம் ராஜ்யசபா தேர்தலில் திறந்த வாக்களிப்பு முறையை அறிமுகம் செய்தது. அத்தோடு இச்சட்டம் ராஜ்யசபா தேர்தலில் வேட்பாளராக நிற்பதற்கு வதிவிடத் தேவையை ஒழித்தது. முன்னர் ஒரு குறிப்பிட்ட மாநிலத்தின் ராஜ்யசபா பிரதிநிதியாக தெரிவு செய்யப்படும் ஒருவர் அம் மாநிலத்தில் வதிபவராக இருத்தல் வேண்டும் என்னும் வதிவிடத்தேவை இருந்தது. இத் திருத்தத்தின் பின் இந்தியாவின் எந்த மாநிலத்தில் வதிபவராக இருந்தாலும் வேறு ஒரு மாநிலத்திற்கான பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்படலாம். இத் திருத்தம் சமஷ்டி ஆட்சி அமைப்பின் அத்திவாரத்தையே தாக்குவதாக அமைந்துள்ளது என விமர்சிக்கப்பட்டுள்ளது.

2000 ஆண்டு பிப்ரவரி மாதம் அரசியல் யாப்பின் செயற்பாடு குறித்து மீளாய்வு செய்வதற்கான தேசிய ஆணைக்குழு (The National Commission to Review The working of the constitution) நியமிக்கப்பட்டது (நீதியரசர் வெங்கட செல்லையா ஆணைக்குழு - NCRWC). இவ்வாணைக்குழுவின் அறிக்கை 2002 ஆம் ஆண்டின் இறுதியில் வெளியாயிற்று. இவ்வறிக்கை மத்திய - மாநில அரசு உறவுகள் பற்றியும், அரசாங்கங்களுக்கு இடையிலான உறவுகள் பற்றியும், மிக முக்கியமான கட்டமைப்பு மாற்றங்களைச் சிபாரிசு செய்தது. பாராளுமன்றத்திலும், மாநிலச் சட்ட சபைகளிலும் செயல்திறன் வீழ்ச்சியைத் தடுப்பதற்காக குழு முறையில் (Committee System) பெருமாற்றங்களை இவ்வாணைக்குழு சிபாரிசு செய்துள்ளது. முன்னர் இருந்துவந்த குழுக்கள் முறையை ஒழித்துவிட்டு மூன்று குழுக்களை அமைப்பதற்குச் சிபாரிசு செய்யப்பட்டது. அவையாவன:

- அரசியல் யாப்புக்குழு (திருத்தங்கள் பற்றியது) (A constitution committee dealing with amendments)
- தேசிய பொருளாதாரக் குழு (A Committee on legislation) வெங்கட செல்லையா ஆணைக்குழு 'I.S.C எனப்படும் மாநிலங்களுக்கிடையிலான கவுன்சில் (Inter - State Council) மேலும் பலப்படுத்தப்பட வேண்டும்; அதனூடாக 'பொது நலன்கள் சார்ந்து மாநிலங்களுக்கிடையே புரிந்துணர்வும் ஐக்கியமும் வளர்க்கப்பட வேண்டும்' என்றும் சிபார்சு செய்தது. மாநிலங்களுக்கிடையே வியாபார வர்த்தக கட்டுப்பாடுகளை செயல்படுத்துவதற்கு ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும் எனவும் சிபாரிசு செய்யப்பட்டது.

## சர்வதேச உடன்படிக்கைகள்

மாநிலப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கும் விடயங்கள் தொடர்பாக மாநில அரசுகளின் அடிப்படை நலன்களை பாதிக்கின்ற (Vitally Affects The Interest of the states) சர்வதேச உடன்படிக்கைகளை மத்திய அரசு கைச்சாத்திடும் சந்தர்ப்பம் எழும்போது மாநிலங்களுக்கிடையிலான கவுன்சிலுடன் (ISC) உடன்படிக்கைகள் பற்றி முன்னரே கலந்துரையாட வேண்டும் என்ற வரவேற்கத்தக்க பிரேரணையை வெங்கட செல்லையா ஆணைக்குழு முன்மொழிந்தது. 1995 இல் மத்திய அரசாங்கம் உலக வர்த்தக தாபனத்துடன் (WTO) செய்துகொண்ட உடன்படிக்கை மாநிலங்களோடு கலந்தாலோசிக்காது செய்யப்பட்டது. இதனை எதிர்த்து பஞ்சாப் மாநிலமும், தமிழ்நாடு மாநிலமும் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தன. இவ் வழக்குகளின் விசாரணை இன்னும் முடிவுறாத நிலையில் இருப்பது இவ்விடத்தில் சுட்டிக்காட்டப்படத்தக்கது.

அண்மைக் காலத்தில் மாநிலங்களுக்கிடையிலான கவுன்சில் (ISC) சில முற்போக்கான முடிவுகளை எடுத்துள்ளது:

அ. மாநிலங்களின் முதலமைச்சர்களுடன் கலந்தாலோசித்த பின்னரே ஆளுநர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும் என்ற விதப்புரை செய்யப்பட்டது. இதற்கிசைவாக அரசியல் யாப்பைத் திருத்தப்போவதாக மத்திய அரசு வாக்குறுதி அளித்தது.

ஆ. ஸ்ரீநகரில் நடந்த மாநில அரசுகளிற்கிடையிலான கவுன்சில் கூட்டத்தில் உறுப்புரை 356 இன் 'அவசரகால ஏற்பாடுகள்' பற்றிக் கலந்துரையாடப்பட்டது. அவசரகால நிலை பற்றிய வரையறைகள் பற்றிக் கலந்துரையாடப்பட்டு, மத்திய அரசு தன்னிச்சையான முறையில் அவசரகால ஏற்பாடு

அதிகாரங்களை பிரயோகிப்பதை கட்டுப்படுத்த வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

இ. அவசரகால நிலையின் போது, மத்திய அரசாங்கப் படைகளை ஒரு மாநிலத்திற்குள் அனுப்புவது மத்திய அரசாங்கத்தின் சிறப்புரிமை என்பது ஏற்கப்பட்டது. ஆனால் அவசரகால நிலையில்லாத வேறு சந்தர்ப்பங்களில் மாநிலங்களுடன் முன்கூட்டியே கலந்துரையாடுதல் வரவேற்கத்தக்கது என முடிவுசெய்யப்பட்டது.

மாநிலங்களிற்கிடையிலான கவுன்சில் சர்க்காரிய ஆணைக்குழுவின் சிபாரிசுகளில் 247 சிபாரிசுகளை ஏற்றுக்கொண்டுள்ளது. அவற்றுள் 170 சிபாரிசுகள் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

சமஷ்டி ஆட்சிக் கட்டமைப்பில் மாநிலங்கள் இப்போது கூடியளவு முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளன என்பது மாநிலங்களுக்கிடையிலான கவுன்சிலின் (ISC) அண்மைக்காலப் பணிகள் எடுத்துக்காட்டுகின்றன.

இந்தியாவில் சமஷ்டிச் செயன்முறை (*Federalisation Process*) மிக வேகமாக இடம்பெறுகிறது. பின்வரும் நிறுவனங்களும் பதவி நிலையினரும் இச் செயல்முறையில் பிரதான வகிபாகத்தை ஏற்றுச் செயற்படுவதைக் காணலாம்.

1. இந்திய ஜனாதிபதி
2. இந்திய உச்சநீதிமன்றம்
3. மத்திய தேர்தல் ஆணைக்குழு
4. தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு
5. இந்தியாவின் செயல் துடிப்புடைய சிவில் சமூக அமைப்புகள் (*Civil Society Organizations*)
6. ஊடகங்கள்

இந்திய சமூகம் செயல் துடிப்புடையதாக உள்ளது. இங்கு இடம்பெறும் அரசியல் மோதல்கள், மாநிலங்களின் பலத்தை அதிகரித்து மாநிலங்கள் மீது மத்திய அரசு கொண்டுள்ள பிடியைப் பலவீனப்படுத்த உதவி வருகின்றது.

### ஜோர்ஜ் மத்தியு (George Mathew)

இந்தியாவின் சமஷ்டி பற்றிய நிபுணத்துவ ஆலோசகர். இவர் 2004 ஆம் ஆண்டு எழுதிய '*India*' (*Republic of India*) என்ற தலைப்பிலான கட்டுரை '*The Federal Idea*' என்ற தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. இத் தொகுப்பு இலங்கை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமும் (CPA), கனடா ஒட்டாவா நகரில் தலைமையகத்தைக் கொண்ட சமஷ்டி ஆட்சி நாடுகளின் மன்றமும் (*The Forum of Federations*) இணைந்து தயாரித்து வழங்கப்பட்டது.

### உசாத்துணை


1. *Arora, Balveer, "Adapting Federalism to India: Multilevel and Asymmetrical Innovations" in Balveer Arora and Douglas V. Verney (eds), Multiple Identities in a Single State: Indian Federalism in Comparative Perspective, New Delhi: Konark Publishers,* **1995.**
2. *Dua B.D and M.P. Singh (eds), Indian Federalism in the New Millennium, New Delhi: Manohar* **2003.**
3. *Government of India, Review of the Constitution: Report of the National Commission to Review the Working of the Constitution (Website: http://lawmin.nic.in/ncrwc/finalreport.htm).*
4. *Khan, Rasheeduddin, Rethinking Indian Federalism, Shimla: Indian Institute of Advanced Studies,* **1997.**
5. *Federal India: A Design for Change, Delhi: Vikas Publishing House Pvt Ltd.,* **1992.**
6. *Mathew, George, "Federalism, Local Government, and Economic Policy" in C. Steven LaRue (ed.), The India Handbook, Chicago: Fitzroy Dearborn Publishers,* **1997.**
7. *"Institutions of SelfGovernment in India: Towards Multilevel Federalism," in Review of Development and Change, Vol. II. No.* **2** *(JulyDecember* **1997***). Chen nai: Madras Institute of Development Studies.*
8. *Mukarji, Nirmal and Balveer Arora (eds), Federalism in India: Origins and Development, New Delhi: Centre for Policy Research and Vikas Publishing House Pvt. Ltd.,* **1972.**
9. *Mukarji, Nirmal, "The Third Stratum," Bombay: Economic and Political Weekly,* **1** *May* **1993.**
10. *Santhanam, K., UnionState Relations in India, New Delhi: Indian Institute of Public Administration and Asia Publishing House,* **1960.**
11. *http://www.parliamentofindia.nic.in/*
12. *http://www.presidentofindia.nic.in/*


(தொடரும்.)

மலையக மக்கள் தென்னிந்தியாவிலிருந்து கோப்பித் தோட்டங்களிலும் தேயிலைத் தோட்டங்களிலும் கூலி வேலைக்காக அழைத்துவரப்பட்டு 200 ஆண்டுகள் ஆகியிருக்கின்றன. 'இந்திய வம்சாவளித் தமிழர்கள்' எனும் பெயரோடு ஆரம்பித்த இரு நூற்றாண்டுப் பயணம் 'மலையகத் தமிழர்' எனும் தேசிய அடையாளமாக இவர்களை முன்னிலைப்படுத்தும் அரசியற் பாதைக்கு வழி செய்திருக்கிறது. இந்த இடைப்பட்ட காலத்து அரசியல், சமூக, பொருளாதார வரலாற்றில் வீழ்ச்சிகளும் உண்டு; எழுச்சிகளும் உண்டு. இதனை நினைவுபடுத்துவதாகவும் மீட்டல் செய்வதாகவும் 'மலையகம் 200' நிகழ்வுகள் உலகு தழுவியதாக நடைபெற்றன. இவை மலையக மக்களின் பிரத்தியேக கலை, கலாசாரம், பண்பாடு, சமூக – பொருளாதார நிலை, அரசியல் போன்ற விடயங்களில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள், பின்னடைவுகள், செல்ல வேண்டிய தூரம் போன்ற விடயங்களை வெளிப்படுத்துவதாக அமைந்தன. அதற்கேற்ப, விம்பம் அமைப்பு எழுநாவின் அனுசரணையுடன் கட்டுரைப் போட்டியொன்றை நடத்தியது. இப் போட்டியில் வெற்றி பெற்ற வெவ்வேறு எழுத்தாளர்களின் கட்டுரைகள் 'மலையகம் 200' எனும் தலைப்பில் தொடராக எழுநாவில் வெளியாகின்றன.

சுப்ரமணியம் தவச்செல்வன்

# இருநூறு வருடகால மலையகச் சமூகமும் இலக்கியமும் : ஒரு காலக்கணக்கெடுப்பு

'மலையம் 200' நிகழ்வுகளை முன்னிட்டு, விம்பம் அமைப்பினரால் எழுநாவின் அனுசரணையுடன் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் சுப்ரமணியம் தவச்செல்வம் அவர்களால் எழுதப்பட்ட 'இருநூறு வருடகால மலையகச் சமூகமும் இலக்கியமும் : ஒரு காலக்கணக்கெடுப்பு' எனும் இக் கட்டுரை முதற் பரிசைப் பெற்றது. இக் கட்டுரை எழுநாவில் மூன்று பகுதிகளாக வெளியாகின்றது.

## மலையக தமிழரின் வருகை தொடர்பான கால முரண்கள்

தெற்காசியாவின் மிக முக்கியமான தேசிய இனங்களில் ஒன்றாக விளங்கும் 'மலையக சமூகம்' இருநூறு வருட வரலாற்றைக் கொண்ட ஒரு இனமாகும். காலனித்துவ பொருளாதார முறைமையின் காரணமாக சமூக அசைவுக்குட்படுத்தப்பட்ட ஒரு இனக்குழுமமாக மலையக சமூகத்தை நாம் வரையறை செய்யலாம். இன்று இருநூறு வருட வரலாற்றை தொடும் மலையகத் தமிழ்ச் சமூகமானது இன்னும் தமக்கென சரியானதொரு இலக்கிய வரலாற்று



கங்காணிகளுடன் தோட்டத்தொழிலாளர்கள்

Image source - www.namathumalayagam.com

எழுதியலை உருவாக்கிக்கொள்ள முடியாத நிலையிலுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மலையக மக்களது வரலாற்றை எழுதவிளைந்தவர்கள் அவர்களது வருகைக்காலத்தை பல்வேறு விதமாக வரையறைச் செய்துள்ளனர். மலையகத் தமிழரின் வரலாற்றின் ஆரம்பம் பற்றிய அம்பலவானர் சிவராஜாவின் கட்டுரையில் இவ்விடயம் பற்றி அவர் கலந்துரையாடுகிறார். அக்கட்டுரையில் எஸ். நடேசன் அவர்கள் 1838ம் ஆண்டென்றும், பஸ்தியாம்பிள்ளை 1824 - 1931ம் ஆண்டுக்குமிடையில் தென்னிந்தியாவிலிருந்து தொழிலாளர் வருகை தந்ததாகவும் எடுத்துக்காட்டுகிறார்கள். (1966-77) கோப்பிகால வரலாற்றை எழுதும் இரா. சடகோபன் அவர்கள் தனது 'கண்டிச்சீமையிலே' என்ற நூலில் கோப்பிப் பயிர்ச்செய்கை தொடங்கிய 1823 ஆண்டை மலையகத் தொழிலாளர்களது வருகையின் ஆரம்பகாலம் எனத் துணிகிறார் (2014). இவ்வாறு துணியும்போது, ஜோர்ஜ் பேர்ட் என்ற ஆங்கிலேயர் 1823ம் ஆண்டு கம்பளை சிங்கப்பிட்டிய என்ற இடத்தில் முதலாவது கோப்பித்தோட்டத்தை உருவாக்கும்போதே உத்தியோகபூர்வமாக தென்னிந்தியாவிலிருந்து தொழிலாளர்கள் அழைத்து வரப்பட்டதாகவும், அக்காலப்பகுதியே மலையக தமிழர் வரலாற்றின் தொடக்க காலம் என்றும் பெரும்பாலான ஆய்வாளர்கள் வலியுறுத்தியுள்ளனர். 1823ம் ஆண்டை வரலாற்றின் தொடக்க காலம் என்று நாம் கணித்தால் அதற்கு முற்பட்ட டச்சுக் காலத்திலும் தென்னிந்தியாவிலிருந்து தொழிலாளர்கள் வருகை தந்துள்ளதாக தகவல்கள் கிடைக்கின்றன. குறிப்பாக நோர்த் (1798-1805) 30,000 பவுண்ட் செலவழித்து தொழிலாளர்களைக் கொண்டுவந்ததாகவும் 1818ம் ஆண்டு கிளர்ச்சியின்போது ஆளுநர் ரொபட் பிறவுண்ட்ரிக் 5000 தென்னிந்திய தொழிலாளர்களை வரவழைத்ததாகவும் எட்வட் பார்ன்ஸ் காலத்தில் (1824-1931) 150 தொழிலாளர்கள் கொண்டுவரப்பட்டதாகவும், தென்னிந்தியாவில் இருந்து தொழிலாளர்கள் புகையிரத பாதைகள் அமைப்பதற்காக வரவழைக்கப்பட்டதாகவும் ஆங்கிலேய துரைமார்களின் குறிப்புகளில் கிடைப்பதாக சாரல்நாடன் அவர்கள் எழுதுகிறார் (2011:09).

ஐரோப்பியர் காலத்திற்கு முன்பே தமிழகத்திலிருந்து வந்த தொழிலாளர்கள் இலங்கையில் கறுவாப்பட்டை உரித்தல், அதனை பாடம் செய்தல் ஆகிய தொழில்களை மேற்கொண்டிருந்ததாகவும் இவர்கள் 'சாலியர்' என அழைக்கப்பட்டதாகவும் பின்னர் அவர்கள் கரையோரச் சிங்களவர்களுடன் கலந்துவிட்டதாகவும் குமாரி ஜெயவர்த்தனா குறிப்பிடுகிறார் (2009:04).

தென்னிந்தியாவிலிருந்து வெவ்வேறு தொழில்களுக்காக தொழிலாளர்கள் பல்வேறு காலகட்டங்களில் அழைத்துவரப்பட்டிருந்தபோதிலும் அவர்கள் எங்கிருந்து வந்தார்கள் என்பது பற்றிய விரிவான குறிப்புகள் கிடைக்காத நிலையும் பெருந்தோட்டத்துறைக்குள் அவர்கள் நிலைப்படுத்தப்படாத தன்மையும் சிலர் குறிப்பிட்ட காலப்பகுதியில் வந்து மீண்டும் சென்றதாலும் மலையக சமூக வரலாற்றில் அவர்களை இணைத்துப்பார்ப்பதில் பல்வேறு சிக்கல்கள் உள்ளன. இரண்டாவதாக மலையகத்தவர்கள் பற்றிய ஆங்கிலத் துரைமார்கள் எழுதிய குறிப்புகளை விரிவாக ஆராயாத நிலைமை தற்போதைய எமது ஆய்வாளர்கள் மத்தியில் காணப்படுகின்றது. ஆகவே அவற்றை மீள்வாசிப்புச் செய்யும்போது மலையகத் தமிழர்களின் வருகையின் ஆரம்பகாலம் தொடர்பான காலமுரண்பாடுகளைப் பார்க்கலாம். தற்போதைய நிலையில் கோப்பிப் பயிர்ச்செய்கையின்போது அவர்கள் பெருந்தோட்டப் பகுதிகளில் நிலைப்படுத்தப்பட்ட 1823ம் ஆண்டு காலப்பகுதியினையே மலையகத் தமிழர்களது வரலாற்றின் தொடக்க காலமாக கொள்ளவேண்டியுள்ளது.

## கோப்பிக் காலச் சமூகமும் இலக்கியமும்

மலையகத் தமிழ்ச் சமூகத்தின் இருப்பின் ஆரம்ப அடையாளமாகவும், இலங்கையில் அவர்களது தொழிற்துறை மற்றும் வாழ்வியல் பண்பாட்டு நிலைமைகளை உருவாக்கிக்கொள்ளவும், இங்கு வசிக்கின்ற ஏனைய இனக்குழுக்களைப் போல தம்மையும் நிலைநிறுத்திக் கொள்வதற்கும் கோப்பிப் பயிர்ச்செய்கை பிரதானமான தொழிற்துறையாக அமைந்தது. இலங்கையில் கோப்பிக்கு முன்னதாக பல சிறு பயிர் செய்கைகளை டச்சுகாரர் மேற்கொண்டிருந்த போதிலும் பாரியளவான நிலம் கோப்பிக் காலப்பகுதியிலேயே பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்பட்டிருந்தது (1865-1869). இக்காலத்தில் கோப்பி பயிரிடப்பட்ட அளவு

*2,43,000 ஏக்கராகும். பெருந்தோட்டத்துறை (Plantation Sector) என்றதொரு பிரிவு கோப்பிக்கு பின்னரே எமது வாழ்வியலுடன் ஒன்றிணைகிறது. ஜோர்ஜ் போட் கம்பளையில் (1823) கோப்பியை பயிரிட்டது முதல் கண்டி, நுவரெலியா, பலாங்கொடை, பதுளை என்று ஐம்பதுக்கும் மேற்பட்ட தோட்டங்கள் கோப்பி பயிர்ச்செய்கைக்காக விஸ்தரிக்கப்பட்டதாக பேர்குஸன் தனது நூலில் குறிப்பிடுகிறார் (1859). இவ்விஸ்தரிப்பினையடுத்தே இலங்கைக்கு ஒப்பந்த அடிப்படையிலும் முறையற்ற விதத்திலும் தென்னிந்தியாவிலிருந்து தொழிலாளர்கள் தொடர்ச்சியாக வருகை தந்தனர். கோப்பி பயிர்ச்செய்கை வளர்ச்சியுடன் பெருந்தோட்டத்துறை வளர்ச்சிபெறத் தொடங்கியதுடன் பெருந்தோட்டத்துறை சார்ந்த கைத்தொழில்களும் பல்வேறு உப தொழிற்துறைகளும் உருவாகத் தொடங்கின.*

*கோப்பிச் செய்கை ஆரம்பத்தினையடுத்து இந்தியாவிலிருந்து கட்டம் கட்டமாக பெரும்பாலான தொழிலாளர்கள் வருகை தந்தனர். அவர்களது வருகையின்போதே, விபத்தில் பலர் இறந்தமையை ஆங்கிலத் துரைமார்களின் குறிப்புகளின் ஆதாரங்களுடன் இரா. சடகோபன் ஆராய்ந்துள்ளார். கோப்பி காலத்திலேயே தொழிலாளர்களை அடிமைகளாக நடத்த ஆரம்பித்தனர். குறிப்பாக அதிக நேரம் வேலை வாங்கப்பட்டமை, முறையான குடியிருப்பு இல்லாமை, கழிவகற்றல் கட்டமைப்பின்மை போன்ற நிலைமைகளால் கொலரா நோய்ப்பரவல், காடுகளில் பாம்புக்கடி, மிருகங்களுக்கு பலியாதல், விசக்கடிகளுக்கு உள்ளாதல் போன்ற காரணங்களினால் பலர் உயிரிழந்ததாக வரலாற்றுத் தகவல்கள் கிடைக்கின்றன. "1837ம் ஆண்டுக்கு பின்னர் சுமார் பத்து இலட்சம் இந்தியத் தொழிலாளர்கள் இலங்கைக்கு வந்துள்ளனர். அவர்களில் 2,50,000 பேர் வரை கல்லறைகளில் சமாதியாகிவிட்டனர்" பேர்கூஸன், (1859, சடகோபன் 2014:71). இவ்வாறு கோப்பிப் பயிர்ச்செய்கை ஆரம்பம் முதல் அதன் அழிவு வரை தொடக்ககால மலையகத்தில் பெரும் மனித அவலங்களும், மரணங்களும் மலிந்திருந்தமை பிரதான கணக்கெடுப்பாக அமைகிறது.*

*கோப்பிக் காலத்து இலக்கியச் சாட்சியங்கள் : வாய்மொழிப் பாடல்கள், துரைமார் குறிப்புகள், படைப்பு முயற்சிகள்*

*தமிழகத்திலிருந்து தொழிலாளர்கள் இலங்கை வந்து கண்டிச்சீமையில் (மலையகத்தில்) குடியேறிய பின்னர், அவர்கள் படைத்த முதலாவது மக்கள் இலக்கியம் நாட்டார் பாடலாகும். வாய்மொழி இலக்கியமான இந் நாட்டார் பாடல்களை மக்கள் நேரடியாகவே பாடியுள்ளனர். இந்தியாவிலிருந்து கண்டிச்சீமையை அவர்கள் வந்தடையும் வரை அனுபவித்த துயரங்கள் (கடல் காத்து வீசையில கண்ணுரெண்டும் சுத்துதடி, குடிச்சு வந்த கஞ்சி கொட கொமட்டு வெளியாச்சுதடி), கண்டிச்சீமையில் அனுபவித்த துயரங்கள், கோப்பிக் காலத்து வாழ்வியல் நிலைமைகள், கங்காணி, கண்டாக்கு, துரைமார்களின் அடக்குமுறைகளை வெளிப்படுத்தும் பாடல்களையும் தமிழ் நாட்டில் இருந்தபோது அனுபவித்த சுதந்திரமான வாழ்க்கைமுறை கண்டிச்சீமைக்கு வந்ததும் எவ்வாறு மாறுபடுகின்றதென்பதையும் பல்வேறு கொடுமை நிலைமைகளின் சாரத்தையும் இப்பாடல்கள் வெளிப்படுத்தின. குறிப்பாக அவர்கள் பாடிய நாட்டார் பாடல்களில் இறுதி வரிகள் ஒவ்வொன்றும் இதனை தெளிவுபடுத்துகின்றன.*

*"ஒதைச்சான்யா சின்னதொர"*

*"மூட்டெலும்ப முறிக்கிறானே"*

*"பொல்லாப்பு நேர்ந்ததையா"*

*"வேகுதையா என் மனசு"*

*"ஏண்டி வந்த கண்டிச்சீமை"*

*"பெத்த தாயே நா மறந்தேன்"*

*"அண்ணனை தோத்த மலை"*




**கோப்பி உற்பத்தியில் ஈடுபடும் பெண்கள்**

Image Source - roar.media

போன்ற வாய்மொழிப் பாடல்களின் இறுதித் தொடர்கள் இதற்குரிய சான்றுகளாய் அமைகின்றன. இன்றைய மலையகத் தமிழர்களின் ஆரம்பகால வாய்மொழி இலக்கியங்களாக காணப்பட்ட நாட்டார் பாடல்கள் இலங்கை வருகையையும் கோப்பிக்கால அவலங்களையும், பின்னால் தேயிலைக் காலத்து வாழ்வியலையும் வெளிப்படுத்தியவையாக அமைந்தன. தமிழகத்தில் அவர்கள் பாடிவந்த பாடல்களே இலங்கை வாழ்வியல் மாற்றங்களுக்கேற்ப மாற்றிப் பாடப்பட்டவையாகவும் காணப்படுகின்றன.

"ஏத்தமடி கோட்டமலை"

"ஏத்தமடி பெத்தராசி"

ஆரம்பகால மலையகத் தொழிலாளர்களின் வாழ்க்கையின் வலிகளையும் அதன் உயிரோட்டத்தையும் முழுமையாக வெளிப்படுத்துபவையாகவே இந்நாட்டார் பாடல்கள் காணப்படுகின்றன.

### மலையகத்தின் முதல் நூல் பற்றிய கணக்கெடுப்பு

வாய்மொழி இலக்கியப் பாரம்பரியத்தைக் கொண்ட மலையகச் சமூகத்தில் எழுதப்பட்ட முதலாவது நூலாக 1869ம் ஆண்டு ஆபிரஹாம் ஜோசப் என்ற தோட்டத்து கண்டக்டர் எழுதிய 'கோப்பி கிருஷிக் கும்மி' எனும் நூலை அடையாளப்படுத்துகின்றார் மு. நித்தியானந்தன் (2014). இந்த நூலை மலையகத்தின் முதலாவது நூலாக கொள்வது பெரும் அபத்தமாகும். கோப்பிப் பழம் பழுத்து அதனைப் பிடுங்கும் பருவத்தில் தொழிலாளர்கள் மகிழ்ச்சியாக கும்மிக்கொட்டிப் பாடுவதையும், தொழிலாளர்கள் தமது உள்ளத்தில் எழும் உணர்வுகளை தொழில் களத்தில் பாடுவதையும் ஆட்சேபகரமான பாடல்களாக எழுதுகிறார் ஜோசப் (கண்டக்டர்). அதனை ஆதரித்து, ஆபாசகரமான பாடல்களாக குறிப்பிடுகிறார் அந்நூல் பற்றி எழுதும் மற்றொரு கண்டக்டர். இது இவ்வாறிருக்க உண்மையான கும்மிப்பாடல்களின் அமைப்பு, உள்ளடக்கம் முதலியவற்றிலிருந்து வேறுபட்ட பாடல்களை ஆபிரகாம் ஜோசப் இயற்றி எழுதியிருப்பதோடு இப்பாடல்கள் மக்கள் சார்பற்றதாகவும் அவர்களுக்கு எதிரானதாகவும் அமைவதோடு தோட்டத்து அதிகாரிகள் மற்றும் பிரித்தானிய 'அரசாதரவு' நூலாகவே அதனை கொள்ளக்கூடியதாயுள்ளது. கோப்பிப் பயிர்ச்செய்கையை திறம்பட மேற்கொள்வதற்கான வழிகாட்டி நூலாகவே கோப்பி கிருஷிக் கும்மியை ஆபிரகாம் ஜோசப் கருதுகிறார்.

"பெரிய கண்காணிமாரே யென்னச்

சின்ன கண்காணிமார்களே நீர்

வரியொழுங்காய்ச் சனங்கள் யாரையும்

வருத்தி வேலைகள் கொண்டுவீர்"

என்று ஜோசப் எழுதும் வரிகளில் இக் கும்மிநூல் யாரை முதன்மைப்படுத்துகிறதென்பதை விளங்கிக்கொள்ளமுடியும். அதுபோலவே காடுவெட்டும் போது, முதல் நீர் ஓடியும், வேலைசெய்யப் பல, நட்டிடு கண்கள், சாயாமல் வை போன்ற பாடல்களையும் நாம் எடுத்துக்காட்ட முடியும். தொழிலாளர்களுக்கெதிராக கங்காணிகளை வழிநடத்தும் கண்டாக்டர் ஒருவரின் குரலாக ஒலிப்பதால் ஜோசப்பின் இந் நூலை ஆதரித்து எழுதியவர்களும் அதுபோன்ற ஒரு நூலை வரவேற்க துணிபவர்களும் அவ் வர்க்கத்தினராகவே (கண்டக்டர், துரைமார்) விளங்குகின்றனர். இதே காலத்தில் 1869 கொழும்பிலிருந்து வெளியாகிய 'முனியாண்டி இதழ்' தொழிலாளர்களின் குரலாக ஒலித்தமையை பலர் சுட்டிக்காட்டுகின்றனர். மு. நித்தியானந்தனின் கூலித்தமிழ் நூல் பற்றி மதிப்பீடு செய்யும் எல். சாந்திகுமார் அவர்கள், அவரது முதல் நூல் பற்றிய ஆய்வானது மக்களின் செழுமைமிக்க வாழ்வியல் சார்ந்த கலாசாரங்களை பின்தள்ளி அல்லது திரிபுபடுத்தி மலையக மக்களை ஒரு கூலிக் கலாசாரிகளாக உருவகிப்பதில் போய் முடியுமென்கிறார் (2022:259).

### ஆங்கிலத் துரைமார் எழுத்தாக்கங்கள்

மலையகத்தின் முதல் நூல் பற்றிய தேடலை சற்று விரிவுபடுத்தி பார்க்கின்றபோது கோப்பிக் காலத்தையொட்டி எழுதப்பட்ட பல்வேறு ஆவணங்களை துழாவ வேண்டியுள்ளது. 1900 ஆண்டுகள் வரை துரைமார்களால் எழுதப்பட்ட டயறிக் குறிப்புக்கள், வரலாற்று குறிப்புக்கள், கட்டுரைகள், களக்குறிப்புக்கள், பயணக் குறிப்புக்கள் முதலிய புனைவுசாராத (அபுனைவு) எழுத்துக்களையும், வில்லியம் நைட்டன் எழுதிய 'இலங்கையில் காட்டு வாழ்க்கை', டொனவன் மோல்ட்ரிச் எழுதிய கசந்த கோப்பி (Bitter Berry Bontage) முதலிய புனைவுகலந்த எழுத்துக்களையும் நாம் எந்த வரிசையில் இணைப்பது? இவர்களது எழுத்துக்களும் பதிவுகளும் கோப்பிக் காலத்தில் வாழ்ந்த மலையகத் தொழிலாளர்களது பிரச்சனைகளையும் அவர்களது அவல வாழ்க்கையையும் மையமாகக் கொண்டவை. 'டொரிங்டன்', 'தோமஸ் பெர்விக்', 'வெண்டோர்ட்' முதலிய பிரித்தானிய துரைமார்களின் எழுத்துக்கள் மக்கள்

சார்பானவையாகவே அமைகிறது. தோட்டத்து துரைமார்களால் தொழிலாளர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் மற்றும் அநீதிகள் அவர்களது வாழ்க்கை முறையில் காணப்படும் அவலங்கள், மரணித்தவர்கள் பற்றிய புள்ளிவிபரங்களை இந்த ஆவணங்களே எமக்கு தருகின்றன. குறிப்பாக கோப்பிக்கால வரலாறு பற்றி எழுதிய இரா. சடகோபனது நூலும் இந்த ஆவணங்களையே ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டவை.

டொனவன் மோல்ட்ரிச் அவர்கள் பத்திரிகை நிருபராகப் பணியாற்றியபோது தோட்ட மக்களின் அவலங்களை நேரடியாகவே அவதானித்து எழுதினார். அவர் Times of Ceylon பத்திரிகையில் "தொழிலாளர் உடல் நலத்திற்கு காட்டிய ஆர்வத்தை அந்த மக்களுடைய சமூக முன்னேற்றத்தில், பொதுநலம் சார்ந்த ஆர்வமாக காட்டுவதற்கு அவர்கள் தவறிப்போயினர்" என்று துரைமார் குறித்து எழுதுகிறார். ஏனஸ்ட் ஹக்கால் (Ernst - Haeckel, 1860 - 1870) என்பவர் "கோப்பித் தோட்டங்களில் தொழில் புரியும் பெண்கள் இயற்கை வனப்பு மிகுந்தவர்கள் எனினும் அவர்களது முகங்களில் சோகம் குடிகொண்டிருப்பதை என்னால் காணமுடிந்தது. கிராமத்துச் சிங்களக் கன்னியர்களிடம் கண்ட சிரிப்பை கோப்பி நிலத்து கோதையரிடம் நான் கண்டதில்லை" என்று எழுதுகிறார். ஆங்கிலத் துரைமார்களால் எழுதப்பட்ட ஆவணங்கள் கோப்பிக் கால மலையக சமூகம் பற்றிய மதிப்பீட்டுக்கு மிகவும் அவசியமானவை. இயற்கை எழில், பயன் அனுபவம், பொருளாதார நடவடிக்கை, தொழிலாளர் பற்றிய பதிவுகள் என்பவை மீள ஆய்வு செய்யப்படவேண்டும். ஆங்கிலத் துரைமார்களின் இராச்சியமாக இருந்த கோப்பிக் காலத்தில் துரைமார்கள் அனைவரும் தொழிலாளர்களுக்கு எதிராகவே இருந்தார்கள் என்று கூற முடியாது. பலர் தோட்டங்களில் நடக்கும் அவல நிலையைக் கண்டு அத்துரைமார்களுக்கு எதிராகக் கருத்துக்களை தெரிவிப்பதோடு தொழிலாளர்கள் சார்பான பல கருத்துக்களையும் வெளிக்கொண்டு வந்தவர்களாகவே மதிப்பிடப்படுகின்றார்கள்.

கோப்பிக்காலத்து மலையகச் சமூகம் மற்றும் இலக்கியங்கள் பற்றிய கணிப்புத் தொடர்பில் மேற்கூறப்பட்ட மூன்று விதமான இலக்கியங்களில் வாய்மொழிப்பாடல்கள் மக்கள் இலக்கியமாகவும், துரைமார்களால் எழுதப்பட்டவை மக்கள் சார்புடைய எழுத்தாவணங்களாகவும், ஆபிரகாம் ஜோசப் முதலியோரால் எழுதப்பட்டவை மக்களுக்கு எதிரான எழுத்தாகவும் அவதானிக்க முடிகிறது.

### தேயிலைச்சமூகம் : தொடக்ககால எழுத்து முயற்சிகள்

1823ம் ஆண்டு 'ஜோர்ஜ்பேர்ட்' கோப்பிப் பயிர்ச்செய்கையை ஆரம்பித்தது போலவே 1867ம் ஆண்டு 'ஜேம்ஸ் டெய்லர்', ஹோஹெட்ட பிரதேசத்தில் லூல்கந்தலா தோட்டத்தில் தேயிலைப் பயிர்ச்செய்கையை 50 ஏக்கரில் ஆரம்பித்தார். மலையகத்தின் தாழ்நிலப் பிரதேசங்களில் ஆரம்பிக்கப்பட்ட தேயிலைப் பயிர்ச்செய்கை மிக விரைவில் 3000 அடி முதல் 6000 அடி வரையான உயர்மலைப் பிரதேசங்களிலும் பயிரிடப்பட்டது. 1870ம் ஆண்டுகளில் அட்டன் பிரதேசங்களில் ஆரம்பிக்கப்பட்ட தேயிலை 1924ல் இரத்தினபுரிவரை பரந்த பயிர்செய்கையானது. 1978ம் ஆண்டு 4700 ஏக்கராக இருந்த தேயிலைப் பயிர்நிலம் 1971ம் ஆண்டில் 5,97,171 ஏக்கராக விஸ்தரிக்கப்பட்டமையால் தேயிலைப் பயிர்ச்செய்கை உற்பத்தி மற்றும் அதனுடன் தொடர்புடைய பல தொழில்கள் ஆண்டு முழுவதும் நடைபெற்றது. இதனால் மீண்டும் பல்வேறு காலகட்டங்களில் தொழிலாளர்கள் கண்டிச் சீமைக்கு வருகைத்தர ஆரம்பித்தனர். கோப்பிக் காலத்தைப் போலவே தேயிலைக் காலத்திலும் தொழிலாளர்கள் பெரும் துன்பங்களை அனுபவித்தனர். எனினும் தேயிலைப் பயிரிடலுக்குப் பின்னரே பெருந்தோட்டத்துறை என்ற ஒரு பொருளாதாரத் துறை உருவாகத் தொடங்கியது. பெருந்தொகையான தொழிலாளர்களது எண்ணிக்கை பெருந்தோட்டத் துறைகளில் நிலைப்படுத்தப்பட்டதுடன் இலங்கையை நிரந்தர வாழிடமாகக் கொள்ளக்கூடிய மனநிலைகளும் தொழிலாளர்களிடையே உருவாகத் தொடங்கியது. 1911ம் ஆண்டு மலையகத் தமிழர்களின் எண்ணிக்கை 5,28,024 ஆக இருந்ததாகக் கூறப்படுகிறது (க.மோகன்ராஜ், 1984:29). தேயிலை பயிரிடப்படும் நிலப்பரப்பு, தொழிற் துறையின் விரிவாக்கம், தொழிலாளர்களின் எண்ணிக்கை முதலிய அடிக்கட்டுமானம் சார்ந்த கூறுகளால் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையில் (தேயிலை) உற்பத்தி அதிகரிக்கத் தொடங்கியது. மேலும் பெருந்தோட்டத் தொழிற் துறையில் இறப்பர், தெங்கு போன்ற பயிர்ச்செய்கைகளும் மேற்கொள்ளத் தொடங்கியமையால் பெருந்தோட்டங்கள் விஸ்தாரணம் மிக்கதாக அமைந்தன.

கோப்பிக் கால இலக்கியத் தோற்றுவாயின் சாட்சியங்களாக அக்கால வாய்மொழிப்பாடல்கள் விளங்கியதைப்போல தேயிலையுடனான வாழ்க்கை நிலைமைகளையும் இப்பாடல்களுக்கூடாக மக்கள் வெளிப்படுத்தத் தவறவில்லை. இன்று எமக்கு கிடைக்கக்கூடிய பெரும்பாலான வாய்மொழிப்பாடல்களில் அதிகமானவை தேயிலைத் தோட்டத்துப் பாடல்களாகவிருப்பது குறிப்பிடத்தக்கது.

1. “கொழுந்து வளர்ந்திருச்சு
   கூட போட நாளாச்சு”
2. “சேந்து நெரே புடிச்சு
   சிட்டா பறக்குறாளே”
3. “காலையிலே நெரே புடிச்சு
   காட்டு தொங்க போய் முடிச்சு
   கூடே நெறயலயே இந்த
   கூனப்பய தோட்டத்திலே”
4. “இஸ்டோரும் கட்டியாச்சு
   இஞ்சிநீரும் பூட்டியாச்சு
   இளவட்டப் பெண்டுகளா எலே
   பொறுக்க வந்திடுங்க”
5. “ஓடி நெற புடிச்சு
   ஒரு கூடே கொழுந்தெடுக்க
   பாவி கணக்கப்புள்ள
   பத்துராத்த போடுறானே”

**(தொகுப்பு : சி.வி. வேலுப்பிள்ளை,1983)**

தேயிலை பெருந்தோட்ட உருவாக்கம், அதன் தொழிற்துறை விரிவாக்கம், தொழிற்சாலைகள் உருவாக்கம், தொழிலாளர்களது ஈடுபாடு, அவர்கள் அனுபவித்த துன்பங்களை தேயிலைக் காலத்து வாய்மொழிப் பாடல்கள் யதார்த்தமாகவே வெளிப்படுத்தின.

### பத்திரிகை எழுத்தின் தொடக்கம்

கோப்பிக் காலம் முதல் தேயிலை உற்பத்திக் காலத்தின் கால் நூற்றாண்டுகள் வரை மலையக சமூகத்தின் இலக்கிய முயற்சிகள் பிரித்தானியர்களது இலக்கிய எழுத்துகள் மற்றும் தொழிலாளர்களின் வாய்மொழிப் பாடல்களாகவே அமைந்திருந்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் இந்நிலை சற்று மாறுகின்றது. மலையகத்தின் ஆரம்ப காலத்து எழுத்து முயற்சிகள் பத்திரிகை எழுத்துகளாகவே அமைந்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் மலையகத் தொழிலாளர்களை மையமாகக்கொண்டு அவர்களது வாழ்க்கை பற்றிய பதிவுகளை வெளிப்படுத்தும் வகையிலே பல்வேறு பத்திரிகைகள் வெளிவந்தன. இவை கொழும்பைத் தளமாகக் கொண்டு இயங்கின. அச்சுப் பதிப்புகளும், சிறு பிரசுர முயற்சிகளும் இக்காலத்தில் வெளிப்படத் தொடங்கியதும் பத்திரிகைகளுடன் சிறிய பதிப்பு முயற்சிகளும் வெளிவரத் தொடங்கின.

தேயிலைத் தோட்டத் தெம்மாங்கு (1912), தேயிலை கொய்யும் தெம்மாங்கு (1908), கும்மியோ கும்மியோ கும்மி கோப்பிக் காட்டுக் கும்மி (1918), குலவிளக்கு கும்மி (1922), தொழிலாளர் சட்ட கும்மி (1931), முத்துமாரியம்மன் கும்மி (1938), பஞ்சக் கொடுமைச் சிந்து (1919), நொண்டிச் சிந்தும் கும்மியும் (1920) என்ற தலைப்புகளில் பி. பண்டாரம், கே.எம். ஜபார், வில்சன் ஆகியோர் மக்கள் படும் துன்பங்களையும் பஞ்சக் கொடுமையினால் ஏற்பட்ட பரிதவிப்புகளையும், இரவில் வண்டிப்பாதை அமைப்பதில் படும் துயரங்களையும் புத்தக வடிவில் வடித்துள்ளனர். இவ்விதம் வெளியான பிரசுரங்கள் எல்லாமே கும்மி, தெம்மாங்கு, சிந்து என்ற பாடல் வடிவங்களில் அமைந்திருப்பதை அவதானிக்கலாம். தமிழ் மக்களிடையே ஆழ வேரூன்றியிருக்கும் பண்பாட்டு அம்சங்களையும் நாட்டுப்பாடல்களின் செல்வாக்கையும் அடியொற்றியே மலையகத்து ஆரம்ப எழுத்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன (சாரல்நாடன்: 2014,20).

இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் மலையக தொழிலாளர்களது பிரச்சனைகளும் அவர்களைப் பற்றிய விடயங்களும் எழுத்துப் பதிவுகளாக வெளிவரத் தொடங்கின. அவ்வாறான தொடக்கத்தை உருவாக்குவதில் அக்கால பத்திரிகைகளுக்கு முக்கிய இடம் உண்டு. லங்காமித்திரன் (1916), ஜனமித்திரன் (1918), தேசநேசன் (1921), தேசபக்தன் (1924), இலங்கை இந்தியன் (1928), ஜனநேசன் (1928) போன்ற பத்திரிகைகள் தோன்றி மக்களிடையே விழிப்புணர்வை உண்டாக்கின (மேலது: பக்.22). லோரி முத்துகிருஷ்ணா, சத்தியவாகீஸ்வரய்யர், நெல்லையா ஆகிய பத்திரிகையாசிரியர்கள் செயற்பட்டதுடன் நல்லம்மா போன்ற பெண் ஆளுமைகளும் இப் பத்திரிகைகளில் தொழிலாளர்களைப் பற்றி தொடர்ந்து எழுதினர். குறிப்பாக இலங்கை இந்தியன் (1928) பத்திரிகையில் இலங்கையில் வாழும் இந்தியப் பெண்கள் பற்றியும் அவர்களது வாக்குரிமைப் பிரச்சனை பற்றியும் நல்லம்மாவினது தொடர் கட்டுரைகள் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. அதே பத்திரிகையில் என்.எம். ஹைதரி அவர்கள் ‘இலங்கை வாழ் இந்தியரின் நிலை’ என்ற

தலைப்பிலான தொடர் கட்டுரைகளை எழுதினார். 'இந்தியத் தமிழர்களுக்காக குரல் எழுப்பிய முதல் பத்திரிகையாளர்' என்ற தலைப்பில் மு. நித்தியானந்தன் அவர்கள் கருமுத்து தியாகராச செட்டியாரைக் (1893-1974) குறிப்பிடுகிறார். 1918ம் ஆண்டு அவர் குடிவரத்து தொழிலாளர் கமிட்டியின் முன்னிலையில் சாட்சியமளிக்கையில் "நான் இலங்கைத் தோட்டங்களில் இந்திய தொழிலாளர்கள் பற்றி மூன்று பிரசுரங்களையும், மண்டபம் நோய்த்தடுப்பு முகாம் கஷ்டங்கள் பற்றி ஒரு பிரசுரத்தையும் வெளியிட்டுள்ளேன். இந்தியத் தொழிலாளர்கள் பற்றிய பிரச்சனையைக் கடந்த 3 ஆண்டுகளாக ஆராய்ந்து வந்திருக்கிறேன்" என்று கூறியதை அறிய முடிகிறது (மு. நித்தியானந்தன்:2014:99).

தேயிலைக் காலத்தின் தொடக்கம் முதல் இருபதாம் நூற்றாண்டின் கால் நூற்றாண்டு வரையில் மலையகத் தொழிலாளர்கள் பற்றிய எழுத்துப் பதிவுகள் பத்திரிக்கையிலும் சிறுநூல் பிரசுரங்களிலுமே வெளிவந்தன. இம்முயற்சிகள் கொழும்பில் வணிகம் செய்யவந்த செட்டிமார்கள், தோட்டத் தொழிற்துறை சாராத, மற்றும் அங்கு வசிக்காத ஒரு பிரிவினராலேயே மேற்கொள்ளப்பட்டமை இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கதாகும். ஆகவே ஆரம்பகால எழுத்து முயற்சிகள் கல்விகற்ற, தோட்டத் தொழிலாளர்கள் பற்றி அக்கறை கொண்ட ஒரு சாராரினாலே மேற்கொள்ளப்பட்டமையை இங்கு அறியமுடிகிறது.

### பெருந்தோட்டத்துறை விரிவாக்கம் : சிறுமுதலாளிகளின் வருகையும் தொழிலாளிகளின் வாழ்க்கையும்

இருபதாம் நூற்றாண்டின் முதலாம் தசாப்தத்தில் மலையகத் தோட்டப்பகுதிகளில் கல்வியறிவற்றோர் எண்ணிக்கை 100% இருந்ததாகக் கூறப்படுகிறது. இக்காலப்பகுதியில் பெருந்தோட்டத்துறை விரிவாக்கபட்டமையால் போக்குவரத்துத் துறை, ரயில்வே பாதை அமைப்பு, வண்டிப்பயணம், தேயிலையோடு இணைந்த கைத்தொழிற்துறைகள் உருவாக்கம் பெறத் தொடங்கின. இதே சந்தர்ப்பத்தில் கரையோரப் பகுதி சிங்களவர்கள் இக்கைத்தொழில் முயற்சியில் ஈடுபட்டதுடன் சிலர் பெருந்தோட்டத்துறையில் முதலீடு செய்யக் கூடிய முதலீட்டாளர்களாகவும் இருந்தனர். சால்ஸ் டீ சொய்சா, யெரொனிஸ் பீரிஸ் ஆகியோர் பிரதானமாக பெயர் குறிப்பிடக்கூடிய முதலாளிகளாக காணப்பட்டதோடு சைமன் பெர்னான்டோ, ரிச்சர்ட் ஸ்டுவார்ட் பீரிஸ், ஹரமானிஸ் சொய்சா, சுசூ சொய்சா, யொகான்ஸ் டிமெல், அண்ட்ரிஸ் பீரிஸ், யக்கோப் டிமெல், யே.பி ஒபய சேகர, ஜி.எல். ஒபயசேகர, சொலமன் டயஸ் பண்டார நாயக்க ஆகியோர் மலையகப் பகுதியில் முதலீட்டுச் செயற்பாட்டில் ஈடுபட்ட கரையோரச் சிங்களவர்களாக காணப்பட்டனர் (குமாரி ஜெயவர்த்தனா, 2009).

கரையோரச் சிங்களவர்களான சிறுமுதலாளிகள் நிலங்களைக் கொள்வனவு செய்ததுடன் தமது முதலீட்டை நிறுத்திக் கொள்ளவில்லை. அதுவரையில் கரையோரப்பகுதிகளில் தாம் மேற்கொண்டிருந்த சாராயம் வடித்தல் மற்றும் அதன் விற்பனைகளை பெருந்தோட்டப் பகுதிகளுக்கும் விஸ்தரித்து சாராயத் தவறணைகளையும் குத்தகைப் பெற்றனர். 20ம் நூற்றாண்டின் முற்பகுதியில் 7,00,000 மக்கள் எண்ணிக்கையைக் கொண்ட பெருந்தோட்டத்துறையில் மதுபான விற்பனை அதிக இலாபத்தை ஈட்டுவதற்கு வாய்ப்பாயமைந்தது. நாளாந்தம் அதிகமாக தனது உடலுழைப்பை வழங்கிய தொழிலாளர்களது கடினமான உடலுழைப்பு அவர்களை மதுவுக்கு அடிமையாக்கியது. தொழிலாளர்களுக்கு சுதந்திரமற்றதொரு சுரண்டல் முறையை உருவாக்கிய பெருந்தோட்டத்துறையில் தொழிலாளர்கள் அடிமை முறையாகவே நடத்தப்பட்டனர். இந்த அடிமைமுறையை நீட்சிபெறச் செய்வதில் சாராய விற்பனையும் இணைத்துக்கொள்ளப்பட்டது.
தோட்டப்புறங்களில் சாராயத் தவறணைகள் அமைத்தமை பற்றியும் தொழிலாளர்கள் மதுவுக்கு அடிமையானமை பற்றியும் பெர்கூஸன், அக்கால கவர்னர் வில்லியம் கிரகெரி, ஹியூ டிங்கர் போன்ற பிரித்தானியர்கள் பல்வேறு தளங்களில் குறிப்புகளை எழுதியுள்ளனர். அக்கால பத்திரிகையான 'சிலோன் ஒப்சேவர்' பத்திரிகையாசிரியர் பெர்கூஸன் தொழிலாளர்களின் குடிப்பழக்கம் தொடர்பாக ஆய்வொன்றை மேற்கொண்டு கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.
தோட்டத்துரைமார்களிடமிருந்து வந்த பல கடிதங்களில், தனது தோட்டத்தில் சாராயத் தவறணையை தாமே நடத்துவதற்கு அனுமதி கேட்டு எழுதப்பட்டிருந்ததாக கவர்னர் வில்லியம் கிரகெரி குறிப்பிடுகிறார். சாராயத் தவறணைகளால் ஏற்பட்ட தொல்லைகள் பற்றிய குறிப்பொன்று இவ்வாறு அமைகின்றது.

“மது மலிவாகவும் தாராளமாகவும் கிடைத்தது. அது சக்திவாய்ந்ததொரு வஸ்து. வேலை முடிந்ததும் தொழிலாளர்களில் பலர் அது தரும் வெறிமயக்கத்தில் ஆழ்ந்துவிடுவார்கள். கூலியாட்களுக்கு உயிர்பாற்றலைத் மது வழங்கவில்லை. அது அவர்களை மதிமயக்கம் செய்து மறதி எனும் மாய உலகிற்கு இட்டுச்சென்றது” (ஹியு டிங்கர்,1920).

பெருந்தோட்டத்துறை விஸ்தரிப்புடன் இலங்கையிலுள்ள சுதேசிகளின் முதலாளித்துவச் சிந்தனையும் வளர்ச்சிபெறத் தொடங்கியது. அதன் துரித வளர்ச்சியில் சாராய வியாபாரம் முன்னிலை வகித்ததாக அறியமுடிகிறது. ஒரு புறம் தொழிலாளர்களின் உழைப்பை கங்காணிகளின் ஊடாக பிரித்தானிய காலனியம் உரிந்ததென்றால் மறுபுறம் அவர்களது கூலிகளை சுதேச முதலாளித்துவம் அபரிமிதமாகச் சுரண்டியது. ஆகவே, இக்கால மலையகத் தொழிலாளர்களது வாழ்க்கை சீரழிந்த நிலையை உருவாக்கியதோடு அவலங்களின் மேல் அவலங்கள் நிறைந்ததொன்றாகவே மாறியது.

### தொழிலாளர் போராட்டங்களின் ஆரம்பமும் தொழிற்சங்கம் பற்றிய சிந்தனைகளும்

பெருந்தோட்டத்துறையின் விரிவாக்கமும் வளர்ச்சியும் இலங்கையில் பல்வேறு தொழிற்துறைகளை உருவாக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. 19ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் தொழிலாளர்கள் தமது முதலாவது எதிர்ப்பு நடவடிக்கையாக வேலை நிறுத்தங்களை மேற்கொண்டிருந்தனர் (சுருட்டுத் தொழிலாளர்கள் (1896), அச்சுத் தொழிலாளர்கள் (1896), துறைமுகத் தொழிலாளர்கள் (1898)). இதன் தொடர்ச்சி 20ம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் வெவ்வேறு துறைசார்ந்த தொழிலாளர்களும் தமது எதிர்ப்பை தெரிவிக்க வழிகோழியது. 1901ம் ஆண்டு துறைமுகத் தொழிலாளர் போராட்டம், 1906ம் ஆண்டு வண்டித் தொழிலாளர்களது போராட்டம் (5000 தொழிலாளர்கள் ஈடுபட்டனர்) என்பவற்றோடு இடம்பெற்ற 1912ம் ஆண்டு ரயில்வே தொழிலாளர்களின் போராட்டமானது பெருந்தோட்டத்துறை சார்ந்த தொழிலாளர்கள் மட்டுமன்றி இலங்கையின் பல்வேறு பாகங்களிலுமுள்ள தொழிலாளர்களிடையே அதிர்வலைகளை உருவாக்கத் தொடங்கின. தொழிலாளர்களது வேலைநிறுத்தப் போராட்டங்கள், எதிர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் அணிதிரளும் செயற்பாடுகள் அமைப்புரீதியாக ஒன்று திரள்வதற்கனான சூழ்நிலைகளை உருவாக்கின. இலங்கை தொழிலாளர் இயக்கம், இலங்கை தொழிலாளர் நலச்சங்கம் (1919), சமூக சீர்த்திருத்தச் சங்கம், சமூக சேவா சங்கம், தொழிலாளர் நலச் சங்கம் (1920), இலங்கை தேசிய காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் கூட்டுக்கழகம் (1920) முதலிய தொழிலாளர்களை ஒன்றிணைக்கும் அமைப்புகள் தோன்றியதோடு பொன். அருணாசலம், ஏ.ஈ. குணசிங்க, ஜோர்ஜ்.டி. சில்வா, பெரி சுந்தரம், சி. எச்.செட். பெர்னான்டோ முதலியோர் இவ்வமைப்புகளை தலைமைத்துவம் கொண்டு நடத்தியதோடு அதன் செயற்பாட்டாளர்களாகவும் விளங்கினர். தொடர்ந்து 1920ம் ஆண்டு இலங்கை முழுவதுமுள்ள ரயில்வே தொழிலாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வெற்றி கண்டனர். 1922ம் ஆண்டு ஏ.ஈ. குணசிங்க தலைமையில் இலங்கை தொழிற்சங்கம் உருவாகியது.

19ம் நூற்றாண்டின் இறுதிக் காலப்பகுதியிலிருந்து 20ம் நூற்றாண்டின் முதலாம் கால் நூற்றாண்டு வரையான காலப்பகுதி பெருந்தோட்டத்துறைத் தொழிலாளர்கள் இலங்கையின் ஏனைய தொழிலாளர்களுடன் ஐக்கியப்பட்டு தொழிற்சங்கமாக உருவாவதற்கான சூழ்நிலைகள் உருவாகிய காலமாகும். எனினும் இக்காலப்பகுதியில் மலையகச் சமூகத்தின் எழுத்துப் பதிவுகளைப் பொறுத்தவரையில் கொழும்பு போன்ற நகரங்களில் இயங்கிய பத்திரிகைத் துறை சார்ந்ததாகவும் சிறுபிரசு வெளியீடுகளுமாகவே காணக்கிடைக்கின்றன. இக்காலப்பகுதியில் பெருந்தோட்டத் துறை சார்ந்த எழுத்தாவணங்களோ இலக்கிய முயற்சிகளோ எமக்குக் கிடைப்பது அரிதாயுள்ளது. அருள்வாக்கி அப்துல் காதிறுப் புலவர் எழுதிய கவிதைகள் எமக்குக் கிடைத்தாலும் அவை ஓரிரு பாடல்களே கிடைத்துள்ளன.

### மலையக தொழிற்சங்க உருவாக்கமும் எழுத்து முயற்சிகளும் : கோ.நடேசய்யர், கோ.ந. மீனாட்சியம்மாள்

இலங்கைத் தொழிற்சங்க உருவாக்கத்தில் மலையகத் தொழிலாளர்களையும் அதில் இணைத்துக்கொள்வதில் ஏ.ஈ. குணசிங்காவின் பணி முக்கியமானதாகும். 1923ம் ஆண்டு முதன் முதலாக பொது வேலைநிறுத்தத்தை ஏற்படுத்தி தொழிலாளர்களை அணித்திரட்டினார்கள். 1923ம் ஆண்டு அகில இலங்கைத் தொழிலாளர்

காங்கிரஸ் நிறுவப்பட்டதோடு 1933ம் ஆண்டு இலங்கையில் தொழிலாளர்களின் வலிமையை தீவிரமாக எடுத்துக்காட்டினர். இலங்கையின் பல்லின மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிலாளர்களும் அவ்வமைப்பில் இணைந்தனர். இலங்கையில் தொழிற்சங்க தோற்றம் தொடர்பான சிந்தனைகள் வலுப்பெறத் தொடங்கிய காலத்திலேயே கோ. நடேசய்யரும் மலையக மக்களது அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடத் தொடங்கிவிட்டார். இலங்கையிலுள்ள பல்வேறுபட்ட தொழிலாளர்களிடமும் தொழிற்சங்க சிந்தனைகளைப் பரப்புவதில் ஏ.ஈ. குணசிங்காவின் பங்களிப்பு முக்கியமானதென்றால், மலையக மக்களை தொழிற்சங்கமயப்படுத்துவதில் நடேசய்யரே பிரதான செயற்பாட்டாளராக விளங்கினார். நடேசய்யர் 1922ம் ஆண்டு அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சம்மேளனத்தை ஆரம்பித்ததோடு ஏ.ஈ. குணசிங்காவுடன் இணைந்து தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டார். 1925ம் ஆண்டுகளுக்கு பின்னர் இந்திய எதிர்ப்புவாதம் மேலோங்க, நடேசய்யர் குணசிங்காவின் தொழிற்சங்கத்திலிருந்து பிரிந்து தனியாகச் செயற்படத் தொடங்கினார்.

### கோ. நடேசய்யர் : மலையகத்தின் முன்னோடி முயற்சிகள்

மலையக அசைவியக்கத்தில் 1930 - 1950 வரையான காலப் பகுதி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். சுமார் ஒரு நூற்றாண்டுகாலம் காலனித்துவ அடிமைகளாகவும், கங்காணித்துவ அதிகாரத்திற்குட்பட்டவர்களாகவும் இருந்த இலங்கையில் குடியேறிய இந்தியத் தொழிலாளர்களை முதன் முறையாக தொழிற்சங்க அடிப்படையில் ஒன்றுதிரட்டும் வேலையை நடேசய்யர் தொடங்கினார். வரலாற்றில் இது முதல் சந்தர்ப்பமாகவும் அமைகிறது. தொழிலாளர்களது உரிமைகளுக்காக பல்வேறு கால கட்டங்களில் போராட்டங்களை நடத்தினார். தோட்டங்களுக்குச் சென்று கூட்டங்களை நடத்துதல், மக்களை விழிப்புணர்வடையச் செய்தல் முதலிய களச் செயற்பாடுகளை தொடங்கிவைத்தவர் நடேசய்யர்.



கோ. நடேசய்யர்

Image Source - tamil.wiki

### நடேசய்யரின் எழுத்துக்கள்

நடேசய்யரின் எழுத்துக்கள் பலவகைப்பட்டவை. வணிகம் சார்புடையவை, பத்திரிகை எழுத்துக்கள், பயணக்குறிப்புகள், ஆய்வு நூல்கள், பத்தி எழுத்துக்கள், கவிதைகள், புனைவுகள், நாடகம் என்று அவை விரிகின்றன. இலங்கையில் நடேசய்யர் செயற்பட்ட காலத்தில் பல நூல்களை எழுதினார். அவற்றில் மலையக தொழிலாளர்களுக்குரிய வழிகாட்டல்களை மேற்கொள்ளல், தொழிற்சங்க சட்டங்கள் பற்றிய தெளிவூட்டல்களை மேற்கொள்ளல் முதலிய அம்சங்களை அவரது புனைவு சாரா எழுத்துக்களில் அவதானிக்க முடிகிறது. பதினொரு பத்திரிகைகளை நடேசய்யர் நடத்தியிருந்தார். இலங்கையில் இருந்து வெளிவந்த அவரது 'தேசபக்தன்' அக்காலத்தில் குறிப்பிடத்தக்க பத்திரிகைகளில் ஒன்றாக விளங்கியதுடன் தொழிலாளர்களைப் பற்றிய பல விடயங்களை அப்பத்திரிகை கவனப்படுத்தியிருந்தது. நடேசய்யரின் புனைவு சார்ந்த இலக்கிய முயற்சிகள் மலையக இலக்கிய உருவாக்கத்தின் ஆரம்ப முயற்சிகளுக்கு அடித்தளமிடுகின்றன. 'வெற்றியுனதே', 'நீ மயங்குவதேன்', 'நரேந்திரபதியின் நரக வாழக்கை', 'மூலையில் குந்திய முதியோன்' போன்ற படைப்புகளில் புனைவுப் பண்புகளை அவர் கையாளுகிறார். அவரது 'தொழிலாளர் அந்தர பிழைப்பு நாடகம்' இலங்கையில் வெளிவந்த நாடக நூல்களில் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

நடேசய்யரது எழுத்துக்களில் பெரிதும் கங்காணித்துவ எதிர்ப்பே மேலோங்கியிருந்தது. தொழிலாளரை தொழிற்சங்க மயப்படுத்துவதும் அவர்களது வாழ்க்கைக்கு வழிகாட்டுவதும் இந்திய எதிர்ப்புவாதத்திற்கு எதிராக குரல் கொடுப்பதும் அவரது கவிதைகளில் காணக்கிடைக்கின்றன. எவ்வாறிருந்தும் நடேசய்யர் மலையக சமூகத்தின் முன்னோடி அரசியல் சமூக செயற்பாட்டாளர் என்பதோடு மலையக இலக்கியத்தின் முன்னோடியாகவும் அவரை நாம் மதிப்பிட முடிகிறது. மலையக இலக்கிய உருவாக்கத்திற்கான ஆரம்ப முயற்சிகள் நடேசய்யரிலிருந்தே தொடங்குகின்றன.

### கோ.ந. மீனாட்சியம்மாள் : மலையக இலக்கியத்தின் முதல் பெண் குரல்



கோ.ந. மீனாட்சியம்மாள்

Image source - www.keetru.com

நடேசய்யருடன் இணைந்து மலையகத் தொழிலாளர்கள் மத்தியில் வேலை செய்த பெண் ஆளுமையாக கோ.ந. மீனாட்சியம்மாளைக் குறிப்பிடுகின்றனர். 'ஈழத்தின் முதல் பெண் கவிஞர், பத்திரிகையாளர், அரசியல் செயற்பாட்டாளர் என்றெல்லாம் முதன்மைப்படுத்துகிறார் செ. யோகராசா (2007:43). முன்னோடி அரசியல் தொழிற்சங்க செயற்பாட்டாளரென குறிப்பிடுவதோடு பாரதியை மலையகத்தில் அறிமுகப்படுத்துவதில் முன்னோடி என்று எழுதுகிறார் லெனின் மதிவானம் (2012:34). நடேசய்யருக்கு சமாந்தரமாகவும் அவருக்குப் பின்னரும் மலையக மக்களின் பிரச்சினைகளை பிரக்ஞைபூர்வமாக விளங்கிக்கொண்டு அம்மக்களது பிரச்சினைகளை வெளிப்படுத்தியதோடு அவர்களின் விடுதலைக்காக குரல் கொடுத்தவர். 'இந்தியர்களது இலங்கை வாழ்க்கை நிலைமை' என்ற அவரது கவிதை நூல் அக்காலத்தில் இடம்பெற்ற அரசியல் பிரச்சினைகளை ஒரு சிறுபான்மை இனத்தவராக இருந்து அவதானிக்கும் தொனியில் எழுதப்பட்டது. அவரது கவிதைகளில் சிங்கள இனவாத எதிர்ப்பும், இந்திய தொழிலாளர்கள் இலங்கை தேசிய அடையாளத்துக்குரியவர்கள் என்று வலியுறுத்துவதையும் காணலாம். மீனாட்சியம்மாளின் கவிதைகள் பல்வேறு வகையில் முக்கியத்துவமுடையவை. பெரும்பாலும் தொழிலாளர் பற்றி தீவிரமாக எழுதும் போக்கு அவரது எழுத்துக்களிலிருந்தே ஆரம்பமாகிறது. 'இந்திய தொழிலாளர்களது இலங்கை வாழ்க்கையின் நிலைமை (1940)' என்ற நூலில் தொழிலாளர்களின் ஆபத்தை எதிர்த்து குரல்கொடுத்துப் பாடியதுடன் தொழிலாளர்களை தமது உரிமைக்காக தீவிரமாக போராடும்படியும் எழுதுகிறார். "லங்கா மாதா நம்மதாய் தான் இந்த நாட்டினில் எல்லோரும் அவளுக்குச் சேய்தான்" என்று பாடுவதிலிருந்து இந்திய வம்சாவளி தொழிலாளர்களை இலங்கைத் தேசியத்திற்குரிய குடிகளாக கருதும்போக்கு மீனாட்சியம்மாளிலிருந்து தொடங்குவதை அறியமுடிகிறது (கோ.ந. மீனாட்சியம்மாள்,1940). பாரதியின் கவிதை வடிவங்களையும் தொழிலாளர்களது கும்மி வடிவங்களையும் அவர் அதிகமாக பயன்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. மலையக சமூகத்தில் இக்காலகட்டத்தில் நடேசய்யர் மற்றும் மீனாட்சியம்மாள் ஆகியோரது தொழிலாளர் சார்ந்த பார்வைகளோடு இதே காலப்பகுதியில் இயங்கிய எச். நெல்லையா மற்றும் ஆ. போல் ஆகியோரது எழுத்துக்களையும் நாம் அவதானிக்க வேண்டியுள்ளது. குறிப்பாக அக்காலத்தில் புனைவுத்துறையில் (நாவல்கள்) இவர்களது எழுத்து, ஆரம்பத்தைக் கொண்டிருந்த போதிலும் அவர்களால் எழுதப்பட்ட நாவல்கள் எவற்றிலும் அக்காலத்தின் எரியும் பிரச்சினைகள் எவையும் தலைகாட்டவில்லை என்பது மனங்கொள்ளத்தக்கது.

தொழிற்சங்க உருவாக்க காலத்தில் தோற்றம் பெற்ற எழுத்து முயற்சிகளில் கோ. நடேசய்யர், கோ.ந. மீனாட்சியம்மாள், ஆ. போல், எச். நெல்லையா ஆகியோரது எழுத்துக்கள் மட்டுமல்லாது அக்கால பத்திரிகை எழுத்துக்கள் பற்றியான முழுமையான மீள்வாசிப்பு அவசியம். இரண்டாவதாக, இப்படைப்புகள் சார்ந்திருக்கும் கருத்துநிலைகள் பற்றிய ஆராய்ச்சியும் மலையக சமூகத்தின் வரலாற்று எழுதுநிலையில் இன்றியமையாதவையாகும்.

### தொழிற்சங்கப் போராட்டக் காலம்

ஏ.ஈ. குணசிங்கா, கோ. நடேசய்யர் வழியாக உருவாக்கம் பெற்ற தொழிற்சங்கங்கள் மலையகத் தொழிலாளர்களை ஒன்றிணைக்கும் முயற்சியை செய்துவந்த நிலையில் பெருந்தோட்டத் தொழிலாளர்களை முன்னிலைப்படுத்திய பல இடதுசாரித் தொழிற் சங்கங்களும் இயங்கத்தொடங்கின. குறிப்பாக, லங்கா சமசமாஜக் கட்சி மலையகத்தில் இக்காலத்தில் தொழிற்சங்க பணியினை ஆரம்பித்திருந்தது. 1937ம் ஆண்டில் ஹேவாஹெட்டயில் நடந்த போராட்டத்தில் லங்கா சமசமாஜக் கட்சி பெரும் பாத்திரத்தை ஏற்றிருந்தது. 1940ம் ஆண்டு புசல்லாவை ஸ்டெலன்பேர்க் தோட்டத்தில்

நடந்த போராட்டம் தொழிற்சங்க பின்னணி கொண்டதாகவே அமைந்தது. இக்காலப்பகுதி மலையகத்தில் தொழிலாளர்களிடையே தொழிற்சங்க ஈடுபாடு மிகவும் கொதிநிலையில் இருந்த காலமாகும். தொழிலாளர்கள் தமது விடுதலையையும் சுதந்திரத்தையும் தொழிற்சங்க ரீதியாக அடைந்துகொள்ளலாம் என்ற உணர்வுடன் செயற்படத் தொடங்கிய காலத்தில்தான் இலங்கை இந்திய காங்கிரஸ் (1939) தொழிலாளர் நலன் சாராத சிந்தனைகொண்ட ஒரு குழுவினரால் உருவாக்கப்படுகிறது. 1940கள் தொடக்கம் 1950 வரையான காலப்பகுதியில் மலையகத்தில் பல போராட்டங்கள் நடைபெற்றதையும் அதனால் பல தொழிலாளர்கள் உயிர்த்தியாகம் செய்திருந்தமையையும் அறியமுடிகிறது. 1940ம் ஆண்டு முல்லோயா போராட்டத்தில்




Image source - thinakaran.lk

கோவிந்தன் உயிர்ப்பலியானார். 1941ம் ஆண்டு ஸ்டெலன்பேர்க் தோட்டம் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் நடந்த கெடுபிடிகளுக்கெதிராக போப் துரையை கொலை செய்த வழக்கில் வேலாயுதம், வீராசாமி ஆகிய இரு தொழிலாளர்கள் தூக்கிடப்பட்டு உயிர்ப் பலியாகின்றனர். இப்போராட்டங்களை முன்னிலைப்படுத்திய எழுத்துக்கள் எதுவும் வெளிவரவில்லை. தோட்டத்தில் இடம்பெற்ற போராட்டத்தை தழுவி சாரல்நாடன் அவர்கள் எழுதிய ‘வானம் சிவந்த நாட்கள்’ என்ற நாவல் வெளிவந்தது. தொழிற்சங்கப் போராட்டங்களை மையப்படுத்தி வெளிவந்த முதல் நாவலாக இந்நாவல் விளங்குகிறது.

### இலக்கிய எழுச்சிக் காலம்

நாற்பதுகளுக்கு பின்னர் எழுந்த தொழிற்சங்க அரசியல் போராட்டங்கள் நாற்பதுகளின் இறுதியில் பல்வேறு அதிர்வலைகளைத் தோற்றுவித்தது. இதற்கு பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்தின.

1. நடேசய்யரால் தோற்றுவிக்கப்பட்ட தொழிற்சங்கச் சிந்தனை இடதுசாரிகள் மலையகத்தில் வேரூன்றல்.

2. பிரேஸ் கேடில் (L.S.S.P) போன்ற பிரித்தானிய இடதுசாரி சிந்தனை கொண்ட சமூகச் செயற்பாட்டாளர்களின் தலையீடு.

1935ம் ஆண்டு இலங்கை வந்த பிரித்தானியரான மார்க் என்டனி பிரேஸ்கேடில் இடதுசாரி சிந்தனைகொண்டவராக இருந்ததோடு லங்கா சமசமாஜக் கட்சியுடன் இணைந்து தொழிலாளர்களுக்கு சார்பாகக் குரல் கொடுத்தவராகச் செயல்பட்டார். இவரது தீவிரமான போக்கை ‘பிரேஸ் கேடில் சம்பவம்’ என்றே பலர் குறிக்கின்றனர். மாறாக அவர் துரைமார்களின் அடக்குமுறைக்கு எதிராக குரல் கொடுத்ததுடன் நடேசய்யர், மீனாட்சியம்மாளுடன் இணைந்து தோட்டத் தொழிலாளர் மத்தியில் உரையாற்றினார். தொடர்ந்து மலையகத்தின் பல்வேறு இடங்களில் மாநாடுகள் இடம்பெற்றன. 1945, 1946, 1947, 1948, 1949 ஆகிய ஆண்டுகளிலும் அதன் பின்னரும் இடம்பெற்ற மாநாடுகள் தொழிலாளர் நலன் சார்ந்தவையாகவே அமைந்தன. இம்மாநாடுகளில் அவர் பங்கேற்று உரையாற்றினார். பிரேஸ் கேடில் தோட்டத் துரையாக வந்த பிரித்தானியராக இருப்பினும் தேயிலைத் தோட்டங்களில் தொழிலாளர் அனுபவிக்கும் துயரங்களைக் கண்டு அவர்களது விடுதலைக்காக குரல் கொடுத்தார் என்பதே முக்கியமானது. இவ்வாறான தொழிற்சங்க உணர்வுகலந்த போக்கு தொழிலாளர்களின் போராட்டத்தை மேலும் ஊக்குவித்தது. 1947ம் ஆண்டு 1,25,000 தொழிலாளர்கள் கலந்துகொண்ட, 27 நாட்கள் நடைபெற்ற



பிரேஸ்கேடில்
Image source - facebook/தோட்டத்து பசங்க

ஹர்த்தால் (Plantation Association Review) தொழிலாளர்கள் வீறுபெற்றெழுந்த வரலாற்றுக்குச் சான்றாகும். இவ்வாறான போராட்டங்கள் அவர்களை இலங்கைத் தேசியத்துக்குரியவர்களாக சிந்திக்க வைக்கத் தூண்டின.

மலையகத் தொழிலாளர்களது இவ்வாறான தேசிய உணர்வுசார்ந்த சிந்தனைகள் இக்காலப்பகுதியில் (1948ல்) இந்திய எதிர்ப்புவாதம் மேலோங்குவதற்கான தூண்டலைத் தொடக்கி வைத்தது. இதன் விளைவாக குடியுரிமைச் சட்டம் (1948), இந்திய பாகிஸ்தானிய குடியிருப்பாளர் சட்டம் (1949), இலங்கை பாராளுமன்ற திருத்தச் சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. தொடர்ந்து 1956ம் ஆண்டு தனிச்சிங்களச் சட்டமும் மலையகத் தமிழர்களுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டிருந்தது.

### மலையக இலக்கிய எழுச்சியில் சி.வி. வேலுப்பிள்ளை



சி. வி. வேலுப்பிள்ளை

Image source - ta.wikipedia.org

மலையக மக்களது தொழிற்சங்க அரசியல் பணிகளை தோற்றுவித்ததில் நடேசய்யருக்கு எவ்வளவு முக்கியத்துவம் இருந்ததோ அதேபோலவும் அவருக்கு அடுத்த கட்டத்திலும் அப்பணிகளை மேற்கொண்டதில் சி.வி. வேலுப்பிள்ளை மிக முக்கியமானவர். நடேசய்யர் சட்டசபை உறுப்பினராக கடமையாற்றிக்கொண்டிருந்த காலத்திலேயே சி.வி. வேலுப்பிள்ளையும் தொழிற்சங்க அரசியல் பணிகளைத் தொடங்கியிருந்தார். ஆரம்பத்தில் இலங்கை இந்திய காங்கிரஸ் உறுப்பினராகவும் அவர் இருந்தார். எனினும் இலங்கை இந்திய காங்கிரஸின் நிலைப்பாட்டிலிருந்து வேறுபட்ட கொள்கையுடையவராய் இருந்தார். இலங்கையிலே பிறந்து (1914) மலையக மக்களைப் பற்றி நேரடியாக அறிந்திருந்தமையால் இம்மக்களுக்காகக் குரல் கொடுத்தார். சி.வி யின் முதலாவது நாடாளுமன்ற உரை இவ்வாறு அமைந்ததாக சாரல் நாடன் எடுத்துக்காட்டுகிறார்.

"இடதுசாரி குழுவினரைச் சார்ந்தவன் நான். இப்படிச் சொல்வதற்கு நான் வெட்கப்படவில்லை. இந்த நாட்டின் மறுமலர்ச்சிக் குழுவினராக அவர்களே இருக்கின்றார்கள். நான் இந்த நாட்டில்தான் பிறந்தேன். என் கண்கள் ஒளியைத் தரிசித்தது இந்த பூமியில்தான். இறுதியாக நான் கண்களை மூடுவதும் இந்த நிலமாகத்தானிருக்கும்."

சி.வி. தொழிற்சங்க இயக்கத்தின் மீதும், தொழிலாளர்களின் விடுதலைக்குரிய மார்க்கங்களை தொழிற்சங்க நடவடிக்கைகள் மூலம் வலுப்படுத்த முடியுமென்றும் நம்பிக்கை கொண்டிருந்தார். இதனையே அவரது இலக்கியங்களிலும் பிரதிபலித்தார். சி.வி யின் எழுத்துக்கள் "ஒரு தொழிற்சங்கவாதியின் இலக்கிய குரலாகவே ஒலித்தது." சி.வி யின் ஆரம்பகால எழுத்துக்களை விட (விஸ்மாஜினி, 1934) பிற்கால எழுத்துக்களே இம்மக்களின் வாழ்வியலை மிக நெருக்கமாகவும் தீவிரமாகவும் பேசின. (நாடற்றவர் கதை, 1987)சி.வி. யின் எழுத்துக்களில் கவிதை, நடைச்சித்திரம், நாவல்கள், கட்டுரைகள், குறிப்புகள் என்பவை முழுமையாக ஆராயப்படாத நிலையில் சி.வி யின் எழுத்துக்கள் மீதான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. "சி.வி வாழ்ந்த காலத்தில், எழுச்சி பெற்ற போராட்டங்களை அவை முதன்மைப்படுத்தவில்லை. அவலங்களையும், சோர்வு வாதத்தையுமே அவை வெளிப்படுத்தின. மலையக சமூக இருப்புக்கான உணர்வுநிலையை பிரதிபலிக்கவில்லை" என்று லெனின் மதிவானம் (இர. சிவலிங்கம் குறிப்பிட்டதாகவும்) தனது விமர்சனத்தை முன்வைத்துள்ளார். சி.வி யின் எழுத்துக்களை முழுமையாக வாசிக்கப்படாமலிருக்கின்ற சூழ்நிலையில் அவரது படைப்புகளை ஆராய்ந்து, மலையகத் தமிழரின் வரலாற்று காலவோட்டத்தில் சி.வி யின் பாத்திரத்தை சரியாக முன்வைக்க வேண்டுமென்பதே எனது கருத்து. எவ்வாறிருந்தாலும் மலையக இலக்கிய எழுச்சியில் ஒரு மடைமாற்றம் சி.வி யின் எழுத்துக்களிலிருந்தே தொடங்குகிறது.

### மக்கள் இலக்கியமாக வீதிப்பாடல்கள்

மலையக சமூக உருவாக்கத்தில் 50கள் மிகவும் எழுச்சி மிக்க காலமாகவே பலராலும் கணிக்கப்படுகின்றது. தொழிற்சங்க போராட்டங்கள் உக்கிரமடைந்த இக்காலப்பகுதியிலேயே தொழிலாளர்கள் தோட்ட நிர்வாகத்திற்கெதிராக பல்வேறு எதிர்ப்பு

நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர். இதே காலப்பகுதியில் தொழிற்சங்க ரீதியாக மக்கள் அணித்திரளும் செயற்பாடுகளும் பல்வேறு சமூக இயக்கங்களும் தோன்றுகின்றன. இக்காலப்பகுதியில் பல சஞ்சிகைகளும் தோன்றுகின்றன.

மலையக மக்களது இலக்கிய உருவாக்கத்தில் தனிமனிதர்களது எழுத்துக்கள் மக்களை கவனப்படுத்தியதைவிட வீதிப் பாடல்கள் போன்ற கூட்டு இலக்கியங்கள் மக்களையும் அவர்களது பிரச்சினைகளையும் மிக நெருக்கமாக வெளிக்கொண்டுவந்தன. முக்கியமாக தொழிலாளர்கள் நடத்திய போராட்டங்கள், எதிர்ப்பு நடவடிக்கைகள், தோட்டத்துரை மற்றும் அதிகாரிகளைத் தாக்கி கொலை செய்தமையை ஆதரித்து, அதிகாரிகளின் செயற்பாடுகளை கண்டித்து, தொழிலாளர்களுக்கு விழிப்புணர்வூட்டும் வகையில் பல வீதிப்பாடல்கள் உருவாக்கப்பட்டன. இப்பாடல்களை பாடிக்கொண்டே பிரச்சாரம் செய்தமையும், சிறிய பிரசுரங்களாக அதனை அச்சிட்டு வெளியிட்டமையும் மலையகத்தின் பிரதான நகரங்களில் மக்கள் ஒன்றுகூடும் இடங்களில் அதனை விநியோகம் செய்தமையும் மலையக மக்கள் இலக்கிய வரலாற்றில் பெரும் முக்கியத்துவம் வாய்ந்த இலக்கியச் செயற்பாடாகவே மதிப்பிட முடியும். இவ்வாறானதொரு இலக்கியப் போக்கை மலையக இலக்கிய உருவாக்கத்தில் தனித்துவமான அம்சமாகவும் கொள்ள முடியும்.

அட்டன் வெலிஓயா படுகொலை (1957), திக்குவலை புதுக்காடு மேல்கணக்கு (1955), நாவலப்பிட்டி லெட்சுமி தோட்டம் படுகொலை (1959, உடப்புசல்லாவ பங்களவத்தை படுகொலை (1957), நுவரெலியா மாசா பணியகணக்கு படுகொலை (1966) ஆகிய படுகொலைகளைப் பற்றி 'படுகொலைச்சிந்து' என்ற தலைப்பில் பல பாடல்களை பாடியுள்ளனர். இப்பாடல்கள் தொழிலாளர்கள், கணக்குப் பிள்ளைகளை படுகொலை செய்தமைப் பற்றியும் தொழிற்சங்க நடவடிக்கைகளில் கொலை செய்யப்பட்டவர்கள் பற்றியும் பாடப்பட்டவையாக அமைந்துள்ளன. இவர்களில் கே.கே.எஸ். ஜில், கோவிந்தசாமி தேவர், கா.சி. ரெங்கநாதன், பெரியக்காள் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

*"புதுக்காட்டு மேக்கணக்கில் போட்டபோடுங்க*
*கணக்கன் பாட்டை கேளுங்க*
*கையுமே துண்டு ரெண்டுங்க*
*அடடா வெட்டு ஒன்னுங்க – சேர்ந்த*
*கணக்கன் பாடு திண்டாட்டமே தாங்க*
*நன்றாய் கேட்டு பாருங்க*

### சமூக, அரசியல், கலை, இலக்கிய இயக்கங்களின் உருவாக்கமும் அவற்றின் செயற்பாடுகளும்

ஐம்பதுகளின் பின்னர் மலையகத்தில் இயக்க ரீதியான சிந்தனைகள் வளர்ச்சியடைந்தன. தொழிற்சங்க ரீதியாக வளர்ச்சியடைந்த அமைப்பாக்க சிந்தனைகள் ஐம்பதுகளில் பல்வேறு கிளைகளாக வளர்ச்சி பெற்றன. சமூக சீர்த்திருத்த இயக்கங்கள், வாலிபர் இயக்கங்கள் (சங்கங்கள்) இலக்கிய அமைப்புகள், மன்றங்கள் என்று பல்வேறு அமைப்புகள் உருவாகிச் செயற்பட்டன. இவை மக்கள் நலன் சார்ந்த ஈடுபாட்டை கொண்டனவாகவே இயங்கின. 'இந்திய வம்சாவளி தமிழர்' என்று தம்மை அடையாளப்படுத்திக் கொண்டிருந்தவர்கள் 'மலைநாடு' என்ற சொற்பிரயோகத்தை பாவிக்கத் தொடங்கியதும் இக் காலப் பகுதியிலேயாகும். குறிப்பாக மலைநாட்டு நல்வாழ்வு வாலிபர் சங்கம், மலைநாட்டு எழுத்தாளர் மன்றம் போன்ற அமைப்புகளுடன் நின்றுவிடாது மலைமுரசு, மலைமுழக்கம், மலைநாடு முதலிய பத்திரிகைகளும் தோற்றம் பெற்று தொழிலாளர்களுக்காக குரல் கொடுக்கத் தொடங்கின. சி.வி. வேலுப்பிள்ளை எழுதிக்கொண்டிருந்த காலப்பகுதியிலேயே என். எஸ்.எம். ராமையா, கோகிலம் சுப்பையா, தெளிவத்தை ஜோசப் போன்ற புனைக் கதையாசிரியர்களும் எழுதத் தொடங்கினர். தமது எழுத்துகளில் இவர்கள் மலையகச் சமூகத்தைப் பகுதியளவில் சித்தரித்தார்கள். சி.வி, மலையகச் சமூகம் பற்றிய முழுப் பிரக்ஞையை தனது எழுத்தில் பிரதிபலித்தார். இதுவே அவர்களிலிருந்து சி.வி வேறுபடுமிடம்.

### மலையகத்தில் தி.மு.க வின் உதயமும் எழுத்து முயற்சிகளும்

மலையகத்தில் ஐம்பதுகளில் எழுச்சிபெற்ற இயக்கங்களில் தி.மு.க வின் வகிபங்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகும். நாவலர் ஏ. இளஞ்செழியன் மற்றும் அவரைச் சார்ந்த குழுவினர்களால் தோற்றுவிக்கப்பட்ட தி.மு.க, தொழிலாளர்களின் விடுதலை சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபடவில்லை. மாறாக தொழிலாளர்களிடையே நிலவிய பண்பாட்டு பின்னடைவுகளை களைவதற்கான சமூகச் சீர்திருத்தங்களையே முன்வைத்தார்கள். தோட்டங்கள் தோறும் தி.மு.கவினர் பல

மன்றங்களை அமைத்தார்கள், நாடகங்களை மேடையேற்றினார்கள், சொற்பொழிவுகளை நிகழ்த்தினார்கள். இந்த கொள்கைகளில் ஈடுபாடுகொண்ட சக்தி பால அய்யா முதல் பல கவிஞர்கள் வரை தி.மு.கவின் கொள்கைகளையே பிரதானமாகத் தமது படைப்புகளில் முன்வைத்தனர். மலையகத் தொழிலாளர்களுடைய பிரதான பிரச்சினைகளை அவர்கள் தமது கவிதைகளில் வெளிக்கொண்டுவரவில்லை.

## மலையகத் தேசியம் : உருவாக்கமும் சிதைவுகளும் இலக்கியச் சான்றுகளும்

நாற்பதுகளில் முளைவிடத் தொடங்கிய தேசிய உணர்வுகள் அறுபதுகளில் மிகவும் கனதியுடன் வீறுகொள்ளத் தொடங்கின. இக்காலத்தில் மலையகத்தில் கல்வி கற்ற முதலாவது மத்தியதர வர்க்கத்தினர் உருவாகத் தொடங்குகின்றனர். தோட்டப்புறப் பாடசாலைகளை அரசாங்கமயப்படுத்துகின்ற நிகழ்வுகளும் இக்காலத்தில் இடம்பெறுகின்றன (ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸின் தலைவராகவிருந்த அஸிஸால் பதுளை பாரதி ராமசாமியினால் நடாத்தப்பட்டு வந்த பாடசாலை முதலாவதாக அரசமயப்படுத்தப்பட்டது). அதுவரையில் மலையகத் தொழிற்சங்க பணிகளில் ஈடுபட்டுவந்தவர்களாலேயே பேசப்பட்டு வந்த மலையக இலக்கியம் தோட்டங்களில் உத்தியோகம் செய்தவர்களால் பேசப்பட ஆரம்பித்தது(தெளிவத்தை ஜோசப், என்.எஸ்.எம். ராமையா). இர. சிவலிங்கம், எஸ். திருச்செந்தூரன் போன்ற கல்வியியல் சார்ந்த செயற்பாட்டாளர்கள் உருவாகியதோடு அவர்களால் குறிப்பிட்ட சில மாணவர் பரம்பரையினரும் தோற்றுவிக்கப்பட்டனர். ஏற்கனவே இருந்துவந்த இடதுசாரிச் சிந்தனை கொண்ட பலரும் மலையகத்தில் செயற்படத் தொடங்கியதுடன் மலையகத்தில் இடம்பெற்ற தொழிலாளர் போராட்டங்களிலும் அவர்கள் பின்னணியில் இருந்து செயற்பட்டனர். மொழியுரிமைக்காகப் போராடிய ஐயாவு, பிரான்ஸிஸ் ஆகியோரது உயிரிழப்பும் டயகமப் போராட்டம், கீனாக்கலை போராட்டம் முதலிய மக்கள் சார்ந்த போராட்டங்கள் இக்காலப்பகுதியில் நடத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. காலனித்துவ சுதந்திரத்திற்கு பின்னர் இலங்கையில் சிங்களவர்களிடையே பௌத்த மேலாதிக்கச் சிந்தனை வளர்ச்சியடையத் தொடங்கியது. சிறுபான்மை இனங்கள் தேசிய இனமாக வளர்வதை விரும்பாத மனோநிலையால் அவ்வினங்கள் மீதான ஒடுக்குமுறையும் பரவலாக இடம்பெற்றன. இக்காலப்பகுதியில் ஒன்பது இலட்சத்துக்குமேல் மலையகத் தமிழர்கள் இலங்கையில் இருந்ததை அறியமுடிகிறது. இவ் எண்ணிக்கையின்படி இரண்டாவது சிறுபான்மை இனமாக இருந்த மலையகத் தமிழர்களை நாடுகடத்தும் முயற்சிகள் இக்காலப்பகுதியிலேயே இடம்பெறத் தொடங்கின. இதன்படி 1965 ஆம் ஆண்டு 'சிறிமாசாஸ்திரி ஒப்பந்தம்' நடைமுறைப்படுத்தப்படுகிறது. இந்நாட்டில் பெரியளவான சனத்தொகையுடன், தேவையான நிலவுரிமையுடனும், மொழியுரிமையுடன் ஒரு தேசிய இனத்துக்குரிய அடையாளங்களுடன் இருந்த மலையகத் தமிழர்கள் சிதைக்கப்படுகின்றனர். ஏறத்தாழ ஐந்து லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டனர். இவ்வாறு பெருந்தொகையான எண்ணிக்கையைக் கொண்ட மலையகத் தமிழர்கள் சிதைக்கப்பட்டமையால் மிகத்தீவிரமாக வளர்ந்துவந்த மலையகத் தேசிய எழுச்சி சார்ந்த சிந்தனைகளும் சிதைக்கப்பட்டன.

## மலையகத் தமிழர்கள் : புலம்பெயர்வும் புலம்பெயர்வு இலக்கியமும்

சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் இடம்பெற்றதும் மலையகத்தை வாழ்விடமாக கொண்டவர்களும், மலையகத்தில் பிறந்து வளர்ந்தவர்களும், இங்கு வந்து சேர்ந்தவர்களும் வெவ்வேறு வகையில் சிதைந்தனர். குறிப்பாக ஒரே குடும்பத்தைச் சேர்ந்த உறவினர்கள் கூட தனித்தனியாகப் பிரியவேண்டிய நிலை உருவானது. இந்த பிரிவு மற்றும் பிரஜாவுரிமை பறிப்பானது நாடற்றவர்களாகி, மண்ணையும் இழந்து புலம்பெயர்கின்ற நிலையை உருவாக்கியது. மலையக மண்ணிலிருந்து மீண்டும் பலர் இந்தியாவுக்கே (தாயகம்) புலம்பெயர்ந்தார்கள். தமிழகம் மட்டுமல்லாது கனடா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கும் இவர்களை புலம்பெயர நிர்ப்பந்தித்தது. இந்த புலம்பெயர்வானது இந்தியாவை தாயகமாக கொள்ளாத இலங்கையில் பிறந்தவர்களையும் இடம்பெயர வைத்தமை ஒரு துயர சம்பவமாக அமைந்தது. இவ்வாறு சிதைக்கப் பட்டவர்கள் உள்ளூரில் பல இடங்களில் தலைமறைவாக வேண்டிய சூழ்நிலையும் ஏற்பட்டிருந்தது. இலங்கையில் இடம்பெற்ற முதலாவது புலம்பெயர்வாக கொள்ளப்படும் இப்புலம்பெயர்வு எமக்கு புலம்பெயர்வு இலக்கியமென்ற புதிய இலக்கிய வகையை உருவாக்கியது. குறிப்பாக மலையகத்திலிருந்து புலம்பெயர்ந்த இர. சிவலிங்கம், அரு.

சிவானந்தன், சி. பன்னீர்செல்வம், மு.சி. கந்தையா போன்ற எழுத்தாளர்களை மலையகத்திலிருந்து புலம்பெயர்ந்து சென்றவர்களாக கொள்வதுடன் இவர்களால் எழுதப்பட்ட இலக்கியப் படைப்புகளை 'மலையக புலம்பெயர்வு இலக்கியமாகவே' கொள்ள முடியும். அறுபதுகளில் எழுதத்தொடங்கிய அரு. சிவானந்தன் சிறிமாசாஸ்திரி ஒப்பந்தத்தின் பின் பிரியவரும்போது சென்று வருகிறேன் என் ஜென்ம பூமியே" என்று எழுதுகின்றார்.

"நான் பிறந்த நாட்டினிலே
நான் இருக்க விதியில்லை
என் ஜென்ம பூமியிலே
எனக்கு உரிமையில்லை
என்றக்கால்
வேதனைகள் முட்டாதோ?




Image source - bookspage.in

என்று எழுதும்போது மலையகம் அவரது தேசம் என்ற மனவுணர்வு தோன்றுகிறது. இதேபோல சி. பன்னீர்செல்வம் அவர்கள் 'எந்தன் தேசம் எது?' (ஒரு சாலையின் சரிதம்) என்ற கவிதையிலும் தேசியம் பற்றிய கேள்விகளை எழுப்புகிறார். இவ்வாறு இலங்கையின் மிக முக்கியமான சிறுபான்மைத் தேசியமாக இக்காலப்பகுதியில் எழுச்சி பெற்ற மலையகத் தமிழர்கள் எவ்வாறு சிதைக்கப்படுகிறார்கள் என்பதை 'சிதைக்கப்பட்ட மலையகத் தமிழர்கள்' (2015) என்ற நூலில் மு.சி. கந்தையா புள்ளிவிபரங்களுடன் ஆராய்ந்துள்ளார். அறுபதுகளில் அரசியல் எழுச்சியும் இலக்கிய எழுச்சியும் இணைந்தே பயணிக்கின்றன. மலையகத் தொழிற்சங்க போராட்டமும் மக்கள் போராட்டமும் வீறு கொண்டு சென்றமைக்கு முற்பட்டகால தொழிற்சங்க அரசியல் செல்நெறிகள் காரணமாயமைந்தன. குறிப்பாக இடதுசாரி இயக்கங்கள் மலையக மக்களுடன் இணைந்து செயற்பட்டமைக்கும் ஆப்பிரகாம் சிங்கோ போன்ற சிங்கள இளைஞர்கள் மலையக மக்களது தொழிலாளர் போராட்டங்களில் இணைந்தமைக்கும் இது சான்றாகிறது. இக்காலப்பகுதியில் மலையகத் தமிழர்களது வாழ்வியல் பிரச்சினைகளை அழகியலுடன் எழுதுகின்ற போக்கு உருவாக் தொடங்குகிறது. சி.வி. வேலுப்பிள்ளை, என்.எஸ்.எம். ராமையா, கோகிலம் சுப்பையா ஆகியோரது பின்னணியில் தெளிவத்தை ஜோசப், மு. சிவலிங்கம் ஆகியோரது சிறுகதைகள் மற்றும் நாவல்களும் வெளிவரத் தொடங்குகின்றன. சி.வி யின் In Ceylon Tea Garden, வாழ்வற்ற வாழ்வு (1960), என்.எஸ்.எம். ராமையாவின் ஒரு கூடை கொழுந்து தொகுப்புச் சிறுகதைகள், மு.சி. யின் பேப்பர் பிரஜைகள் போன்ற படைப்புகள் மலையக வாழ்வியலின் அவலங்களை மட்டுமல்லாது தனித்துவமான அடையாளங்களையும் சித்திரித்துக் காட்ட முனைந்தன.

அறுபதுகளில் மலையக எழுத்துத்துறையில் ஏற்பட்ட புதிய மாற்றங்களில் ஒன்று இலங்கையில் தோன்றிய தேசியப் பத்திரிகைகளான தினகரன் மற்றும் வீரகேசரி ஆகியவற்றில் இக்கால எழுத்தாளர்கள் எழுதத் தொடங்கியமையாகும். சி.வி. வேலுப்பிள்ளை, தெளிவத்தை ஜோசப் ஆகியோரது நாவல்கள் இப் பத்திரிகைகளில் தொடராக வெளிவந்தவைகளேயாகும். இப்பத்திரிகை எழுத்துக்கள் மலையக சமூகம் குறித்து வெளியில் உள்ள சமூகத்தவர்கள் அறிந்து கொள்ளவும் அவர்களைப் பற்றி எழுதவும் சிந்திக்கத் தூண்டின.

மலையகத் தமிழர்கள் பற்றி மலையகத்துக்கு வெளியில் வசிக்கின்ற இலங்கையர்கள் எழுதத் தொடங்கியதும் அறுபதுகளுக்கு பின்னரே. அறுபதுகளில் ஏற்பட்ட சிதைவுகளும், இடம்பெயர்வுகளும், தேசிய பத்திரிகைகளின் தோற்றமும் இவ்வாறான பின்னணியை உருவாக்கின. அறுபதுகளின் பின்னர் எழுதப்பட்ட இலக்கியங்களில் இரண்டுவிதமான போக்குகள் காணப்பட்டன. முதலாவது தொழிலாளர்களது பிரச்சினைகளையும் அவர்களது போராட்டங்களையும் நேரடியாக இலக்கியங்களில் வெளிப்படுத்துவது (வீதிப்பாடல்கள்). இரண்டாவது தொழிலாளர் பிரச்சினைகளை நேரடியாக அல்லாது அதிலிருந்து வேறுபட்ட கோணத்தில் அழகியலுடன் எழுதுகின்ற போக்கு (தெளிவத்தை ஜோசப்).

## தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டமை - மலையகத்தை சாராத எழுத்தாளர்களது படைப்புகள்

1972ம் ஆண்டு அரசியலமைப்பு கொள்கைகளுக்கேற்ப பெருந்தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து தேயிலைத் தோட்டங்கள் இறப்பர் தோட்டங்கள் எல்லாவற்றையும் அரசு பொறுப்பேற்றது. இதன் விளைவாக சுமார் ஒன்றரை நூற்றாண்டு காலமாக மலையகத் தமிழர்களே வாழ்ந்து வந்த பெருந்தோட்ட நிலப்பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்கள் அமைக்க ஆரம்பிக்கப்பட்டன. பிரதான நகரங்களை அண்மித்த நிலப்பகுதிகளில் காணிச் சுவீகரிப்பும், நிலங்களை கைப்பற்றும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறான நடவடிக்கைகளுக்கு எதிராக சிவனு, லெட்சுமணன் போன்ற தியாகிகள் போராடி உயிர் துறந்தனர். மலையக இலக்கிய போக்குகளில் முக்கியமான சில மாற்றங்கள் இந்தக் காலப்பகுதியில் இடம்பெற்றன. குறிப்பாக இலங்கையின் வேறு பிரதேசங்களைச் சேர்ந்த எழுத்தாளர்கள் தொழில் நிமித்தம் மலையகப் பிரதேசங்களுக்கு வந்ததோடு மலையகத் தமிழர்களது பிரச்சினைகளை தமது எழுத்துக்களில் வெளிக்கொண்டுவரும் முயற்சிகளை மேற்கொண்டனர். குறிப்பாக பெனடிக் பாலன் (சொந்தக்காரன் 1968), டாக்டர் நந்தி (மலைக்கொழுந்து 1964), டாக்டர் தி. ஞானசேகரன் (குருதிமலை 1979), புலோலியூர் சதாசிவம் (மூட்டத்தினுள்ளே 1983), தொ. சிக்கன் ராஜீ (தாயகம் 1969) ஆகியோரைச் சொல்லலாம்.



தெளிவத்தை ஜோசப்

Image source - ibctamil.com

இவ்வெழுத்தாளர்களது படைப்புகள் அக்காலத்தில் மலையக சமூகத்தில் முனைப்பாயிருந்த பல்வேறு பிரச்சினைகளைப் பேசின. முக்கியமாக தொழிலாளர்களது பிரச்சினைகளை வர்க்க அடிப்படையில் நோக்குதல் (பெனடிக் பாலன்) தொழிலாளர்களிடையே தொழிற்சங்க உணர்வுகளைத் தூண்டுதல் (தி.ஞானசேகரன்), இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் ஏற்பட்ட பிரச்சினைகளால் பாதிக்கப்பட்ட மக்களது பிரச்சினைகளை வெளிக்கொணர்தல் (சிக்கன் ராஜீ), தோட்டங்களில் தொழிலாளர்களது பின்தங்கியுள்ள வாழ்க்கை நிலைமையை பேசுதல் (புலோலியூர் சதாசிவம்) போன்றவை இக்காலத்தில் இவர்களால் பேசப்பட்டன. மலையக இலக்கியத்துறையில் மலையகத்தை வாழ்விடமாகக் கொள்ளாத எழுத்தாளர்களது பங்களிப்பு இக்காலத்தில் பெரிதும் வரவேற்கத்தக்கதாக இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இரண்டாவது அம்சமாக, இலக்கிய வடிவ வளர்ச்சியை அவதானிக்கும்போது பெரிதளவிலான நாவல்கள் இக்காலப்பகுதியிலேயே தோன்றுகின்றன. மலையக இலக்கிய வளர்ச்சியில் உள்ளடக்க அடிப்படையிலும், வடிவ அடிப்படையிலும் மலையகத்தை வாழ்விடமாகக் கொள்ளாத இவ்வெழுத்தாளர்களது பங்களிப்பு பெரிதும் மதிக்கத்தக்கது. இதே காலப்பகுதியில் தெளிவத்தை ஜோசப்பின் ஞாயிறு வந்தது(1966), மனம் வெளுக்க பாலாயி, காலங்கள் சாவதில்லை (1974) போன்ற நாவல்கள் வெளிவந்தன. இவை அக்காலப்பகுதியில் பெருந்தோட்டங்களில் கடமையாற்றிய தோட்ட உத்தியோகத்தகர்களது சுரண்டல் மற்றும் அவர்களது நெளிவு சுழிவுகளைப் பற்றிப் பேசின.

மலையகப் பகுதிகளில் இடம்பெற்ற நிலச்சுவிகரிப்பு மற்றும் அதற்கெதிராக நடைபெற்ற போராட்டங்கள் தொடர்பாக அக்காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் எவையும் பெரிதளவில் வெளிப்படுத்தவில்லையென்ற குற்றச்சாட்டுக்கள் விமர்சகர்களிடம் உண்டு. குறிப்பாக 1950, 1960, 1970 களில் இடம்பெற்ற தொழிலாளர்களது போராட்டங்கள் (உருளவள்ளிப் போராட்டம், கீனாக்கலை போராட்டம், டெவன் போராட்டம்) மலையகத் தமிழர்களது நிலவுரிமையுடன் தொடர்புடையவையென்றும் இதைப்பற்றிய இலக்கியப் பதிவுகள் திரிபுபடுத்தப்பட்டுள்ளதாகவும் ஒ.ஏ. ராமையா குறிப்பிடுகின்றார் (2018:199). சி.வி. வேலுப்பிள்ளையின் படைப்புகள் குறித்த லெனின் மதிவானத்தின் விமர்சனமும் இவ்வாறே அமைந்தது. தொழிலாளர்களது இவ்வாறான போராட்டங்கள் பற்றிய பதிவுகளை 'தீப்பொறி' முதலிய சிறு பிரசுரங்களே முன்னிலைப்படுத்தி பிரச்சாரம் செய்திருந்தன. இக்காலப் படைப்பிலக்கியவாதிகளின் பார்வைகளில் இவ்விடயம் பதிவாகவில்லையென்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதொன்றே.

### இனக்கலவரமும் இலக்கிய வெளிப்பாடும்

மலையகத் தமிழர் வரலாற்றில் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகாலம் தொட்டு தொழிற்சங்க அடிப்படையிலும் இன, வர்க்க அடிப்படையிலும் பல்வேறுவிதமான எழுச்சிகள் ஒவ்வொரு காலகட்டத்திலும் இடம்பெற்று வந்துள்ளன. அவ்வாறு எழுச்சி பெறுகின்ற ஒவ்வொரு காலப்பகுதியிலும் அதற்கெதிராக அவர்களை ஒடுக்குவதற்கான நடைமுறைகளும் திட்டமிட்டு இடம்பெற்று வந்துள்ளன. இந்தியர் எதிர்ப்பு வாதம், இனவாதம் போன்ற கருத்து நிலைகள் இதில் முதன்மை வகித்தன. இவ்வாறு வளர்ந்து வந்த ஒடுக்குமுறைகள் எழுபதுகளில் தீவிர இனவாதமாக மாற்றம் பெற்றன. 1972, 1981, 1983 ஆம் ஆண்டுகளில் பாரிய இனவெறிச் சம்பவங்கள் நடைபெற்றன. ஓ.ஏ. இராமையா (2018:2016) 1973ம் ஆண்டு இடம்பெற்ற இனக்கலவரம் நாடு முழுவதும் சிறுபான்மை தமிழர்களுக்கெதிராக மிகவும் மோசமான முறையில் மேற்கொள்ளப்பட்டது. வடக்கு, கிழக்கு, மலையகம், கொழும்பு ஆகிய பிரதேசங்களில் வாழும் தமிழர்களின் சொத்துக்களுக்குப் பெரும் அழிவுகள் ஏற்பட்டதோடு பலர் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டனர். இது மலையகத் தமிழர்களைப் பொறுத்தவரையில் அவர்களது வரலாற்றில் மிக மோசமான பாதிப்புகளையும் சிதைவுகளையும் ஏற்படுத்தியது. பௌத்த இன மேலாண்மைச் சிந்தனையின் உச்சக்கட்ட தாக்குதலை மலையகத் தமிழர்கள் எதிர்கொண்டனர். மலையகத் தேசியவாதச் சிந்தனைகள் வளர்ச்சிபெற்று வந்த காலப்பகுதியிலேயே இவ்வாறான சம்பவங்களும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. இனக்கலவரம் குறித்த இலக்கியப் பதிவுகளை கணக்கிடும்போது கவிதைகள் சிலவற்றில் அவை பதிவு செய்யப்பட்டுள்ளன. எனினும், சிறுகதைகள் மற்றும் நாவல்களில் இவ்விடயம் பெரிதும் உருக்கொள்ளவில்லை. மலையகத்தில் தெளிவத்தை ஜோசப் எழுதிய 'நாங்கள் பாவிகளாய் இருக்கிறோம் அல்லது 1983' என்ற நாவல் இதனை வெளிப்படுத்தும் இலக்கியப் பதிவாகக் கொள்ள முடியும். இந்நாவல் 1983 இனக்கலவரத்தை பிரதானப்படுத்தி எழுதப்பட்டிருந்தாலும் மலையகத் தமிழர்களுக்கு ஏற்பட்ட கொடூரங்களை மையப்படுத்தியதாக அமையவில்லை. மலையகத் தமிழர் செறிவாக வாழும் நுவரெலியா, பதுளை மற்றும் அவர்கள் சிங்களவர்களுடன் இணைந்து வாழக்கூடிய கேகாலை, இரத்தினபுரி போன்ற பிரதான நகரங்களிலும் அதனை அண்மித்த பிரதேசங்களிலும் மலையக மக்கள் இனக்கலவரங்களால் பெரிதும் தாக்கப்பட்டனர். எனினும் இந்நாவல் கொழும்பை கதைக்களமாக கொண்டு எழுதப்பட்டமை கவனிக்கத்தக்கதாகும். ஆகவே மொத்தமாக அவதானிக்கும்போது இனக்கலவரத்தையும் அதன் பின்னணிகளையும் அடிப்படையாகக் கொண்ட மலையக இலக்கியங்கள் பெரிதும் கவனப்படுத்தப்படவில்லையென்றே குறிப்பிட முடியும்.

### எண்பதுகளின் இலக்கிய முகிழ்ப்பு : இனத்துவம், வர்க்க நிலை, தொழிற்சங்கச் சிதைவுகள்

எண்பதுகளின் ஆரம்பத்தில் இனமுரண்பாடுகளும் இனவாத நடவடிக்கைகளும் தீவிரமாக




Image source - naduweb.com

மேற்கொள்ளப்பட்டபோது மலையகத் தமிழர்களிடையே இனத்துவச் சிந்தனைகள் வெளிக்கிளம்புகின்றன. இனவொடுக்குமுறைகளுக்கு எதிராக மலையகத் தமிழர்களின் இனப்பிரச்சினையை பேசும் வகையிலான கவிதைகளும், மற்றும் அரசியல் தலைவர்களிடையே இனவாதச் சிந்தனைகள் செயற்படுவதை எள்ளலாக சிறுகதைகளில் சொல்லும் இலக்கியப் பண்புகளும்

வளர்ந்திருந்தன (மு.சிவலிங்கம்).

எண்பதுகளில் மலையக இலக்கியத் தளத்தில் இடம்பெற்ற மற்றுமொரு பண்புநிலை மாற்றமானது மலையக புவியியல் பிரதேசங்களில் எல்லை நிலங்களில் வாழக்கூடிய மக்களைப் பற்றிய இலக்கியப் படைப்புகள் உருப்பெற்றமையாகும். குறிப்பாக மாத்தளை, கேகாலை, இரத்தினபுரி முதலிய பகுதிகளில் வாழக்கூடிய மக்களைப் பற்றிய பதிவுகள் இலக்கியத்தில் இடம்பெறத் தொடங்கின. இப்பகுதிகளில் மலையகத் தமிழர்கள் சிங்களவர்களுடனும் சில பிரதேசங்களில் முஸ்லிம் மக்களுடனும் இணைந்து வாழுகின்றனர். இவர்கள் குறித்த இலக்கிய உருவாக்கம் இக்காலப்பகுதியிலேயே இடம்பெறுகின்றன. மாத்தளை மலரன்பன், அல் அலீமத் ஆகியோரது படைப்புகளில் இதனை அவதானிக்கலாம். மாத்தளை மலரன்பனது எழுத்துக்களில் மலையகத் தமிழர் சிங்களவர்களுடன் இணைந்து அந்நியோன்யமாக வாழ்வதையும் அவர்கள் ஒன்றாக இணைந்து அங்கு எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் காணமுடிகிறது (கோடிச்சேலை1989, பிள்ளையார் சுழி2008). பெரும்பாலும் இறப்பர் தோட்ட வாழ்வியலை அடிப்படையாகக் கொண்ட இக்கதைகளில் பெருந்தோட்டத் தமிழ்த் தொழிலாளர்களைப் போலவே அங்கு வேலை செய்யும் சிங்களத் தொழிலாளர்களையும் சமாந்தரமாகப் படைத்துள்ளார். இச்சிறுகதைகளில் சிங்களவர், தமிழர் உறவைச் சிறப்பாகப் பேணும் நோக்கில் பாத்திரங்களை உருவாக்கியிருப்பது சிறப்புக்குரியதாகும். (1983) இனக்கலவரத்திற்கு பின்னர் ஏற்பட்ட இலக்கியப் படைப்புகளில் இனத்துவ நல்லிணக்கத்தை பேணும் இலக்கிய உருவாக்கத்தைக் காணமுடிந்தது.

## வர்க்கநிலை

1980களில் மலையக இலக்கிய உருவாக்கப் போக்குகளில் இனத்துவ சிந்தனைகள் முனைப்பு பெறத் தொடங்கியபோதும் அதனைக் கடந்த வர்க்கநிலைப்பாட்டை வலியுறுத்தும் இலக்கிய அமைப்புகளும் உருவாகாமலில்லை. 1982ம் ஆண்டு வெளிவந்த 'தீர்த்தக்கரை' சஞ்சிகை இவ்வகையில் குறிப்பிடத்தக்கது. தீர்த்தக்கரை என்ற பெயரில் இயங்கிய குழுவினர்கள் மார்க்சியப் பார்வை கொண்டவர்களாகவும் மலையகத் தமிழர்களது வரலாற்றையும் அவர்களின் விடுதலையையும் வர்க்க அணுகுமுறையில் நோக்குபவர்களாகவும் செயற்பட்டனர். இவர்களால் வெளியிடபப்ட்ட தீர்த்தக்கரை சஞ்சிகையும் இக்கருத்துநிலையைக் கொண்ட ஆக்கங்களைச் சுமந்தவையாகும். குறிப்பாக இதில் இயங்கிய எல். சாந்தகுமார், எல். ஜோதிகுமார் ஆகியோர் மலையகச் சமூகம் குறித்த ஆய்வுகளை மேற்கொண்டனர். மலையகத் தமிழரது வரலாற்றில் தீர்க்கமான கருத்துநிலைகள் கலை இலக்கியத் தளங்களில் இக்காலத்தில் உருவாகத் தொடங்கியது.

## தொழிற்சங்கச் சிதைவுகள்

கவிதை இலக்கியத்துறையில் மல்லிகை.சி. குமார், சு. முரளிதரன் போன்ற கவிஞர்கள் தீவிரமாக சமூக விமர்சனத்துடன்கூடிய கவிதைகளை எழுதினர். இவர்களது கவிதைகள் சிறந்த கவித்துவத்துடனும் வீரியத்துடனும் மலையகத்தைப் பேசின. அதுவரைக்காலமும் தொழிற்சங்க பலத்துடன் மக்களை நிர்வகித்து வந்த தலைமைகள் மற்றும் நிர்வாகிகளை விமர்சித்தும் மக்களின் விடிவுக்கான சரியான பாதைகளை கண்டறிவதற்கான விழிப்புணர்வுகளையும் ஏற்படுத்துவதாக அவை அமைந்தன.





Image source - noolaham.org

"தொழிற்சங்கங்கள்
புகுந்ததும்
துயர்மூச்சு போனதா?
சில சமயங்களில் இவைகள்
துரைசங்கங்களாகும்
(சு. முரளிதரன் : தீவகத்து ஊமைகள்)

"தொழிற்சங்கங்கள்
உன் நிழலில்
ஒதுங்கின

(சு. முரளிதரன்: தியாக யந்திரங்கள்)

முதலிய கவிதைகளில் தொழிற்சங்கங்கள் மீது மக்கள் வைத்திருந்த நம்பிக்கை உடைவதையும் அவற்றின்

போக்குகள் எவ்வாறு மக்கள் சார்பற்ற நிலைக்கு மாறியுள்ளன என்பதையும் அவதானிக்கலாம். ஞானசேகரன் போன்ற நாவலாசிரியர்களின் இக்கால நாவல்கள் தொழிற்சங்கங்களின் சிதைவுகளையும் அவை அரசியல் கட்சிகளாக மாறுவதையும் பிரதிபலித்தன. ஒரே தோட்டத்தில் பல தொழிற்சங்கங்கள் தங்களுக்கிடையே தொழிலாளர்களை பகிர்ந்து கொள்வதனால் தோட்டங்களில் தொழிற்சங்கப் போட்டியும் பகைமையும் வளர்க்கப்பட்டு தொழிலாளர்கள் பல துண்டுகளாகும் நிலையேற்பட்டது.




Image source - iravie.com

(வல்லிக்கண்ணன்:1995). தீர்த்தக்கரை சஞ்சிகையின் தொடக்கமாக அமைந்த இக் கோட்பாட்டெழுத்துக்கள் தொடர்ந்து தொண்ணூறுகளில் நந்தலாலாவாக உருமாறுகின்றது. தீர்த்தக்கரையிலிருந்து விரிந்த தளத்தில் ஆரம்பகால நந்தலாலா சஞ்சிகை அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த கோட்பாட்டு ரீதியான இலக்கிய படைப்புகளும் இலக்கியப் புரிதல்களும் அக்காலப்பகுதியில் படைப்புத்துறையில் அதிகமாக பங்களிப்புச் செய்த மல்லிகை சி. குமாரது படைப்புகளிலும் வெளிப்பட்டது. மலையகத் தமிழர்களது சமூக அரசியலையும் அதன் பிரதானிகளையும் நன்கு புரிந்துகொண்ட எழுத்தாளராக மல்லிகை சி. குமாரை மதிப்பிடலாம்.

மேலும் இருபதாம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியில் தீவிரமாக உருவாகிய தொழிற்சங்கங்கள் பின்னரைப் பகுதியில் சிதைவுறுகின்ற அவலநிலை உருவாகியது. தொழிற்சங்கங்கள் பலம் இழக்கத்தொடங்கியது மட்டுமல்லாது அவை கட்சிகளாக மாறுகின்ற காலப்பகுதியில்தான் இந்நாவல் வெளிவருகிறது (சு.தவச்செல்வன் : 2018).

மலையக தமிழர்களது இலக்கிய உருவாக்க வளர்ச்சியில் இக்காலப்பகுதியில் கோட்பாட்டு ரீதியான படைப்பாக்க அணுகுமுறை முளைவிடத் தொடங்கியது. குறிப்பாக மார்க்சிய இலக்கியக் கோட்பாட்டுப் புரிதலுடன் எழுதுகின்ற போக்கு உருவாகத் தொடங்கியது. சாந்திகுமாரின் 'மலையக சமூகம்' பற்றிய ஆய்வுக்கட்டுரை தொடங்கி தீர்த்தக்கரை சஞ்சிகையில் சிறுகதைகள் படைத்த ஆனந்த ராகவன், பிரான்சிஸ் சேவியிர், கேகாலை கையிலைநாதன் ஆகியோர் எழுதித் தொகுத்த தீர்த்தக்கரைக் கதைகள் வரை இதன் அடிப்படைகளை உணரலாம். மலையக மக்களின் வாழ்க்கையையும், உணர்ச்சிகளையும் பிரதிபலிக்கும் சிறுகதைகள் தீர்த்தக்கரையில் வெளிவந்தன. திறமையுள்ள இளைய எழுத்தாளர்களின் படைப்புகள் அவை

மலையக இலக்கியத்தில் மக்கள் இலக்கிய கோட்பாட்டைத் தொடக்கி வைத்தவர் சி.வி. வேலுப்பிள்ளையென்றால் இருபத்தோராம் நூற்றாண்டு படைப்பிலக்கியத் துறையிலும் அதனை வளர்த்தெடுத்துச் சென்றவர் மல்லிகை சி. குமாராவார். அவரது 'மாடும் வீடும்' கவிதைத்தொகுதி, பத்திரிகைகள், இதழ்களினூடாக வெளிவந்த சிறுகதைகள் மற்றும் நாவல்களில் மலையகத் தமிழர்களது வாழ்வியல் கூறுகளின் நுட்பமான பதிவுகளைக் காணமுடியும். இருபதாம் நூற்றாண்டின் இறுதித் தசாப்தத்தில் மலையகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் இலக்கியப் படைப்பாக்கங்கள் உருவாகுகின்றன. குறிப்பாக மாத்தளை கார்த்திகேசு (வழி பிறந்தது1992), புலோலியூர் சதாசிவம் (ஒரு நாட் பேர்1995), தி. ஞானசேகரன் (லயத்துச் சிறைகள்1994), மாத்தளை ரோகினி (இதயத்தில் இணைந்த இரு மலர்கள்1997) ஆகிய நாவலாசிரியர்கள் பல்வேறு கோணங்களில் மலையகத் தமிழர்களின் பின்னணிகளை தமது எழுத்தில் பதிவு செய்தனர். இக்காலப்பகுதியில் முகிழ்த்தெழுந்த மற்றுமொரு கவிஞர் இராகலைப் பன்னீர் மலையகத் தொழிலாளர்களது விடுதலைக்

கருத்துநிலையை அடிப்படையாகக் கொண்டு கவிதைகள் படைத்தவராக அறியப்படுகிறார் (புதிய தலைமுறை1999). மலையக இலக்கியம் பற்றிய தேடல் மற்றும் ஆய்வு முயற்சிகள் முதன் முதலாக இக்காலப்பகுதியிலேயே தொடக்கி வைக்கப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது (மலையகத் தமிழர் இலக்கியம்1994). சாரல் நாடன் மற்றும் அந்தனி ஜீவா போன்றோர் ஆரம்பகால மலையக இலக்கியம் மற்றும் இலக்கிய ஆளுமைகளைப் பற்றி பதிவு செய்யத் தொடங்கினர். மலையகத்தில் தோற்றம் பெற்ற நாவல்களை அடிப்படையாகக் கொண்ட பல்கலைக்கழக புலமைநிலைப்பட்ட ஆய்வை பேரா.க. அருணாசலம் தொடக்கி வைக்கின்றார் (மலையகத் தமிழ் நாவல்கள் அறிமுகம்1999).

## இரண்டாயிரத்துக்குப் பின்னரான சமூக மாற்றமும் இலக்கியப் பரிமாணமும்

தொண்ணூறுகளில் தோட்டங்கள் தனியார் மயப்படுத்தப்படுகின்றன. இதனையடுத்து தோட்டங்களை தனியார் கம்பனிகள் குத்தகைக்கு எடுத்துக்கொள்கின்றன. இதனால் தொழிலாளர்கள் மீதான நிர்வாகங்களின் கெடுபிடிகள் அதிகரித்தன. இச்சூழ்நிலைகள் இரண்டாயிரமாம் ஆண்டை நெருங்கும்போது பல பரிமாணங்கள் அடைந்தன.
இரண்டாயிரமாம் ஆண்டுகளில் மலையகத்தில் ஏற்பட்ட பிரதான மாற்றங்களாக; தொழிற்சங்கங்கள் அரசியல் கட்சிகளாக மாற்றமுற்றமை, பிரதான தொழிற்சங்கங்களில் ஏற்பட்ட பிளவுகள், மற்றும் புதிய தொழிற்சங்கங்கள் உருவாகியமை, தொழிலாளர் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு வேறு வழிகளைத் தேடத்தொடங்குதல், இதனால் தேயிலை தொழிற்துறை மீதான ஈடுபாடு குறைவடைதல், வேறு தொழில்களை நாடுதல், நகர்ப்புற தொழில்கள் மீதான கவனம், தொழிலுக்காக கொழும்புக்கு இடப்பெயர்வு, வெளிநாட்டு வேலைவாய்ப்பை நாடுதல், புலம்பெயர்வு ஆகியன அதிகரித்தமை ஆகியனவற்றைக் குறிப்பிடலாம் (சு. தவச்செல்வன்:30).
மலையகத்தில் மத்தியதர வர்க்கமானது இரண்டாயிரத்துக்குப் பின்னரேயே பெரும்படையாக எழுச்சிபெறுகின்றது. இவர்கள் தொழிலாளர்களிலிருந்து அந்நியமாகின்றனர். தோட்டத் தொழிலாளர்கள் வசிக்கின்ற நிலப்பகுதிகளிலிருந்து வெளியேறியதோடு அவர்களது பண்பாட்டிலிருந்தும் அந்நியமாயினர். இவற்றோடு மட்டுமல்லாது இலங்கையில் உலகமயமாக்களின் தாக்கம் இரண்டாயிரத்துக்குப் பின்பே மலையகத்தில் அதிகமாக உணரப்பட்டது. இவ்வாறான சமூக மாற்றங்கள் தொழிலாளர்களிடையே பல்வேறு சிக்கல் வாய்ந்த நிலைமைகளை உருவாக்கியதோடு தொழிலாளர்களை உதிரிகளாக்கின. தொழிற்சங்க போர்வைகளைப் பயன்படுத்திக்கொண்டு நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை மட்டுமே தக்கவைத்துக்கொண்ட அரசியல் கட்சிகள் மக்களது வாக்குகளை சேகரிப்பதிலேயே கவனம் செலுத்தத் தொடங்கின. பெருந்தோட்டங்களில் சடுதியாக இடம்பெற்ற இந்த இடப்பெயர்வுகள், புலம்பெயர்வுகள் தொழிலாளர்களையும் இளைஞர்களையும் யுவதிகளையும் கொழும்பு போன்ற பிரதான நகரங்களுக்கு தொழில்தேடிச் செல்வதற்கு வழிவகுத்தன. இவ்வாறு தொழில் நாடி இடம்பெயர்ந்தவர்கள் பலர் அப்பகுதிகளில் நிரந்தரவாசிகளாகவும் மாறினர்.
இரண்டாயிரத்துக்குப் பின்னர் மலையகச் சமூகத்தில் கல்வி சார்ந்த விழிப்புணர்வுகள் ஏற்பட்டமையால் பாடசாலைக் கல்வி வளர்ச்சியேற்பட்டது. பெருந்தோட்ட மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளில் அதிகம் நாட்டம் கொண்டமையால் பாடசாலைக் கல்வியில் வெற்றிபெற்ற சிலர் உயர்கல்வி நாடிச்சென்று பல்வேறு பதவிநிலைகளைப் பெற்றனர். கல்விநிலை சார்ந்த இந்தச் சமூக நகர்வானது (Social Mobility) ஒரு சில மாற்றங்களைக் கொண்டுவந்தன. குறிப்பாக அதிகமான ஆசிரியர்களைக் கொண்டதொரு மத்தியதர வர்க்கம் உருவானது.
பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளில் உயர்கல்வியைத் தொடரும் உயர்கல்வி வாய்ப்புகளை சிலர் பெற்றாலும் பெரும்பாலான மாணவர்கள் இடைவிலகினர்.
இடைவிலகியவர்கள் தோட்டங்களைவிட்டு கொழும்பு போன்ற புறநகர் பகுதிகளில் தொழில் புரிந்தனர். சிறுவர் தொழிலாளர்கள் (Child Labour) என்றதொரு பிரிவினரும் இதில் உருவாகினர். எஞ்சியோர் தோட்டத் தொழிற்துறையிலேயே பேர் பதிந்து கொண்ட புதிய தலைமுறைத் தொழிலாளர்களாயினர். மேற்குறிப்பிட்ட சூழ்நிலைகள் தோட்டத் தொழிற்துறை சார்ந்த தொழிலாளர்களது எண்ணிக்கையில் பெருமளவான வீழ்ச்சியை ஏற்படுத்தியது.
இருபத்தோராம் நூற்றாண்டின் முதல் தசாப்தத்தில் இடம் பெற்ற இவ்வாறான சமூக மாறுதல்களை வெளிப்படுத்தும் வகையிலான பல்வேறு இலக்கியப் படைப்புகள் வெளிவந்தன. குறிப்பாக மு. சிவலிங்கத்தின் 'ஞானப்பிரவேசம்', 'விட்டில் பூச்சிகள்', 'மார்கழிப்பனி', 'நிலைமை கொஞ்சம் மாறும்போது' போன்ற சிறுகதைகளை

உள்ளடக்கிய ‘ஒரு விதைநெல்’ (2005), தெளிவத்தையின் சிறுகதைகள் மற்றும் பதுளை சேனாதிராஜாவின் ‘குதிரைகளும் பறக்கும்’ (2014) போன்ற சிறுகதைகளில் கொழும்புக்கு வேலைக்குச் சென்று அவ்வீடுகளில் பிரச்சினைக்கு உள்ளாகின்ற சிறுவர்கள் மற்றும் சிறுமிகளின் பிரச்சினைகளும், வீட்டு வேலைக்குச் செல்கின்ற பெண்கள் பற்றிய பிரச்சினைகளும் பேசப்பட்டுள்ளன.

> **இருபத்தோராம் நூற்றாண்டில் முதலாவது தசாப்த காலப்பகுதியில் ஏற்பட்ட கல்வி வளர்ச்சியின் காரணமாக மலையக இலக்கியத்துக்கு புதிய தலைமுறை எழுத்தாளர்கள் சிலர் பங்களிப்புச் செய்யத் தொடங்கினர்.**

### புதிய தலைமுறை எழுத்தாளர்கள்

இருபத்தோராம் நூற்றாண்டில் முதலாவது தசாப்த காலப்பகுதியில் ஏற்பட்ட கல்வி வளர்ச்சியின் காரணமாக மலையக இலக்கியத்துக்கு புதிய தலைமுறை எழுத்தாளர்கள் சிலர் பங்களிப்புச் செய்யத் தொடங்கினர். நவீன இலக்கிய வாசிப்பு, புதிய இலக்கியக் கோட்பாடுகள் பற்றிய தேடல், உயர்கல்வித் தொடர்புகள் மற்றும் இக்காலப்பகுதியில் இயங்கிய சமூக அரசியல், இலக்கிய இயக்கச் செயற்பாடுகளின் உந்துதல் முதலிய காரணிகளால் இவர்கள் உலகளாவிய இலக்கிய படைப்புகளை வாசித்து தமது படைப்புத்தளத்தை உருவாக்க முயற்சித்தனர். குறிப்பாக மாரிமுத்து சிவகுமார், வே. தினகரன், சண்முகம் சிவகுமார், சு. தவச்செல்வன், சிவனு மனோஹரன், பிரமிளா செல்வராஜா, மு. கீர்த்தியன், செ.ஜெ. பபியான், வே. கிருஸ்ணபிரியன், எட்டியாந்தோட்டை கருணாகரன், லுனுகலை ஸ்ரீ, எஸ்தர் லோகநாதன் போன்றவர்கள் இக்காலப்பகுதியில் இயங்கிவரும் புதிய தலைமுறை எழுத்தாளர்களாவர். புதிய தலைமுறை எழுத்தாளர்களின் எழுத்துக்களில் பல்வேறு கோட்பாடுகளின் செல்வாக்கு காணப்படுகின்றன. குறிப்பாக மார்க்சியம், பெண்ணியம், பின்நவீனத்துவக் கோட்பாடுகளின் செல்வாக்கு இவர்களது எழுத்துக்களில் வெளிப்படுவதை அவதானிக்க முடிகிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் மலையக மக்களிடையே இடம்பெற்ற உலகமயம் மற்றும் தனியார் மயமாக்கல் பிரச்சினைகளுடன் தொடர்புபட்ட வாழ்க்கை முறைகளின் பிரதிபலிப்புகளை இவ்வெழுத்தாளர்களின் படைப்புகளில் காணமுடிகிறது. இப்படைப்பாளிகளின் படைப்புகள் நூலுருவில் பின்னர் வெளிவந்தமையும் குறிப்பிடத்தக்கது. மலைச்சுவடுகள் (மாரிமுத்து சிவகுமார்), சிவப்பு டைனோசர்கள், டார்வினின் பூனைகள் (சு. தவச்செல்வன்), ஒரு மணல் வீடும் சில எருமை மாடுகளும், கோடாங்கி, மீன்களைத்தின்ற ஆறு (சிவனு மனோஹரன்), குதிரைகளும் பறக்கும், உயிருதிர்காலத்தின் இசை (பதுளை சேனாதிராஜா), பீலிக்கரை, பாக்குபட்டை (பிரமிளா செல்வராஜ்), மல்லியப்பூ சந்தி (திலகர்), நாளை வரும் மழை (மு. கீர்த்தியன்), உயிர்த்தெழச் சொல்லுங்கள் (செ.ஜெ. பபியான்), மோட்ச முழக்கம்



Image source - noolaham.org



Image source - noolaham.org

(லுனுகலை ஸ்ரீ), அவமானப்பட்டவனின் இரவு (எட்டியாந்தோட்டை கருணாகரன்), வேரின் பிரசவங்கள், மூதன்னையின் பாடல் (கிருஸ்ண பிரியன்) முதலான படைப்புகள் குறிப்பிடத்தக்கவையாகும். புதிய தலைமுறை எழுத்தாளர்கள் இக்காலத்தில் மலையகத்தில் எழுதத் தொடங்கியிருந்தாலும் அறுபதுகள் தொடக்கம் எழுதத் தொடங்கிய எழுத்தாளர்களும் தொடர்ந்து இயங்கிக்கொண்டிருப்பதோடு அவர்களது படைப்புகளும் வெளிவந்துகொண்டிருந்தன. குறிப்பாக மு. சிவலிங்கம், தெளிவத்தை ஜோசப், மாத்தளை மலரன்பன், மல்லிகை சி. குமார், இரா. சடகோபன், அல் அஸீமத் ஆகியோர் தொடர்ந்தும் எழுதிவருகின்றனர். இவர்களது எழுத்துக்களில் தற்கால அரசியல் தலைவர்கள் மற்றும் கட்சிகளின் செயற்பாடுகளைப் பற்றிய விமர்சனங்கள் அதிகம் காணப்படுகின்றன. மு. சிவலிங்கம் (ஒரு விதைநெல்), மல்லிகை சி. குமார் (வேடத்தனம்), மல்லியப்பு சந்தி திலகர் (மல்லியப்பூ சந்தி) ஆகியோரது சமகாலப் படைப்புகளில் தமது அரசியல் தலைமைகள் மீதான எதிர்ப்பு, தலைவர்களின் ஏமாற்றுத்தனங்கள் போன்ற விடயங்களை எள்ளலுடன் முன்வைக்கும் உத்திமுறைகளை காணலாம்.

### மலையகத் தமிழர்களது வரலாற்று நிலைப்பட்ட எழுத்துகள்

இரண்டாயிரமாம் ஆண்டுகளின் முதல் கால்நூற்றாண்டு எழுத்து முயற்சிகளில் குறிப்பிடத் தகுந்த புதிய விடயமாக இம்மக்களது வரலாற்று நிலைப்பட்ட எழுத்துக்களின் வரவைக் குறிப்பிடலாம். முன்னதாக எண்பதுகளில் சி.வி. வேலுப்பிள்ளை (நாடற்றவர் கதை), பீ.ஏ. காதர் (இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனம்) போன்றோர் மலையகத் தமிழர்களது வரலாற்றை எழுத ஆரம்பித்தனர். இதன் தொடர்ச்சியாக இரண்டாயிரமாம் ஆண்டின் இரண்டாவது தசாப்தத்தில் மலையகத் தமிழர்களது வரலாற்றையும் அதன் மூலங்களையும் தேடும் முயற்சி இடம்பெற்றது. குறிப்பாக கோப்பிக்கால மக்கள் வாழ்வியல் மற்றும் வரலாற்றை ‘கண்டிச் சீமையிலே’ என்ற நூலினூடாக இரா. சடகோபன் எழுதியுள்ளார். ‘மலையகத் தமிழர் வரலாறு’ என்று நேரடியாகவே சாரல்நாடன் எழுதியுள்ளார்.

மலையகத் தமிழர்களது முதலாவது நூல், முதல் பத்திரிகை எழுத்து, முதல் பெண் ஆளுமை, முதல் நாவல் எழுத்து போன்றவற்றை தேடி எழுதுகிறார் மு. நித்தியானந்தன். ‘தூரத்துப் பச்சை’ நாவலுக்குப் பின் மலையகத் தமிழர்களது வரலாற்றை புனைவாக்கியுள்ளனர் சிலர். மு. சிவலிங்கத்தின் ‘பஞ்சம் பிழைக்க வந்த சீமை’ மற்றும் மாத்தளை சோமுவின் ‘கண்டிச் சீமை’ ஆகிய நாவல்கள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கன. எனினும் மாத்தளை சோமுவின் நாவல் மலையக மக்களது வரலாற்று எழுதுகைக்கு முரணாகவே அமைந்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. மேற்குறிப்பிட்ட வரலாற்றுநிலைப்பட்ட எழுத்துகள் புனைவு (பஞ்சம் பிழைக்க வந்த சீமை, கண்டிச்சீமை) அபுனைவு (கண்டிச்சீமையிலே, கூலித்தமிழ்) ஆகிய இருநிலைப்பட்டவையாக அமைகின்றமை கவனிக்கத்தக்கது.

### மலையக சமூகம் மற்றும் கலை இலக்கியம் தொடர்பான ஆய்வுத்துறை வளர்ச்சி

மலையகம் குறித்த பல்வேறு வகைப்பட்ட ஆய்வுத்துறைகளின் வளர்ச்சி இரண்டாயிரமாம் ஆண்டுகளுக்குப் பின்னரே மிகத்துரிதமாக இடம்பெறுகிறது. மலையக இலக்கியத்துடன் தொடர்புபட்ட விமர்சனங்கள் மற்றும் ஆய்வுகள், சமூக அரசியல் ஆய்வுகள், இலக்கியங்கள் குறித்த ஆராய்ச்சிகள், பண்பாட்டுத் துறை ஆய்வுகள் என பல்வேறு வகையில் விரிந்தன. இவை தனிப்பட்ட ஆய்வுகள், நிறுவனம் சார்ந்த ஆராய்ச்சிகள் என இருநிலைப்பட்டன. மேற்குறிப்பிட்ட ஆய்வுகளை பல்கலைக்கழகங்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் பெரிதும் மேற்கொண்டிருந்தன. இருபதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் அந்தனி ஜீவா, சாரல்நாடன், க. அருணாசலம் போன்றோரால் ஆரம்பிக்கப்பட்ட மலையக

இலக்கியம் பற்றிய ஆய்வுகள் சி.வி பற்றிய எழுத்துகள், நடேசய்யர் பற்றிய ஆய்வுகள் முதலியவற்றோடு மலையகத் தமிழ் இலக்கிய முயற்சிகள், மீனாட்சியம்மாள் பற்றிய அறிமுகம், வாய்மொழி இலக்கிய ஆய்வுகள் என்று தொடர்ந்தன. மலையக இலக்கியங்கள் பற்றிய ஆய்வுகளுடன் கூடிய விமர்சனங்களையும் இக்காலப்பகுதியில் இணைத்து மேற்கொண்டவராக லெனின் மதிவானம் விளங்குகிறார். 'ஊற்றுக்களும் ஒட்டங்களும்', 'மீனாட்சியம்மாள் முதல் மார்க்ஸிம் கார்க்கி (2012)', 'மலையகம் தேசியம் சர்வதேசம் (2010)' என்பவை மதிவானத்தின் குறிப்பிடத்தக்க நூல்களாகும். வ. செல்வராஜ் , ஜெ. சற்குருநாதன், மொழிவரதன் போன்றோரும் இலக்கிய மேடைகளில் ஆய்வுகளை மேற்கொண்டதோடு சில சஞ்சிகைகளிலும் விமர்சனங்களை எழுதி வருகின்றனர். இருபத்தோராம் நூற்றாண்டின் இரண்டாவது தசாப்தத்தில் எழுதத் தொடங்கிய பெ. சரவணகுமார், சு. தவச்செல்வன், எம்.எம். ஜெயசீலன் ஆகியோரது எழுத்துகள் முன்னைய ஆய்வாளர்களிலிருந்து வேறுபட்ட தளங்களை நோக்கி விரிவடைவதை இக்காலத்தில் அவதானிக்க முடிகிறது.




Image source - noolaham.org




மலையக இலக்கிய ஆய்வுத்துறையில் இயங்கும் மேற்குறிப்பிட்டோரின் எழுத்துக்களைத் தவிர்த்து இலங்கையிலுள்ள தமிழ் பல்கலைக்கழகங்களில் பட்டக்கல்வி மாணவர்களின் ஆய்வேடுகள் மலையகக் கவிதைகள், சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள், கூத்துக்கள் என்று பரந்து விரிந்த தளங்களிலும் தலைப்புகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முதல்நிலைப் பட்டம் மற்றும் முதுநிலைப் பட்ட ஆய்வேடுகளில் இவ்வாறான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் பெரும்பாலான ஆய்வுகள் நூல் வடிவம் பெறாமையாலும் வெளியிடப்படாமையாலும் அவை சமூக வாசிப்புக்குட்படுத்தப்படவில்லை. பல்கலைக்கழக புலமைநிலைப்பட்ட ஆய்வுகளில் குறிப்பாக மலையகக் கல்வித்துறை சார்ந்த பிரச்சினைகள் அதிகம் கையாளப்பட்டுள்ளன. நூற்றுக்கணக்கான கல்விசார் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் அவை நிறுவன மயப்படுத்தப்பட்ட கல்விசார் கல்விப் பிரச்சினைகளுக்கே முக்கியத்துவமளித்துள்ளன. மாறாக மலையக சமூகநிலைப் பிரச்சினைகளோ, மக்கள் பிரச்சினைகளோ முன்னிலைப்படுத்தப்பட்ட தன்மை மிக மிகக் குறைவு.

## பண்பாட்டுத்துறை ஆய்வுகள்

மலையக மக்களிடம் ஆரம்பத்திலிருந்தே இருந்து வந்த கலை வடிவங்கள் ஒவ்வொரு காலகட்டத்திலும் வளர்ச்சிபெற்று வடிவமாற்றம் பெற்றன. நாட்டார் பாடல், கும்மி, கோலாட்டம், ஒப்பாரி போன்ற வாய்மொழிப் பாடல் மற்றும் நடன வடிவங்களும் காமன்கூத்து, அர்ச்சுணன் தபசு, பொன்னர் சங்கர், பவளக்கொடி, காத்தவராயன் கூத்து, கெங்கையம்மன் கூத்து போன்ற கூத்து வடிவங்களும் காலமாற்றத்திற்கேற்பவும் மலையக புவியியல் அமைப்புக்கேற்பவும் வளர்ச்சி பெற்றிருந்தன. இருபதாம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து இக்கலைவடிவங்கள் தொடர்பான ஆய்வுகள் பல்கலைக்கழக மாணவர்களால் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக காமன் கூத்து பற்றிய கண்ணோட்டங்கள் பல்வேறு மட்டங்களில்

மேற்கொள்ளப்படத் தொடங்கியன. சந்தனம் சத்தியநாதன், மாத்தளை வடிவேலன், அ. லெட்சுமணன், சோபனாதேவி, ஹரிஸ், பொன். பிரபாகரன் போன்றோரால் காமன் கூத்துப் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இப்பண்பாட்டு நிலைப்பட்ட ஆய்வுகளில் பொன். பிரபாகரனின் 'காமன்கூத்து ஓர் அரசியல் பொருண்மிய ஆய்வு' என்ற நூலானது மலையகத் தமிழர்களது தேசிய கூத்தாக காமன் கூத்தை நிறுவும் முயற்சியாக அமைவதோடு மலையகத் தேசியத்தை நிறுவதற்கான அடிப்படை கூறுகளை காமன்கூத்து எவ்வாறு கொண்டிருக்கிறது என்பது பற்றியதுமாகும்.

மலையகப் பண்பாட்டுத்துறை ஆய்வுகளில் 1993ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட இரண்டு ஆய்வு நூல்கள் மிக முக்கியமானவை. ந. வேல்முருகு அவர்களால் மேற்கொள்ளப்பட்ட 'மலையக மக்களின் சமய நம்பிக்கைகளும் சடங்கு முறைகளும்' என்ற ஆய்வு நூல் மலையக மக்களது சமய வழிபாட்டு நம்பிக்கைகள் அவர்களின் வாழ்க்கை மரபுகளுடன் ஒன்றிணைந்து காணப்படும் தன்மைகளை வெளிக்கொணர்ந்தது. தொடர்ச்சியாக இதே ஆண்டில் உதயம் நிறுவனம் வெளியிட்டுள்ள 'இலங்கை மலையகத் தமிழரின் பண்பாடும் கருத்து நிலையும்' என்ற ஆய்வுத்தொகுதி பண்பாட்டுத்துறை குறித்த புதிய திசைவெளிகளை காண்பிப்பதாய் அமைந்தது. குறிப்பாக பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இவ்வாய்வுகள் ஒன்பது ஆய்வாளர்களின் பதினொரு வெவ்வேறு கலை மற்றும் பண்பாடு குறித்த தேடலாகவும் பதிவுகளாகவும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### முடிவுரை

மலையகத் தமிழர்களது இருநூறு வருட வரலாறானது கோப்பிக் காலம் முதல் இன்றுவரை (1823 - 2023) கணிக்கப்பட்டு ஒரு காலக்கணக்கெடுப்பு இக்கட்டுரையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒவ்வொரு காலகட்டத்துச் சமூக நிலையையும் அச்சமூக நிலைமைகளை அக்காலகட்டத்தில் தோற்றம் பெற்ற இலக்கியங்கள் எவ்வாறு பிரதிபலித்து வந்துள்ளன என்பதையும் இக்கட்டுரை மதிப்பீடும் செய்துள்ளது. இம்மதிப்பீட்டில் முடிவுரையாக சில கருத்துகளை முன்வைக்க வேண்டியுள்ளது. ஆங்கிலத் துரைமாரின் எழுத்துக்களிலிருந்தே மலையக எழுத்துகள் தொடக்கம் பெற்றுள்ளமையை இத்தேடலின் வழியாக உறுதிசெய்துகொள்ள முடிகிறது. குறிப்பாக கோப்பிக் கால மலையகத் தமிழர் சமூகத்தின் நிலைமைகளை வெளிப்படுத்தும் ஆவணங்களாக துரைமாரின் எழுத்துகளே நமக்கு கிடைக்கின்றன. இரண்டாவதாக, மலையகத் தொழிலாளர்கள் தொழிற்சங்கமாக சேர்ந்து இயங்கத் தொடங்கிய காலத்திலேயே அவர்கள் மத்தியில் இலக்கிய உருவாக்கமும் இடம்பெறத் தொடங்கிவிட்டன. இன்று வரையிலும் கூட மலையகத் தமிழர்களது பிரச்சினைகளை அல்லது மக்கள் இலக்கியப் பணிகளை மேற்கொண்டதில் அதிக பங்கு மலையகத் தொழிற்சங்கவாதிகளுக்கே உண்டு. மலையக இலக்கியத்தின் செழுமையான பக்கங்களை வளர்த்தெடுத்தவர்கள் தொழிற்சங்கவாதிகளாகவோ அல்லது அதனுடன் தொடர்புபட்டவர்களாகவே அமைகின்றனர். மலையக மக்கள் வரலாறும், தொழிற்சங்க அரசியல் வரலாறும், இலக்கிய வரலாறும் ஒன்றாகவே பயணிக்கின்றன. மலையக அரசியலின் தொடக்கத்தை இருநிலைப்பட்டதாகவே அறிய முடிகிறது. தொழிற்சங்க உருவாக்கத்துடன் கூடிய மக்கள் அரசியல் ஒரு தொடக்கமென்றால், இந்திய நலன்பேணும் முதலாளித்துவ நலன் சார்ந்த அரசியல் மற்றொரு தொடக்கம். முதலாவது தொடக்கம் இடையிலேயே முறியடிக்கப்பட்டு இரண்டாவது அரசியல் தளம் மேலோங்கி வந்திருந்தாலும் இடதுசாரி பாரம்பரியத்துடன் கூடிய மக்கள் அரசியல் ஒவ்வொரு காலத்திலும் செயற்பட்டே வந்துள்ளது. அது இலக்கியத்திலும் பேசப்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மலையக அரசியலின் வரலாற்றுப் போக்கில் சில இடங்களில் ஏற்பட்ட உடைவுகளே அரசியல் ரீதியாக தீர்க்கமான முடிவுகளை எட்ட முடியாமைக்கான காரணமாகவும் அமைந்துள்ளன.

இரண்டாயிரத்துக்கு பின்னரான சமூக மாற்றங்கள் சடுதியானவை. இருபத்தோராம் நூற்றாண்டின் முதல் காலாண்டை எட்டியிருக்கும் இருபத்திரண்டு ஆண்டுகளில் மலைய இலக்கியத் துறையில் பன்முகத்தன்மை கொண்ட படைப்புகள், ஆய்வுகள் வெளிவந்திருந்தாலும் அவை குறித்து இங்கு விரிவாக நோக்கப்படவில்லை. குறிப்பாக இக்காலத்தில் மலையக கல்வித்துறை வளர்ச்சியுடன் இணைந்து ஆய்வுத்துறை வளர்ச்சிபெற்றமை விசேடத்துவ அம்சமாக கருதமுடிகிறது. இருநூறு வருடகால மலையக சமூகமும் இலக்கியமும் பற்றிய இக்காலக்கணக்கெடுப்பு ஒரு முன்னோடி முயற்சியாகவே அமைகிறது. இம்மதிப்பீட்டினை மேலும் விரிவுபடுத்தி நோக்கவும் இடமுண்டு.

# சான்றாதாரங்கள்


1. சடகோபன் இரா (2014), கண்டிச் சீமையிலே, கோப்பி கால வரலாறு (18231893) வீரகேசரி வெளியீடு.
2. ஜெயவர்த்தனா. கு. (2009), இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம், தமிழில் க. சண்முகலிங்கம், குமரன் புத்தக இல்லம்.
3. சாரல் நாடன் (2011), மலையகத் தமிழர் வரலாறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
4. சிவராஜா அம்பலவாணர் (1997), இலங்கை வாழ் (இந்திய வம்சாவளி) மலையகத் தமிழரின் வரலாற்றின் ஆரம்பம் பற்றிய சில குறிப்புகள். மலையக தமிழாராய்ச்சி மாநாட்டு மலர்.
5. வேலுப்பிள்ளை சி.வி (1983), மலைநாட்டு மக்கள் பாடல்கள், கலைஞன் பதிப்பகம்.
6. நித்தியானந்தன். மு. (2014), கூலித்தமிழ், க்ரியா.
7. மோகன்ராஜ். க. (2014) இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனம், ஈழ ஆய்வு நிறுவனம்.
8. சாரல் நாடன். (2014), இலங்கை மலையகத் தமிழ் இலக்கிய முயற்சிகள், குமரன் புத்தக இல்லம்.
9. ஜெயவர்த்தனா. குமாரி. (2011), இலங்கையின் இனவர்க்க முரண்பாடு, குமரன் புத்தக இல்லம்.
10. நல்லம்மா (1928), மகளிரும் வாக்குரிமையும், இலங்கை இந்தியன் பத்திரிகைக் கட்டுரைகள், The Ceylon Indian.
11. மீனாட்சியம்மாள், கோ.ந. (1940), இந்தியர்களது இலங்கை வாழ்க்கையின் நிலைமை. கணேஷ் பிரஸ்.
12. நடேசய்யர். கோ. (2017), இலங்கைத் தோட்ட இந்தியத் தொழிலாளர் அந்தரப் பிழைப்பு நாடகம், மீள்பதிப்பு குமரன் புத்தக இல்லம்.
13. நடேசய்யர். கோ. (1939), தொழிலாளர் சட்ட புஸ்தகம், கணேஷ் பிரஸ்.
14. லெனின் மதிவானம் (2012), ஊற்றுக்களும் ஓட்டங்களும், பாக்கியா பதிப்பகம்.
15. சாரல் நாடன் (2013), இலங்கைத் தமிழ்ச் சுடர் மணிகள், சி.வி. வேலுப்பிள்ளை, குமரன் புத்தக இல்லம்.
16. அந்தனி ஜீவா (2005), மலையகத் தொழிற்சங்க வரலாறு, மலையக வெளியீட்டகம்.
17. தவச்செல்வன். சு. (2016), கொலைச்சிந்தும் கலகக்குரலும், தாயகம் சஞ்சிகை.
18. சாரல் நாடன் (2015), மலையக விடிவெள்ளி கோ.ந. மீனாட்சியம்மாள், குமரன் புத்தக இல்லம்.
19. முத்துலிங்கம். பெ. (2012), தொகுப்பாசிரியர், மலையக முச்சந்தி இலக்கியம், பரதேசம் போன தமிழர்களின் பரிதாபப் பாடல்கள், கயல்கவின் வெளியீடு.
20. தவச்செல்வன். சு. (2019), புனைகதையும் சமூகமும், மழை வெளியீடு.
21. சிவானந்தன். அரு. (2020), சென்று வருகிறேன் ஜென்ம பூமியே, பாக்யா பதிப்பகம்.
22. பன்னீர் செல்வம், சி. (2006), ஒரு சாலையின் சரிதம், மக்கள் கண்காணிப்பகம், தமிழ்நாடு.
23. கந்தையா. மு.சி. (2015), சிதைக்கப்பட்ட மலையகத் தமிழர்கள், விடியல் பதிப்பகம்.
24. 24. தோழர் ஓ.ஏ. இராமையாவின் நிழலும் நிஜமும், (2018), தோழர் ஓ.ஏ. இராமையா ஞாபகார்த்த மன்றம்.
25. மலரன்பன் (1989), கோடிச்சேலை.
26. மலரன்பன் (2008), பிள்ளையார் சுழி, எஸ். கொடகே சகோதரர்கள்.
27. முரளிதரன். சு. (1986), தியாக யந்திரங்கள், மலையக வெளியீட்டகம்.
28. முரளிதரன். சு. (1988), கூடைக்குள் நேசம், மலையக வெளியீட்டகம்.
29. முரளிதரன். சு. (2001) தீவகத்து ஊமைகள், மலையக வெளியீட்டகம்.
30. தீர்த்தக்கரை கதைகள் (1995), நந்தலாலா வெளியீடு, அன்ன பதிப்பு.
31. அருணாசலம். க. (1999), மலையகத் தமிழ் இலக்கியம், தென்றல் பப்ளிகேசன்.
32. சாந்திகுமார். எல். (2022), காலமும் மனிதர்களும்.
33. சாரல்நாடன் (2022), வானம் சிவந்த நாட்கள், குமரன் வெளியீடு.
34. செவ்வொளி. (2016) மலையகத்தின் சமகால இலக்கிய பண்பாடு சார்ந்த சிந்தனை, ஆய்வரங்க சிறப்பு மலர், சென்.ஜோசப் கல்லூரி மஸ்கெலியா.


(தொடரும்.)

நீண்டகால யுத்தத்தின் முடிவிற்கு பின்னர், போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக்கட்டமைக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு சாத்தியமாகாத நிலையில், மீள்கட்டுமானத்திற்கும் அபிவிருத்திக்கும் அரசிடமிருந்து போதுமான ஆதரவு கிடைக்காத சூழலே யதார்த்தமாகியிருக்கிறது. இந்நிலையில், வடக்கில் முனைப்படைந்து வரும் தொழில் முயற்சிகளையும் முயற்சியாளர்களையும் பலரதும் கவனத்திற்கு கொண்டுவருவதே ‘வளரும் வடக்கு’ எனும் இத் தொடரின் நோக்கமாகும். வடக்குப் பிரதேசத்தில் புலம்பெயர் சமூகத்தின் முதலீடு, புத்தாக்க தொழில் முனைப்புகள், வேலைவாய்ப்புகளை உருவாக்கும் எத்தனிப்புகள், தொழில் முனைவோரின் அனுபவப் பகிர்வு, முயற்சிகளின் தோல்விகளில் இருந்து கற்ற பாடம், வடக்கு பிரதேசத்தில் தனித்துவமாகக் காணப்படக்கூடிய பிரச்சனைகள், உலகளாவிய சமூகத்துடன் இணைந்து முயற்சிகளை வெற்றிகரமாக மாற்றக்கூடிய சந்தர்ப்பங்கள் போன்றவற்றை உள்ளடக்கியதாக இத்தொடர் அமையும். இத் தொடர் வடக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ள சமூக, பொருளாதார முயற்சிகளை விபரிப்பதோடு மட்டுமே நின்றுவிடாது, அதன் தொடர்ச்சியான அசைவிற்குத் தேவையான முன்னெடுப்புகளின் சாத்தியம் குறித்தும் இலங்கையின் பொருளாதாரப் பின்னணியில் தரவுகளோடு ஆராய்கிறது. இது புதிய முயற்சியாளர்களுக்கு பாடமாக அமைவதோடு மேலும் பல முயற்சியாளர்களை வடக்கை நோக்கி வரவழைக்கும்.

*தமிழில் : த. சிவதாசன்*

ஜெகன் அருளையா



# ‘அப்ரிமெஸ் ரெக்’ மென்பொருள் நிறுவனம் : ஒரு படுக்கையறையிலிருந்து ஏழாயிரம் சதுர அடிகள் வரை

இக் கட்டுரை ஆசிரியர் ஜெகன் அருளையா, இலங்கையில் பிறந்து தனது 2 வயதில் தனது பெற்றோருடன் பிரித்தானியாவிற்கு இடம் பெயர்ந்தவர். லண்டனில் வளர்ந்து, 1986 இல் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் இயற்கை விஞ்ஞானத்தில் பட்டம் பெற்ற அவர் இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக தகவற் தொழில்நுட்பத் துறையில், அதில் பாதிக் காலம் மென்பொருள் தயாரிப்பாளராக இலங்கையிலும் வேறு நாடுகளிலும், பிரித்தானிய நிறுவனங்களில் பணியாற்றியவர். 2015 இல், நிரந்தரமாக யாழ்ப்பாணத்துக்குக் குடிபெயர்ந்து அங்கு சமூக, பொருளாதாரத் திட்டங்களில் தன்னை ஈடுபடுத்தி வருகிறார்.

யாழ் ஜீக் சலெஞ் (*Yarl Geek Challenge*) வடக்கின் பெரும்பாலான தொழில்நுட்ப முயற்சிகளுக்கான நாற்றுமேடை என்பதில் சந்தேகமில்லை. 2022 இல் அது தனது 11 ஆவது போட்டியை நடத்தி முடித்திருக்கிறது. YGC நாற்றுக்கள் இதுவரை 60 நிறுவனங்களின் உருவாக்கத்துக்கும் பல நூற்றுக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்குவதற்கும் காரணமாக இருந்திருக்கின்றன. அதே வேளை இப்படி உருவான நிறுவனங்களிலிருந்து பிரிந்துபோய் தமது சொந்த நிறுவனங்களை உருவாக்கியோரை நாம் இங்கு கணக்கில் எடுக்கவில்லை. அவை பலவிதமான புதிய தொழில் முயற்சிகளுக்கு வித்திடும் கல்லூரிகளுக்கும் நிறுவனங்களுக்கும் பெருமை சேர்க்கின்றன. இந்நிறுவனங்களால்



உருவாக்கப்படும் திறமைசாலிகள் பிரிந்து சென்று மேலும் புதிய தொழில் முயற்சிகளை உருவாக்குவதே உண்மையான தொடர் இயக்கத்தை ஆரம்பிக்கும். அப்போதுதான் இயந்திரமே இயங்க ஆரம்பிக்கிறது. குழுக்கள் மேலும் குழுக்களை ஆரம்பித்து உலக அனுபவமும் அதன் உந்துசக்தியும் இணைந்து சங்கிலித் தொடர் இயக்கமாகப் பரிணமிக்கிறது. இதன் மூலமே நாம் கனவு கண்ட, அந்த சுயநிறைவை எய்தக்கூடிய,

தொழில்துறையை வளர்த்துக்கொள்ள முடியும். கலிபோர்ணியாவில், லண்டனில், கொழும்பில் இதைப் பார்த்தோம். யாழ்ப்பாணத்தில் இது இப்போது ஆரம்பிக்கிறது.

தகவல் தொலைத்தொடர்பு தொழில்நுட்பம் (Information and Communication Technology (ICT)) புதிய தொழில் முயற்சி ஆரம்பத்திற்கு மிகவும் உகந்த ஒரு துறை. இதற்கான நிறுவன ஆரம்பச் செலவுகள் மிகவும் குறைவு. ஒரு மடிக்கணனியையும் இணைய இணைப்பையும் 1000 அமெரிக்க டொலரிற்குள் பெற்றுவிட முடியும். அம்மாவுடனான உரசல் புரசல்களைச் சமாளிக்க முடியுமாயின் அவரது சாப்பாட்டு மேசையையே அலுவலகமாக்கிவிட முடியும். சந்தைக்குள் வேகமாக நுழைந்துவிடலாம். யாழ்ப்பாணக் கொக்குவில் வீட்டின் ஒரு படுக்கையறை இணையத்தின் மூலம் நியூ யோர்க்கின் வால் ஸ்ட்றீட்டுடன் இலகுவாகத் தொடர்பு கொண்டு விட முடியும்.

**இரு சகோதரர்களையும் அரச உத்தியோகங்களை எடுத்துக்கொள்ளுமாறு அவர்களது பெற்றோர்கள் அழுத்தங்களைக் கொடுத்தார்கள். இருப்பினும் இருவருமே தகவல் தொழில்நுட்பத்தோடு தம்மை இணைத்துக்கொண்டு விட்டனர்.**

மற்றெல்லா துறைகளையும்விட ICT துறைக்கு பெருத்த அனுகூலமிருக்கிறது. கோப்பாய் கிராமத்தில் செய்யப்பட்ட மாங்காய் சட்னி அல்லது கைவினைப் பொருள் சர்வதேச அங்காடிகளின் தட்டுகளில் போய்க் குந்துவதற்கு முன் அது பல நிறுவன முகவர்களின் தட்டுத் தடங்கல்களையும் விருப்பு வெறுப்புக்களையும் மீறித் தனது மெதுவான பயணத்தை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால் ஒரு செயலி (App), அது நல்லதோ கெட்டதோ, ஒரு சர்வதேச பாவனையாளரை இப்பொருட்களுடன் சில விநாடிகளில் இணைத்துவிடுகிறது. இப்படியான எண்ணற்ற செயலிகளை உள்ளடக்கும் தகைமையை Google Play கொண்டிருக்கிறது. நீங்கள் சட்னியைத் தயாரிப்பவரோ அல்லது செயலியைத் தயாரிப்பவரோ என்பது முக்கியமில்லை. பணம் சம்பாதிப்பது என்பது உங்கள் பண்டத்திலும் (product) சந்தைப்படுத்தும் திறமையிலுமே தங்கியிருக்கிறது.

உலகம் முழுவதிலும் முளைத்த தொழில்நுட்ப முயற்சிகள் (tech startups) ஒரு கடைக்கோ அல்லது ஒரு மருத்துவ மனைக்கோ அல்லது ஏதாவதொரு வியாபார முயற்சிக்கோ தேவையான செயலியை உருவாக்குவதன் மூலமே ஆரம்பித்திருக்கின்றன. முதலாவது முயற்சி எங்கோ இருவரால் அவர்களது படுக்கையறைகளிலேயே கட்டியெழுப்பப்பட்டிருக்கலாம். அதைத் தொடர்ந்து மேலும் பல வாடிக்கையாளர்களுக்கு அது போன்ற சேவைகள் தேவைப்பட்டிருக்கலாம். முதலாவது முயற்சியில் அவர்கள் கணிசமான நேரத்தைச் செலவிட்டு அதன் மூலம் இலாபமே சம்பாதிக்க முடியாமலேயே போயிருக்கலாம். இரண்டாவது முயற்சியில் அவர்களுக்கு அதிக நேரம் செலவிடத் தேவையில்லை. சிறிய



மனோஜன் மற்றும் அனோஜன்

Image source - marumoli.com

மாற்றங்களுடனே அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்துவிடுவார்கள். ஆனால் இப்போது வாடிக்கையாளர்களிடமிருந்து போதுமான பணத்தை அவர்களால் அறவிட்டுக்கொள்ள முடியும். அதே செயலியை அவர்கள் வேறும் பலருக்கு விற்று அதிக இலாபத்தை ஈட்டுவார்கள். இப்போது அந்த இருவரும் குழுவாக அதிகரிப்பார்கள். அதிக வாடிக்கையாளர்களை நாடுவார்கள். வேறும் பல துறைகளில் அவர்களது சேவைகளை விஸ்தரிப்பார்கள். விரைவிலேயே

அவர்களது நிறுவனம் கொடிகட்டிப் பறக்கும். மேலும் சந்தர்ப்பங்களைத் தேடி அவர்கள் ஓடுவார்கள். இதனால் பலருக்கும் வேலைவாய்ப்புகள் கிடைக்கும். வியாபாரம் பெருகும். நிறுவனமும் வளரும். இக்கட்டுரைக்குக் காரணமான Apptimus Tech இப்படித்தான் உருவாகியது.

தக்கன பிழைக்கும் என்ற டார்வினின் தத்துவத்துக்கமைந்ததே தகவல் தொழில்நுட்பத் துறையும். புதிய ஆரம்பங்கள் தோல்வியில் முடிந்தாலும் தோற்றுப்போனவர்களுக்கு அவை நிறையப் பாடங்களைக் கற்பிக்கின்றன. அதில் நிச்சயமாக ஒன்று இன்னுமொரு தடவை முயற்சித்துப் பார், அல்லது அதில் கற்ற அனுபவத்துடன் இன்னுமொரு ஸ்திரமான நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்துவிடு என்பதே.

2018 இல் நடைபெற்ற YGC யின் 8 ஆவது போட்டியில் வெற்றிபெற்ற 'ரீம் மஜெண்டா' வை உருவாக்கிய யாழ்ப்பாணத்தைத் தளமாகக் கொண்ட Apptimus Tech நிறுவனம் பற்றிய கட்டுரையில் YGC மூலம் முளைத்தெழுந்த பல நிறுவனங்கள் பற்றி நான் ஏற்கெனவே எழுதியிருக்கிறேன். 3 Axis Labs; SenzMate; Arogya Life ஆகியனவே அவை.

அனோஜன் கணேசதாஸினால் உருவாக்கப்பட்ட 'அப்ரிமஸ் ரெக்' இல், பின்னர் அவரது இளைய சகோதரர் மனோஜனும் இணைத்துக்கொள்ளப்பட்டார். யாழ்ப்பாணத்திலிருந்து வடக்கே சில கிலோ மீட்டர்கள் தூரத்தில் இருக்கும் சுன்னாகத்திலுள்ள வசதியான குடும்பமொன்றிலிருந்து வந்தவர்கள் இச் சகோதரர்கள். அவர்களது தந்தையார் ஒரு இளைப்பாறிய கிராம சேவகர். தாயார் ஒரு திருமணப் பதிவாளர். இரு சகோதரர்களும் கணிதம், விஞ்ஞானம் ஆகிய துறைகளில் பிரபலமான யாழ். இந்துக்கல்லூரியில் கல்வி கற்றார்கள். அனோஜன் களனிப் பல்கலைக் கழகத்தில் தனது விஞ்ஞான இளமானிப் பட்டத்தையும் பின்னர் மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் முதுமானிப்பட்டத்தையும் பெற்றிருந்தார். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ESoft கல்லூரியில் மனோஜன் தனது கல்வியைப் பெற்றிருந்தார்.

2014 இல் தனது பட்டப்படிப்பின் ஒரு அங்கமாக, அனோஜன் 6 மாத துரித பயிற்சிக்காக டெல்லிக்குப் போகவேண்டி இருந்தது. சுகாதாரத் தகவல்கள் தொடர்பான கல்வியை வழங்கிய ஒரு தொண்டு நிறுவனத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட இக் கற்கைநெறியில் C# மென்பொருள் கற்கும்போது அனோஜன் Point of Sales (POS) என்னும் தொழில்நுட்பத்தை உருவாக்கினார் (இது கடைகளில் கடனட்டைகள் போன்றவற்றை உரசுவதற்குப் பாவிக்கப்படும் சாதனம் போன்றதென வைத்துக்கொள்ளுங்கள்).

2015 இல் அனோஜன் தான் உருவாக்கிய இந்த POS சாதனத்தை யாழ்ப்பாணத்திலுள்ள வியாபார நிலையமொன்றிற்கு விற்றார். இதைத் தொடர்ந்து தனது நண்பர்கள் மூலமாக மேலும் பலவற்றை விற்பனை செய்தார். ஒரு உணவகம் இந்த POS ஐ சாதாரண பாவனைக்காகவும் இன்னுமொரு அழகு ஆடை விற்பனைக்கடை தமது முன்னரங்க விற்பனையுடன் கூடவே தமது கையிருப்புக்களையும் கணக்கெடுக்கும் வகையிலான மென்பொருளுடன் கூடிய POS ஐயும் வாங்கினார்கள். வேறு பல நிறுவனங்களுக்கு அவர்களது நிதிக் கணக்குகளைக் கவனித்துக்கொள்ளும் வகையிலும், சிலவற்றிற்கு அவற்றின் பணியாளர் பற்றிய தரவுகளைத் தெரிவிக்கும் மென்பொருளை உள்ளடக்கியதாகவும் சிலவற்றில் இணையவழி விற்பனைகளைக் கவனிப்பதற்காகவும் தனது POS சாதனங்களை வடிவமைத்தார். இவ்வகையில் அனோஜனது மென்பொருள் பண்டம் வளர்ச்சியடைந்தது.

இரு சகோதரர்களையும் அரச உத்தியோகங்களை எடுத்துக்கொள்ளுமாறு அவர்களது பெற்றோர்கள் அழுத்தங்களைக் கொடுத்தார்கள். இருப்பினும் இருவருமே தகவல் தொழில்நுட்பத்தோடு தம்மை இணைத்துக்கொண்டு விட்டனர். 2015 இல் நிறுவனம் ஆரம்பிக்கப்படும் முன்னரே சந்தைப்படுத்தல் மற்றும் இதர ஆதரவுகளுக்கென விதுஷன் என்பவரைத் தனது முதலாவது பணியாளராக அனோஜன் அமர்த்துகிறார். 2016 இல் மேலும் இருவர் பணிக்கமர்த்தப்படுகிறார்கள். 2017 இல் தான் Apptimus Tech நிறுவனமாகப் பதிவுசெய்யப்படுகிறது.

அனோஜனது வீட்டில் தான் அவர்களது அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் பின் தோட்டத்தில் தனியான ஒரு அலுவலகத்தை அவர்கள் நிர்மாணித்தார்கள். 2018 இன் முடிவில், நிறுவனம் 10 பணியாளர்களைக் கொண்டதாக வளர்ந்துவிட்டது. தோட்ட அலுவலகத்தால் தாங்க முடியாமற் போகவே அவர்கள் மீண்டும் வீட்டிற்குள் புகுந்து ஏறத்தாழ வீடு முழுவதையும் ஆக்கிரமித்து விட்டார்கள்.

2019 இல் 'அப்ரிமஸ் ரெக்' தனது முதலாவது

பெரிய வாடிக்கையாளராக யாழ்ப்பாணத்தின் பிரபல ஹொட்டேலான வலம்புரி ஹொட்டேலைப் பெற்றுக்கொள்கிறது. உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்களைத் தொடர்ந்து இலங்கையின் சுற்றுலாத்துறை படு வீழ்ச்சியடைந்தாலும் வலம்புரியின் உணவகம் தொடர்ந்தும் களைகட்டியபடியே இருந்தது. வலம்புரி ஒருபோதும் சுற்றுலாவாசிகளில் தங்கியிருக்கவில்லை. அதன் சுவையான 'யாழ்ப்பாணத்து' உணவு யாழ்ப்பாணத்தவரின் பசியைப் போக்கவே போதுமாகவிருந்தது.

2022 இல் 'அப்ரிமஸ் ரெக்' 52 பணியாளர்களுடன் மல்லாகத்திலுள்ள 7,000 சதுர அடி பரப்பளவுள்ள கட்டிடத்திற்கு நகர்ந்துகொண்டது. அடுத்த இரண்டு வருடங்களுக்குள் தனது பணியாளரின் எண்ணிக்கையை 300 ஆக உயர்த்த அனோஜன் தீர்மானித்திருக்கிறார்.

இக்காலகட்டத்தில் 'அப்ரிமஸ் ரெக்' வியாபார வளத் திட்டமிடல் (Enterprise Resource Planning (ERP)) என்ற துறைக்கான மென்பொருள் தயாரிப்பில் ஈடுபட ஆரம்பித்தார்கள். இதன் மூலம் சிறிய மற்றும் மத்தியதர நிறுவனங்கள் தமது செயற்பாடுகளை இலாபகரமாக வளப்படுத்திக்கொள்ள முடியும். இதற்காக 'அப்ரிமஸ் ரெக்' உருவாக்கிய மென்பொருளைத் தமது பெயரைத் தாங்கியதாக 'அப்ரிமேட்' (Apptimate) எனப் பெயரிட்டனர். தனது சேவைகளைப் பெறும் வாடிக்கையாளரைத் தேடும்போது பல புதிய சந்தர்ப்பங்களுக்கான கதவுகள் திறக்கப்படுவதை அனோஜன் உணர்ந்தார். பல பழைய நிறுவனங்களில் செயற்பாடுகள் தொடர்பற்றவையாக இருந்தன. முன்னரங்க விற்பனைக்கென ஒரு POS உம் பின்னரங்க நிதிக்கணக்குகளுக்கென இன்னுமொரு செயற்பாட்டு முறையும் பிரயோகத்தில் இருந்தன. கையிருப்புக்ளைக் கணக்கிடத் தனியான ஒரு மென்பொருளை ஒருவர் வடிவமைத்திருப்பார். வாடிக்கையாளர் பற்றிய தவல்களைச் சேகரிக்க CRM போன்ற மென்பொருட்கள் பாவனையில் இருக்கவில்லை. ஆரம்பத்தில் பல நிறுவனங்கள் மலிவான சேவைகளையே நாடின. பின்னர் அவர்கள் ஸ்திர நிலையை அடைந்ததும் விலையுயர்ந்த செயலிகளை வாங்கும் பக்குவத்துக்கு உந்தப்பட்டார்கள். இப்படியான வளரும் நிறுவனங்களின் செயற்பாடுகளை ஒன்றிணைப்பதன் மூலம் 'அப்ரிமஸ் ரெக்' சேர்ந்தே வளர்ந்தது. அது மட்டுமல்லாது வெவ்வேறு துறைகளுக்கான செயலிகளை உருவாக்குவதில் 'அப்ரிமஸ் ரெக்' கவனம் செலுத்தியது.

**மருத்துவ மனைகள்:** வட மத்திய மருத்துவமனை (North Central Hospital) உட்பட பல மருத்துவ மனைகள் இப்போது 'அப்ரிமஸ் ரெக்' இன் வாடிக்கையாளர்களாக உள்ளன. தெலுங்கானா மாநிலத்திலுள்ள அப்போலோ மருத்துவமனை தமக்கெனத் தனித்துவமான செயலி ஒன்றை 'அப்ரிமஸ் ரெக்' மூலம் உருவாக்கிப் பயன்படுத்தி வருகிறது. சகல அப்போலோ மருத்துவமனைகளையும் ஒருங்கிணைக்கும் செயலி இது. கொழும்பிலுள்ள பிரபல தனியார் மருத்துவமனையொன்றின் ஒருங்கிணைந்த சேவைக்கான செயலி ஒன்றை வழங்குவதற்கு 'அப்ரிமஸ் ரெக்' திட்டமிட்டு வருகிறது. இம்மருத்துவமனை தற்போது 30 தனித்தனியான செயலிகள் மூலம் தன் செயற்பாடுகளைக் கவனித்து வருகிறது.


**சட்ட அலுவலகங்கள்:** கொழும்பிலுள்ள பிரபல சட்ட நிபுணர் மூலம் சட்ட அலுவலகங்களுக்கான செயலி ஒன்றை உருவாக்குவதில் 'அப்ரிமஸ் ரெக்' ஈடுபட்டு வருகிறது. வினைத்திறன் குறைந்த தொழில் எனக் கருதப்படும் சட்டத்துறையை முன்னேற்ற இது உதவும். கொழும்பில் ஹல்ற்ஸ்டோர்ஃப் மற்றும் யாழ்ப்பாண நீதிமன்றங்களுக்கு வெளியே கறுப்பு ஆடைகளுடன் அலையும் சட்டத்தரணிகளைக் கண்டால் உங்களுக்கு இது புரியும். சட்டத்தரணிகள் அமைதியாகவும், அவர்களது வாடிக்கையாளர்கள் அமைதியின்றியும் நீதிமன்ற ஆசனங்களில் இருப்பதை அவதானிப்பவர்களுக்கு இது புரியும் (நான் ஒரு அவதானிப்பவனாக, பங்கு பெறுபவனாக அல்ல, பல தடவைகள் அங்கு அமர்ந்திருக்கிறேன்). 'அப்ரிமஸ் ரெக்' போன்ற நிறுவனங்களுக்கு இத்துறையில் வெகுவான தேவையிருக்கிறது.

**சுற்றுலாத்துறை:** வலம்புரி, ரில்கோ ஜாஃப்னா சிற்றி ஹொட்டேல், றீச்சா ஆகிய ஹொட்டேல்கள் உட்பட பலவற்றில் 'அப்ரிமஸ் ரெக்' செயலிகள் செயற்பாட்டில் உள்ளன. பிரித்தானியா, பிரான்ஸ் போன்ற நாடுகளில் 'அப்ரிமஸ் ரெக்' செயலிகள் பயன்பாட்டில் உள்ளன. மேலும் பல நாடுகளுக்கு விஸ்தரிக்கும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

**ஆட்சேர்ப்பு:** Placements.lk (https://placements.lk) என்பது 'அப்ரிமஸ் ரெக்' இன் இன்னுமொரு சேவை. இலங்கையின் முதலாவது 'விண்ணப்பதாரியை மையமாகக் கொண்ட' ஆட்சேர்ப்பு செயலி பற்றி அனோஜன் விபரிக்கிறார். இலங்கையிலுள்ள தனியார் மற்றும் அரச பல்கலைக்கழகங்கள், நிறுவனங்களுக்கு

மாணவ விண்ணப்பங்களைக் கோருவது முதல் அவர்களைத் தெரிவுசெய்வது வரை இந்நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றும் முயற்சியில் 'அப்ரிமஸ்' இறங்கியிருக்கிறது. கடந்த 12 மாதங்களுக்குள் பல நூற்றுக்கணக்கான நிறுவனங்கள் தமது பணியாளர் தேவைக்கான வெற்றிடங்களை இச்செயலியில் பதிவிட்டிருக்கிறார்கள்.

அவருக்கு உண்டு. சிறிய நிறுவனங்கள் தமது சேவைகளை இலங்கையிலிருந்தே பெற்றுக்கொள்வதில் திருப்தியடைந்தாலும் பெரிய நிறுவனங்கள் எமது பணியாளர்களின் நேரடிப் பங்கேற்பையே விரும்புகிறார்கள் எனக்கூறும் அனோஜன் வெவ்வேறு சந்தைத் தேவைகளுக்கேற்ப கிளை நிறுவனங்களை உருவாக்க திட்டமிடுகிறார்.




| Title | Type | Position | No of Positions | Country | Status | Actions |
|---|---|---|---|---|---|---|
| Digital Marketing Interns | Internship | - | 5 | Sri Lanka | Open | |
| UX Engineer | Full-time | UI/UX Engineer | 3 | Sri Lanka | Open | |
| Marketing Executive | Full-time | Marketing Executive | 3 | Sri Lanka | Open | |
| Tech Lead | Full-time | Tech Lead | 2 | Sri Lanka | Open | |
| Quality Assurance Engineer | Full-time | QA Engineer | 3 | Sri Lanka | Open | |
| Software Engineer | Full-time | Software Engineer | 5 | Sri Lanka | Open | |
| Senior Software Engineer | Full-time | Software Engineer | 3 | Sri Lanka | Open | |
| Intern Software Engineers | Internship | Software Engineer | 10 | Sri Lanka | Open | |
| Survey Coordinators | Contract-based | Survey Coordinator | 20 | Sri Lanka | Closed | |
| Intern Sales Coordinator | Internship | Sales Coordinator | 1 | Sri Lanka | Open | |
| Intern Software Engineer | Internship | Software Engineer | 3 | Sri Lanka | Closed | |
| Assistant HR Manager | Full-time | HR Manager | 1 | Sri Lanka | Open | |
| Intern Software Engineers - Flutter | Internship | Software Engineer | 3 | Sri Lanka | Closed | |

**Placements.lk**

16 நாடுகளில் 13 துறைகளில் 500 இற்கும் மேற்பட்ட நிறுவனங்கள் தமது வாடிக்கையாளர்களாக இருக்கிறார்கள் என அனோஜன் தெரிவிக்கிறார். அவர்களது மென்பொருள்களையும் தாண்டி வாடிக்கையாளர்களின் தேவையைப் பொறுத்து விசேடமாக வடிவமைக்கப்பட்ட (customized) மென்பொருள்களையும் 'அப்ரிமஸ்' தயாரித்துக் கொடுக்கிறது. இணையத்தளங்கள், கைபேசிச் செயலிகள், மேசைக்கணனிச் செயலிகள் எனச் சகல தேவைகளுக்குமான சேவைகளை 'அப்ரிமஸ்' வழங்குகிறது.

வெளிநாடுகளில் தனது நிறுவனத்தின் சேவைகளை விஸ்தரிப்பதுவே அனோஜனின் எதிர்காலத் திட்டம். அவுஸ்திரேலியா, பிரித்தானியா, கனடா, இந்தியா ஆகிய நாடுகளில் பல வாடிக்கையாளர்கள் இருப்பதாலும் பல வாய்ப்புக்கள் இருப்பதாலும் அங்கு பல கிளைகளை நிறுவும் உத்தேசமும்

C# மென்பொருளைக் கற்பதற்காக ஒரு பொழுதுபோக்காகவே POS செயலியை அனோஜன் உருவாக்கினார். அவரது பொழுதுபோக்கு இப்போது ஒரு நிறுவனமாகவே மாறியிருக்கிறது. முதலில் அவரது பெற்றோரது வீட்டில் பின்னர் தோட்டத்தில் இறுதியாக, 2022 இல், 7,000 சதுர அடி அலுவலகத்தில் அது இயங்குகிறது. தனியொருவனாக ஆரம்பித்த அவரது நிறுவனம் 100 இற்கும் மேலான பணியாளர்களைக் கொண்டு இயங்குகிறது. மேலும் விஸ்தரிக்கும் திட்டங்களும் உண்டு. உலகில் 16 நாடுகளில் அப்ரிமஸ் ரெக் நிறுவனத்தின் பண்டங்களும் சேவைகளும் விற்பனையாகின்றன. இளைஞரான அனோஜன் தனது நிறுவனத்தை மென் மேலும் உயர்த்துவதற்கான நேரத்தையும் சக்தியையும், பேராவலையும் இப்போதும் கொண்டிருக்கிறார் என்பது நிறைவுதரும் திருப்தி.

**மனோஜனைத் தொடர்பு கொள்ள:**
**info@apptimustech.com**




# செபீரோ (Xebiro):

# யாழ்ப்பாணத்தில் உருவாகும் ஐரோப்பியத் தொழில்நுட்பம்

ஆரோக்கியம், பொருளாதாரம் எனப் பலவழிகளாலும் உலகிற்கு மிக மோசமான பாதிப்புகளைத் தந்துகொண்டிருக்கும் கோவிட்19 பெருந்தொற்று, கற்றலிலும், பணிகளிலும்கூட பல புரட்சிகரமான மாற்றங்களைத் திணித்து வருகிறது. பாடசாலைகளும் பல்கலைக்கழகங்களும் நேரடிக் கல்வியிலிருந்து தொலைக் கல்வியைத் (distance learning) தரும் நிலைக்குத் தள்ளப்பட்டு வருகின்றன. பல்கலைக்கழக வளாகங்களில் கவனமற்ற போதிப்பு, ஆரோக்கியமற்ற உணவு போன்றவற்றால் சோர்வுற்ற இளையோர் இப்போது தமது வீடுகளில் படுக்கையறைகளை வகுப்பறைகளாக்கத் தள்ளப்பட்டுள்ளார்கள். ஸ்மார்ட் ஃபோன்களை வைத்திருக்கும் கிராமத்துப் பிள்ளைகளும் ஆசிரியர்களும் இணையத் தொடர்புகளைப் பெற மரங்களில் ஏறவேண்டிய நிலை. அலுவலகப் பணியாளர்கள் தமது பணிகளைத் தமது சொந்த வீடுகளிலிருந்தே ஆற்றுவதற்குத் தள்ளப்படுகிறார்கள். தொலைதூரக் கல்விக்கும், பணிக்கும் இசைவாகும் வகையில் தொழில்நுட்பமும் தன்னை மாற்றிக்கொண்டு வருகிறது. 2013 இல் எந்தவித அமர்க்களமுமில்லாமல் சந்தைக்கு வந்த 'சூம்' (ZOOM), கோவிட் பெருந்தொற்று முடக்கத்துடன் உள்வீட்டுப் பிள்ளையாகிவிட்டது. . 2021 இல் அதன் காலாண்டு வருமானம் 1 பில்லியன் அமெரிக்க டொலர்கள்; இரண்டே வருடங்களில் அதன் வளர்ச்சி ஐந்து மடங்கு!




**2017 இல் செபீரோ குழுமத்தினர்**

### கோவிட்19 முடக்கங்களும் தொலைப் பணியாற்றலும் (Remote Working)

*தொலைதூரப் பணியாற்றல் (remote working) என்பதைச் சாத்தியமாக்கும் தொழில்நுட்பம் மிக நீண்ட காலமாக அறியப்பட்டிருந்ததெனினும் அது பெரிதாகப் பாவனையில் ஈடுபடுத்தப்படவில்லை. வலையமைப்பு பாதுகாப்பில் (network security) இருந்த நம்பிக்கையீனம் மற்றும் தமது சுதந்திரத்தைத் துஷ்பிரயோகம் செய்யலாமென்று மாணவர்களும் பணியாளர்களும் கொண்டிருந்த அவநம்பிக்கையும் இந்நடைமுறைப் பிரயோகத்தைத் தாமதப்படுத்தியிருந்தன.*

*இந்த இசைவாக்கத்தின் பயனாக, மெருகூட்டப்பட்ட தற்போதைய தொழில்நுட்பம், தொலைப் பணியாளர்களின் விசைப்பலகை (key strokes), மற்றும் சுட்டி (mouse) ஆகியவற்றின் இயக்கங்களையும் நகர்வுகளையும் அவதானிப்பதோடு, எழுந்தமானமாக கணினிகளின் திரைகளைப் படமெடுப்பது (screen shots) போன்ற கண்காணிப்பு நடவடிக்கைகளை அலுவலக முகவர்கள் செய்வதற்கு வழிசெய்து கொடுக்கின்றன. கால, பண விரயங்களைத் தரும் பயணங்களைத் தவிர்த்து வீடுகளில் இருந்தபடியே சுதந்திரமாகப் பணியாற்றுவதற்கு அவர்கள் கொடுக்கும் விலையாக தொலைப் பணியாளர்கள் இந்த 'கண்காணிப்புகளைச்' சகித்துக் கொள்கிறார்கள்.*

*தொலைப்பணிகள் மூலம் உறபத்தித் திறன் (productivity) அதிகரித்ததைக் கண்ட நிறுவனங்கள், கோவிட் முடக்கங்கள் தளர்த்தப்பட்ட பின்னரும், தமது அலுவலகத் தள அளவுகளைச் சுருக்கிப் பணத்தைச் சேமித்துக்கொள்கின்றன. சில நிறுவனங்கள் தமது விலையுயர்ந்த அலுவலக வாடகைகளைத் தவிர்ப்பதற்காக தொலைதூர சிறுநகரங்களில் சிறிய அலுவலகங்களை வாடகைக்கு அமர்த்திக் கொள்கின்றன. இருப்பினும், இப்படியான தொலைப் பணி முயற்சிகளினால் சில விரும்பத்தகாத விளைவுகளும் ஏற்படாமலில்லை. உதாரணமாக அலுவலகங்களிலிருந்து பணியாற்றுபவர்கள் மத்தியில் ஏற்படும் சமூக உணர்வு, நேரடித் தொடர்பாடல், இறுக்கமான உறவு ஆகியவற்றின் மூலம் பலமானதும் விசுவாசமுள்ளதுமான பணிக்குழுக்களை உருவாக்க முடியும். இவற்றைத் தவிர்க்க சில நிறுவனங்கள் சில சாதுரியமான வழிவகைகளையும் கையாளுகின்றன.*

## செபீரோ : லண்டன், கொழும்பு, தற்போது யாழ்ப்பாணத்திலும்



யாழ்ப்பாணத்தில் செபீரோ அலுவலகம்

Image source - marumoli.com

கோவிட் பெருந்தொற்றின்போது கொழும்பைத் தளமாகக் கொண்ட தொழில்நுட்ப நிறுவனமான 'செபீரோ' (Xebiro) தனது பணியாளர்கள் பலரை யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பியது. கோவிட் முடக்கம் தளர்த்தப்பட்டதும் இப்பணியாளர்களைக் கொழும்பிற்குத் திருப்பி அழைக்காமல் வடக்கின் தலைநகரான யாழ்ப்பாணத்தில் ஒரு தொலைப்பணி அலுவலகத்தை அது நிறுவி அதன் மூலம் பணியாளர்களை நிர்வகிக்க ஆரம்பித்தது.

செபீரோ, யாழ்ப்பாணத்தில் பிறந்த சில இளையவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. சிலர் தமது சிறு வயதுகளிலும், சிலர் தமது உயர்தரக் கல்விகளை முடித்துக்கொண்டு மேற்கல்விகளுக்காகவும் கொழும்புக்கு இடம் பெயர்ந்தவர்கள். இந் நிறுவனத்தின் தற்போதைய பணிப்பாளர்களாக (directors), சசீவன் கணேசானந்தன் (தலைவர்) - Shaseevan Ganeshananthan (President), பிரேம்குமார் ராஜதுரை ( பொறியியல் மற்றும் செயற்பாட்டுப் பணிப்பாளர்) - Premkumar Rajathurai (Director, Engineering and Operations) மற்றும் சஜீவ் எட்வார்ட் (சந்தைப்படுத்தல் மற்றும் பங்காளர் விவகாரங்களுக்கான பணிப்பாளர் - Director, Marketing and Partnership) ஆகியோர் இருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் கொழும்பு பல்கலைக்கழகத்தில் தமது பட்டப்படிப்புகளை மேற்கொண்டிருந்தபோது அறிமுகமானவர்கள்.

2016 இல் சசீவனின் எண்ணக்கருவில் உதித்த செபீரோ, 'ஒன்ரோமட்றிக்ஸ்' (Ontomatrix) என்ற பெயரில் 2017 இல் தனது செயற்பாடுகளை ஆரம்பித்தது. ஐக்கிய அரபு இராச்சியத்தில் சந்தை ஆய்வுகள் துறையில் பணியாற்றிக்கொண்டிருந்த சஜீவ், பின்னர் இணைந்து கொண்டார். ஆரம்பத்தில் இந் நிறுவனம், ஐரோப்பாவிலுள்ள தமது வாடிக்கையாளர்களுக்காக டிஜிட்டல் சந்தைப்படுத்தல் மற்றும் செயலிகளை உருவாக்கும் (digital marketing and application development) தேவைகளை நிறைவேற்றிக்கொண்டிருந்தது. வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து நிறுவனம் வளர்ச்சியடைந்ததும் செயலி உருவாக்கப் பணிகள் தனிமைப்படுத்தப்பட்டு 'கோட்லாண்டிக்' (Codelantic) என்ற நிறுவனத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களான JKH, MIT, Virtusa ஆகியவற்றில் பணியாற்றிக்கொண்டிருந்த பிரேம், கோட்லாண்டிக் நிறுவனத்தின் நிர்வாகப் பணியை ஏற்றுக்கொண்டார்.

இந் நிறுவனத்தின் ஆரம்பம் லண்டன், கொழும்பு நகரங்களாக இருப்பினும் யாழ்ப்பாண நகரமே அதன் எதிர்காலத் தளமாக இப் பணிப்பாளர்களின் மனங்களில் என்றும் நிறைந்திருந்தது. கோவிட் பெருந்தொற்று அந்த எதிர்காலத்தை நிகழ்காலமாக மாற்ற வழிசெய்துவிட்டது.

## யாழ்ப்பாணத்தில் தொலைப்பணி முயற்சிகளின் சவால்கள்

லண்டனில் இருக்கும் தலைமையகம் பெரும்பாலான மென்பொருள் உருவாக்கங்களில் ஈடுபட்டு வரும் வேளையில், கொழும்பில் செபீரோ தனது குழுவினைக் கட்டியெழுப்பியது. 2020 இல் கோவிட்19 இன் முடக்கங்கள் இம் முயற்சியை யாழ்ப்பாணத்திற்கு நகர்த்தியது. ஆரம்பத்தில், யாழ்ப்பாணத்திலுள்ள பழைய வீடொன்றை வாடகைக்கு அமர்த்தியதன் மூலம் செபீரோவின் இக்கள முயற்சி பலனளிக்குமா எனப் பரீட்சித்தார்கள். இந்த பரீட்சார்த்த முயற்சி அளித்த வெற்றியின் உற்சாகத்தால், 2021 நடுப்பகுதியில், யாழ்ப்பாணத்தில் ஒரு நிரந்தர இடமொன்றை எடுத்துக்கொள்ள நிர்வாகம் தீர்மானித்தது. யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து 500 மீட்டர்கள் தொலைவில் ஒரு நவீன கட்டிடம் இந் நிறுவனத்தின் தளமாகியது. யாழ்ப்பாணத்தில் 25 பணியாளர்களையும், உலகம் முழுவதிலும் மேலும் 70




பணியாளர்களையும் கொண்டு செபீரோ இப்போது ஒரு உலக நிறுவனமாகப் பரிணமித்துள்ளது. மென்பொருள் உருவாக்குபவர்கள் (*developers*), வணிக ஆய்வாளர்கள் (*business analysts*), தர உறுதியாளர் (*Quality Assurance*), தகவல் தொழில்நுட்பமென்பொருள் விருத்தியாளர் (*DevOps*) ஆகிய துறைகளில் திறமைகளைக் கொண்டிருப்பவர்களைப் பயிற்சியாளர்களாக (*interns*) உள்வாங்கிப் பின்னர் நிரந்தர பணியாளர்களாக அவரவர் துறைகளுக்குத் தரமுயர்த்துவதைத் தனது கொள்கையாக வரித்திருக்கிறது செபீரோ. யாழ்ப்பாணத்தில் உருவாகும் இப்பணியாளர்களின் தொழில்நுட்பத் தரம் கொழும்பிலுள்ளவர்களுக்கு நிகராக இருக்கிறது என்கிறார் சஜீவ். பயிற்சிக்காகப் புதியவர்களை உள்வாங்குவது அவர்களுக்குத் தொழில்நுட்பத்தைப் போதிப்பதற்கல்ல. மாறாக, அவர்களுக்கு ஒழுக்கத்தையும் (*discipline*), மென்திறன்கள் (*soft skills*), நல்ல மனப்பான்மை (*good attitude*) ஆகியவற்றை அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டுமென்பதற்காகவே எனக் கூறுகிறார் சஜீவ்.

**லண்டனில் இருக்கும் தலைமையகம் பெரும்பாலான மென்பொருள் உருவாக்கங்களில் ஈடுபட்டு வரும் வேளையில், கொழும்பில் செபீரோ தனது குழுவினைக் கட்டியெழுப்பியது. 2020 இல் கோவிட் 19 இன் முடக்கங்கள் இம் முயற்சியை யாழ்ப்பாணத்திற்கு நகர்த்தியது.**

இலக்கு நோக்கி மையப்படுத்தப்பட்ட ஒரு வணிகச் சூழலில் (*focused goal driven corporate team environment*) பணியாற்றும் கலாச்சாரத்தைக் கற்றுக்கொள்வதே இப்பயிற்சியாளரிடம் எதிர்ப்பார்க்கப்படுவது. இலங்கை முழுவதற்கும் பொதுவான குணாம்சமான, மெதுவான சீரற்ற வாழ்வுமுறைக்குப் (*slower more random pace of life*) பழக்கப்பட்டுப் போனவர்கள் இவர்கள். வடக்கிலிருந்து தெற்குவரை, குழந்தைப்பருவம் முதல் முதுபருவம் வரை, அரச சேவை முதல் தனியார் சேவை வரை இதுவே பழக்கம். வெளிநாட்டு நிறுவனங்களுக்குச் சேவைகளை வழங்கும் இலங்கை நிறுவனங்களில் மட்டுமே உண்மையான தொழில்நேர்த்தியைக் காணமுடிகிறது. ஐரோப்பா, வட அமெரிக்கா, சிங்கப்பூர், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலுள்ள வாடிக்கையாளர்கள் மிகவும் கண்டிப்பானவர்கள். இலங்கையின் வேகத்தில் இயங்கும் நிறுவனங்கள் இவ்வணிகச் சூழலில் நிலைத்து நிற்கமாட்டா. நிலைத்து நின்றுபிடிக்கும் நிறுவனங்கள் ஒழுக்கம், இலக்குநோக்கிய நகர்வு, நற்பண்பு ஆகியவற்றைத் தமது பணியாளர்களிடையே புகுத்தியவையாகவே இருக்கும். ஆடை, தேயிலை உற்பத்தி முதல் மென்பொருள் சேவை வழங்கும் துறைகள் வரை இதுவே உண்மை.

கொழும்பு போன்ற ‘அதி வேக’ நகரங்களில் இயங்கும் தொழில்நுட்பத் துறைக்கு இது மிகவும் பொருத்தமான ஒன்று. புதிதாக சேர்க்கப்படும் பணியாளர்கள் மூத்த, அனுபவமிக்க பணியாளர்களிடமிருந்து

இப்பணிக்கலாச்சாரத்தை விரைவாகக் கற்றுக்கொள்கிறார்கள். பழையவர்களிடமிருந்து புதியவர்களும் நல்ல பண்புகளை உள்வாங்கப் பழகிக்கொள்கிறார்கள். நேரம் தவறாமை, இலக்கு நோக்கிய திண்ணமான, அமைதியான பணியாற்றல் ஆகிய பண்புகளைக் கொண்டிருக்கும் மூத்தோரைப் பார்த்து இளையோரும் கற்றுக்கொள்கிறார்கள். இதன் மூலம் தமது திறமைகளை அபிவிருத்தி செய்துகொள்பவர்களுக்கு பல வழிகளிலும் தொழில்வாய்ப்புக்களுக்கான சந்தர்ப்பங்கள் வந்து சேர்கின்றன. ஊதிய உயர்வும், கைகளில் நிரம்பப் பணமும் அவர்களுக்கு வெகுமதிகளாகக் கிடைக்கின்றன. கடிகாரம் தீர்மானிப்பது போலல்லாமல், நாள் முடியும்போதுதான் பணியும் முடிவடைகிறது என்ற பணிக்கலாச்சாரத்தை அவர்கள் கற்றுக்கொள்கிறார்கள்.

இப் பணிக்கலாச்சாரத்தைப் புகுத்துவதற்கு செபீரோ ஒரு வரையறுக்கப்பட்ட நடைமுறையைக் கையாள்கிறது. பணியாளர்கள் உள்வரும் போதும் வெளியேறும் போதும் அவர்களது பெருவிரலடையாளாங்கள் ஸ்கானர் மூலம் பதியப்படுகின்றன. ஆடையணிகளில் இறுக்கமான கட்டுப்பாடுகள் பின்பற்றப்படுகின்றன. கூட்டங்கள் சரியான நேரத்துக்கு ஆரம்பிப்பதுடன் செயற்பாடுகள் அனைத்தும் பதிவுசெய்யப்படுகின்றன. முறையாக வரையறுக்கப்பட்ட கையேடுகள் மற்றும் தானியக்கப் பரிசோதனைகள் ஆகியன, மென்பொருட் செயற்பாடுகள் சீராகச் செயற்பட வழிவகுக்கின்றன. ஏற்கெனவே செயற்பாட்டில் இருக்கும் பல மென்பொருள் செயலிகள் தொலைப்பணி (*remote working*) முறைகளில் பிரயோகப்படுத்தப்படுகின்றன. திட்ட மேலாண்மைக்கு (*Project Management*) ‘ஜிரா’ (*Jira*); குழுக்களிடையே தகவற் பரிமாற்றத்துக்கு ‘ஸ்லாக்’ (*Slack*); மென்பொருள் தரத்தைப் (*code quality*) பரிசோதிக்க ‘சோனார்கியூப்’ (*SonarQube*) மற்றும் ‘ஹைவ்டெஸ்க்’ (*Hivedesk*) ஆகிய மென்பொருள்களும் பாவிக்கப்படுகின்றன. விசைப்பலகைகளின் செயற்பாடுகள் (*key strokes*), சுட்டி அசைவுகள் (*mouse movements*) ஆகியவற்றைக் கண்காணிப்பதற்காகவும், இடைக்கிடையே அவர்களது கணனிகளின் திரைகளைப் படம் பிடிப்பதற்காகவும் உருவாக்கப்பட்ட விசேட கணகாணிப்புச் செயலிகள் (*Apps*) ஒவ்வொரு பணியாளர்களின் கணினிகளிலும் உட்புகுத்தப்பட்டிருக்கின்றன. அலுவலகங்கள் எங்கும் பொருத்தப்பட்டிருக்கும் கமராக்கள் (*CCTV*) அலுவலகச் செயற்பாடுகளை நிர்வாகம் கவனித்துக்கொள்ள உதவுகிறது.

‘ஹைவ்டெஸ்க்’ போன்ற கண்காணிப்புச் செயலிகள் ஒரு பணியாளரது சுதந்திரத்தில் தலையீடு செய்கிறது என்ற கரிசனை இருந்த போதிலும், அலுவலகத்தில் நேரடியாக வந்து பணிபுரியும்போது முகாமையாளரின் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படுவது போன்ற ஒன்றே இதுவும் என எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். யாழ்ப்பாண அலுவலகத்திலிருந்து பணிபுரிபவர்களுக்கும் கொழும்பிலிருக்கும் அலுவலகமொன்றில் பணிபுரிபவர்களுக்கும் ஒரே வகையான கண்காணிப்பை இத் தொழில்நுட்பம் வழங்குகிறது.

டிஜிட்டல் சந்தைப்படுத்தல் தேவைகளுக்காக ‘ஒன்ரோமேட்றிக்ஸ்’ என்ற நிறுவனத்தையும், மென்பொருள் தயாரிப்பிற்காக ‘கோட்லாண்டிக்’ என்ற நிறுவனத்தையும் செபீரோ நிறுவியது. அத்தோடு ‘எம்பிறியோஸ்’ (*Embryoz*) என்ற நிறுவனத்தையும் பின்னர் தனது குழுமத்தில் இணைத்துக்கொண்டது. முதன் முதலாக ஆரம்பிக்கப்படும் நிறுவனங்களில் (*startups*) பங்குதாரராகி அவற்றை வளர்த்துவிடுவதே ‘எம்பிறியோஸ்’ நிறுவனத்தின் நோக்கம். எம்பிறியோஸ் நிறுவனத்தில் பங்குதாரராகுவதற்கு முதலீடாக அதன் மென்பொருள் விருத்தி, சந்தைப்படுத்தல், ஆதார சேவைகள் ஆகியவற்றை மிகக்குறைந்த விலையில் (*at cost*) செபீரோ வழங்குகிறது. லண்டனில் நான்கு ஆரம்ப வியாபார நிறுவனங்களுடன் தற்போது ‘எம்பிறியோஸ்’ பணியாற்றி வருகிறது. *Digital Banking Ecosystem, Artificial Intelligence Analysis of Text, Marketplace for Beauty and Grooming Salons, A Full Service Enterprise wide ECommerce System* ஆகியவையே அவை. மேலும் பல புதிய வியாபார ஆரம்ப முயற்சிகள் ‘எம்பிறியோஸ்’ உடன் இணைவதற்குக் காத்திருக்கின்றன. *technical infrastructure support and management* மற்றும் *Artificial Intelligence and machine learning applications* போன்ற புதிய வியாபார முயற்சிகளுக்கான முதலீடுகளைத் தருவதற்கு ‘செபீரோவின்’ கிளை நிறுவனங்கள் தயாராகவுள்ளன.

## வடக்கின் திறமைகளை அபிவிருத்தி செய்தல்

வடமாகாணத்தின் இளையோரை வளர்ந்துவரும் தொழில்நுட்ப உலகுக்கு அறிமுகப்படுத்தும் முயற்சியை மேற்கொள்ளும் முகமாக ‘நேச்சர் லீப்’ (*NurtureLeap*) என்னும் திட்டத்தை செபீரோ அறிமுகப்படுத்தியிருக்கிறது. வட மாகாணத்தின் பல்கலைக்கழகங்களுக்கு மிக அண்மிய பகுதிகளில்

இவற்றின் அலுவலகங்கள் அமைந்திருக்கும். யாழ். பல்கலைக்கழகத்துக்கு அருகாமையிலுள்ள 'கம்பஸ் வீதி' யில் இதன் முதலாவது அலுவலகம் இருக்கிறது. வடக்கிலிருந்து வரும் பயிற்சியாளர்கள் தங்கி செபீரோவின் 'இலங்கைத் தலைமையகத்தில்' பயிற்சிகளைப் பெறுவதற்காக கொழும்பில் ஒரு வீட்டையும் இந் நிறுவனம் வைத்திருக்கிறது. பொருத்தமான தொழில்நுட்பத் திறமைகளைக் கொண்டிருக்கும் பயிற்சி மாணவர்களுக்கு 'நேச்சர் லீப்' சம்பளமும் வழங்குகிறது. மென்பொருள் அபிவிருத்தி, டிஜிட்டல் சந்தைப்படுத்தல், தகவல் பரிமாற்றக் கட்டுமானம், செயற்கை விவேகம் போன்ற துறைகளில் இம் மாணவர்களுக்கு 'நேச்சர் லீப்' பயிற்சிகளை வழங்குகிறது. 612 மாத காலப் பயிற்சியின் பின்னர் இம்மாணவர்களுக்கு தமது நிறுவனங்களிலோ அல்லது வேறு நிறுவனங்களிலோ முழுநேர பணிகளைப் பெறுவதற்கு செபீரோ உதவி செய்கிறது.




2016 இல் சசீவனின் எண்ணக்கருவில் உதித்த செபீரோ, 'ஒன்ரோமட்றிக்ஸ்' (Ontomatrix) என்ற பெயரில் 2017 இல் தனது செயற்பாடுகளை ஆரம்பித்தது. ஐக்கிய அரபு இராச்சியத்தில் சந்தை ஆய்வுகள் துறையில் பணியாற்றிக்கொண்டிருந்த சஜீவ், பின்னர் இணைந்து கொண்டார். ஆரம்பத்தில் இந் நிறுவனம், ஐரோப்பாவிலுள்ள தமது வாடிக்கை யாளர்களுக்காக டிஜிட்டல் சந்தைப்படுத்தல் மற்றும் செயலிகளை உருவாக்கும் (digital marketing and application development) தேவைகளை நிறைவேற்றிக்கொண்டிருந்தது.

மேலும், அதிகமான மாணவர்களுக்குப் பயிற்சிகளை வழங்குவதற்கு பண உதவிகளைச் செய்ய விரும்புவர்களிடமிருந்து நன்கொடைகளை (sponsorships) 'நேச்சர் லீப்' எதிர்பார்க்கிறது. நிர்வாகச் செலவு, உபகரணங்கள், மாணவரின் பராமரிப்பு ஆகியவற்றுக்கான செலவுகளைச் சமாளிக்க இது உதவும். இதர தொழில்நுட்ப நிறுவனங்களின் உதவியுடன் யாழ்ப்பாணத்தை ஒரு திறனாளர் சந்தையாக மாற்றுவதன் மூலம் தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களும் முதலீட்டாளர்களும் யாழ்ப்பாணத்தை நோக்கி ஓடிவரும் நிலையை உருவாக்க வேண்டுமென்பதே செபீரோவின் இலட்சியம். வடக்கில் என்னவெல்லாம் செய்யலாம் என்பதை நிறுவனங்களுக்கும், முதலீட்டாளர்களுக்கும் காட்டும் உதாரண நிறுவனமாக இருக்கவேண்டும் என்பதும் அதன் விருப்பம். சிறிய இலாபங்களைத் தரும் முயற்சிகளைத் தாண்டி, கிராமத்துத் தையல் பெண்களுக்கு உதவி செய்வதையோ, அல்லது கைவினைப் பொருட்களைச் செய்து விற்று வறுமையைப் போக்குவதற்கென உதவிகளைப் புரிவதையோ விட்டுவிட்டு மக்களை நிரந்தரமாக வறுமையிலிருந்து மீட்டெடுக்கும் பெரு முயற்சிகளுக்கு உதவிகளைச் செய்யவேண்டுமென்பதே செபீரோவின் பெருவிருப்பு. இதன் மூலம், இந் நன்கொடைகள் நிறுத்தப்பட்ட பின்னருங்கூட, இக் குடும்பங்கள் தொடர்ந்தும் செழிப்போடு வாழ முடியும்.

செபீரோ நிறுவனத்தின் பங்காளர், பணிப்பாளரான சஜீவ் எட்வார்ட்டுடன் தொடர்புகொள்ள விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய மின்னஞ்சல்: sajeev@xebiro.com

**நன்றி : மறுமொழி,**
**Lanka Business Online (www.lankabusinessonline.com)**

(தொடரும். )

இலங்கையைப் பொறுத்தமட்டில், தமிழர்களின் தொன்மையான வரலாறு இன்னும் மகாவம்ச இருளால் மூடப்பட்டிருக்கும் சூழலில், இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் அண்மைக்காலத்தில் இடம்பெற்ற தொல்லியல் ஆய்வுகள் இலங்கையில் பூர்வீகமாக வாழ்ந்த தமிழ் மக்களின் இருப்பியல் தகவல்களை வெளிக்கொணர்ந்துள்ளன. அந்தவகையில் 'இலங்கையின் அண்மைக்கால தொல்லியல் ஆய்வுகள்' என்ற இத்தொடர் சமகாலத்தில் இலங்கையில் குறிப்பாக வடக்கு – கிழக்குப் பகுதிகளில் இடம்பெற்றுவரும் தொடர் அகழாய்வுகளில் கண்டறியப்பட்ட தொல்லியல் ஆதாரங்களின் அடிப்படையில், பெருங்கற்காலப் பண்பாட்டுக் காலத்தில் இலங்கைத் தமிழ் மக்களிடம் நிலவிய நாகரிகம், அவர்களின் கலாச்சார பண்பாட்டு அம்சங்கள், பொருளாதார சமூக நிலவரங்கள், வெளிநாட்டு உறவுகள், உறவுநிலைகள், சமய நடவடிக்கைகள் போன்ற அம்சங்களை ஆதாரபூர்வமாக வெளிக்கொணர்வதாக அமைகின்றது.



பரமு புஷ்பரட்ணம்

# மீளுருவாக்கப்பட்ட ஆரியகுளமும் ஆரியச்சக்கரவர்த்திகளும்


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியரான பரமு புஷ்பரட்ணம் அவர்கள், தனது இளமாணி மற்றும் முதுமாணிப் பட்டத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், கலாநிதிப் பட்டத்தைத் தஞ்சாவூர் பல்கலைக்கழகத்திலும் பெற்றுக்கொண்டார்.

இவர் எழுதிய பதினைந்து நூல்களில் நான்கு நூல்கள் இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசையும், மூன்று நூல்கள் மாகாண சாகித்திய மண்டலப் பரிசையும் பெற்றன. இவர் 82இற்கும் மேற்பட்ட தேசிய, சர்வதேச ரீதியிலான ஆய்வுக்கட்டுரைகளை எழுதியுள்ளதுடன், இதுவரை 55 சர்வதேச மற்றும் தேசிய கருத்தரங்குகளில் பங்குபற்றியுள்ளார்.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் 18 இடங்களில் இவரால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளில் மூன்று அகழ்வாய்வுகள் தொடர்பான விடயங்கள் நூல்வடிவில் வெளிவந்துள்ளன.




**ஆரிய குளம் - மீளுருவாக்கத்தின் முன்**

Image source - www.flickr.com

இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து வெளிவந்த தமிழ் ஊடகங்கள் தூரநோக்குடன் தமிழ் மக்களின் வரலாற்றையும், பண்பாட்டையும் அடையாளப்படுத்தும் மரபுரிமைச் சின்னங்களைக் கண்டறிந்து அவற்றைப் பாதுகாக்க மக்கள் அனைவரும் முன்வரவேண்டும் என்ற வேண்டுதலை முன்னெடுத்து வந்திருந்திருப்பதைக் காணமுடிகின்றது. அவ்வேண்டுதலில் ஒன்றை நிறைவு செய்திருக்கும் அரிய வரலாற்றுப் பணியாகவே இன்று யாழ்ப்பாண மாநகர சபையால் முன்னெடுத்துள்ள ஆரியகுளம் மீள்புனரமைப்புப் பணியைப் பார்க்கின்றோம். இது யாழ்ப்பாண நகரை அழகுபடுத்தும் இயற்கை சார்ந்த மரபுரிமைச் சின்னம் என்பதற்கு அப்பால் அது யாழ்ப்பாண அரசுகால வரலாற்றையும், பண்பாட்டையும் நினைவுபடுத்திக்காட்டும் மரபுரிமைச் சின்னம் என அதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பது அனைவருக்கும் மகிழ்ச்சி

தருவதாக உள்ளது. ஆரியகுளத்தை யாழ்ப்பாண அரசுடனும், அதன் ஆட்சியாளருடனும் தொடர்புபடுத்திக் கூறும் போது ஆரியகுளம் என்ற பெயர் எவ்வாறு வந்தது, எப்போது வந்தது, எந்த மன்னன் காலத்திற்கு உரியது, இக்குளம் யாருக்குச் சொந்தமானது? என்பன தொடர்பாக வேறுபட்ட கருத்துக்களும், பல கேள்விகளும் மக்களிடமும், வரலாற்று ஆர்வலர்களிடமும் நீண்டகாலமாக இருந்து வருவதை நாம் அறிவோம். அதுவும் இக்குளத்தின் மீளுருவாக்கப் பணி தொடங்கிய காலத்தில் இருந்து இவ்வாறான கேள்விகள் ஊடகங்கள் பலவற்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு வந்ததையும் காணமுடிகின்றது. இந்த வரலாற்று மயக்கத்திற்கு ஆரியகுளம் என்பதன் முன்னொட்டுச் சொல்லாக வரும் "ஆரிய(ர்)" என்ற சொல் பயன்பாட்டிலிருப்பதும் ஒரு காரணமாக இருக்கலாம். இதற்கு கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் அண்மையில் பொருத்தமான பதிலையும், விளக்கத்தையும் வழங்கியிருந்ததுடன் இதையிட்டு வரலாற்று ஆசிரியர்கள் மௌனமாக இருக்கிறார்கள் என்ற தனது நியாயமான ஆதங்கத்தையும் வெளிப்படுத்தியிருந்தார். அவரின் கருத்திற்கு மேலும் நம்பகரமான சான்றுகளையும், விளங்கங்களையும் எடுத்துக் கூறுவதே இச்சிறுகட்டுரையின் நோக்கமாகும்.

## ஆரியச்சக்கரவர்த்திகளும் ஆரியகுளமும்

தமிழகத்தில் சோழரின் வீழ்ச்சியைத் தொடர்ந்து கி.பி. 12 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுச்சியடைந்த இரண்டாம் பாண்டியப் பேரரசு அதன் சமகாலத்தில் தென்னிலங்கைமீதும், வடஇலங்கைமீதும் ஆறு தடவைகளுக்கு மேல் படையெடுத்தது பற்றி அவர்கள் வெளியிட்ட சாசனங்கள் கூறுகின்றன.
இப்படையெடுப்புக்களின் தளபதிகளாக இருந்தவர்களே ஆரியச் சக்கரவர்த்திகள் என்ற பட்டத்தையும் பெற்றிருந்தனர்.
இப்பட்டங்களை படைத்தளபதிகள் அல்லது சேனாதிபதிகள் மட்டுமன்றி அரச நிர்வாகத்தில் உயர்பதவிகளில் இருந்தவர்களும் பெற்றிருந்தனர் என்பதனைப் பாண்டியர்காலச் சாசனங்கள் உறுதிசெய்கின்றன. அவற்றுள் இலங்கைமீது படையெடுத்த ஆரியச்சக்கரவர்த்திகள் யார், எந்த நாட்டவர், எந்ந அரச வம்சத்திற்கு உரியவர்கள், எந்த மொழிக்குரியவர்கள்? என்பன தொடர்பான கேள்விகளுக்கு விடைகூறுவதாகவே சிங்கள வரலாற்று இலக்கியங்களில் ஒன்றான சூளவம்சத்தில் வரும் பின்வரும் கூற்றுக்கள் காணப்படுகின்றன:

"முன்பு பஞ்சம் ஒன்று நிலவியகாலத்திலே பாண்டிய இராச்சியத்தில் ஆட்சிபுரிந்த சகோதரர்களான ஐந்து மன்னர்கள் ஆரியச்சக்கரவர்த்தி என்னும் பெயர் கொண்ட தமிழ்ச் சேனாதிபதியின் தலைமையில் படையொன்றை அனுப்பி வைத்தார்கள். அவன் ஆரியனல்லானாயினும் மிகுந்த செல்வாக்கும் அதிகாரமும் கொண்ட பிரதானியாக விளங்கினான். இராச்சியத்தின் எல்லாப் பக்கங்களையும் அழித்துவிட்டு அரண்கள் பொருந்திய சுபபட்டணத்தினுள் (யப்பகூவாவிற்குள்) அவன் புகுந்தான். அங்கிருந்த தந்ததாதுவையும், விலைமதிக்கமுடியாத செல்வங்களையும் கவர்ந்து கொண்டு ஆரியச்சக்கரவர்த்தி பாண்டிநாட்டுக்குச் சென்றான். அங்கு பாண்டிய மன்னர் குலமெனும் தாமரையை மலர்விக்கின்ற கதிரவனையொத்த குலசேகர மன்னனுக்கு அவற்றைக் கொடுத்தான்".

மேற்கூறப்பட்ட கூற்றிலிருந்து ஆரியச்சக்கரவர்த்திகள் ஆரியர்கள் அல்லாத தமிழர் என்று கூறப்பட்டிருப்பது இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது. தமிழ்ப் பேரகராதியில் ஆரியன் என்ற சொல்லுக்கு தலைவன், பிராமணன் என்ற பொருள்களும் உள்ளன.

கி.பி.13 ஆம் நூற்றாண்டிள் நடுப்பகுதியில் வடஇலங்கைமீது மேற்கொள்ளப்பட்ட இன்னொரு படையெடுப்பு பற்றிய விரிவான செய்திகளை தமிழகத்தில் புதுக்கோட்டை மாவட்டத்தில் குடுமியாமலையிலுள்ள 1262 ஆண்டுக்குரிய பாண்டியரது கல்வெட்டு கூறுகின்றது. அக்கல்வெட்டு, தென்னிலங்கையிலும், வடஇலங்கையிலும் இரு அரசுகள் இருந்ததாகவும், சிங்கள அமைச்சன் ஒருவனது வேண்டுதலின் பேரில் பாண்டியர் வடஇலங்கைமீது படையெடுத்து ஆட்சியில் இருந்த சாவகனை அடிபணிந்து திறைசெலுத்துமாறு கோரியபோது அதை அவன் ஏற்க மறுத்ததால் அவனைக் கொன்று அவனின் மைந்தனை ஆட்சியில் அமர்த்திவிட்டு இந்த வெற்றியின் நினைவாக தமது அரச இலட்சனையான இரட்டைக்கயல் (மீன்கள்) பொறித்த கொடிகளை கோணாமலையிலும், திரிகூடகிரியிலும் (திருகோணமலையில்) ஏற்றிவிட்டுத் திரும்பியதாகக் கூறுகின்றது. ஆயினும் இந்த வெற்றியைத் தொடர்ந்து தமிழகத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால் சாகவனின் மைந்தனை ஆட்சியில் அமர்த்திய

பாண்டியப்படைகளே அவனை அகற்றிவிட்டு கி.பி.13 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் நல்லூரைத் தலைநகரகக் கொண்ட யாழ்ப்பாண அரசைத் தோற்றுவித்தனர். இதனால்; இவ்வரசு பாளி, சிங்கள, தமிழ் இலக்கியங்களில் ஆரியச்சக்கரவர்த்திகள் அரசு என்றே அழைக்கப்படுகின்றன. இதனால் யாழ்ப்பாண அரசில் ஆட்சிபுரிந்த தொடக்ககால மன்னர்கள் ஆரியச்சக்கரவர்த்திகள் என்பதை ஒரு வம்சப் பெயராகக் கொண்டு தமது பெயருடன் ஆரியன் என்ற பெயரையும் இணைத்துக் கொண்டனர். இதற்கு உதாரணமாக யாழ்ப்பாண வைபவமாலையில் கூறப்பட்டுள்ள குலசேகர சிங்கையாரியன், விக்கிரம சிங்கையாரியன், வரோதய சிங்கையாரியன், மார்த்தாணட சிங்கையாரியன், குணபூஸண சிங்கையாரியன், செயவீர சிங்கையாரியன், குணவீர சிங்கையாரியன், கனகசூரிய சிங்கையாரியன் முதலான எட்டு மன்னர்களின் பெயர்களைக் குறிப்பிடலாம். மேலும் ஆரியச்சக்கரவர்த்தி மன்னன் ஒருவன் கம்பளை அரசு மீது படையெடுத்தது பற்றிய தமிழ்க் கல்வெட்டொன்று தென்னிலங்கையில் கொணட்டகம என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அக்கல்வெட்டிலும் படையெடுத்த மன்னனை “பொங்கொலிநீர்ச் சிங்கையாரியன்” என்றே கூறப்பட்டுள்ளது. இது மேலும் யாழ்ப்பாண வைபவமாலையில் சொல்லப்பட்ட செய்தியை உறுதிசெய்வதாக உள்ளது. இவ்வாதாரங்கள் யாழ்ப்பாண அரசுகால மன்னர்களின் பெயர்களுடன் ஆரியன் என்ற சொல்லும் இணைந்துள்ளதைக் காட்டுகின்றது.

ஆரியச்சக்கரவர்த்திகள் ஆரியர்கள் அல்லாத தமிழர் என்று கூறப்பட்டிருப்பது இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது. தமிழ்ப் பேரகராதியில் ஆரியன் என்ற சொல்லுக்கு தலைவன், பிராமணன் என்ற பொருள்களும் உள்ளன.

ஆரியச்சக்கரவர்த்திகளால் தோற்றுவிக்கப்பட்ட யாழ்ப்பாண அரசைக் காலப்போக்கில் சுதேச மன்னர்களும் ஆட்சி செய்தனர். இவ்வரசு போத்துக்கேயரால் வெற்றி கொள்ளப்படும் வரை (1619 இல்) ஏறத்தாழ 350 ஆண்டுகள் சுதந்திர தமிழரசாக ஆட்சியில் இருந்துள்ளது. இவ்வரசின் வரலாற்றை விரிவாக ஆராய்ந்த பேராசிரியர் சி. பத்மநாதன் இலங்கைத் தமிழர் பண்பாடு தனித்துவமாக வளர்வதற்கு யாழ்ப்பாண அரசு ஒரு முக்கிய காரணம் எனக் கூறியிருப்பதுடன் அவ்வரசு காலத்தில் தமிழ் மொழி, சைவசமயம், இலக்கியம், இசை, நடனம், நாடகம், சோதிடம், வைத்தியம், விவசாயம், வெளிநாட்டு வர்த்தகம், இராணுவக்கட்டமைப்பு என்பனவும் வளர்சியடைந்திருந்ததாகவும் குறிப்பிடுகின்றார். கி.பி. 14 ஆம் நூற்றாண்டில் எழுந்த ராஜாவலிய என்ற சிங்கள வரலாற்று இலக்கியம் சமகாலத்தில் ஆட்சியிலிருந்த றைகம, கம்பளை, யாழ்ப்பாண அரசுகள் பற்றிக்குறிப்பிட்டு, அவற்றுள் யாழ்ப்பாண ஆரியச்சக்கரவர்த்திகளின் அரசே படைப்பலத்திலும், பொருளாதார வளத்திலும் மேலோங்கி இருந்ததாகவும் அவ்வரசு மலைநாடு தொட்டு தாழ்நிலப்பகுதிவரை ஒன்பது துறைமுகங்களில் இருந்து திறை பெற்றதாகவும் கூறுகின்றது.

பொதுவாக ஒரு நாட்டில் அல்லது ஒரு வட்டாரத்தில் ஆட்சிபுரிந்த அரச வம்சங்கள் மற்றும் ஆட்சியாளர்களின் பெயர்கள், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடப்பெயர்களுடனும், அவர்களது வரலாற்றுப் பணிகளுடனும் இணைந்துப் பேசப்படுவதுண்டு. இவ்வாரலாற்று நினைவுகள் பிற்காலத்தில் தொடர்ந்ததற்கும், காலப்போக்கில் மறைந்ததற்கும் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன.

இவர்கள் இராமேஸ்வரம் சேதுதலத்துடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தால் இவர்கள் சேதுகுலம் எனவும் அழைக்கப்பட்டனர். இச்சேதுகுலத்தையும், சேது தலத்தையும் நினைவுபடுத்தும் வகையில் யாழ்ப்பாண அரசில் ஆட்சிபுரிந்த ஆரியச்சக்கரவர்த்திகள் தாம் வெளியிட்ட நாணயங்களிலும், கல்வெட்டுக்களிலும், அரச கொடிகளிலும் சேதுவை ஒரு மங்கல மொழியாகப் பயன்படுத்தினர். இச்சொல் இன்றும் யாழ்ப்பாண அரசில் ஆட்சிபுரிந்த ஆரியச்சக்கரவர்த்திகளின் முக்கிய வரலாற்று அடையாளமாகப் பார்க்கப்படுகின்றது. மேலும் ஆரியச்சக்கரவர்த்திகள் வாழ்ந்த தென்தமிழகத்தில் அதிலும் குறிப்பாக பாண்டியரின் ஆதிக்கம் நிலவிய இடங்களில் ஆரியகுளம், ஆரியநல்லூர், ஆரியச்சக்கரவர்த்தி நல்லூர், ஆரியகவுண்டனனூர், ஆரியக்கவுண்டன் வளவு முதலான பெயர்கள் பரந்த பிரதேசத்திற்குரிய இடப்பெயர்களாக உள்ளன. வரலாற்றுப் பழமைவாய்ந்த இவ்விடப்பெயர்கள் தற்காலத்



ஆரிய குளம் - மீளுருவாக்கத்தின் பின்

Image source - tamilwin.com

தமிழகத்தின் உள்ளூராட்சி மன்றங்களின் பெயர்களாகவும் இருந்துவருகின்றன. இப்பெயர்கள் ஆரியச்சக்கரவர்த்திகளின் நிர்வாகத்திற்கு உட்பட்டிருந்ததன் காரணமாகத் தோன்றியவை எனக் கூறப்படுகின்றது. அதிலும் யாழ்ப்பாணத்தில் உள்ள ஆரியகுளம் என்ற அதே பெயர் தென்தமிழகத்தில் ஒரு உள்ளூராட்சி மன்றத்தின் பெயராக இருப்பது யாழ்ப்பாணத்தில் உள்ள ஆரியகுளம் ஆரியச்சக்கரவத்திகளின் ஆட்சியை நினைவுபடுத்த தோன்றியதை உறுதிப்படுத்துவதாக உள்ளது. இற்றைக்கு 100 ஆண்டுகளுக்கு முன்னர் (1913ஆம் ஆண்டு) “ஈழநாடும் தமிழ்ச் சங்கமும்” என்ற நூலில் அமரர் முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள் குணபூஸணசிங்கையாரியனின் அமைச்சன் ஒருவன் ஆற்றிய பணிகள் பற்றி விரிவாகக் கூறும் போது குணபூஸணசிங்கையாரியனின் பெயரில் ஆரியகுளமும், அவனது மனையும் இருந்ததாகக் குறிப்பிடுகின்றார். மேலும் அவர் இம் மன்னன் காலத்திலேயே 63 நாயன்மார்களுக்கு நாயன்மார்க்கட்டில் ஆலயம் அமைக்கப்பட்டதாகவும் கூறியுள்ளார். அண்மையில் நாயன்மார்க்கட்டு ஆலயத்திருக்குளம் மீளுருவாக்கம் செய்யப்பட்டபோது ஒரு அரிய தமிழ்க் கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டு அது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்திரபாலா தொல்லியல் அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு காலத்தால் சற்றுப் பிற்பட்டதாக இருப்பினும் அக்கல்வெட்டில் இவ்வாலயத் திருக்குளத்தை அமைத்தவன் சிங்கையாரியன் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாதாரங்களை வைத்துப் பார்க்கும் போது ஆரியகுளம் என்ற பெயர் யாழ்ப்பாண அரசைத் தோற்றுவித்த ஆரியச்சக்கரவரத்திகளின் ஆட்சியை நினைவுபடுத்திக் காட்டும் ஒரு மரபுரிமைச் சின்னம் என்பது உறுதியாகத் தெரிகின்றது. இதை மறுதலித்துக் கூறுவதற்கு வேறு எந்த ஆதாரங்களும் காணப்படவில்லை.

மரபுரிமைச் சின்னம் என்பது அது சார்ந்த இனத்தின், பண்பாட்டின் அடையாளம், ஆணிவேர் எனப் பார்க்கப்படுகின்றது. விலைமதிக்க முடியாத இம்மரபுரிமைச் சொத்துக்களைச் சிறிதும் பிசகாமல் எதிர்காலச் சந்ததியிடம் கையளிக்க வேண்டிய நம்பிக்கை நாற்றுக்களாவும் இவை காணப்படுகின்றன. தமிழ் மக்களின் மரபுரிமைச் சின்னங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் எமது மக்களிடமும், மக்கள் பிரதிநிதிகளிடமும் ஒருமித்த கருத்துக்கள் இருப்பதையே காணமுடிகின்றது. இது அவர்களுடன் எனக்குள்ள நீண்டகாலத் தொடர்பின் வெளிப்பாடு. இன்று நிறைவு பெற்றுள்ள ஆரியகுள மீளுருவாக்கம் என்பது எமது மரபுரிமைச் சின்னங்களை நாமே பாதுகாக்கமுடியும் என்பதன் ஒரு அடையாளமாகவும், தொடக்கப்புள்ளியாகவும் பார்க்கப்படலாம். எதிர்காலத்தில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து எமது மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்கு ஆரியகுள மீளுருவாக்கப்பணி ஒரு முன்மாதிரியாக இருக்கவேண்டும் என்பதே அனைத்து தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

(தொடரும். )

ஒரு பிரதேசத்தின் பல்வேறு விடயங்களை கட்டமைப்பதில் அந்தப் பிரதேசத்தின் இயற்கை அம்சங்கள் மிகப்பெரிய பங்கினை வழங்குகின்றன. குறிப்பாக ஒரு பிரதேசத்தின் காலநிலை சார்ந்த அம்சங்கள் அந்தப் பிரதேசத்தினுடைய இயற்கையையும் அந்த பிரதேசத்திற்குரிய பொருளாதார, சமூக, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களையும் கட்டமைப்பதில் மிகப்பெரிய பங்கினை வழங்குகின்றது. அந்த அடிப்படையில் வடக்கு மாகாணத்தினுடைய பல்வேறு வகைப்பட்ட விடயங்களை தீர்மானித்ததில் வடக்கு மாகாணத்தினுடைய காலநிலை மிகப்பெரிய செல்வாக்கினை பெற்றிருக்கின்றது. வடக்கு மாகாணத்தினுடைய காலநிலை சார்ந்த பாரம்பரிய அறிவியல் விடயங்களையும் நவீன விஞ்ஞான ரீதியிலான ஆய்வு சார்ந்த விடயங்களையும் உள்ளடக்கியதாக வடக்கு மாகாணத்தினுடைய காலநிலைப் பண்புகளை முழுமைப்படுத்தி வெளியிடுவதாக 'பிராந்திய காலநிலையியல் : வடக்குப் பிராந்தியம், இலங்கை' எனும் தொடர் அமைகின்றது.



நாகமுத்து பிரதீபராஜா

# இந்துக்களின் பஞ்சாங்கமும், தமிழர்களின் வானிலையும் காலநிலையும்

கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியல் துறையில் முதுநிலை விரிவுரையாளராக கடமையாற்றி வருகின்றார். காலநிலையியலில் தனது கலாநிதி பட்டத்தினை பூர்த்தி செய்த பிரதீபராஜா காலநிலையியல் தொடர்பான பல்வேறுபட்ட ஆராய்ச்சிகளை வெளியிட்டுள்ளார். வடக்கு மாகாணத்தினுடைய காலநிலை பற்றியும் பொதுவான காலநிலை அம்சங்கள் தொடர்பாகவும் 07 இற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார்.

40 இற்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளை தேசிய மற்றும் சர்வதேச சஞ்சிகைகளில் பிரசுரித்துள்ளார். கடந்த ஒரு தசாப்தத்திற்கும் மேலாக, வடக்கு மாகாணத்தினுடைய வானிலை தொடர்பான இவரது எதிர்வு கூறல்களை பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்களும் பின்பற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## அறிமுகம்



வானிலையும் காலநிலையும் மனித வாழ்க்கையைப் பெரிதும் பாதிக்கின்றன. மழைவீழ்ச்சி, வெப்பநிலை, காற்று, ஆவியாதல் மற்றும் சூரியக் கதிர்வீச்சு போன்ற பல்வேறு வானிலை நிகழ்வுகளைப் பொறுத்து மனித உயிர்வாழ்வின் ஒவ்வொரு செயற்பாடும் தங்கியுள்ளது. உலகெங்கிலும் உள்ள பல வானிலை கண்காணிப்பு மையங்களில் வானிலை தரவுகளை சேகரிக்க பல கருவிகள் உதவுகின்றன. மேலும் வானிலை ஆய்வாளர்கள் ஒரு இருப்பிடத்தின் தற்போதைய மற்றும் எதிர்கால வானிலை நிலைமைகளை பகுப்பாய்வு செய்து கணிக்க பல முறைகளைப் பயன்படுத்துகின்றார்கள் (Sivapragasam And Kanagasabai, 2008).

வானிலை முன்னறிவிப்பு, குறிப்பாக நீண்ட கால வானிலை முன்னறிவிப்பு, மனிதர்களின் திட்டமிடல் மற்றும் செயல்படுத்தல் நடவடிக்கைகளுக்கு அவசியமாகும். பொருளாதார நடவடிக்கைகள் குறிப்பாக விவசாய நடவடிக்கைகளின் ஒவ்வொரு கட்டமும் வானிலைக் காரணிகளில் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இதற்கு வானிலை முன்னறிவிப்பே அடிப்படையாக அமைகின்றது. உள்நாட்டு வாழ்க்கைமுறை மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் வானிலை முன்னறிவிப்பு அறிக்கைகளைப் பொறுத்தே வெற்றியடைகின்றது. இன்றைய உலகில் ஒவ்வொரு மனிதர்களும் வானிலை முன்னறிவிப்பை அத்தியாவசியமான ஒன்றாக கருதுகின்றார்கள். எனவே, வானிலை முன்னறிவிப்பு அறிக்கைகள் அன்றாட வாழ்க்கையின் முக்கிய அங்கமாகி வருகின்றன.

தேவையற்ற மனித உயிர் இழப்பு மற்றும் சொத்து சேதங்களை தவிர்க்க அனைத்து அரசாங்கங்களும் வானிலை முன்னறிவிப்புகளுக்கு முன்னுரிமை அளித்துள்ளன. பெரும்பாலான நாடுகள் காலநிலை

மாற்றத்தின் பின்னணியில் துல்லியமான வானிலை முன்னறிவிப்பைச் செய்ய பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளன. ஆனால் நீண்ட கால வானிலை முன்னறிவிப்பில் இன்னும் சிரமங்களை எதிர்கொள்கின்றன. நீண்ட கால வானிலை முன்னறிவிப்புடன் ஒப்பிடும்போது குறுகிய கால வானிலை முன்னறிவிப்பு, அவதானிக்க, பகுப்பாய்வு செய்ய மற்றும் முன்னறிவிப்பு செய்ய எளிதானது. ஆனால் நீண்ட கால முன்னறிவிப்பு, வானிலை அளவுருக்களில் ஏற்படும் திடீர் மாற்றங்கள் காரணமாக கடினமான செயற்பாடாகவே உள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆயினும்கூட, பல நிறுவனங்கள் தங்கள் வானிலை முன்னறிவிப்பை மிகவும் பயனுள்ளதாகவும் திறமையாகவும் செய்ய பல்வேறு வகையான முயற்சிகளை மேற்கொள்கின்றன. மேலும் உலகளவில், வானிலை முன்னறிவிப்பதற்காக பல முறைகள் நடைமுறையில் உள்ளன. இந்த முறைகளில் பெரும்பாலானவை நவீன தொழில்நுட்பங்களுடன் தொடர்புடையவையாகவே காணப்படுகின்றன.

விஞ்ஞான முறையிலான வானிலை முன்னறிவிப்பு செயற்பாடுகள் 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தொடங்கியது. ஏனெனில் நவீன தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பங்களுடன் கூடிய பல்வேறு முன்னறிவிப்பு முறைகள் 19 ஆம் நூற்றாண்டிலேயே உருவாக்கப்பட்டது. இருப்பினும், சில சமூகங்கள் அல்லது குழுக்கள் இன்னும் பாரம்பரிய வானிலை முன்னறிவிப்பு முறைகளைப் பின்பற்றுகின்றனர். அவர்கள் தங்களின் பாரம்பரிய வானிலை முன்னறிவிப்பு அறிவின் அடிப்படையில் தங்கள் வாழ்க்கை முறையை அமைத்துள்ளனர்.

இலங்கையில் தமிழர்கள் இரண்டாவது பெரும்பான்மை இனத்தவர்கள். பெரும்பாலான தமிழர்கள் இந்தியாவின் மிகப் பழமையான மதமான இந்து மதத்தைப் பின்பற்றுகிறார்கள். இலங்கைத் தமிழர்கள் தனித்துவமான மற்றும் குறிப்பிட்ட கலாச்சார அடையாளங்களைக் கொண்டுள்ளனர். மேலும் அவர்கள் குறிப்பிட்ட பழக்கவழக்கங்கள் மற்றும் மதிப்புகளைக் கொண்டுள்ளனர். இலங்கைத் தமிழர்களில் குறிப்பாக இந்துக்களில் 85% இற்கும் அதிகமானோர் பஞ்சாங்கத்தை கண்டிப்பாகப் பின்பற்றுகிறார்கள் (Sivapragasam and Kanagasabai, 2008).

வாழ்க்கைச் சுழற்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் பஞ்சாங்கம் சக்திவாய்ந்த தாக்கத்தை ஏற்படுத்துகிறது. மூவாயிரத்து ஐநூறு ஆண்டுகளாக, தமிழர்கள், குறிப்பாக இந்துக்கள், தங்கள் புனிதச் சடங்கு மற்றும் தனிப்பட்ட நோக்கங்களுக்காக மிக உயர்ந்த பஞ்சாங்க முறைகளைப் பயன்படுத்தினர். தமிழர்கள், குறிப்பாக விவசாயிகள் மற்றும் மீனவர்கள் தங்கள் வானிலை மற்றும் காலநிலை நோக்கங்களுக்காகப் பஞ்சாங்கத்தை நீண்ட காலமாகப் பயன்படுத்தி வருகின்றனர். பஞ்சாங்கக் கணிப்பு அடிப்படையில் அவர்கள் தங்கள் வாழ்க்கை முறையையும் வடிவமைத்துள்ளனர்.

## பஞ்சாங்கம் பற்றிய அறிமுகம்

இந்தியா, இலங்கை, நேபாளம், தாய்லாந்து, மலேசியா, மியான்மர், பூட்டான், பிரான்ஸ், ஜெர்மனி, அமெரிக்கா, இங்கிலாந்து, சுவிட்சர்லாந்து, அமெரிக்கா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் உள்ள இந்துக்கள் பல வகையான பஞ்சாங்கங்களைப் பயன்படுத்துகின்றனர் (Vandeep et.al, 2012). கணக்கீடு மூலம், முறை, விளக்கம் மற்றும் நேர மண்டலங்களைக் கருத்தில் கொண்டு இந்த பஞ்சாங்கங்களில் சில வேறுபாடுகளை அடையாளம் காணலாம். இலங்கையில், இந்துக்கள் பெரும்பாலும் இரண்டு வகையான பஞ்சாங்கத்தைப் பயன்படுத்துகிறார்கள். ஒன்று ‘வாக்கிய பஞ்சாங்கம்’ (சுத்த வாக்கிய பஞ்சாங்கம்), மற்றொன்று ‘கணித பஞ்சாங்கம்’ (திருக்கணித பஞ்சாங்கம்). பொதுவாக, பெரும்பாலான தமிழர்கள் (குறிப்பாக இந்துக்கள்) இரண்டு முறைகளிலான பஞ்சாங்கத்தையும் பயன்படுத்துகின்றார்கள் (அட்டவணை 3.1). இருப்பினும் இந்த இரண்டு வகைகளுக்கு இடையே சில கால வேறுபாடுகளை அடையாளம் காண முடியும். திருக்கணித பஞ்சாங்கம் கிரகங்கள் மற்றும் ஜோதிடக் கணக்கீடுகளை அடிப்படையாகக் கொண்டது. அதேசமயம் பண்டைய காலத்தில் முனிவர்கள் வழங்கிய வாக்கியங்களின் அடிப்படையில் வாக்கிய பஞ்சாங்கம் உருவாக்கப்பட்டுள்ளது. வாக்கிய பஞ்சாங்கம், கணித பஞ்சாங்கம் ஆகிய இரண்டும் கிரகங்களின் இயக்கத்தை அடிப்படையாகக் கொண்டது. இந்த இரண்டு பஞ்சாங்கங்களுமே சூரியனையும் சந்திரனையும் கோள்கள் என்ற அடிப்படையிலேயே கணிப்பீடுகளை மேற்கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இதனால் பண்டைய காலங்களில் சூரியனும் சந்திரனும் ஏனைய கோள்களோடு இணைந்த ஒரு கோள்களாக கருத்தில் கொண்டே வாக்கிய பஞ்சாங்கமும் திருக்கணித பஞ்சாங்கமும் கணிப்பீடுகளை

*மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனால் பின்வந்த அறிஞர்கள் சிலர் சூரியனையும் சந்திரனையும் கோள்களாக கருதுகின்றமை நவீன அறிவியலுக்கு பொருத்தமற்றது என்று கூறி பஞ்சாங்கத்தின் கணிப்பீடுகளை நிராகரிப்பதும் உண்டு.*

| இல. | பஞ்சாங்க வருடம் | இல. | பஞ்சாங்க வருடம் | இல. | பஞ்சாங்க வருடம் |
|---|---|---|---|---|---|
| 1 | த்தது | 21 | ஏவிளம்பி | 41 | பிங்கல |
| 2 | ஈஸ்வரா | 22 | விளம்பி | 42 | கலாயுக்தி |
| 3 | வெகுதான்ய | 23 | விகாரி | 43 | சிதார்த்தி |
| 4 | ப்ரமதி | 24 | சர்வாரி | 44 | ரௌத்ரி |
| 5 | விக்ரம | 25 | பிடஎ | 45 | துன்மதி |
| 6 | விசூ | 26 | சுபகருது | 46 | துந்துபி |
| 7 | சித்திரபானு | 27 | சோபகிருது | 47 | ருத்ரோத்காரி |
| 8 | சுபானு | 28 | க்ரோதி | 48 | ரக்தாசி |
| 9 | துரண | 29 | விசுவவாசு | 49 | குரோதான |
| 10 | பார்த்தீப | 30 | அக்சரா | 50 | அக்‘ய |
| 11 | வியா | 31 | பிரபாவ | 51 | பிரபவ |
| 12 | சர்வசித்து | 32 | பிலவங்க | 52 | விபவ |
| 13 | சர்வதாரி | 33 | கீலாக | 53 | சுகில |
| 14 | விரோதி | 34 | சௌமிய | 54 | ப்ரமோத |
| 15 | விகுர்தி | 35 | சாதாரண | 55 | ப்ரஜாபதி |
| 16 | கர | 36 | விரோதிகிருத் | 56 | அங்கிரச |
| 17 | நந்தன | 37 | பரிதாபி | 57 | சிறிமுக |
| 18 | விஜய | 38 | பிரம்மதீச | 58 | பாவா |
| 19 | மன்மத | 39 | ஆனந்த | 59 | பிரபவா |
| 20 | துர்முகி | 40 | ரக்சாசு | 60 | யுவ |

**அட்டவணை 3.1. பஞ்சாங்க வருடம்**

**மூலம்:** Ragunathaiyar (2019)

*இந்த கட்டுரை முதன்மையாக இலங்கையில் உள்ள தமிழ் இந்துக்களால் பரவலாகப் பயன்படுத்தப்படும் வாக்கிய பஞ்சாங்கத்தின் மீது கவனம் செலுத்துகிறது. வாக்கிய பஞ்சாங்கம் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு இந்து யோகிகளால் வழங்கப்பட்ட அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டது. வாக்கிய பஞ்சாங்கத்தின் அடிப்படையை அகத்திய முனிவரும் பராசர முனிவருமே உருவாக்கினார்கள். அதற்குப் பின்னர் பல்வேறு முனிவர்கள் பல மாற்றங்களை செய்துள்ளனர். ஆரம்ப காலத்தில் வாக்கிய பஞ்சாங்கத்திற்கான அடிப்படைகளை அகத்திய முனிவரும் பராசர முனிவரும் ஏற்படுத்தியிருந்தாலும் கூட பின்னர் வந்த காலப்பகுதிகளில் இருந்த ஒவ்வொரு முனிவர்களும் பல்வேறு வகைப்பட்ட இணைப்புகளை ஏற்படுத்தி வாக்கிய பஞ்சாங்கத்திற்கு வலுவூட்டினார்கள். வேதாந்த ஜோதி என்பவர் கி.மு 1400 - 1300 இற்கு இடைப்பட்ட காலத்தில் திருத்தப்பட்ட ‘வாக்கிய பஞ்சாங்கம்’ ஒன்றை வெளியிட்டார். அதன்பின்னர் ‘பிரிஹத் சம்ஹிதா வராஹம்ஹிரா’ என்ற முனிவர் இந்த வாக்கியத்தை கி.பி 505 இல் மீண்டும் எழுதினார். பிரிஹத் சம்ஹிதா என்ற முனிவரே முதன்முதலாக வாக்கிய பஞ்சாங்கத்தின் இந்த புதிய பதிப்பில் பல வானிலை அம்சங்களை அறிமுகப்படுத்தினார்.*

*வாக்கிய பஞ்சாங்கம் அறுபது வருட சுழற்சியைக் கொண்டுள்ளது. பஞ்சாங்கத்தில் ஒவ்வொரு ஆண்டுக்கும் ஒரு தனிப்பட்ட பெயர் உள்ளது. அறுபது ஆண்டுகளுக்குப் பிறகு, ஒரு பெயர் (ஆண்டு) மீண்டும் தோன்றும். அறுபது ஆண்டுகள் ஐந்து பெரிய பிரிவுகளை உள்ளடக்கியது. மேலும் ஒவ்வொரு பிரிவிலும் 12 ஆண்டுகள் உள்ளன. பஞ்சாங்க முறைமைகளின் படி ஒரு ஆண்டின் தொடக்கம் ஆங்கில ஆண்டின் ஏப்ரல் மாதம் 14 அல்லது 15 ஆகவே அமைகின்றது. பஞ்சாங்கத்தின்படி ஆண்டுத் தொடக்கம் ஒரு குறிப்பிட்ட ஆண்டின் ஏப்ரலில் தொடங்கி அடுத்த ஆண்டின் ஏப்ரல் 13 அல்லது 14 ஆம் திகதிகளில் முடிவடைகின்றது. எனவே பஞ்சாங்கம் குறிப்பிடுகின்ற ஆண்டு என்பது ஒரு ஆண்டின், அதாவது ஆங்கில ஆண்டின் ஏப்ரலில் இருந்து அடுத்த ஆண்டின் ஏப்ரல் வரையான பகுதியையே உள்ளடக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.*

*வானிலை அம்சங்களுடன் தொடர்புடைய இந்த வாக்கியப் பஞ்சாங்கத்தில் பல வானிலை*

*நிகழ்வுகள் விவரிக்கப்பட்டுள்ளன. இந்த பஞ்சாங்கத்தில், மழையின் அளவு 'மரக்கால்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சூரியனின் கோணம் மற்றும் வெப்பநிலை 'காண்டாவனம்' என குறிப்பிடப்பட்டுள்ளது. கெர்ப்போட்டம்; காற்றின் திசை மாற்றங்கள், மேக வகைகள் ஆகியவற்றைக் குறிக்கிறது. இலங்கையின் வடக்குப் பகுதியானது பஞ்சாங்கம் முன்னறிவிக்கப்பட்ட வானிலை நிகழ்வுகளுக்குப் பொதுமைப்படுத்தக்கூடிய ஒன்றாக காணப்படுகின்றது. ஏனெனில் பெரும்பாலான வட மாகாண மக்கள் பஞ்சாங்கத்தை தங்கள் அனைத்து நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்துகின்றனர். அத்துடன் அவர்கள் புனித அல்லது பாரம்பரிய சடங்குகளான திருமணம் (பொருத்தமான இணையை தெரிவுசெய்வதற்கும், திருமண நாளைக் குறிப்பதற்கும்), பூப்பனித நீராட்டுவிழா, திவசம், குழந்தைகளுக்கு பெயரிடல், நற்காரிய தொடக்கங்களுக்கான தேதிகளை நிர்ணயம் செய்வதற்கும் பஞ்சாங்கத்தை பயன்படுத்துகின்றனர். இலங்கையின் வடக்கு மாகாண மக்கள் தொகையில் 71% இற்கும் அதிகமானோர் பல்வேறு நோக்கங்களுக்காக வாக்கிய பஞ்சாங்கத்தை (ரகுநாதய்யர் சுத்த வாக்கிய பஞ்சாங்கம்) பயன்படுத்துகின்றனர்.*

*வாக்கிய பஞ்சாங்கம் என்பது முற்காலத்து முனிவர்களால் உருவாக்கப்பட்ட பாடல்களின் வரிகளைப் பயன்படுத்தி வானிலை விவரங்களைக் குறிக்கிறது. இந்த ஆய்வு 1970 முதல் 2022 வரையிலான ஐம்பது ஆண்டுகளை அடிப்படையாகக் கொண்டு பஞ்சாங்கம் கூறும் வானிலை அம்சங்களை ஆராய்கின்றது. பஞ்சாங்கம் 'தத்து' முதல் 'யுவா' வரை 60 ஆண்டு சுழற்சியைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் தனிப்பெயரைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பெயரும் அறுபது ஆண்டுகளுக்குப் பிறகு திரும்பவும் வரும். இது ஒரு சுழற்சி முறை.*

*பஞ்சாங்கம் வானிலை பற்றிய தனித்துவமான அமைப்பை விவரிக்கிறது. பஞ்சாங்கத்தில் குறிப்பிட்ட வானிலை அளவுருக்கள் மட்டுமே குறிக்கப்படுகின்றன. மழைவீழ்ச்சி, தீவிர வெப்பநிலை, காற்றின் திசை போன்ற விடயங்கள் பஞ்சாங்கத்தில் குறிப்பிடப்படுகின்றன. அத்துடன் பஞ்சாங்கம் ஒவ்வொரு ஆண்டும் பின்வருவனவற்றைக் குறிக்கிறது:*

1. *ஆளும் கிரகம்: குறிப்பிட்ட ஆண்டிற்கான முக்கிய கிரகம் மற்றும் அதன் தனித்துவமான பண்புகளின் அடிப்படையில் ஆண்டின் அடிப்படை அம்சங்கள் கணக்கிடப்படுகின்றன.*
2. *மந்திரி கிரகம்: குறிப்பிட்ட ஆண்டிற்கான ஆளும் கிரகத்தை ஆதரிக்கும் சூரிய குடும்பத்தில் இரண்டாவது ஆதிக்கம் செலுத்தும் கிரகம்.*
3. *மேகாதிபதி கிரகம்: குறிப்பிட்ட ஆண்டின் முழு வானிலை அமைப்பையும் தீர்மானிக்கும் கிரகம்*
4. *4. மேகம் வகை: யோகிகள் மேகத்தை வகைப்படுத்துகிறார்கள், மேலும் இந்த வகைப்பாட்டின்படி மழை மற்றும் மழை நாட்கள் தீர்மானிக்கப்படுகின்றன என்று இந்த பஞ்சாங்கம் கூறுகிறது.*

*பஞ்சாங்கத்தில் மழைப்பொழிவை 'மழை மரக்கால்' என்ற பெயரிலும், அதன் அளவு மரக்கால் அளவிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. மரக்கால் என்பது பண்டைய இந்துக்கள் தானியங்கள் மற்றும் திரவங்களை அளவிடுவதற்கு நீண்ட காலமாக பயன்படுத்திய அளவிடும் கருவிகளில் ஒன்றாகும்.*

*ஒரு ஆண்டின் அதாவது இந்து ஆண்டின் தொடக்கத்தில் வெளியிடப்படுகின்ற பஞ்சாங்கம் என்பது அந்த ஆண்டு முடியும் வரையிலான காலப்பகுதிக்கு கிடைக்கவுள்ள மழையின் அளவை மரக்கால் என்ற எண்ணிக்கையில் குறிப்பிடுகின்றது. அதாவது ஒரு ஆண்டின் ஏப்ரல் 14 ஆம் தேதியில் தொடங்கும் இந்து ஆண்டு அடுத்த ஆண்டு ஏப்ரல் 14 ஆம் தேதி உடன் முடிவடையும். முந்தைய ஆண்டின் ஏப்ரல் 14 ஆம் தேதி அன்று அடுத்த ஆண்டின் ஏப்ரல் 14 வரையான காலப்பகுதிக்கு மழை எத்தகைய அளவில் கிடைக்கும் என்ற விடயம் குறிப்பிடப்படும். இது ஒரு நீண்ட கால வானிலை முன்னறிவிப்பு முறையாகும். இவ்வாறு கிடைக்க உள்ள மழையின் அளவை 'மரக்கால்' என்ற பெயரில் குறிப்பிடுகின்றது. இந்த மரக்கால் என்பது எத்தனை மரக்கால் என்ற எண்ணிக்கையில் குறிப்பிடப்படும். உதாரணமாக மூன்று மரக்கால் மழை அல்லது நான்கு மரக்கால் மழை கிடைக்கும் என்ற எதிர்வுகூறலை பஞ்சாங்கம் ஒரு ஆண்டில் ஏப்ரல் மாதத்திலேயே வெளியிடுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இருப்பினும், அந்தத் தொகை ஆண்டு முழுவதும் அறிவிக்கப்பட்டுள்ளது. பஞ்சாங்கம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடங்கி மார்ச் மாதம் முடியும். புதிய பஞ்சாங்கம் ஏப்ரல் மாதத்தில் வெளியிடப்படும். அதில் ஆண்டு முழுவதும் கிடைக்கவுள்ள மழையின் மொத்த அளவு குறிப்பிடப்படும். நடைமுறையில் ஒரு மரக்கால் என்பது 350 மி.மீ. மழைக்கு சமமானதாகும்.*

காண்டவனம் என்பது ஒரு ஆண்டின் அதிகூடிய வெப்பநிலை நிலவும் காலப்பகுதியாகும். குறிப்பிட்ட மாதத்தின் தீவிர வெப்பநிலை மற்றும் வெப்பமான நாட்களை வரையறுக்கப்பட்ட காலம் மற்றும் குறிப்பிட்ட நாட்கள் என பஞ்சாங்கம் குறிப்பிடுகிறது. பஞ்சாங்கம், காண்டாவனம் குறிப்பிட்ட நாளில் தொடங்கி இந்த நாளில் முடிவடையும் என்று அறிவுறுத்துகிறது. இந்த இரண்டு குறிப்பிட்ட நாட்களுக்கு இடைப்பட்ட காலம் காண்டாவன காலம் எனப்படும். இந்த காலகட்டம் ஒவ்வொரு வருடமும் வெப்பமான நாளாக இருக்கும் என்று பஞ்சாங்கம் சுட்டிக்காட்டுகிறது.

இவ்வாறு பஞ்சாங்கம் குறிப்பிடுகின்ற வானிலை தரவுகளுக்கும் உண்மையான வானிலை தரவுகளுக்கும் இடையில் ஏதாவது ஒற்றுமை உள்ளதா? பஞ்சாங்கம் குறிப்பிடுகின்ற வானிலை தொடர்பான விடயங்கள் விஞ்ஞான ரீதியிலான வானிலை விடயங்களுடன் ஒத்துப் போகின்றதா என்பதை அறிந்து கொள்வதற்காக, வடக்கு மாகாணத்தில் அவதானிக்கப்பட்ட மழைவீழ்ச்சி அளவு, வெப்பநிலை, மழை நாட்கள், காற்று திசை போன்ற தரவுகள் பெறப்பட்டு, பல்வேறு நிலையங்களில் இருந்து பெறப்பட்ட தரவுகள் சராசரி காணப்பட்டு, அந்த சராசரி முடிவுகளுடன் பஞ்சாங்கம் குறிப்பிடுகின்ற வானிலை தொடர்பான தரவுகள், முக்கியமாக மழையின் அளவு, காண்டாவனம் எனக் குறிப்பிடப்படுகின்ற காலப்பகுதியின் வெப்பநிலை அளவு போன்ற விடயங்கள் நடைமுறையில் அவதானிக்கப்பட்ட வானிலை தரவுகளோடு ஒப்பிட்டு முடிவுகள் பெறப்பட்டன.

பகுப்பாய்வுகளின் படி கடந்த 70 ஆண்டு கால பஞ்சாங்கம் குறிப்பிடுகின்ற மழை அளவுகளின் எண்ணிக்கை, அதாவது மரக்காலின் எண்ணிக்கை, மூன்று அல்லது நான்கு அல்லது இரண்டு அல்லது ஐந்து மழை மரக்கால்கள் ஆகும். அந்த அடிப்படையில் கடந்த 70 ஆண்டு சராசரியாக பஞ்சாங்கம் 3.5 மரக்கால் அளவில் மழை கிடைக்கும் என கணிப்பீடு செய்துள்ளது. அதேவேளை அவதானிக்கப்பட்ட விஞ்ஞான முறையிலான வானிலை அவதான நிலையங்களில் இருந்து பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் சராசரியாக 1255 மில்லி மீற்றர் மழை கிடைத்துள்ளது. ஆகவே ஒரு மரக்கால் 350 மில்லி மீற்றர் மழைக்கு சமம் என்ற அடிப்படையில் 3.5 மழை மரக்கால் என்பது 1200 மில்லி மீற்றர்க்கு சமனாக காணப்படுகின்றது. அதேபோல சராசரியாக அவதானிக்கப்பட்ட மழையின் அளவு 1250 மில்லி மீற்றர் ஆக காணப்படுகின்றது. எனவே அந்த அடிப்படையில் மழை மரக்கால் குறிப்பிடுகின்ற மழையின் அளவுக்கு, அதாவது பஞ்சாங்கம் குறிப்பிடுகின்ற மழை மரக்காலின் மழை அளவு, நிகழ்நேர வானிலை அவதான நிலையங்களில் அவதானிக்கப்பட்ட மழையின் அளவோடு ஒரு தொடர்பு இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. இதனை இரண்டு தரவுகளின் ஒப்பீட்டு ரீதியிலான ஆய்வு முறை மூலம் அவதானிக்க முடிகின்றது.

## அவதானிக்கப்பட்ட வானிலை தரவுக்கும் பஞ்சாங்கத்துக்குமான தொடர்பு

1970 ஆம் ஆண்டு தொடங்கி ஐம்பது ஆண்டுகளாக வானிலை ஆய்வுத் துறையிலிருந்து அவதானிக்கப்பட்ட மழை, வெப்பநிலை மற்றும் காற்றின் தரவு சேகரிக்கப்பட்டது. பஞ்சாங்கம் ஆண்டு மழை அளவை மட்டுமே குறிக்கிறது. எனவே, பஞ்சாங்கம் கணித்த மற்றும் அவதானிக்கப்பட்ட மழைப்பொழிவை ஒப்பிடுவதற்காக இந்த ஆய்வுக்காக மொத்த ஆண்டு மழைவீழ்ச்சி சேகரிக்கப்பட்டது. பஞ்சாங்கத்திற்கு என்று குறிப்பிட்ட மழை அளவீட்டு நிலையம் இல்லை. பஞ்சாங்கம் முழுப் பிராந்தியத்திற்கும் வானிலை விவரங்களைக் குறிக்கிறது. எனவே, இந்த ஆய்வு இலங்கையின் வடக்கு மாகாணத்தில் இயங்கும் பதினாறு நிலையங்களின் சராசரி மதிப்புகளைக் கருத்தில் கொள்கிறது. முதலாவதாக, ஐம்பது ஆண்டுகளுக்கான வருடாந்த மொத்த மழைவீழ்ச்சி பதினாறு நிலையங்களிலிருந்து சேகரிக்கப்பட்டது, அதன்பின் இலங்கையின் வடக்குப் பிராந்தியத்திற்கான சராசரி வருடாந்த மொத்த மழைவீழ்ச்சியை சுருக்கி பெறப்பட்டது.

## உண்மையான மற்றும் பஞ்சாங்க மழை உறவு


வடக்கு மாகாணத்தில் அவதானிக்கப்பட்ட 16 மழை வீழ்ச்சி நிலையங்களின் சராசரி அளவும் பஞ்சாங்கம் கூறுகின்ற ஆண்டுக்கான மொத்த மழைவீழ்ச்சி மரக்காலின் எண்ணிக்கையும் உறவுமுறை பகுப்பாய்வின் கீழ் (Correlation Analysis) பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டது (அட்டவணை 3.2).

| No. | ஆங்கில வருடம் | பஞ்சாங்க வருடம் | ஆட்சிக்கிரகம் | பிரதான மந்திரி கிரகம் | மேகாதிபதி | மேகம் | மரக்கால் | அவதானிக்கப்பட்ட மழைவீழ்ச்சி மி.மீ |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1970-71 | சாதாரண | செவ்வாய் | சந்திரன் | சந்திரன் | வருண | 2 | 1420 |
| 2 | 1971-72 | விரோதிகிரோத் | சனி | புதன் | செவ்வாய் | நீலா | 2 | 1204 |
| 3 | 1972-73 | பரிதாபி | வியாழன் | வியாழன் | புதன் | காளா | 4 | 1502 |
| 4 | 1973-74 | பரமதீச | புதன் | வெள்ளி | வியாழன் | துரோணா | 3 | 1289 |
| 5 | 1974-75 | ஆனந்த | சூரியன் | சனி | சனி | புஷ்கலா | 2 | 996 |
| 6 | 1975-76 | ரக்சாச | சனி | சந்திரன் | சூரியன் | சம்வர்தா | 2 | 1320 |
| 7 | 1977-78 | பிங்கல | சூரியன் | புதன் | புதன் | தாமோ | 1 | 1256 |
| 8 | 1978-79 | கலயுக்தி | சனி | வியாழன் | வியாழன் | வாயு | 2 | 1428 |
| 9 | 1979-80 | சிதார்த்தி | வியாழன் | சனி | வெள்ளி | வருண | 4 | 1178 |
| 10 | 1980-81 | ரௌத்ரி | சந்திரன் | சூரியன் | சனி | நீலா | 3 | 1245 |
| 11 | 1981-82 | துன்மதி | சூரியன் | சந்திரன் | சந்திரன் | காளா | 1 | 1290 |
| 12 | 1982-83 | துந்துபி | வெள்ளி | செவ்வாய் | செவ்வாய் | துரோணா | 4 | 1310 |
| 13 | 1983-84 | ருத்ரோத்காரி | வியாழன் | வியாழன் | புதன் | புஷ்கலா | 4 | 1304 |
| 14 | 1984-85 | ரக்தாக்ஷி | சந்திரன் | வெள்ளி | வியாழன் | சம்வர்தா | 4 | 1607 |
| 15 | 1985-86 | குரோதன | வெள்ளி | சனி | சனி | அவர்தா | 4 | 1392 |
| 16 | 1986-87 | அக்சய | வியாழன் | சந்திரன் | சூரியன் | தாமோ | 4 | 1429 |
| 17 | 1987-88 | பிரபவ | சந்திரன் | செவ்வாய் | சந்திரன் | வாயு | 3 | 1209 |
| 18 | 1988-89 | விபவ | வெள்ளி | புதன் | செவ்வாய் | வருண | 4 | 1147 |
| 19 | 1989-90 | சுகில | வெள்ளி | வியாழன் | வியாழன் | நீலா | 4 | 1321 |
| 20 | 1990-91 | ப்ரமதொத | செக்காய் | சனி | வெள்ளி | காளா | 2 | 1006 |
| 21 | 1991-92 | ப்ரஜோத்பதி | சூரியன் | சூரியன் | சனி | துரோணா | 1 | 956 |
| 22 | 1992-93 | அங்கிரச | சனி | சந்திரன் | சூரியன் | புஷ்கலா | 1 | 1065 |
| 23 | 1993-94 | சிரிமுக | புதன் | செவ்வாய் | செவ்வாய் | சம்வர்தா | 3 | 1153 |
| 24 | 1994-95 | பவ | செவ்வாய் | வியாழன் | புதன் | அவர்தா | 2 | 1280 |
| 25 | 1995-96 | யுவ | சந்திரன் | வெள்ளி | வியாழன் | தாமோ | 1 | 1420 |
| 26 | 1996-97 | தது | [illegible] | சந்திரன் | சனி | காளா | 3 | 1175 |
| 27 | 1997-98 | ஈஸ்வர | சூரியன் | சனி | சூரியன் | துரோணா | 2 | 1028 |
| 28 | 1998-99 | வெகுதான்ய | வெள்ளி | புதன் | சனி | புஷ்கலா | 2 | 1175 |
| 29 | 1999-2000 | ப்ரமாதி | வெள்ளி | வியாழன் | புதன் | சம்வர்தா | 3 | 1492 |
| 30 | 2000-01 | விக்ரம | சந்திரன் | சனி | சனி | வாயு | 4 | 1320 |
| 31 | 2001-02 | விசு | சனி | சூரியன் | வெள்ளி | தாமோ | 2 | 1140 |
| 32 | 2002-03 | சித்ரபானு | வெள்ளி | சந்திரன் | சூரியன் | வாயு | 3 | 988 |
| 33 | 2003-04 | சுபானு | சூரியன் | சனி | சந்திரன் | வருண | 3 | 1160 |
| 34 | 2004-05 | தரண | புதன் | வியாழன் | சனி | நீலா | 3 | 1298 |
| 35 | 2005-06 | பார்த்திப | வியாழன் | வெள்ளி | புதன் | காளா | 4 | 1426 |
| 36 | 2006-07 | விய | வெள்ளி | சனி | வெள்ளி | துரோணா | 4 | 1238 |
| 37 | 2007-08 | சர்வசித்து | வியாழன் | சூரியன் | சனி | புஷ்கலா | 3 | 1283 |
| 38 | 2008-09 | சர்வதாரி | சந்திரன் | சனி | சூரியன் | சம்வர்தா | 4 | 1502 |
| 39 | 2009-10 | விரோதி | வெள்ளி | புதன் | சந்திரன் | அவர்தா | 3 | 1430 |
| 40 | 2010-11 | விகுர்தி | சனி | வியாழன் | வியாழன் | தாமோ | 3 | 1210 |
| 41 | 2011-12 | கர | சூரியன் | வெள்ளி | வியாழன் | வாயு | 3 | 1261 |
| 42 | 2012-13 | நந்தன | செவ்வாய் | சூரியன் | வெள்ளி | வருண | 3 | 975 |
| 43 | 2013-14 | விஜய | புதன் | சந்திரன் | சூரியன் | நீலா | 3 | 1045 |
| 44 | 2014-15 | ஜெய | சூரியன் | சனி | சந்திரன் | காளா | 3 | 1219 |
| 45 | 2015-16 | மன்மத | வியாழன் | புதன் | சனி | துரோணா | 3 | 1380 |
| 46 | 2016-17 | துர்முகி | சனி | வெள்ளி | வியாழன் | புஷ்கலா | 3 | 1290 |
| 47 | 2017-18 | ஹேவிளம்பி | செவ்வாய் | சனி | வெள்ளி | சம்வர்தா | 2 | 982 |
| 48 | 2018-19 | விளம்பி | வெள்ளி | புதன் | சனி | அவர்தா | 3 | 1230 |
| 49 | 2019-20 | விகாரி | வியாழன் | சூரியன் | சந்திரன் | தாமோ | 2 | 1180 |
| 50 | 2020-21 | சார்வரி | சூரியன் | சனி | வியாழன் | வாயு | 3 | 1286 |

அட்டவணை 3.2. பஞ்சாங்க வருடங்கள், பஞ்சாங்கம் கூறும் ஆட்சிக்கிரக, அமைச்சக்கிரக, மேகாதிபதி, மேகம் மழைமரக்கால் எண்ணிக்கை மற்றும் நடைமுறையில் அவதானிக்கப்பட்ட மழைவீழ்ச்சி அளவுகள்.

Source: Ragunathaiyar Vengadesakkurukkal Vaakkiya panchangam (1970-2020)

அந்த அடிப்படையில் அவதானிக்கப்பட்ட மழைவீழ்ச்சிக்கும் பஞ்சாங்கம் கூறுகின்ற மரக்கால் எண்ணிக்கைக்கும் இடையிலே நேரான தொடர்பு இருப்பதும் அதுவும் உறுதியான நேரான தொடர்பு இருப்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது (படம் 3.1). அதாவது ஆண்டு சராசரி மழை வீழ்ச்சியாக 1250 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி காணப்படுகின்ற அதே வேளை மரக்காலின் ஆண்டு சராசரியாக, 3.5 மரக்கால் குறிப்பிடப்படுகின்றது. எனவே அவதானிக்கப்பட்ட தரவுகளோடு மழை மரக்காலினுடைய தரவுகளை ஒப்பிடுகின்ற பொழுது அது மிகப்பெரிய தொடர்பை கொண்டு காணப்படுகின்றது (Correlation analysis R0.7816). எனவே இதன் மூலம் பஞ்சாங்கம் கூறுகின்ற மழையின் அளவும் அவதானிக்கப்பட்ட மழையின் அளவும் கிட்டடத்தட்ட ஒரே மாதிரியாக இருப்பதினால் பஞ்சாங்கத்தினை ஆண்டுக்கான மொத்த மழை வீழ்ச்சியின் முன்னறிவிப்புக்கான, அதாவது நீண்டகால முன்னறிவிப்புக்கான ஒரு முறையாக ஏற்றுக் கொள்ளலாம் என்பதை இந்த விஞ்ஞான ரீதியான பகுப்பாய்வு முடிவுகள் வெளிப்படுத்துகின்றன.




படம் 3.1. அவதானிக்கப்பட்ட அழைவீழ்ச்சியின் போக்கும் பஞ்சாங்கம் கூறும் மழைமரக்காலின் போக்கும்

## ஆளும் கிரகமும் மழையும்

ஆளும் கிரகத்திற்கும் ஆய்வுப் பகுதியின் மொத்த மழைவீழ்ச்சிக்கும் இடையே ஒரு வலுவான உறவு உள்ளது. சந்திரன் ஆட்சிக் கிரகமாக இருக்கும்போது, அதிக மழையை அனுபவிக்கிறோம். செவ்வாய் ஆட்சி கிரகமாக இருக்கும்போது, குறைவான மழையைப் பெறுகிறோம். மந்திரி கிரகத்திற்கும் பெறப்பட்ட மொத்த மழைக்கும் இடையே ஒரு வலுவான உறவு உள்ளது. ஆளும் கிரகத்துக்கும் மழை வீழ்ச்சிக்கும் இடையில் மிகப்பெரிய தொடர்பு காணப்படுகின்றது. அதாவது ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு கிரகத்தினதும் ஆட்சி நடப்பதாக பஞ்சாங்கம் கருதுகின்றது. அந்த அடிப்படையில் ஆளும் கிரகத்திற்கும் அந்த ஆண்டுக் காலத்துக்கான மழை வீழ்ச்சிக்கும் இடையில் மிகப்பெரிய தொடர்பு இருப்பதாக பஞ்சாங்கம் குறிப்பிடுகின்றது. அந்த அடிப்படையில் சந்திரன் ஆட்சிக்கிரகமாக காணப்பட்டால் மிகப்பெரிய அளவில் மழை கிடைப்பதாகவும் சூரியன் ஆட்சிக்கிரகமாக காணப்பட்டால் நடுத்தரமான மழை கிடைப்பதாகவும் செவ்வாய் ஆட்சிக்கிரகமாக

காணப்பட்டால் மிகக் குறைவான மழை வீழ்ச்சி கிடைப்பதாகவும் பஞ்சாங்கம் குறிப்பிடுகின்றது. அந்த அடிப்படையில் நோக்குகின்ற பொழுது, மழை மரக்காலில் மாத்திரமன்றி, அவதானிக்கப்பட்ட நிகழ்நேர மழை வீழ்ச்சி தரவுகளிலும் இந்த ஒற்றுமை காணப்படுகின்றது. அதாவது செவ்வாய் ஆட்சி கிரகமாக பஞ்சாங்கம் அறிவிக்கின்ற பொழுது அந்த ஆண்டுக்கான மழை வீழ்ச்சி மிக மிகக் குறைவான நிலைமையில் காணப்படுகிறது. அதே வேளை சந்திரன் ஆட்சிக்கிரகமாக காணப்படுகின்ற காலப்பகுதிகளில் ஆண்டு மழை வீழ்ச்சி மிக உயர்வாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாக உள்ளது. எனவே ஆட்சி கிரகத்திற்கும் மழை வீழ்ச்சிக்கும் இடையில் மிக நெருக்கமான தொடர்பு காணப்படுவதாக பஞ்சாங்கம் கூறுகின்ற நிலைமை நிகழ் நேர வானிலை அவதானிப்பிலும் பொருத்தமானதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது (அட்டவணை 3.3).

| ஆட்சி கிரகம் | மழைவீழ்ச்சி |
|---|---|
| செவ்வாய் | மிக மிக குறைவு |
| சனி | மிக குறைவு |
| சூரியன் | நடுத்தரமானது |
| புதன்.˙.வெள்ளி | கன மழை |
| வியாழன் | மிக கன மழை |
| சந்திரன் | மிகப்பெரும் மழை |

**அட்டவணை 3.3.**
**ஆட்சிக்கிரகமும் மழைவீழ்ச்சியின் தன்மையும்**

அதேபோன்று பிரதான அமைச்சு கிரகத்திற்கும் மழை வீழ்ச்சிக்கும் இடையில் மிகப்பெரிய தொடர்பு காணப்படுகின்றது. அதாவது சனி அமைச்சுக் கிரகமாக இருந்தால் அந்த ஆண்டின் மழை மிகக் குறைவாகவும் புதன் அமைச்சுக் கிரகமாக இருந்தால் மிகக் கூடிய அளவு அளவில் மழை கிடைப்பதாக பஞ்சாங்கம் கூறுகின்றது (அட்டவணை 3.4). வியாழன் அல்லது வெள்ளி அமைச்சுக் கிரகமாக இருந்தால் அக்காலப் பகுதியில் நடுத்தரமான அளவில் மழை கிடைப்பதாக குறிப்பிடப்படுகிறது. எனவே பஞ்சாங்கம் கூறுகின்ற ஆண்டுக்குரிய அமைச்சு கிரகத்திற்கும் அந்த ஆண்டு கிடைக்கும் மழைவீழ்ச்சிக்குமிடையில் மிகப்பெரிய தொடர்பு காணப்படுகின்றது. அதே போன்று மேகாதிபதியாக எந்த கிரகம் விளங்குகின்றதோ அதை பொறுத்து மழை அமைந்திருப்பதாக பஞ்சாங்கம் கூறுகின்றது (அட்டவணை 3.5).

| அமைச்சு கிரகம் | மழைவீழ்ச்சி |
|---|---|
| புதன் | மிக நன்று |
| வியாழன் /வெள்ளி | நன்று |
| சூரியன் | நடுத்தரம் |
| சனி | குறைவு |

| மேகாதிபதி | மழைவீழ்ச்சி |
|---|---|
| சந்திரன் | மிக கனமழை |
| வியாழன் | கனமழை |
| செவ்வாய் | நடுத்தரம் |
| வெள்ளி | குறைவு |


**அட்டவணை 3.5.**
**மேகாதிபதியும் மழைவீழ்ச்சியின் தன்மையும்**

உதாரணமாக சந்திரன் மேகாதிபதியாக இருக்கின்ற பொழுது மிக கனமழையும், வெள்ளி மேகாதிபதியாக இருக்கின்ற பொழுது மிக குறைவான மழையும் கிடைப்பதாக பஞ்சாங்கம் கூறுகின்றது. நடைமுறை வானிலை அவதானிப்பு சார்ந்த மழைவீழ்ச்சி தரவுகளும் இதனை உறுதிப்படுத்துகின்றன.

அதேவேளை ஆட்சிக்கிரகமாக சந்திரனும் அமைச்சுக் கிரகமாக புதனும் மேகாதிபதியாக சந்திரனும் நிலவும் காலப் பகுதிகளில் வடக்கு மாகாணம் மிகப்பெரிய அளவில் அதாவது வெள்ள அனர்த்தத்தை ஏற்படுத்தக் கூடிய அளவிற்கு மழையை பெற்றுள்ளமை பஞ்சாங்கங்களில் இருந்தும், அவதானிக்கப்பட்ட நிகழ்நேர மழை வீழ்ச்சி அளவீடுகளில் இருந்தும் அறிந்து கொள்ள முடிகின்றது. அதேபோன்று ஆட்சிக்கிரகமாக செவ்வாயும் அமைச்சுக் கிரகமாக சனியும் மேகாதிபதியாக வெள்ளியும் உள்ள காலப் பகுதிகளில் மிக மிகக் குறைவான மழை வீழ்ச்சி ஏற்பட்டு இருக்கின்ற அதே சமயம் வரட்சி மற்றும் நீர் பற்றாக்குறையால் வடக்கு மாகாணம் பல்வேறு வகைப்பட்ட பாதிப்புகளை எதிர்கொண்டிருப்பதும் அவதானிக்கப்படுகின்றது. எனவே பஞ்சாங்கம்

கூறுகின்ற ஆட்சிக்கிரகம், அமைச்சுக் கிரகம், மேகாதிபதி போன்றவற்றிற்கும் மழை வீழ்ச்சிக்கும் இடையில் மிக நெருக்கமான தொடர்பு காணப்படுவது இதன் மூலம் அவதானிக்கப்பட்டுள்ளது.

காண்டாவனம் என்பது இந்துக்களின் பஞ்சாங்கத்தில் முக்கியமான வார்த்தையாகும். ஏனெனில் இது சூரிய கதிர்வீச்சின் அளவு மற்றும் வெப்பநிலையைப் பற்றியது. காண்டாவனக் காலத்தில் வெப்பநிலை அதிகரிப்பதால் புதிய செயல்களில் ஈடுபட வேண்டாம் என்று பஞ்சாங்கம் கூறுகிறது. இந்துக்களின் பஞ்சாங்கத்தின் படி, காண்டாவனம் எட்டு முதல் பதின்மூன்று நாட்கள் வரை இருக்கும் (படம் 4). பஞ்சாங்கம் எந்தக் காலப்பகுதியை காண்டாவனம் என குறிப்பிடுகிறதோ, அதுவே அதிகபட்ச சூரியக் கதிர்வீச்சுக் காலத்துடன் கூடிய மிக உயர்ந்த வெப்பநிலையாக இருக்கும். 60 ஆண்டுகளில், பஞ்சாங்கம் அதிகபட்ச வெப்பநிலை காலத்தை துல்லியமாக கணித்துள்ளது (படம் 3.2).




படம் : 3.2

கடந்த 50 ஆண்டுகால பஞ்சாங்கம் கூறும் காலப்பகுதிக்கான சராசரி வெப்பநிலை

காலநிலை மாற்றம் மற்றும் காலநிலை தொடர்பில் இலங்கையில் பல ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன. இருப்பினும், பஞ்சாங்கம் மற்றும் மழைப்பொழிவு அல்லது வேறு எந்த வானிலை அம்சங்கள் தொடர்பான பாரம்பரிய முறைகளோடு தொடர்பு படுத்தி ஆய்வுகள் எதுவும் கிடைக்கவில்லை. இருப்பினும் சில ஆய்வுகள், குறிப்பாக சிங்கள மக்களிடையே வானிலை முறை குறித்த உள்ளூர் பழங்குடி அறிவை விளக்குகின்ற ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பஞ்சாங்கம், ஆண்டுக்கான மொத்தப் பகுதிக்கான மழையின் அளவைக் கணித்துள்ளது. இருப்பினும், இந்த வகையான முன்னறிவிப்பு விவசாயிகளுக்கும் வானிலை முன்னறிவிப்பு தேவைப்படும் பிற மக்களுக்கும் பயன்படுகின்றது. பஞ்சாங்கம் என்பது மிக நீண்ட காலமாக நீண்டகால வானிலை முன்னறிவிப்புக்காக இந்து மக்களால் பயன்படுத்தப்படுகின்ற ஒன்றாகும். பஞ்சாங்கங்களில் திருக்கணித பஞ்சாங்கம், வாக்கிய பஞ்சாங்கம் என இரண்டு வகையான பஞ்சாங்கங்கள் காணப்பட்டாலும் கூட இரண்டையும் தனித்தனியே பின்பற்றுபவர்களும் இணைத்து பின்பற்றுபவர்களும் காணப்படுகின்றார்கள். இந்த பஞ்சாங்கம் இயற்கை தொடர்பான பல்வேறு விடயங்களை தன்னுள்ளே கொண்டிருக்கின்றது. அவற்றில் சிறப்பாக வானிலை தொடர்பான அம்சங்கள் மிகவும் உத்தமமான அளவில் விதந்துரைக்கப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையில் மழைவீழ்ச்சியின் அளவையும் மழை நாட்களின் அளவையும் அதிதீவிர வெப்பநிலையின் அளவையும் பஞ்சாங்கம் கூறியிருப்பது நிகழ்காலத்தில் நடைமுறை சார்ந்த வானிலை அவதானிப்புகளுடன் குறிப்பாக மழைவீழ்ச்சி வெப்பநிலையோடு ஒத்துப் போவதனை காணமுடிகின்றது. குறிப்பாக மழை மரக்காலினுடைய சராசரிக்கும் மழைவீழ்ச்சியின் சராசரிக்கும் இடையில் மிகப்பெரிய நெருக்கமான தொடர்பு இருப்பது அவதானிக்கப்பட்டிருக்கின்றது. அத்தோடு காண்டாவன காலப்பகுதிகளில் வெப்பநிலையின் அளவு உயர்வாக இருப்பதும் அவதானிக்கப்பட்டிருக்கின்றது. அத்தோடு ஆட்சிக்கிரகங்களின், அமைச்சுக் கிரகங்களின், மேகாதிபதி கிரகங்களின் தன்மைக்கும் கிடைக்கும் மழைவீழ்ச்சிக்கும் இடையில் மிகப்பெரும் தொடர்பிருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக பஞ்சாங்கம் கூறுகின்ற அளவிலான மழை, நிகழ் நேர மழை அவதானிப்போடு ஒத்துப்போவது அவதானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இருப்பினும் பஞ்சாங்கங்கள் பற்றிய மிகச் சரியான வாசிப்பும், மிகச் சரியான கணிப்பும், மிகச் சரியான பிரதிக்கினையும், மிகச்சரியான

மொழிபெயர்ப்பும் இதன் உண்மைத்தன்மையை இன்னமும் வலுவாக்கும் என்பது உண்மை.




## கெர்ப்போட்டம் அல்லது கர்ப்போட்டம் அல்லது கருவோட்டம்

வளிமண்டலவியல் திணைக்களங்கள் உருவாகுவதற்கு முன்னர் மழையை கணிக்க நம் தமிழர்கள் மிகச் சிறந்த முறையை பின்பற்றினார்கள். அதாவது டிசம்பர் மாதத்தில் கருக்கொள்ளும் மேகத்தின் தெற்கு சார்பான ஓட்டம் பற்றிய கணிப்பு அதில் முக்கியமானது. தற்போதைய வளிமண்டலவியலாளர்கள் மத்திய கோட்டிற்கு வடக்கே 5 பாகையிலும் தெற்கே 5 பாகையிலும் ஏற்படுகிற சூழலே பருவக்காற்று தோன்றுவதற்கு காரணம் என்று கண்டறிந்துள்ளனர். கெர்ப்போட்ட முறையில் டிசம்பர் மாதத்திலேயே அடுத்து வரும் 12 மாதங்களுக்கான (ஓர் ஆண்டு) மழை நிலவரத்தை முன் கூட்டியே கணித்து விட முடியும். இந்த எதிர்வு கூறல் கணிப்பு கிட்டத்தட்ட 70% சரியாக இருப்பதாக விவசாயிகள் சொல்லுகிறார்கள். 100% சரியாக இல்லாமல் போவதற்கு தற்போதைய காலநிலை மாற்றம் பிரதான காரணமாக உள்ளது. கெர்ப்போட்டம் அல்லது கருவோட்டம் என்பது பஞ்சாங்கங்களின் பிரகாரம் சூரியனின் சுழற்சியை அடிப்படையாகக் கொண்டது. பூமி சூரியனை சுற்றுவதால் சூரியன் தொடர்ந்து சுற்றிக் கொண்டிருப்பது போல் நமக்குத் தோன்றுகிறது. இதனால் எமது முன்னோர்கள் சூரியன் சுற்றுவதாக எண்ணினார்கள். இவ்வாறு சுற்றும் போது ஒவ்வொரு ராசியைக் சூரியன் கடக்க அது 30 நாள்கள் எடுத்துக் கொள்கிறது.

சூரியன் ஒவ்வொரு ராசியைக் கடக்கும் போதும் அதிலுள்ள நட்சத்திரங்களையும் கடந்து செல்கிறது. இதில் தனுசு ராசியை சூரியன் கடந்து செல்லும் போது அதிலுள்ள பூராடம் நட்சத்திரத்தைக் கடப்பதற்கு 14 நாள்களை எடுத்துக் கொள்கிறது. இது மார்கழி மாதத்தில் நடைபெறுகிறது. இந்த நாள்களில் அதாவது டிசம்பர் 28 முதல் ஜனவரி 11 வரை (ஏறக்குறைய) உள்ள நாள்களில் காணப்படுகிற கடல் மற்றும் தரை வெப்ப நிலையை அடிப்படையாக வைத்து அடுத்த ஓராண்டிற்கான மழை கணிக்கப்படுகிறது. இதற்குத் தான் கெர்ப்போட்டம் என்று பெயர். இந்தப் 14 நாள்களிலும் வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தால், லேசான தூறல் இருந்தால், மேகங்கள் வானில் திரிந்தால், வானம் மேகமூட்டமாக இருந்தால் எதிர்வரும் ஆண்டு நல்ல மழை இருக்கும்.

கெர்ப்போட்ட நாள்களில் நல்ல வெயில் அடித்தால், கனமழை பெய்தால், வானத்தில் வெள்ளை மேகங்கள் திரிந்தால், வானம் வெட்ட வெளியாய் இருந்தால் எதிர்வரும் நாள்களில் மழை பொய்த்துப் போகும் எனபது தான் கெர்ப்போட்டத்தின் பிரதிபலிப்பு. இது தான் கெர்ப்போட்டம் மூலம் மழையை எதிர்வு கூறும் நீண்ட கால முறையாகும்.

கெர்ப்போட்டம் குறித்து விளக்கும் பழந்தமிழ் பாடல்:
*“தீயபூ ராடம் வெய்யோன் சேர்ந்திடு நாளில் வட்டம்*
*தூயமந் தாரம் தோன்றில் சுடரவன் ஆதி ரைக்கேபாயுநாள்*
*தொட்டு முன்பின் ஒருநாட்கும் பதினாலாக*
*காயும்வேற் கண்ணாய் சொல்லும் கார்மழை கர்ப்பம் தானே”*

சூடாமணி உள்ளமுடையன் என்ற நூலின் 258 ஆவது பாடல்

மார்கழி மாதம் தனுசு ராசியில் சூரியன் நகரும் பதினான்கு நாள்களில் காணப்படும் கடல் மற்றும் தரை வெப்ப நிலையைப் பொறுத்து எதிர் வரும் ஆண்டின் குறிப்பிட்ட மாதங்களில் மழைப்பொழிவு இருக்கும் என்பதே இப் பாடலின் கருத்து. தமிழர்களின் பாரம்பரிய முறைகளிலான நீண்ட கால வானிலை முன்னறிவித்தலின் விஞ்ஞான தன்மை குறித்து நீண்ட ஆய்வு மேற்கொள்ளப்பட்டு இலங்கை, உருகுணைப் பல்கலைக்கழத்தின் மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடத்தின் ஆய்விதழுக்கு சமர்ப்பிக்கப்பட்டு வெளியீடு செய்வதற்கு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அக்கட்டுரையின் ஒரு சிறிய பகுதியே இது. இது தொடர்பான ஆய்வுக்கு தூண்டி ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்கிய யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் முன்னாள் தகுதி வாய்ந்த அதிகாரியும், பௌதீகவியல் பேராசிரியருமான, பேராசிரியர் க. கந்தசாமி அவர்களுக்கு இந்த சந்தர்ப்பத்தில் எனது மனமார்ந்த நன்றிகள்.

(தொடரும்.)

நாள்தோறும் நாம் உணவாகக் கொள்ளும் தானியங்கள், காய்கறிகள், சுவையூட்டிகள், பாலுணவுகள் என்பவற்றின் குணங்கள் மற்றும் பயன்பாடு பற்றிக் கூறும் நூல் பதார்த்தகுணம் என்று அறியப்படும். அகத்தியர், தேரையர் முதலானோரின் பெயர்களில் பதார்த்தகுணம், குணபாடம் போன்ற தலைப்புகளில் பலநூல்கள் கிடைக்கின்றன. இவ்வகையில் இலங்கை யாழ்ப்பாணத்தில் ஆக்கப்பெற்ற நூல்களுள் ஒன்றே இருபாலைச்செட்டியார் என்று அறியப்படும் ஒரு மருத்துவரால் ஆக்கப்பெற்ற பதார்த்தசூடாமணியாகும். இற்றைக்கு ஏறத்தாழ இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோரின் இலங்கை வருகைக்குப் பின்னர் ஆக்கம் பெற்ற இந் நூலில் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளுக்கு இவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட பல்வேறு உணவு வகைகள் தொடர்பில் கூறப்பட்டுள்ளவற்றை 'பதார்த்த சூடாமணி' என்ற இத் தொடர் ஆராய்கின்றது.



பாலா. சிவகடாட்சம்

# இதய ஆரோக்கியத்தை மேம்படுத்தும் அன்னாசிப் பழம்

பாலா. சிவகடாட்சம் அவர்கள் இலங்கையின் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தாவரவியலை பிரதான பாடமாகக் கொண்டு உயிரியல் விஞ்ஞானத்துறையில் (B.Sc. Hons) சிறப்புப் பட்டம் பெற்றவர். இலண்டன் இம்பீரியல் கல்லூரியில் (London Imperial College) டிப்ளோமா சான்றிதழும், இலண்டன் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டமும் பெற்றுள்ளதுடன் ரொறொன்ரோ பல்கலைக்கழகத்தில் B.Ed பட்டமும் பெற்றுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய உயிரியற் பீடத்தில் மூத்த விரிவுரையாளராகவும் அதன் தலைவராகவும் பதவி வகித்த இவர் பின்னர் கனடாவில் உள்ள ரொறொன்ரோ கல்விச்சபையின் நிர்வாகத்தின் கீழுள்ள மார்க் கார்னோ கல்லூரியில் விஞ்ஞான மற்றும் உயிரியற் பாட ஆசிரியராகப் பணியாற்றினார்.

இலங்கையிலிருந்து 1971 1973 காலப் பகுதியில் விஞ்ஞானக் கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்த 'ஊற்று' என்ற மாத சஞ்சிகையின் பிரதம ஆசிரியராகவும், 19701971 காலப்பகுதியில் வெளிவந்த தமிழமுது இலக்கிய மாத இதழின் ஆசிரியர் குழுவின் உறுப்பினராகவும் பணியாற்றிய சிவகடாட்சம் (அவர்கள்) தொடர்ச்சியாக ஆய்வுக்கட்டுரைகளையும் இலக்கிய கட்டுரைகளையும் எழுதி வருகின்றார்.




அன்னாசி (பைன் அப்பிள் - pineapple)

Image source - www.gardeningknowhow.com

கிறிஸ்டோபர் கொலம்பஸ் அமெரிக்காவுக்கான தனது இரண்டாவது பயணத்தின் போது, 1493 ஆம் ஆண்டு நவம்பர் 4 ஆம் திகதி, தாம் புதிதாகக் கண்டறிந்த கரீபியன் தீவு ஒன்றுக்கு சாண்டா மரியா டி குவாடெலூப் என்று பெயரிட்டார். கப்பல்கள் கரையை நெருங்கியபோது, அத்தீவில் வாழ்ந்த பூர்வீகக் குடிகள் படகுகளில் நன்னீர் மற்றும் உணவை விற்பதற்காகக் கொண்டு

**நடுத்தர அன்னாசிப்பழம் சுமார் 13 கிராம் நார்ச்சத்தை வழங்குகிறது. 166 கிராம் நிறையுடைய அளவிலான ஓர் அன்னாசிப்பழத் துண்டு 83 கலோரி சக்தி தரக்கூடியது. இதில் கார்போஹைட்ரேற்று 21.7 கிராம், நார்ச்சத்து 2.32 கிராம், பொட்டாசியம் 181 மில்லிகிராம், விட்டமின் C 79.3 மில்லிகிராம், கல்சியம் 21.6 மில்லிகிராம் மற்றும் மங்கனீஸ் 1.54 மில்லிகிராம் உள்ளது.**




**அன்னாசிப்பழத்தின் பகுதிகள்**

Image source - www.researchgate.net

வந்தனர். அவ்வாறு கொண்டுவரப்பட்டவற்றுள் கொலம்பஸை மிகவும் கவர்ந்த ஒன்று அன்னாசிப்பழமாகும்.

கொலம்பஸ் அமெரிக்காவுக்கு வருவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே அமெரிக்காவின் பூர்வீகக் குடிமக்களால் இன்றைய பிரேசில், கயானா, கொலம்பியா, மத்திய அமெரிக்காவின் சில பகுதிகள் மற்றும் மேற்கிந்தியத் தீவுகளுக்கு அன்னாசிப்பழம் அறிமுகப்படுத்தப்பட்டு விட்டது.

தனது இரண்டாவது பயணத்தை முடித்துக்கொண்டு கொலம்பஸ் ஸ்பெயினுக்குத் திரும்பியபோது, அரசர் ஃபெர்டினாண்ட் (1452-1516), ராணி இஸபெல்லா (1451-1504) ஆகியோருக்கு கொண்டு வந்த காணிக்கைகளுள் தங்கக் கட்டிகள், பூர்வீகக் குடிகளால் செய்யப்பட்ட ஆபரணங்கள், முகமூடிகள் என்பவற்றுடன் அன்னாசி உட்பட்ட வெளிநாட்டுப்பழங்கள், பறவைகள், விலங்குகள், தாவரங்கள் அடங்கி இருந்தன. எனினும் இவற்றுள் அரசர் ஃபெர்டினாண்டை மிகவும் கவர்ந்தது அன்னாசிப்பழமேயாகும். இதை அவர் பகிரங்கமாகவே அறிவித்தார். இதனைத் தொடர்ந்து ஐரோப்பாவுக்கு கொண்டு வரப்பட்ட அன்னாசிப்பழங்கள் மன்னர்கள் மற்றும் பிரபுக்களின் பெரும் ஆதரவைப் பெற்றன. அமெரிக்காவில் இருந்து கொண்டுவரப்பட்ட அனைத்து வகையான புதிய உணவுகளுள் அன்னாசிப்பழம் மட்டுமே ஐரோப்பாவில் பரந்துபட்ட அங்கீகாரத்தைப் பெற்றது.

அன்னாசியைத் தத்தமது நாடுகளில் உற்பத்தி செய்வதற்கு ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் வாழ்ந்த செல்வந்தர்கள் பெரிதும் முயன்றபோதும் இவர்களது முயற்சிகள் அனைத்தும் வணிக ரீதியாக தோல்வியடைந்தன. ஐரோப்பாவின் காலநிலை அன்னாசிப் பழச்செய்கைக்குப் பொருத்தமற்றதாக அறியப்பட்டபின் கரீபியன் தீவுகளில் அன்னாசித் தோட்டங்களை நிறுவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கரீபியன் தீவுகளில் குடியேறியவர்களின் அன்னாசிப்பழச் செய்கை பற்றி ஆங்கிலேயரான ரிச்சர்ட் லிகோன் பின்வருமாறு விபரிக்கின்றார்.

“நாங்கள் அவற்றைச் சேகரிக்கும்போது, சில தண்டுகளை விட்டுவிடுகிறோம். அன்னாசிப்பழத்தைச் சாப்பிட வரும்போது, முதலில் அதன் முடிப்பகுதியை வெட்டி எடுத்து அதை நடுவதற்கு அனுப்புவோம். ஒரு திருடன் உள்ளே புதையலை எதிர்பார்த்து அழகிய அலமாரியை உடைப்பதைப் போல, மிகவும் அழகாக இருக்கும் அன்னாசிப்பழத்தின் தோலை உரித்து எறிந்துவிட்டு அதன் உள்ளே இருக்கும் சுவைமிகுந்த சதையை அனுபவித்து உண்கிறோம்.”

சர் வால்டர் ராலே (1605-1666) அமெரிக்காவுக்கான தனது பயணம் பற்றிய குறிப்பொன்றில், முதலாம் எலிசபெத்தின் நினைவாக அன்னாசிப்பழத்தை பழங்களின் இளவரசி என்று குறிப்பிட்டார். தனது ராணியைக்

காட்டுமிராண்டிகள் கண்டெடுத்த ஒரு பழத்துடன் ஒப்பிடுவது நாகரிகம் அல்ல என்று கருதியதால் இப்பழத்தினைப் 'பழங்களின் ராணி' என்று அவர் குறிப்பிட விரும்பவில்லை. ஆங்கிலேயர்களால் 'பைன் ஆப்பிள்' (Pine apple) என்று அறியப்பட்ட அன்னாசிப்பழம்தான் ஆதாமை ஏவாள் மயக்கிய ஆப்பிள் பழம் என்று ஸ்பானியர்கள் சத்தியம் செய்கிறார்கள் என்று எழுதிவைத்த சர் வால்டர் ராலே, உண்மையில் இப்பழத்தின் சிறப்பை சாதாரண வார்த்தைகளில் விவரிக்க முடியாது என்கிறார்.

ஆகஸ்ட் 10, 1668 அன்று, பிரான்சின் பதினான்காம் லூயி அனுப்பிய தூதரைக் கௌரவிக்கும் வகையில் மன்னர் இரண்டாம் சார்லஸ் (1660-1685) வழங்கிய ஆடம்பரமான விருந்தின்போதுதான் அன்னாசிப் பழத்தை முதன்முதலாகக் கண்டதாகக் கூறும் அரசவை அதிகாரியான ஜான் ஈவ்லின் (1620-1706) அந்த விருந்தின்போது மன்னர் சார்ள்ஸ், தட்டில் இருந்த பழத்தின் ஒரு துண்டை தமக்கு சுவைக்க கொடுத்ததாகவும் பதிவுசெய்துள்ளார்.

இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய நாடுகளில் மிக விலை உயர்ந்த அபூர்வமான பழமாக அன்னாசி கருதப்பட்ட காலப்பகுதியில் இலங்கை உள்ளிட்ட பல்வேறு ஆசிய நாடுகளில் மிக மலிவாகக் கிடைக்கக்கூடிய பழங்களுள் ஒன்றாகவே அது இருந்துள்ளது. போர்த்துக்கீசியர்கள் அன்னாசிப் பழத்தை பிரேசிலில் இருந்து 1505 ஆம் ஆண்டில் அட்லாண்டிக் தீவான செயின்ட் ஹெலினா மற்றும் பிற அட்லாண்டிக் தீவுகளுக்கும், 1548 இல் மடகாஸ்கருக்கும், 1550 இல் தென்னிந்தியாவுக்கும், போர்த்துகீசிய காலனியான மக்காவ் வழியாக சீனாவுக்கும் எடுத்துச் சென்றனர். 1602 ஆம் ஆண்டளவில் அடிமை வர்த்தகத்தின் மையமாக மேற்கு ஆபிரிக்க கடற்கரையில் இருந்த போர்த்துகீசிய கினியாவில் அன்னாசி பயிரிடப்பட்ட பின்னர் மேற்கு ஆப்பிரிக்கா முழுவதும் பரவியது.

சாதிக்காய், சாதிபத்திரி, கராம்பு போன்ற வாசனைத்திரவியங்களுக்குப் பெயர்போன 'ஸ்பைஸ் தீவுகள்' என்றழைக்கப்பெற்ற மொலுக்காஸ் தீவுகளில் தமது வல்லாதிக்கத்தை நிலைநிறுத்த ஸ்பானியரும் போர்த்துக்கீசியரும் போட்டி போட்டுக் கொண்டிருந்த காலப்பகுதியில் அன்னாசி மேற்கு பசிபிக் தீவுகளை அடைந்து, அங்கிருந்து தெற்கு பசிபிக் முழுவதும் பரவியது. கடற்பயணங்கள் மெதுவாகவும் மிகவும் கடினமாகவும் இருந்த காலமாயினும், அன்னாசிப்பழம் கொலம்பஸின் பார்வையில்பட்டு 200 ஆண்டுகளுக்குள், உலகளாவிய வெப்பமண்டல பழமாக மாறியது. இனிப்பு, புளிப்பு, கசப்பு, உப்பு சுவைகளை நிறைவு செய்யக்கூடிய நிரப்பியான அன்னாசிப்பழம் சமைக்கவும், பழமாக உண்ணவும், சுவைமிக்க பானமாக அருந்தவும் ஏற்றது. அன்னாசிப் பழத்தின் வடிவம் பைன் மரத்தின் விதைகளைக்கொண்ட கூம்பினை ஒத்துக் காணப்பட்டதால் ஐரோப்பிய ஆராய்ச்சியாளர்கள் இதனைப் 'பைன் ஆப்பிள்' (Pineapple) என்று அழைத்தனர். பல நாடுகளில், இப்பழம் 'அனனாஸ்' என்னும் பெயராலேயே அறியப்படுகின்றது. அமேசான் பிரதேசத்து 'துபி' பழங்குடிகளின் மொழியில் 'சிறந்த பழம்' என்று பொருள்படும் வார்த்தையான 'நானாஸ்' என்பதிலிருந்து பெறப்பட்டதே 'அனனாஸ்' என்னும் பெயர். இப்பெயரை 1555 ஆம் ஆண்டில் பிரெஞ்சு பிரான்சிஸ்கன் பாதிரியாரும் ஆராய்ச்சியாளருமான ஆண்ட்ரே தெவெட்டால் முதன்முதலாகப் பதிவுசெய்துள்ளார். 'அனனாஸ்' (Ananas) என்பதுவே தமிழில் 'அன்னாசி' ஆகிற்று. Pineapple என்பது அன்னாசியின் ஆங்கிலப் பெயர். Ananas comosus என்பது இதன் தாவர விஞ்ஞானப்பெயர்.

அன்னாசிப் பழம் அதன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தேவை காரணமாக மற்ற பழங்களை விட அதிக வணிக முக்கியத்துவம் வாய்ந்த பயிராக கருதப்படுகிறது. இலங்கையின் அன்னாசி உற்பத்தியில் 70 வீதமானவை கம்பஹா மற்றும் குருநாகல் மாவட்டங்களிலிருந்து பெறப்படுகின்றன.

## அன்னாசியின் பயன்கள்

அமெரிக்கர்களுக்கான உணவு வழிகாட்டுதலில் பெண்களுக்கு ஒரு நாளைக்கு 21 முதல் 25 கிராம் வரையிலும் ஆண்களுக்கு ஒரு நாளைக்கு 30 முதல் 38 கிராம் வரையிலுமான நார்ச்சத்து தேவைப்படுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஒரு நடுத்தர அன்னாசிப்பழம் சுமார் 13 கிராம் நார்ச்சத்தை வழங்குகிறது. 166 கிராம் நிறையுடைய அளவிலான ஓர் அன்னாசிப்பழத் துண்டு 83 கலோரி சக்தி தரக்கூடியது. இதில் கார்போஹைட்ரேற்று 21.7 கிராம், நார்ச்சத்து 2.32 கிராம், பொட்டாசியம் 181 மில்லிகிராம், விட்டமின் C 79.3 மில்லிகிராம், கல்சியம் 21.6 மில்லிகிராம் மற்றும் மங்கனீஸ் 1.54 மில்லிகிராம் உள்ளது.

அன்னாசிப்பழத்தில் கிளைசெமிக் குறியீட்டெண் 51 முதல் 73 வரை உள்ளது. இது மிதமானது.

எனவே நீரிழிவு நோயாளர் உண்ணக்கூடிய பழங்களுள் அன்னாசியும் ஒன்று. எனினும் இவர்கள் அன்னாசிப்பழத்தை ஒரு நாளைக்கு 100 கிராமுக்கு மேல் உட்கொள்ளக்கூடாது. கூடுதலாக உண்டால் இரத்தசர்க்கரை அளவு மேலும் அதிகரிக்கும். அன்னாசிப்பழத்தின் வெளிப்புறம் பச்சையாக இருந்தால் அது காய் என்று நினைத்துவிடக்கூடாது. அன்னாசியைச் செடியில் இருந்து பிரித்தெடுத்த பின்னர் ஏனைய பழங்களைப்போல் தொடர்ந்து பழுப்பதில்லை.

கிளைமுளையில் (sucker) இருந்து பெறப்படும் அன்னாசிச்செடி ஒருவருடத்தின் பின்னர் பழம் தரும். அன்னாசிப்பழத்தின் கிரீடத்தில் (crown) இருந்து வளர்க்கப்படும் அன்னாசிச்செடி பழம் தர இரண்டு வருடங்கள் எடுக்கும்.

அன்னாசிப்பழத்தில் உள்ள ஆன்டி ஆக்ஸிடன்ட்களான வைட்டமின் C மற்றும் பீட்டா கரோட்டின் மற்றும் தாமிரம் (copper), துத்தநாகம் (zinc) மற்றும் ஃபோலேட் (Folate) ஆகியவை ஆண் மற்றும் பெண் கருவுறுதலை ஊக்குவிக்கும் பண்புகளைக் கொண்டுள்ளன. கர்ப்பிணிப்பெண்கள் அன்னாசிப்பழம் சாப்பிட்டால் கருச்சிதைவு ஏற்படும் என்பது ஆதாரமற்ற செய்தி.

அன்னாசிப்பழத்தில் உள்ள நார்ச்சத்து, பொட்டாசியம் மற்றும் வைட்டமின் C அனைத்தும் இதய ஆரோக்கியத்தை மேம்படுத்துகின்றன. அதே நேரத்தில் அதிக பொட்டாசியத்தை உட்கொள்வது சிறுநீரகங்கள் முழுமையாக செயல்படாதவர்களுக்கு தீங்கு விளைவிக்கும். உங்கள் சிறுநீரகங்கள் இரத்தத்திலிருந்து அதிகப்படியான பொட்டாசியத்தை அகற்ற முடியாவிட்டால், அது ஆபத்தானது. அன்னாசிப்பழத்தில் ப்ரோமெலைன் (Bromelain) என்ற நொதியக் கலவை உள்ளது. இது புரதங்கள் சமிபாடு அடைய உதவுகிறது. புரோமெலைன் வீக்கத்தைக் குறைத்தல் மற்றும் செரிமானத்தை மேம்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு சாத்தியமான சுகாதார நன்மைகளைக் கொண்டுள்ளது. உணவாகக் கொள்ளமுடியாத அன்னாசியின் தண்டுப்பகுதியில் செறிந்து காணப்படும் ப்ரோமெலைனைப் பிரித்தெடுத்து சில்லறை விற்பனையாளர்கள் ஒரு சுகாதார உணவுக் குறைநிரப்பி (dietary supplement) அல்லது தோல் கிரீம் ஆக விற்க முனைகிறார்கள்.

முடக்கு வாதம் உள்ளவர்களுக்கு ப்ரோமெலைன் நன்மை பயக்கும் என்று கூறப்படுகின்றது. எனினும் இதன் செயல்திறன் மற்றும் பொருத்தமான அளவுகள் குறித்து மேலும் ஆராய்ச்சி தேவை என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ப்ரோமெலைன் குறைநிரப்பியை முயற்சிக்க விரும்புவோர் அதனை மருந்துக்கடைகள், சில மளிகைக்கடைகள் மற்றும் ஆன்லைனில் பெற்றுக்கொள்ளமுடியும். ப்ரோமெலைன் ஒரு இயற்கைப் பொருள் என்றாலும், இது வயிற்று வலி, அதிகரித்த இதயத்துடிப்பு மற்றும் மாதவிடாய்ப்பிரச்சினைகள் போன்ற சில பக்க விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது.



**பைன் மரத்தின் விதைக்கூம்பு**

Image source - www.countryfile.com

அன்னாசிப்பழங்களுக்கு ஒவ்வாமை உள்ளவர்கள் ப்ரோமெலைன் எடுப்பதைத் தவிர்க்க வேண்டும். இது லேசானது முதல் கடுமையானது வரை ஒவ்வாமை எதிர்வினைகளை ஏற்படுத்தும். மேலும் தீவிர சந்தர்ப்பங்களில், இது அனாபிலாக்ஸிஸ் என்னும் வலிப்பை ஏற்படுத்தும். ப்ரோமெலைனை எடுத்துக் கொண்ட பிறகு அல்லது பயன்படுத்திய பிறகு ஒருவர் சுவாசிப்பதில் சிரமம், குமட்டல், கடுமையாக சிவப்பு அல்லது வீங்கிய தோல், வாந்தி, பலவீனமான அல்லது விரைவான நாடித்துடிப்பு என்பவற்றுள் ஏதேனும் ஒன்றை அனுபவித்தால் அவர் உடனடியாக அவசர மருத்துவ சிகிச்சை பெற வேண்டும்.

பிலிப்பைன்ஸ் நாட்டின் பாரம்பரிய உடையான பரொங் (Barong), அன்னாசி இலைநாரும் பட்டும் சேர்த்து நெய்யப்படும் துணியைக் கொண்டு தயாரிக்கப்படுகின்றது என்பது ஒரு மேலதிக தகவலாகும்.

**உசாத்துணை**

*Kaori O'Connor, Pineapple A Global History, The Edible Series, Reaktion Books Ltd, London, UK* **2013.**

கால்நடை வளர்ப்பு என்பது இலங்கையின் முக்கியமான ஒரு பொருளாதாரக் கூறு. மனிதனின் புராதன தொழில்களில் கால்நடை வளர்ப்பு மிகமுக்கியமானது. பால், முட்டை, இறைச்சி, எரு, வேலைவாய்ப்பு என பல வழிகளிலும் கால்நடை வளர்ப்பு மக்களுக்கு வருவாயை ஏற்படுத்தும் துறையாகும். அத்துடன் நுகர்வோரின் புரத மற்றும் முக்கியமான ஊட்டச் சத்துகளின் தேவையை பூர்த்தி செய்வதாகவும் கால்நடை வளர்ப்பு அமைகிறது. பொருளாதார நெருக்கடியால் இலங்கை தள்ளாடும் சூழ்நிலையில், கால்நடை வளர்ப்பினூடாக கிராமிய மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் போசணைமட்டத்தை உயர்த்துவதோடு, இதை மேம்படுத்துவதனூடாக இலங்கையின் பொருளாதாரத்தை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பது தொடர்பான வழிமுறைகளை அனுபவரீதியாகவும், ஆய்வியல் ரீதியாகவும் முன்வைப்பதாக 'இலங்கையின் கால்நடை வளர்ப்பு பொருளாதாரம்' என்ற இத்தொடர் அமைகிறது.




சிவபாத சுந்தரலிங்கம்
கிருபானந்தகுமரன்


# கடும்புப் பால் என்னும் திரவ நிலைத் தங்கம்


கால்நடை மருத்துவரான சி. கிருபானந்தகுமரன் அவர்கள் பேராதனை பல்கலைக்கழகத்தில் தனது கால்நடை மருத்துவ பட்டப்படிப்பினை மேற்கொண்டார் (BVSc, MVS). தமிழக, இலங்கை ஊடகங்களில் கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கியல் நடத்தைகள் தொடர்பான தொடர்களை எழுதி வருகிறார்.




Image source - www.moocall.com

அண்மையில் ஒரு பண்ணையாளர் தனது 2 மாத பசுக்கன்று சுவாசிக்க கஷ்டப்படுவதாகவும் மூச்செடுக்கும் போது மூக்கில் இருந்து கடும் சத்தத்துடன் மஞ்சள் நிறச் சளி போன்ற திரவம் வருவதாகவும் என்னிடம் வந்திருந்தார். அவரது கன்று செயற்கை சினைப்படுத்தல் மூலம் பிறப்பிக்கப்பட்ட ஜெசி இனத்தைச் சார்ந்தது. சில நிமிட விசாரணையின் பின் அவரது கன்றின் நிலையையும் அதற்குரிய காரணத்தையும் உணரமுடிந்தது. கன்று பிறந்ததும் தாயிலிருந்து சுரக்கும் கடும்புப் பால் எனப்படும் *colostrum* இனை கறந்து வெளியே ஊற்றி

இருக்கிறார். கடும்புப் பால் கன்றுக்கு ஆபத்தை தரக் கூடியது எனும் ஐதீகத்தை அந்த பண்ணையாளர் பல வருடங்களாக கொண்டிருக்கிறார். அதுவரை வேறு ஒரு மாட்டிடம் இருந்து பால் கறந்து கொடுத்திருக்கிறார். இரண்டு மூன்று நாட்களின் பின் தான் தாயிடம் இருந்து கன்றினை பால் குடிக்க விட்டிருக்கிறார்.

இதனைப் போல முன்பும் இவரது பல கன்றுக் குட்டிகள் கழிச்சல் [diarrhoea] நிலைக்கும் சுவாசிக்க முடியாத நிலைக்கும் ஆளாகி இருந்திருக்கின்றன. கழிச்சல் நோய்க்கு சில மருந்துக் குளிசைகளை கடைகளில் வாங்கி பாவித்திருக்கிறார் [கால்நடை வைத்தியரின் பரிந்துரை இன்றி சில மருந்துக் கடைகள் மருந்துகளை வழங்குகின்றன என்பது வேறு கதை]. சில கன்றுகள் அதுவும் நாட்டு இனக்கன்றுகள் தப்பியிருந்தாலும் பெரும்பாலான நல்ல இனக் கன்றுகள் இறந்து போயிருக்கின்றன.



Image source - www.cowsignals.com

உண்மையில் இந்த மாதிரியான நிலையை பெரும்பாலான பண்ணையாளர்களிடம் அவதானிக்க முடியும். கழிச்சல் மற்றும் சுவாசப் பிரச்சனைகளை கன்றுகளின் பெரும்பாலான மரணத்துக்கு காரணமாகக் கூறமுடியும். இலங்கை போன்ற நாடுகளில் மட்டுமல்ல வசதி படைத்த நாடுகளின் மிகப் பெரிய பண்ணைகளிலும் இந்த நிலைமையை அவதானிக்க முடியும். மனிதர்களுக்கு சிசு மரண வீதம் எப்படியோ அது போல கன்றுகளுக்கும் பிறந்து சில மாத காலத்தில் அதிக மரண வீதம் ஏற்படுகிறது. ஆடுகள் மற்றும் இதர கால்நடை வகைகளுக்கும் இது பொருந்தும்.

உண்மையில் மேலே கூறப்பட்ட நிலைமைக்கு முகாமைத்துவக் குறைபாட்டைத்தான் பிரதான காரணமாகக் கூறலாம். கன்று வளர்ப்பின் மிகப் பிரதானமான அம்சமாக கடும்புப் பால்/சீம் பால் எனும் colostrum ஊட்டலை கூறமுடியும். கன்று பிறந்த முதல் சில நாட்களுக்கு தாயின் முலையில் இருந்து சுரக்கும் கடும் மஞ்சள் நிறமான தடித்த பதார்த்தம் தான் கடும்புப் பால். இந்தப் பதார்த்தம் கன்றின் எதிர்காலத்தை, அதன் வளர்ச்சியை, பால் உற்பத்தி போன்ற இதர பல செயற்பாடுகளை தீர்மானிக்கும் முக்கியமான விடயமாகும்.

கன்று பிறந்த முதல் இரண்டு, மூன்று மணித்தியாலங்கள் அதன் வாழ்க்கையின் மிக முக்கியமான காலப்பகுதியாகும். அந்த நேரத்தில் கன்று குடிக்கும் கடும்புப் பாலின் அளவு மிக மிக முக்கியமானது. மனிதர்களைப் போல் அல்லாது ஆடு, மாடு போன்ற விலங்குகளின் குட்டிகள் நோய் எதிர் சக்தியை கொண்டு பிறக்கமாட்டாது. ஏனெனில் தாயின் கருப்பைக்கும் குட்டிக்கும் நேரடியான இரத்தத் தொடர்பு இருக்காது. நோய் எதிர் சூழலை கொண்டமைந்த தாயின் கருப்பையை விட்டு வெளிச் சூழலுக்கு வரும் மேற்படி இளம் பருவ விலங்குகள் நோய் காரணிகளின் தாக்கத்துக்கு இலகுவில் உட்படக் கூடியன. எனினும் இந்த நிலைமையை தவிர்க்கும் விதமாக கடும்புப் பாலில், மேற்படி நோய்க் காரணிகளுக்கு பாதுகாப்பை அளிக்கும் பிறபொருள் எதிரிகள் [Anti bodies], ஏனைய நோய் எதிர்ப் பதார்த்தங்கள், சக்தி மூலங்கள், விற்றமின்கள் எல்லாம் இருக்கின்றன. பிறந்த சில மணி நேரங்களில் மேற்படி கடும்புப் பாலை கன்றுகள் குடிப்பதன் மூலம் இந்த நோய் எதிர் பதார்த்தங்கள், சக்தி மூலங்கள், விற்றமின்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

பசுவின் கடும்புப் பால் நேரம் செல்லச் செல்ல அதன் சிறப்புத் தன்மையை இழக்கும். கடும்புப் பாலில் மிக முக்கிய IgG எனும் பிறபொருள் எதிரிப் பதார்த்தம், நேரம் செல்லச் செல்ல அதன் செறிவில் குறைவடையும். மேற்படி IgG, நோய் நிலைமைகள் பலவற்றில் இருந்து கன்றை பாதுகாக்கிற அதேவேளை மிகப் பெரும் பருமனை






Image source - www.thecattlesite.com




*Figuur 3. Afname passieve immuniteit versus stijgende actieve immuniteit* (Sprayfo, 2016).

**கன்றின் நோயெதிர்ப்புத் திறன் குறித்து விளக்கும் படம்**

Image source - www.cowsignals.com

பசுவின் கடும்புப் பால் நேரம் செல்லச் செல்ல அதன் சிறப்புத் தன்மையை இழக்கும். கடும்புப் பாலில் மிக முக்கிய IgG எனும் பிறபொருள் எதிரிப் பதார்த்தம், நேரம் செல்லச் செல்ல அதன் செறிவில் குறைவடையும். மேற்படி IgG, நோய் நிலைமைகள் பலவற்றில் இருந்து கன்றை பாதுகாக்கிற அதேவேளை மிகப் பெரும் பருமனை கொண்டதாகவும் உள்ளது.

கொண்டதாகவும் உள்ளது. கன்றின் சிறுகுடல், பருமனான IgG இனை ஒரு குறித்த நேர அளவுக்கு தான் அகத்துறிஞ்சும் ஆற்றலைக் கொண்டிருக்கும். நேரம் செல்லச் செல்ல மேற்படி பதார்த்தத்தை அகத்துறிஞ்ச முடியாத நிலை ஏற்படும். எனவே, கன்று பிறந்து குறித்த மணி நேரத்திலேயே கடும்புப் பாலைக் குடிக்க விட வேண்டும். தாமதித்துக் கொடுக்கும் கடும்புப் பால் உண்மையில் பயனற்றது.

உண்மையில் எமது பல பண்ணையாளர்கள் இந்த விகித்தை சரியாகச் செய்வது கிடையாது. சிலர் அதனை கறந்து ஊற்றுகின்றனர். மேலும் சிலர் மனிதர்களின் உணவாக கடும்புப் பாலை உண்பதும் அவதானிக்கப்படுகிறது. மேற்படி முதல் நாளில் சரியாக கடும்புப் பால் கொடுக்கப்படும் கன்றுகளில் கழிச்சல் மற்றும் சுவாச நோய் நிலைமைகள் பெரும்பாலும் அவதானிக்கப்படுவதில்லை. அந்த நிலைமைகளுக்குரிய பிறபொருள் எதிரிகள் கடும்புப் பாலில் இருப்பதுதான் இதற்குரிய காரணமாகும்.

வளர்ச்சியடைந்த பல நாடுகளிலும் இலங்கையின் அம்பேவல போன்ற பெரிய பண்ணைகளிலும் கன்று பிறந்தவுடன் தாயிடம் இருந்து பிரிக்கப்படும். கன்றின் உடல் நிறைக்கு ஏற்ப கடும்புப்பால் சரியான விகிதத்தில் சரியான நேரத்தில் கொடுக்கப்படும். தாயிடம் இருந்து நேரடியாக கன்று பால் குடிக்கும் போது முதல் இரண்டு மூன்று மணித்தியாலங்களில் சரியான அளவில் கடும்புப் பாலை குடிக்க முடியாத நிலை ஏற்படுவதாக பல ஆய்வுகள் கூறுகின்றன. மேலும் பெரும்பாலான பசுக்களும் அவை காணப்படும் பட்டிகளும் சுகாதாரத் தன்மை குறைவாக இருப்பதால் கன்றுக்கு நோய் நிலைமைகள் தோன்றலாம். நேரடியாகத் தாயிடம் இருந்து பாலைக் கொடுப்பதை விட, கறந்து தேவையான அளவில் போத்தல் மூலம் ஊட்டுவது சர்வதேச அளவில் பரிந்துரைக்கப்படுகிறது. இந்த ஊட்டல் முறை சரியான பயனைத் தருவதாக பல ஆய்வுகள் கூறுகின்றன. நாட்டு இன மாடுகளுக்கு இந்தமுறை கொஞ்சம் கஷ்டமானது எனினும் உயர் ரக மாடுகளுக்கு இந்த முறையை பயன்படுத்தலாம். இதற்கென தயாரிக்கப்பட்ட பிரத்தியேக பால் போத்தல்களும் உள்ளன.

உண்மையில் தாயிடம் இருந்துதான் கடும்புப் பாலையோ சாதாரண பாலையோ கொடுக்க வேண்டும் என்று இல்லை. மிகச் சிறந்த கடும்புப் பாலைக் கொண்ட வேறு பசுக்களின் கடும்புப் பாலையும் கொடுக்கலாம். சிறந்த கடும்புப் பால் கொண்ட பசுக்களில் இருந்து பெறப்படும் கடும்புப் பாலை பல மாதங்களுக்கு சரியாகச் சேமித்தால் அதன் சிறப்புக் குன்றாமல் இருக்கும். இளம் பசுக்களின் கடும்புப் பாலை விட மூன்றாவது மற்றும் நான்காவது ஈற்றுப் பசுக்களின் கடும்புப் பால் சிறப்பானது. ஏனெனில் அவை நோய்



கொலஸ்ரோ மீட்டர்

Image source - www.moocall.com

நிலைமைகளை அதிகம் சந்தித்திருப்பதால் சிறந்த நோய் எதிர்ப்பு சக்தி கொண்ட பிறபொருள் எதிரிகளை கொண்டிருக்கும். அதிக வயதான பசுக்களின் பாலை புறக்கணிக்கலாம். அவை அதிக பிறபொருள் எதிரிகளைக் கொண்டிருந்தாலும் பிற முக்கியமான பதார்த்தங்கள் வயது போகப் போக அவற்றின் பாலில் குறைவடையும். மேலும் வெளிநாட்டு மாடுகளின் கடும்புப் பாலை விட நாட்டு மாடுகளின் பால் சிறந்தது. அதனை விட, அதிக பாலைச் சுரக்கும் மாடுகளை விட குறைந்த அளவு பால் சுரக்கும் மாடுகளின் பால் சிறப்பானது. குறைந்த பாற் கனவளவில் முக்கியமான பதார்த்தங்கள் செறிந்திருக்கும். தடுப்பூசி போடப்படும் மாடுகளின் கடும்புப் பால், போடப்படும் தடுப்பூசிக்குரிய பிறபொருள் எதிரிகளை அதிகம் கொண்டிருப்பதால் மிகச் சிறப்பானது. சரியான கால அளவில் பால் வற்றுக் காலத்தை [Dry period] பேணும் மாடுகளும் சிறப்பான கடும்புப் பாலை கொண்டிருக்கும்.

எமது பழக்கவழக்கங்களின் அடிப்படையில், பசுவையும் கன்றையும் பிரிப்பதை எமது மக்கள் அதிகம் விரும்ப மாட்டார்கள். மேலும் எமது மாடுகளும் கன்றின் தூண்டுதல் இல்லாமல் பாலைச் சுரக்காது என்ற நிலையும் உள்ளது. உதாரணமாக கன்று இறந்தால் நம்மவர்கள் பசுவில் பாலைக் கறப்பது கிடையாது. உண்மையில் இது தவறான கருதுகோள் ஆகும். பாலை கன்று இல்லாமலும் கறக்க முடியும். அம்பேவல போன்ற பண்ணைகளில் இந்த நிலையை அவதானிக்க முடியும். அங்கு ஒலிக்கும் சங்கீதச் சத்தத்துக்கே பசுக்கள் பாலைச் சுரக்கின்றன. சில இடங்களில் பால் வாளியின் சத்தத்துக்கே பசுக்கள் பாலைச் சுரக்கின்றன. வெளிநாடுகளில் பக்கற்றில் அடைத்த கடும்புப் பால் விற்பனையில் உள்ளது. சிலவேளைகளில் கன்று ஈன்றவுடன் தாய்ப் பசு இறந்தால் முட்டை மஞ்சள் கரு, தேசிப்புளி மற்றும் வேறு பசுக்களின் பாலைக் கொண்டு செயற்கைக் கடும்புப் பாலைத் தயாரிக்க முடியும். எனினும் IgG போன்ற பிறபொருள் எதிரிப் பதார்த்தம் அந்தச் செயற்கைப் பாலில் இருக்காது. வெளிநாடுகளில் விளையாட்டு வீரர்கள் அதிக சக்தியை விரைவாக பெறும் பொருட்டு கடும்புப் பால் அடங்கிய உணவுகள் சந்தையில் கிடைக்கிறது. மேலும் கன்றுக்கு பழுதடைந்த அல்லது மடியழற்சி [mastitis] ஏற்பட்ட பசுவின் தரமற்ற கடும்புப் பாலை கொடுக்கக் கூடாது. கடும்புப் பாலின் தரத்தை colostrometer மூலம் அளவிடலாம். கடும்புப் பாலை கன்றுக்கு கொடுக்கும் போது எவ்வளவு விரைவாக கொடுக்க முடியுமோ அவ்வளவு விரைவாக தகுந்த அளவில் தரமான சுத்தமான கடும்புப் பாலாக கொடுப்பதை உறுதி செய்ய வேண்டும்.

நவீனக் கால்நடை வளர்ப்பில் வளர்ச்சியடைந்த நாடுகளில் உணவூட்டல், கடும்புப் பால் ஊட்டல் போன்ற முகாமைத்துவச் செயற்பாடுகளை முதன்மைப் படுத்துகின்றனர். நோய்க்கு சிகிச்சை அளிப்பதை விட நோய் வருமுன் காக்கும் செயன்முறைகளுக்கு முன்னுரிமை அளிக்கின்றனர். இதன் காரணமாகத் தான் அவர்களுடைய கால்நடை உற்பத்தித் துறை சிறப்பாக இயங்குகிறது. எமது நாடுகளிலும் மேற்படி உணவூட்டல் முறைகளையும் தடுப்பூசி [vaccination] ஏற்றுதல் போன்ற நோய் வருமுன் தடுக்கும் முறைகளை தகுந்த வைத்திய ஆலோசனையுடன் செய்யும் போது விலங்குகளின் இழப்பை தடுப்பதோடு உற்பத்தியையும் பெருக்கிக் கொள்ள முடியும்.

(தொடரும்.)




Colostrum Replacer

Image source - gardenlux.decorexpro.com

இந்தியவம்சாவழி தொழிலாளர்களின் இலங்கை வருகை, அவர்களின் பிரஜாவுரிமை போன்ற பல விடயங்கள் தொடர்பேசுப்பொருளாக அமைந்திருக்கின்றன. ஆனால் கோப்பி பயிர்செய்கைக்குப் பின்னரான இந்தியவம்சாவழித் தமிழரின் வாழ்க்கை சூழல் எவ்வாறு அமைந்ததென ஒரு சில ஆய்வுகளே வெளிவந்துள்ளன. ”கண்டி சீமையிலே2 – சதிகளையும் சூழ்ச்சிகளையும் கடந்த வரலாறு என்ற இந்த வரலாற்றுத்தொடர் அந்த இடைவெளியை நிரப்புவதாக அமைகின்றது. இலங்கையில் கோப்பிப்பயிர்செய்கை முடிவுற்று தேயிலை பயிர்செய்கைக்கான ஆரம்பத்தினை எடுத்துக்கூறுகின்றது. இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட இந்திய வம்சாவழித் தமிழர்கள் தேயிலை தோட்டங்களில் பட்ட இன்னல்களையும் இடர்களையும் எடுத்துரைப்பதாக அமைகின்றது. கண்டி சீமைக்கு அழைத்துவரப்பட்ட தொழிலாளர்களின் உண்மை நிலையினை வரலாற்றுப் பார்வையினூடாக ஆதாரங்களுடன் எடுத்தியம்புகின்றது. இது வெறுமனே மக்களின் வாழ்வியல் பிரச்சினைசார் விடயங்களை மாத்திரம் தெளிவுப்படுத்தாமல், தொழில்சார், அரசியல், பொருளாதார, சமூகம் சார்ந்த பல்பரிமாண அம்சங்களினை வெளிகொணர்வதாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# திம்பு பேச்சுவார்த்தையின் விளைவுகள்


இரா. சடகோபன்



இரா. சடகோபன் என்று எழுத்து உலகில் அறியப்பட்ட இராமையா சடகோபன் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் புவியியல் சிறப்பு பட்டதாரி ஆவார். அதன்பின் ஒரு சட்டத்தரணியாக தன்னை உயர்த்திக் கொண்ட இவர் இதுவரை பத்துக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். இவற்றில் மூன்று நூல்களுக்குத் தேசிய சாகித்திய விருதுகளையும் பெற்றுள்ளார்.

விஜய் சிறுவர் பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியரான இவர், ‘சுகவாழ்வு’ சஞ்சிகையின் பிரதம ஆசிரியரும் ஆவார். இதனைத் தவிர மலையக மக்கள் மேம்பாடு தொடர்பாகப் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு நூல்களையும் ஆய்வுக் கட்டுரைகளும் எழுதியுள்ளார். சடகோபன் ஊடகத்துறையில் ஆற்றிய பணிக்காகச் சிறந்த ஊடகவியலாளருக்கான ஜனாதிபதி விருதையும் பெற்றுள்ளார்




திம்பு பேச்சுவார்த்தையின் போது

Image source - twitter.com/TamilGuardian

மலையக தமிழ் மக்கள் ‘நாடற்றவர்கள்’ என்ற நிலையை மாற்ற எத்தனையோ போராட்டங்கள், தொழிற்சங்க நடவடிக்கைகள், சாத்வீக சத்தியா கிரகங்கள் என்பவற்றையெல்லாம் மேற்கொண்டு அரசாங்கத்துக்கு பல்வேறு நெருக்கடிகளை கொடுத்தனர். அடுத்தடுத்து பதவி வகித்த இனவாத அரசாங்கங்கள் தங்களது நிலைப்பாட்டில் இருந்து ஒரு அங்குலம் கூட இறங்கிவர தயாராக இருக்கவில்லை. நாட்டின் வடக்கு கிழக்கு வாழ் தமிழர்கள் தங்களது தேசிய இனப் பிரச்சனைக்கு தீர்வாக வடக்கு கிழக்கு பிரதேசத்தை ஒரு சுயாட்சியுடன் கூடிய தனிநிர்வாக அலகாகப் பிரித்து தரும்படி கோரி, ஆயுதப் போராட்டத்தை தீவிரப்படுத்தி இருந்த காலம் அது. இந்தியாவும் கூட தென் மாநிலமான தமிழ்நாட்டில் வாக்கு வங்கிகளை அதிகரித்துக் கொள்ளும் முகமாக இலங்கைத் தமிழர் மீதான கரிசனையை அதிகரித்து இருந்தது.

தனி நாடு கேட்டுப் போராடிய ஆயுதக் குழுக்கள் சில மலையக இளைஞர்களையும் ஆட்சேர்த்துக் கொள்ளும் முயற்சியில் ஈடுபடத் தொடங்கின.

1985 ஆம் ஆண்டு ஜூலை, ஆகஸ்ட் ஆகிய மாதங்களில் இடம்பெற்ற 'திம்பு' சமாதானப் பேச்சு வார்த்தையின் இறுதியில் போராட்டக் குழுக்கள் சமர்ப்பித்த சமாதானத்துக்கான விதந்துரைகளின் நான்கு அம்சப் பிரகடனத்தில் நாட்டின் சகல தமிழ் மக்களுக்கும் சமமான பிரஜா உரிமை வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டிருந்தது. பூட்டான் நாட்டின் தலைநகர் திம்புவில் இடம்பெற்ற இந்த சமாதான மாநாட்டில் ஆயுதப் போராட்ட குழுக்களான எல் டி டி ஈ, ஈ பி ஆர் எல் எப், டெலோ, ஈரோஸ், புளட், டி யு எல் எப் ஆகிய இயக்கங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் பங்கு பற்றி இருந்தனர். இந்த பேச்சு வார்த்தையின் போது அரசாங்கத்தின் தரப்பில் அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் தமையனான, எச். டபிள்யூ.டபிள்யூ. ஜெயவர்த்தனவும் இடம் பெற்றிருந்தார். இவர், பேச்சு வார்த்தையின் முடிவில் ஜே.ஆர். ஜெயவர்த்தனவை தனிப்பட்ட முறையில் சந்தித்து, மேற்படி பேச்சு வார்த்தையின் நாலாவது அம்சமாக இந்திய வம்சாவழி தமிழ் மக்களின் பிரஜா உரிமை பிரச்சினையும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பது குறித்து பிரஸ்தாபித்ததுடன், ஆயுதப் போராட்டம் இந்திய வம்சாவழி மக்கள் மத்தியிலும் பரவுவதன் ஆபத்து தொடர்பிலும் எச்சரித்தார்.



எச்.டபிள்யூ.டபிள்யூ. ஜெயவர்த்தன
Image source - sundayobserver.lk

இதற்கு மேலதிகமாக சிங்கள பௌத்த உயர் மத பீடமான 'மகா சங்கத்தினர்' இதனை ஒரு சாக்காகக் கொண்டு இந்திய அரசு இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடுவதற்கான ஆபத்து இருப்பதாக எச்சரித்ததுடன் இந்திய வம்சாவழி மலையகத் தமிழருக்கான பிரஜா உரிமையை வழங்குவது தொடர்பில் தங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்றும் தெரிவித்தது. இது தொடர்பான விடயங்கள் யாவும் ஆமை வேகத்திலேயே நகர்ந்தன. தொடர்ந்தும் இது தொடர்பில் அழுத்தங்களை கொண்டுவராமல் விட்டால் இந்த விடயத்தை மீண்டும் கிடப்பில் போட்டு விடக்கூடும் என அறிந்திருந்த தொண்டமான், பிரார்த்தனை வழிபாடு போராட்டம் ஒன்றை ஆரம்பித்தார். 1985 ஜூன் மாதம் மூன்று தினங்களுக்கு இந்த போராட்டம் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி, தொழிலாளர்கள் காலை ஏழு மணியிலிருந்து மதியம் 12 மணி வரையில் கூட்டுப் பிரார்த்தனையிலும் வழிபாட்டு நிகழ்விலும் கலந்துகொண்டுவிட்டு 12 மணிக்கு பின்னர் மாலை வரை தொழிலில் ஈடுபடுவது என முடிவு செய்யப்பட்டது. இது ஒரு வேலை நிறுத்த போராட்டம் அல்ல என்பதாலும் இதனால் தோட்டங்களில் உற்பத்தி பாதிக்கப்படப் போவதில்லை என்பதாலும் இது தொடர்பில் தோட்ட நிர்வாகங்கள் பெரிதாகக் கண்டு கொள்ளவில்லை. இந்த போராட்டத்தில் தொழிலாளர்கள் காட்டிய ஒற்றுமை, அநேகமாக எல்லா தொழிற்சங்கங்களும் இணைந்து செயல்பட்டமை என்பன அவர்கள் தமது நடவடிக்கைகளில் உறுதியுடன் இருக்கிறார்கள் என்பதை வெளிப்படுத்தியது.

பிரார்த்தனை போராட்டத்தை தோட்ட நிர்வாகங்கள் கண்டுகொள்ளாதது போலவே அரசாங்கமும் கண்டு கொள்ளவில்லை. எனினும் தொழிற்சங்கங்களை பொறுத்தவரையில் இதனை அவர்கள் ஒரு வெற்றியாகவே கருதினார்கள். அதனைத் தொடர்ந்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், அதன் செயற்குழு கூட்டத்தையும் தேசிய கவுன்சில் கூட்டத்தையும் அதே வருடம் டிசம்பர் 3 இல் கூட்டியது. அந்தக் கூட்டத்தில், தொண்டமான் தான் அடுத்து என்ன செய்யப் போகிறார் என்பதையும், ஒரு பிரகடனத்தையும் வெளியிட்டார். அந்தப் பிரகடனம் பின்வரும் அம்சங்களை வெளிப்படுத்துவதாக இருந்தது :

அரசாங்கத்துக்கு ஏற்பட்ட நெருக்கடியான காலங்களில் எல்லாம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அவர்களுக்கு உதவியும் ஒத்தாசையும் வழங்கி வந்துள்ளது. ஆனால் அவர்கள் எல்லா உதவிகளையும் பெற்றுக் கொண்டு எம்மை முதுகில் குத்துபவர்களாகவே நடந்து கொள்கிறார்கள். அவர்களுக்கு நன்றி உணர்வு என்பது துளியாவது இருப்பதாக தெரியவில்லை. 4 லட்சம் தொழிலாளர்களின் பிரஜா உரிமைப் பிரச்சனையும் மற்றும் பல்வேறு பிரச்சனைகளும் இன்னும் தீர்க்கப்படாமலேயே இருக்கின்றன. தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வும் இன்னும் எட்டப்படவில்லை.


ஆதலால், தமது பிரச்சனைகளை எல்லாம் புரிந்து கொள்ளச் செய்யும் வகையில் பெரிதாக ஏதாவது செய்ய வேண்டும் என்ற நோக்கில், பிரார்த்தனை போராட்டத்தை அகிம்சை அடிப்படையில் தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு நடத்துவது

என்று தீர்மானிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் 14 ஆம் தேதி தைப்பொங்கல் அன்று ஆரம்பிக்கப்படும் இந்த பிரார்த்தனை போராட்டம் தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு, 1986 ஏப்ரல் 15 ஆம் தேதி தமிழ் சிங்கள புத்தாண்டு தினம் வரை தொடர்ந்து நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்தப் போராட்டம் தொடர்பாக தெளிவுபடுத்தி அதன் நோக்கங்களை விபரித்து மூன்று மொழிகளிலும் விளம்பரங்கள் தயாரித்து பத்திரிகைகளில் வெளியிடப்பட்டன. இது தொடர்பான செய்திகளையும் பரவலாக ஊடகங்களில் வெளியிட ஏற்பாடு செய்யப்பட்டது. அதுமட்டுமல்லாமல் இது தொடர்பான கோரிக்கை கடிதம் ஒன்றையும் தயாரித்து மாநாட்டு பிரகடன பிரதி ஒன்றையும் வைத்து, ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன அவர்களுக்கு தொண்டமான் கடுமையான தொனியில் கடிதம் ஒன்றையும் அனுப்பினார்.

இந்தக் கடிதம் கிடைத்ததன் பின்னரே ஜே.ஆர். ஜெயவர்த்தன அவர்களுக்கு இவர்கள் ஏதோ பெரிதாகத் திட்டமிடுகிறார்கள் என்பது புரிந்தது. அவர், நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற யுத்த சூழ்நிலையையும் அதன் காரணமாக பாதுகாப்புச் செலவு பன்மடங்கு அதிகரித்து இருக்கின்ற நிலையும் சீர்தூக்கி, இத்தகைய ஒரு காலகட்டத்தில் தேயிலை பொருளாதாரம் பாதிக்கப்பட்டு விடுவதன் ஆபத்தை உணர்ந்தார். உடனடியாக தொண்டமானை அழைத்து, அடுத்துவரும் அமைச்சரவைக் கூட்டத்தில் இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டு ஒரு முடிவு எட்டப்படும் என்று அறிவித்தார்.

அடுத்து வந்த சில தினங்கள் இது தொடர்பில் பேசப்பட்ட பரபரப்பான தினங்களாக இருந்தன. அமைச்சரவை கூட்டப்பட்டு விரிவாக ஆராயப்பட்டது. தொண்டமான், தனது மக்கள் இதுவரை காலம் அனுபவித்து வரும் கஷ்டங்கள் தொடர்பில் விரிவாக எடுத்துரைத்து, அவர்களின் 'நாடற்றவர்கள்' என்ற நிலைமை மாறவேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். ஜே.ஆர்.



ஜே.ஆர். ஜெயவர்த்தன
Image source - www.dailymirror.lk

ஜெயவர்த்தன அடுத்த நாளும் இது தொடர்பில் பேச தனது வீட்டுக்கு பல அரசாங்கத் தலைவர்களை அழைத்து இருந்தார். அங்கு கூடியிருந்த அமைச்சர்களில் லலித் அத்துலத் முதலியை தவிர ஏனைய அனைவரும் இணக்கப்பாட்டுக்கு வந்தனர்.

விரைவிலேயே இந்த விஷயம் வேறு திசை நோக்கித் திரும்பியது. தொண்டமான் ஒரு நிகழ்ச்சியில் பங்கு பற்றுவதற்காக இந்தியா சென்றிருந்தார். அவர் நாடு திரும்பியபோது நிலைமையில் பெரும் மாற்றம் ஏற்பட்டிருந்தது. இந்திய அரசாங்கத்துடன் கலந்துரையாடாமல் இந்த விஷயத்துக்கு முடிவு ஒன்று ஏற்படுத்தலாகாது என்று கருதி இலங்கை அரசாங்கம் இந்திய அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்தியது. அந்தப் பேச்சு வார்த்தையின் போது 18 மாதங்கள் தமக்கு அவகாசம் வேண்டும் என்று இந்திய அரசாங்கம் தெரிவித்திருந்தது. அதற்கு இணங்கும் படி அப்போதைய இந்தியத் தூதுவர் ஜே.என். தீட்சித் தொண்டமானை கேட்டுக்கொண்டார். தொண்டமானுக்கு இதில் உடன்பாடு இல்லை என்ற போதும் அவரால் வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை. அடுத்த நாளே தொண்டமானின் வீட்டுக்கு அவரைத் தேடி வந்த லலித் அத்துலத் முதலி இரண்டு அரசாங்கங்களின் மேற்படி ஏற்பாட்டுக்கு ஒப்புக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டார். மேற்படி விடயம் திசை திரும்பி போய் விட்டமைக்கு காரணம் லலித் அத்துலத் முதலி தான் என்பதை புரிந்து கொண்ட தொண்டமான் “உன்னால் முடிந்ததை நீ செய்து கொள்” என்று கூறி அனுப்பி விட்டார். ஆனால் தொண்டமானால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆயினும் ஒரு நன்மை நடந்தது. 18 மாத கால அவகாசத்துக்குள் இரண்டு நாடுகளும் இணைந்து சட்டமொன்றைத் தயாரித்தது. இந்திய வம்சாவழி மலையக தமிழ் மக்களின் 'நாடற்றவர்' என்ற பிரச்சனை ஒரு முடிவுக்கு வந்துவிடும் என்பது உறுதியாயிற்று.

# தலைநிமிர்ந்த சமூகம்



Image source - www.unicef.org

மலையக தமிழ் மக்களின் இந்த வரலாற்றுத் தொடர் இந்த அத்தியாயத்துடன் ஒரு முடிவுக்கு வருகிறது. எனினும் அவர்களது வரலாறு அதன் பின்னரும் இந்த அத்தியாயத்திலிருந்து இன்று வரை தொடரத்தான் செய்கிறது. அது புதுமைப்பித்தன் எழுதிய ‘துன்பக்கேணி’ என்ற கதையைப் போல ஒரு துன்பியல் வரலாறு.

நான் இந்த வரலாற்று தொடரை எழுத முற்பட்டபோது இதற்கு என்ன தலைப்பை இடலாம் என்று பெரிதும் சிந்தித்தேன். சுதந்திரம் பெற்ற காலத்தில் இருந்து 74 வருடங்களாக, இந்த மக்களை நாட்டில் இருந்து விரட்டிவிட இந்த அளவுக்கு அரசியல் சதிச் செயல்கள் இடம்பெற்றிருக்கின்றன என்பது என் மனக்கண்ணில் ஒவ்வொன்றாக துல்லியமாகத் தோன்றின. அதை மையமாகக் கொண்டே ‘சதிகளையும் சூழ்ச்சிகளையும் கடந்த வரலாறு’ என்று இதற்கு தலைப்பிட்டேன். அதன்பின் அவர்கள் செய்த சதிகளையும் சூழ்ச்சிகளையும் ஒன்றன் பின் ஒன்றாக எழுதி ஒரு பட்டியல் தயாரித்தேன். இருந்தாலும் அந்த பட்டியல் இத்தனை நீளமானதாக இருக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அவை சுமார் 50 தலைப்புகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பின்னரான காலத்தில் இவர்கள் மீது ஏவி விடப்பட்ட சதிகளும் சூழ்ச்சிகளும் என்ற பட்டியலில் பின்வரும் விடயங்களும் சேர்க்கப்பட வேண்டும்.

1980 களின் பிற்பகுதிகளில் இம்மக்கள் தமது பிரஜா உரிமையை மீளப்பெற்று ‘நாடற்றவர்கள்’

என்ற நிலையில் இருந்து மீண்டதன் பின்னர் தாம் படித்த சமூகமாக மாறினால்தான் வாழ்க்கையில் முன்னேறலாம் என்று கருதி படிப்பில் அதிக ஆர்வம் காட்டினார்கள். ஆனால் அவர்கள் படித்து முன்னேறி விடக்கூடாது என்பதில் மிகக் கவனமாக இருந்த ஆட்சியாளர்கள் பாடசாலைகளில் போதுமான ஆசிரியர்களை நியமிக்காது விட்டார்கள். குறிப்பாக கணித, விஞ்ஞானப் பாடங்களைக் கற்பிப்பதற்கு போதுமான ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவியது. ஆசிரியர்களை நியமிக்காது விட்டால், அவர்கள் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்தி எய்த மாட்டார்கள் என்றும் அதனால் அவர்களால் மேற்படிப்பு படிக்க முடியாது என்றும் திட்டம் போட்டார்கள். ஆனால் இன்று அவர்கள் அதனை எல்லாம் மீறி 'படித்த சமூகத்தினர்' என்ற அடைமொழியைச் சுமந்து கொள்ளும் அளவுக்கு முன்னேறி உள்ளனர்.

ஆசிரியர்களை நியமிக்காது விட்டால், அவர்கள் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்தி எய்த மாட்டார்கள் என்றும் அதனால் அவர்களால் மேற்படிப்பு படிக்க முடியாது என்றும் திட்டம் போட்டார்கள். ஆனால் இன்று அவர்கள் அதனை எல்லாம் மீறி 'படித்த சமூகத்தினர்' என்ற அடைமொழியைச் சுமந்து கொள்ளும் அளவுக்கு முன்னேறி உள்ளனர்.

ஆரம்பத்தில் இருந்தே பொது சுகாதாரத்துறை மிகப் பின்தங்கியதாகவே இருந்தது. தாய்சேய் மரணம் மிக அதிகரித்த நிலையில் காணப்பட்டதுடன் பிள்ளைகளிடத்தில் மந்தபோஷணை நிலமை ஏற்பட்டது. முழுச் சமுதாயமுமே ஆரோக்கியமற்றதாக மாறிய நிலைமை தோன்றியது. மருத்துவமனைகள் நீண்ட தூரத்துக்கு அப்பாலே இருந்தன. அவற்றை சென்றடைய போக்குவரத்து வசதிகளோ வசதியான பாதைகளோ இருக்கவில்லை. அநேகமான சந்தர்ப்பங்களில் மருத்துவமனையை அடையும் முன்னரே பிரசவங்கள் நிகழ்ந்துள்ளன. குழந்தை பிறந்ததை பதிவு செய்யும் உரிமையும்கூட தோட்டத் தொழிலாளர்களுக்கு மறுக்கப்பட்டது. அதனைக்கூட தோட்டத்துரைமாரே செய்ய வேண்டும் என்று பிறப்பு, இறப்பு பதிவுச் சட்டத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

கடின உழைப்பால் இவற்றையெல்லாம் தாண்டி இந்திய வம்சாவழி தமிழ் மக்கள் என்ற வரையறையைக் கடந்து இன்று 'மலையக தமிழ் மக்கள்' என்ற சிறப்பு அடையாளத்தைப் பெற்றுள்ளனர். சுமார் 18 லட்சம் (உத்தியோக பூர்வமற்ற கணிப்பீட்டின்படி) சமூக அங்கத்தவர்களை கொண்டு இந்த நாட்டின் நான்காவது தேசிய இனமாக இவர்கள் வளர்ச்சி அடைந்துள்ளனர். எதிர்காலத்தில், நாட்டில் சிறுபான்மையினரை அடிப்படையாகக் கொண்டு தேசிய இனப் பிரச்சனைக்கான தீர்வு என்ற அடிப்படையில் ஏதேனும் தீர்வுகள் எட்டப்படும் போது 'மலையக தமிழ் தேசிய இனம் - அவர்களுக்கான பிரச்சனைகளும் தீர்வுகளும்' என்ற அடிப்படையில் அவர்கள் முன்வைக்கின்ற அரசியல் உரிமைகள் ஆராயப்பட்டு அவர்கள் எதிர்கொள்கின்ற சகல அரசியல், பொருளாதார, சமூக, மொழிப் பிரச்சினைகளும் தீர்த்து வைக்கப்பட வேண்டும்.



SpotOn
Money



# SEND MONEY to SRI LANKA*

**FIRST TRANSFER FEE FREE**

Immediate Payment to Any Account

*Partnership with*

CargillsBank
BANKING ON THE HUMAN SPIRIT

Cash Pickup at any Cargills food city

get 5% Discount* on Purchases

0207 341 7300
www.spoton.money

Authorised and regulated by the Financial Conduct Authority (FRN 510848)
SpotOn Money is a trading name of Monex International Limited, a company incorporated in England and Wales, and registered as a money service business with HMRC (12161278)

* T & C Apply

RE/MAX COMMUNITY
Realty Inc., Brokerage
RAISING YOUR VALUE




# RE/MAX COMMUNITY THE MOST TRUSTED REAL ESTATE AGENTS IN CANADA

- We are building a family of elite agent, become a part of the family
- We are voted as most trusted realtor by consumers
- Our Services

Real Estate Networking

Real Estate Investment

Real Estate Buying and Selling

remaxcommunity.ca
/remaxcommunityinc
/remax_community
/remaxcommunity
/UCD-3WoKApsSL2P4SqlnHVIA


வணக்கம்
London
www.vanakkamlondon.com
உலகம்
அரசியல்
தமிழ்நாடு
சினிமா
CINEMA
IN LOVE
memory
விளையாட்டு
துயர் பகிர்வு
யாதும் ஊரே யாவரும் கேளிர்
தமிழால் இணையும்
தமிழ் செய்திச் சஞ்சிகைத் தளம்
vanakkamlondon.com
/vanakkam.london
/vanakkamlondon
/Vanakkam_London
/TheVanakkamLondon


Protection For You
& Your Family
Our services
Life Insurance «
Critical Illness Protection «
Mortgage Protection «
Travel/Super Visa Insurance «
Dental & Medical Benefits «
Disability Benefits «
Long Term Care «
Employee Benefits «
RESP, RRSP & TFSA «
Are You Getting Million Dollar Advice?
Life 100
INSURANCE & INVESTMENTS INC.
416-918-9771 | 416-321-2500
info@life100.ca www.life100.ca
10 Milner Business Court, Suite 208,
Scarborough, ON M1B 3C6
Sritharan Thurairajah CLU, CHS
Simple Solution in a Critical Situation


XEBIRO
Xebiro has multiple technology companies under its umbrella, whereby we help any organization with any of their technological service needs. These companies have been in operation for the last few years and have helped more than 200 companies worldwide. Our team works seamlessly with businesses around the world – from the UK, Canada, Australia, USA, Norway, Switzerland, France, Poland, Singapore, and Sri Lanka.
OUR GROUP OF COMPANIES
codelantic
CodeLantic offers one-stop solutions in the field of custom web application, mobile app development and software solutions.
ExentAI
ExentAI aims to research and develop innovative solutions for problems arising across a range of domains and industries for users or customers using state-of-the-art AI technologies.
itaffix
ITaffix is a leading technical support company providing 24/7 services supporting all the IT needs of businesses to resolve their core technical issues.
ontomatrix
OntoMatrix is a full-service digital marketing company with flawless techniques and innovative ideas that assist the brands to reach the heights of success.
EmbryoZ
EmbryoZ offers an extensive investor database of seasoned industry professionals to connect with. In addition to this, we provide you with multiple supporting service providers to ease off your work.
BurgeonFirst
BurgeonFirst is focused on closing the funding gap between the 'friends and family' stage and the Venture Capital stage.
FINACCDIRECT
FinAccDirect is a financial process outsourcing company offering outsourced bookkeeping services, outsourced tax preparation services and company secretarial services.
LegalLiaise
LegalLiaise is an independent boutique law firm trusted to meet the diverse needs of business clients around the world.
callOcare
callOcare helps businesses reach out to their customers in the best possible way with 24x7 phone answering services, real-time reporting and 100% call recording facilities.
LeadHRM
LeadHRM Services provide customized Human Resource Services to corporate houses and companies across varied industries that want their people to grow and achieve success
CSR INITIATIVE
NurtureLeap
NurtureLeap is a foundation that focuses on the youth of Northern Sri Lanka to create professionals by providing them real world training and exposure to international organisations.
London
#32 Spring Street,
Paddington W21JA.
Phone : +44 203 5001380
Email : contact@xebiro.com
Colombo
#7 - 3/1, Galle Road,
Colombo 06.
Phone : +94 112 559854
Email : contact@xebiro.com
Jaffna
#63, Sir Pon Ramanathan Road,
Kallady, Thirunelvelly, Jaffna
Phone : +94 212 212797
Email : contact@xebiro.com

# யாழ் மண்ணில்




வீடு, காணி,
வியாபார ஸ்தாபனங்கள்
வாங்குவதற்கு,
விற்பதற்கு அல்லது
வாடகைக்கு
நம்பிக்கையுடன் நாடுங்கள்

**RE/MAX ELITE**

**021 224 2855 | 0777 44 1113**

**இடம்: இல. 115 கே.கே.எஸ் வீதி சுன்னாகம்**
**(பீப்பிள்ஸ் லீசிங் கட்டிட தொகுதி, 1ம் மாடி)**

**BUY-SELL-RENT HOME AND LANDS**

**WWW.REMAXELITE.LK**

RE/MAX
SRI LANKA

RE/MAX SRI LANKA UNDER NEW LEADERSHIP AND WITH A RENEWED VISION




We are proudly relaunching RE/MAX Sri Lanka under new ownership. With a history of excellence & a fresh wave of innovation, we're here to revive the spirit of the Real Estate Industry.

WHAT WE DO?

- Franchising
- Real Estate Networking
- Real Estate Investment
- Real Estate Buying & Selling

www.remax.lk remaxlanka remax_sri.lanka remaxsri_lanka

# வீடு என்பது ஞாபகங்களின் கலவை

காதல், சில்மிஷங்கள், கனவுகள், சிரிப்புக்கள், நேசங்கள், அரவணைப்புக்கள், தவிப்புக்கள், அடையாளங்கள், கூடல்கள், குதூகலங்கள் என நீங்கள் உறைவிடமாகும் பொழுதுதான் வீடு விலாசம் கொள்கிறது.

தற்போதைய நிலையில் நீங்கள் வீடொன்றை விற்பது அல்லது வாங்குவது குறித்து உங்களிடம் இருக்கும் கேள்விகள் மற்றும் சந்தேகங்களுக்கு என்னால் தெளிவாக விளக்கமளிக்க முடியும்.

நம்பிக்கையோடு என்னை அழையுங்கள் நல்லதோர் வீடு செய்வோம்.



XEBIRO

Xebiro has multiple technology companies under its umbrella, whereby we help any organization with any of their technological service needs. These companies have been in operation for the last few years and have helped more than 200 companies worldwide. Our team works seamlessly with businesses around the world – from the UK, Canada, Australia, USA, Norway, Switzerland, France, Poland, Singapore, and Sri Lanka.

## OUR GROUP OF COMPANIES

**codelantic**

CodeLantic offers one-stop solutions in the field of custom web application, mobile app development and software solutions.

**ontomatrix**

OntoMatrix is a full-service digital marketing company with flawless techniques and innovative ideas that assist the brands to reach the heights of success.

**ExentAI**

ExentAI aims to research and develop innovative solutions for problems arising across a range of domains and industries for users or customers using state-of-the-art AI technologies.

**EmbryoZ**

EmbryoZ offers an extensive investor database of seasoned industry professionals to connect with. In addition to this, we provide you with multiple supporting service providers to ease off your work.

**itaffix**

ITaffix is a leading technical support company providing 24/7 services supporting all the IT needs of businesses to resolve their core technical issues.

**BurgeonFirst**

BurgeonFirst is focused on closing the funding gap between the ‘friends and family’ stage and the Venture Capital stage.

## BUSINESS PROCESS OUTSOURCING

**FINACCDIRECT**

FinAccDirect is a financial process outsourcing company offering outsourced bookkeeping services, outsourced tax preparation services and company secretarial services.

**LegalLiaise**

LegalLiaise is an independent boutique law firm trusted to meet the diverse needs of business clients around the world.

**callOcare**

callOcare helps businesses reach out to their customers in the best possible way with 24x7 phone answering services, real-time reporting and 100% call recording facilities.

**LeadHRM**

LeadHRM Services provide customized Human Resource Services to corporate houses and companies across varied industries that want their people to grow and achieve success

## CSR INITIATIVE

**NurtureLeap**

NurtureLeap is a foundation that focuses on the youth of Northern Sri Lanka to create professionals by providing them real world training and exposure to international organisations.

**London**

**#32 Spring Street,**
**Paddington W21JA.**
**Phone : +44 203 5001380**
**Email : contact@xebiro.com**

**Colombo**

**#7 - 3/1, Galle Road,**
**Colombo 06.**
**Phone : +94 112 559854**
**Email : contact@xebiro.com**

**Jaffna**

**#63, Sir Pon Ramanathan Road,**
**Kallady, Thirunelvelly, Jaffna**
**Phone : +94 212 212797**
**Email : contact@xebiro.com**


Netwyn.Place
Unleash Your Potential
www.netwyn.place
10 Thornmount Drive, Scarborough, ON M1B 3J4
+1 416-906-1414
Coworking Space • Private Office
Event Space • Boardroom
BOOK YOUR TOUR TODAY